
கண்ணாடி
வாசல்
காஞ்சனா ஜெயதிலகர்

# கண்ணாடி வாசல்

## 1



நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது எத்தனை உண்மை...

அம்மா இருந்தவரை அவளது அணைப்பு மூர்க்கமாய், மூச்சு திணற வைப்பதாய் படும்.

'விடுங்கம்மா' என்று தன்னை வலியச் சுற்றும் கைகளிலிருந்து நெளிந்து தப்பி ஓடுவாள் வான்மதி.

மகளைப் பாதுகாக்கும் ஆவேசத்துடன் இறுக்கும் அந்த அன்னையும், ஓடும் மகளைப் பதட்டமாய் பின் தொடரு வாள்.

'மதி, மதிக்குட்டி... ஓடாதே - விழுந்திடுவே.'

ஆனால் வான்மதி நிற்க மாட்டாள்.

நின்றால் அம்மா மறுபடி பிடித்து இறுக்கி, அழுந்த முத்தமிடுவாளே என்ற அலுப்பில் விடாமல் விலகுவாள்.

அதெல்லாம் தாயின் இந்த பாதுகாப்பும் பிரியமும் ஆயுசெல்லாம் தொடரும் என்று நினைத்த அறியாமையால், தனது ஆறாம் வயதிலிருந்தே அந்த அணைப்புகள் கிடைக்காமற் போகும் என்பதை அறிந்தாளா என்ன?

இப்போது - அதாவது பதினைந்து ஆண்டுகள் கழித்தும், இடையே பற்பல சந்தர்ப்பங்களிலும் மனசு திமிறித் திமிறி தாயின் அரவணைப்பைத் தேடியிருக்கிறது. இனி கிடைக்கவே கிடைக்காது என்பது தெரிந்தும் அந்த நேசநெருக்கத்திற்காய் ஏங்கிக் குழைந்திருக்கின்றது. முக்கியமாய் இத்தகு கனவிலிருந்து விடுபட்டு மூச்சுத் திணற விழிக்கும் போதுதான் அந்த ஏக்கம் அதிகம்.

ஒடுங்கிய இம்மரக் கட்டிலில் ஒருக்களித்து குறுகி படுத்தபடி, வியர்த்தாலும் பரவாயில்லை என்று முகத்தையும் போர்வையால் மூடிக் கிடக்கும் நேரம் கொடுமையானது. வியர்த்த உடம்பும் விதிர்த்த நெஞ்சும் தாயின் பாசக் கதகதப்பிற்குள் ஒண்டி நிம்மதி காணத் தவிக்கும்.

நடுங்கும் உடம்பை மேலும் குறுக்கி போர்வைக்குள் மூழ்கினாள் - இதயத்தின் தடதடப்பு துல்லியமாய்க் கேட்டது.

ஏனிந்த கனவு அவளை விடாமல் பிடித்து வைத்திருக்கிறது? ஒரே கனவு ஏன் மீண்டும் மீண்டுமாய் தன்னை அடித்துக் கவிழ்க்கிறது?

கனவின் சூழல் காடா அல்லது வீடா என்றுகூட புரியாத ஒரு குழப்பமான சொப்பனம் அது.

அறை போலவும் இருக்கும் - ஆனால் பருத்த கொம்புகளுடன் ஒரு மான் அங்கே நிற்கும்! கிளையான கொம்புகளைப் பரப்பி முட்ட வரும் தினுசில்... பின்பு



மலைப்பாம்பு ஒன்று இவளை விழுங்கி விடுமோ? அதன் வயிற்றுக்குள் ஈரமும் நடுக்கமுமாய் நசநசவென்று பயணிப்பது போலொரு பயங்கரம். அடுத்ததாய்.. அரு வெறுப்பான அந்தப் பயணம் முடியாதது போலத் தொடர்ந்து பிறகு திடும்மென முகத்தில் குளிர்காற்று முகத்தை வருடும் - அதையும் சுகமென முடியாது... அடுத்து என்னவோ என்ற பீதியில் நெஞ்சு நமநமக்கும். காற்றைக் கிழித்தபடி எங்கோ பறக்கிறது போன்ற அனுபவம் அடுத்ததாய்... இங்கேயும் வளைந்து வளைந்து ஓடிய பாதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் யாரோ வந்து தங்களை எட்டிப் பிடித்து நசுக்கி விடுவார்கள் என்ற பீதியான விரைவுதான்... எப்படியேனும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேணும் என்ற வெறி ஓட்டம். வியர்த்து நடுங்கிய உடலுடன் பின்னோக்கி விரையும் மரங்களை அவற்றின் அடர்ந்த கிளைகளையும் அண்ணாந்து பார்க்கும் கணம்... மயங்கி சரிவாள்...

கனவில் மயங்கும் அக்கணம் நிஜத்தில் வான்மதியின் கண்கள் படபடவென பதறி விரியும்.

இதயம் தொண்டைக் குழிக்குள் அச்சத்தில் எம்பிச் சிக்கிக் கிடக்கும்.

அந்நேரம் உலகமே இருளாய் தோன்ற, விடியலுக்காய் கண் மூடிக் காத்துக் கிடப்பாள்.

விடிந்ததும் அவளது பிரச்சனைகள் ஓய்ந்து விடும் என்பதற்கில்லை.. தனக்கான பிரச்சனைகள் தன் தாய் காதலில் விழுந்தபோதே ஆரம்பமாகி விட்டதாய் மகளுக்குத் தோன்றும்!

இளையவர்களில் ஆரம்பித்த காதல், திருமணத்தில் முடிந்தாலும் பெரியவர்கள் பொருத்தம் பார்த்து சேர்க்காத

தாம்பத்யத்தில் தடுமாற்றங்கள் அதிகம்தான் போலும். தம்பதிகள் தத்தளிக்கும் நேரத்தில் தாங்க அருகே உறவுகள் தயாராய் காத்து நிற்க மாட்டார்கள். இதில் அதிக பாதிப்பு, காதல் திருமணத்தில் விளைந்த பிள்ளைகளுக்குத்தான். குடும்பத்தில் குமுறும் பிரச்சனைகளிலிருந்து அக்குருத்துகளை தடுத்தாட்கொள்ள குடும்பத்தில் பெரியவர்கள் இருக்க மாட்டார்கள். ஒருமுறை கர்ப்பம், அந்நேரத் தளர்வு, பிறகு பிரசவம், தூக்கமற்ற, உதவியுமற்ற, குழந்தையின் வீறிடலால் நிறைந்த இரவுகளை அனுபவித்து ஓய்ந்த தம்பதிகள் மறுபிள்ளையை பெற யோசித்து, பிறகு தவிர்த்தே விட, ஒற்றையாய் நிற்கும் அப்பிள்ளை, தனித்தே குடும்ப நாடகத்தின் அழுகை, குமுறல் குற்றச்சாட்டு காட்சிகளைப் பார்த்திருக்க வேண்டியதுதான்.

இருண்ட அறையும் கூச்சலும் ஆங்கார அழுகையும் இவளுக்கு எங்கோ நினைவில் அழுந்திக் கிடக்கின்றன... அதைக் கிளறி நினைவு கூர்வதில்லை வான்மதி.

ஆனால் அம்மா அந்தக் கடுமையான சூழலிலிருந்து பிரிந்து வந்து அடைக்கலமானது தாத்தா, பாட்டியின் வீட்டில்தான்.

ஆனால் அங்கும் கரைச்சலுக்குக் குறைவில்லை. உடன் பிறந்த அண்ணனும் அவர் மனைவியும் வார்த்தைகளால் குதற, பெற்றவர்கள் 'இதையெல்லாம் பார்க்கத்தான் வேணுமா?' என்ற பெருமூச்சுடன் விரைவில் தங்களது மூச்சுகளை நிறுத்திக் கொண்டார்கள். பற்றுக் கோடாய் எண்ணி வந்த பெற்றோரின் மறைவு அம்மா சந்திராவிற்குப் பெரிய அதிர்ச்சி போலும்... அடிக்கடி படுக்கையில் சுருண்டு கிடந்தவள் பிறகு எழவே இல்லை.

உள்ளம் பொறுமியது பேசல தேகமும் பொசுங்கியது.



இப்போது நினைத்தாலும் எலும்பையும் நடுங்க வைக்கும் துன்ப நாட்கள் அவை...

அம்மா சடலமாய் கிடக்க, சுற்றிலும் அறியா முகக் கூட்டமொன்று -

'இதென்ன விஷக் காய்ச்சல்? ஒரே வாரத்துல சந்திராவுக்குக் குழி பறிச்சிருச்சே?'

'பெத்தவங்கள ஒரு சேர சாகக் கொடுத்த அதிர்ச்சி..'

'இனி தனக்கு யாருமில்லைங்கற கவலை... நம்பிக்கையாப் பிடிச்சிருந்த கயிறு அறவும் இவ அலமலந்துட்டா..'

சூடான காபியைச் சீப்பியபடி, கலைந்த பொட்டும் கூந்தலுமாயிருந்த சில பெண்கள் பேசியது இன்னும் மறக்கவில்லை.

'சந்திரா இங்க அப்படி ஓடி வந்தக் காரணமே அதுதான்.'

'எதுவாம்?'

'அவளுக்கு அற்பாயுசுன்னு அங்க யாரோ ஜோஸியஞ் சொன்னாகளாம்.' குரல்கள் மேலும் தணிந்தன -

'புருஷன் தன்னையக் கொன்னுருவானோன்னு பயந்திருக்கா.'

'அடிக்கறதும் திட்டும் எல்லாக் குடும்பத்திலேயும் உள்ளதுதான்... கொல்றதா?'

'அத்தனை லட்சணமா நடந்திருக்கு குடும்பம்!'

தூக்கம் கலைந்து பேச்சை உள்வாங்கிக் கிடந்த எழு வயது வான்மதி எழவில்லை... இப்பெண்களின் பேச்சை நிறுத்துவதற்காய் எனினும் தான் எழ வேண்டும் என்று முடிவெடுத்த கணம், அங்கிருந்தவர்களின் கவனம் வேறு பக்கமாய் திரும்பியதை அவளால் உணர முடிந்தது -

'யாரது பிளசர்ல வந்திருக்கது?'

'வைரமணி வந்தாச்சு..'

'இழவுக்குக்கூட எம்புட்டு நகை போட்டு வந்திருக்கா பாரு..'

ஒருத்தி பொறாமையுடன் பொறுமினாள்.

'உள்ளங்கழுத்து அட்டியலைக் காணலியே? நல்ல விசேஷத்துப்ப அதோட பூச்சர நெக்லஸூம் சேர்த்து போட்டுட்டு வருவா - அவ உயரத்துக்கு எடுப்பா இருக்கும்...'

எல்லாப் பெண்களும் எழுந்து நின்று யாரை அத்தனை ஆர்வமாய் பார்க்கிறார்கள் என்ற ஆவல் உந்த ஏழு வயது வான்மதியும் எழுந்தாள் - தாழ்வாரத்தில் அதுவரை அலுத்து உட்கார்ந்திருந்த ஆண்களும் சுதாரிப்பாய் எழுந்து நின்றனர். அத்தனை விழிகளும் நுழைந்த புதியவளில் பதிந்திருந்தன.

அப்பேர்ப்பட்ட ஆகிருதி... ஆளுமை..

சடலத்திற்கு பெரிய ரோஜா மாலையைப் போட்டு அரை நிமிடம் மௌனமாய் நின்றவள் கணீரெனக் கேட்டாள் -

'சந்திராவோட பொண்ணு எங்கே?'

'தோ... தூங்கிட்டிருந்தா மதி... எழுந்துட்டியா தங்கம்? வந்ததும் உன்னைத் தான் கேக்குறாங்க பாரு உம் பெரியம்மா..'

இழுத்து முன்னிறுத்தப் பட்டாள் சிறுமி.

தான் மேலும் சின்னவளாகி விட்டாற் போலிருந்தது வான்மதிக்கு. இவளை நோக்கி நீண்டன முறம் போல அகன்று மொடமொடத்த கைகள் - அம்மாவின் கைகள்



சின்னதும் சிங்காரமுமானவை - அவற்றில் பட்டின் மென்மையை உணரலாம்.

'பாவம்.. சின்னகுட்டி அதிர்ந்து போய் கிடக்குது - போடா.. உம் பெரியம்மாதான் - கூப்பிடறாங்கல்ல - போ..'

பின்னாலிருந்து யாரோ நெம்ப, அம்முறக் கைகளில் அடைக்கலமானாள் வான்மதி.

இதோ இன்று வரை... பதினான்கு ஆண்டுகளாய் அடைக்கலம் தந்திருப்பது பெரியம்மாதான்.

ஆளும் குரலும் பெரியன என்பதால் மனதும் தாராளம் என முடியாது. ஆனால் தாராளம் என்பது போல காட்டிக் கொள்ள ஆசை!

மறுபடி பெண்கள் கூடிப் பேசித் தாளித்தார்கள் -

'என்ன சொல்லு வைரமணி மனசும் விசாலந்தான் - இல்லைன்னா வந்ததும் வராததுமா சந்திரா மகளைக் கேட்டு விசாரிக்கச் சேத்துப்பாளா?'

'எல்லாம் ஷோதாம் போ. அப்படி ஆலமரமா குடும்பத்தைக் கட்டிக் காப்பாத்துறாளாம்.'

'அப்படி என்ன நிர்பந்தங்கறேன்? செத்தவ வைரமணியின் உடன் பிறந்தவ இல்லியே... ரெண்டு பேரும் ஒன்னு விட்ட அக்கா தங்கைதானே?'

'அதைச் சொல்லு... ஆனாலும் வாயார இந்த குட்டி எங்கூட வரட்டும்னு சொல்லிட்டாளே... பொண்ணு பொறுப்பை ஏத்துக்கறது லேசில்லையே.. பத்து, பன்னெண்டு வருஷம் போகவும் கல்யாண செலவு வரும். ஐம்பது பவுனுக்குக் குறையாமப் போட்டு மூணு லட்சம் செலவழிச்சுக் கட்டித் தரணுமே?'

'இப்பவே இந்த மதிப் பொண்ணு அம்சமா இருக்கா... வாலிப வயசுல பார்க்கிற கண்ணை எல்லாம் பிடுங்கிருவால்ல? ஆக மாப்பிள்ளை தேடறது, அமையறதுல எல்லாம் பிரச்சனையே வராது.'

'அதாம் பிரச்சனைங்கறேன்! வைரமணியும் இதையே ஒத்த வயசுல ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒண்ணைப் பெத்து வச்சிருக்கால்ல?'

'பேர் என்ன - வைடூரியமா?'

'ல்ல... ஒரு பாடகி பேருன்னு ஞாபகம்... ஆங்... சுசீலா, அதுக்கு வைரமணியோட வாளிப்பு கிடையாது..'

'அவங்க அப்பாவைக் கொண்டிருப்பாப் போல..'

'எலிக் குஞ்சாட்டம் பரிதாபமாத்தான் தெரிஞ்சா... ஆக கல்யாண வயசுல ரெண்டும் ஜோடியா நிக்க..'

'புரியுது.. நீ பிரச்சனைன்னு சொல்றது என்னன்னு புரியுது. வீட்டுப் பெண்ணை விட அம்சமா, அழகா வேத்துப் பெண்ணும் கூடவே இருந்தாச் சிரமந்தான்..'

'எல்லாம் புரிஞ்சே வைரமணி, மதிக் குட்டியைத் தன்னோட கூட்டிட்டுப் போறான்னா அவ மனசு வெள்ளி யாட்டமேனும் உசத்திதான்.'

'ஒண்டியா வளர்ற மகளுக்கு துணையாச்சேன்னு நினைச்சிருப்பா..'

மளிகைக் கடையில் விலை சகாயமாய் கிடைக்கும் பொருட்களை, பிற்பாடு பயன்படும் என்று, கட்டி எடுத்து வருவது போல, காதில் விழுந்த செய்திகள் அனைத்தையும் வான்மதியின் மூளை கட்டி சேமித்து வைத்தது.

பிற்பாடு தேவை ஏற்பட்ட சமயமெல்லாம் அதிலிருந்து எடுத்து பயனடைந்தாள்.



அது அறியாத பருவம் - ஆக பல விவரங்கள் புரியவில்லை...

ஆனால் போகப் போகப் புரிந்தன.

புதுப்புது அர்த்தங்களைப் புகட்டின. அதில் பல கசப்பானவை.

அநாதையான ஒரு பெண்ணிற்கு உலகம் ஒன்றும் மிக இனிப்பானது இல்லையே..

பண்டிகை சமயம் தனக்கும் சுசீலாவிற்குமான உடைகளில் இருந்த பெரிய வித்தியாசம்தான் முதலில் கசந்த உறுத்தல்!

எலும்புகள் துருத்தின தன் தோளில் புது உடையை வைத்துக் காட்டினாள் சுசீலா -

'தோ பாரு மதி. இது காரட் கவுனாம்... ஆரஞ்சகம் கழுத்துல பச்சை ஃபிரிலுமாய் சூப்பர்ல... மயில் கழுத்து கலர் பட்டுப் பாவாடையும் நல்லா இருக்குல்ல?'

அவற்றைக் கண் அகல ரசித்த வான்மதி, ஓடிப் போய் பெரியம்மாவின் அறை வாசலில் பம்மி நின்றாள். கால் மணி நேரம் கதவிற்குப் பின்னே நின்று அவ்வப்போது கழுத்தை நீட்டிய பிறகு பெரியம்மாவின் குரல் அதட்டியது.

'என்னடி? ஆமையாட்டம் தலைய தலையக் காட்டி இழுத்துக்கறே - என்ன வேணும்?'

'ல்ல பெரிம்மா.'

'சரி - போ.'

'வந்து... கிறிஸ்மஸ் டிரஸ்..'

'ஓ? சி.எம்.எஸ். ஹோம் பிள்ளைகளுக்காய் முப்பது செட் வாங்கினது சார்லிட்ட இருக்கும்... நான் சொன்னேன்னு சொல்லி அதுல ஒண்ணு எடுத்துக்கோ.''

அப்போதும் சரிவரப் புரியாமல் ஸ்டோரில் அடுக்கப் பட்டிருந்த மூட்டையிலிருந்து உருவி நீட்டப்பட்ட முரட்டுக் காக்கி பேப்பரை ஆவலாய் பிரித்தன அப்பிஞ்சு விரல்கள்.

வெளிப்பட்டது கண்ணைப் பறிக்கும் பீதாம்பரம் அல்ல.

கட்டமிட்ட சீட்டிப் பாவாடை, முரட்டுச் சட்டை.

தொட்டு நீவ, உள்ளே உறுத்தியது.

சுசீலாதான் இருவரில் ஒரு வயதிற்கு மூத்தவள் எனினும், ஒரு பிடி உயரமாய் நின்றது வான்மதிதான்.

ஆக போகப் போக உணவிலும் மாறுதல்கள். நெய், முட்டை, கெட்டித் தயிர் எல்லாம் இளையவளின் கண் களில் படவேயில்லை.

சுசீலாவிற்கு, சவாலாய் இருந்த விளையாட்டும் படிப் பும் வான்மதிக்கு சுலபமாய் வந்ததால், சிறந்த பள்ளியில் இருவருமே தொடர்ந்து ஒன்றாய் படித்தனர்... ஒரே வகுப்பில் வெவ்வேறு பிரிவுகளில்.

வேறு பள்ளிக்கு வான்மதியை மாற்றாமலிருக்க சுசீலா வின் பிடிவாதம் உதவியது -

'மதியை வேற ஸ்கூலுக்கு மாத்துனீங்கன்னா என்னையும் அங்கேயே சேர்த்திடுங்கம்மா.. அவ உதவி இல்லாம என்னால பாஸ் மார்க் வாங்கவும் முடியாது.'

ஆக பள்ளிக்குச் சேர்ந்து போய், சேர்ந்தே திரும்பி னார்கள்.

தன் உடைகளின் அளவு சின்னது என்பதால் சுசீலா அவற்றை இளையவளுக்கு உடுத்தி அழகு பார்க்க முடிய வில்லை.. பொது அளவிலான ஸல்வார்களை,



'எனக்கு தொள தொளன்னு இருக்குது - வேண்டாம்' என்று முகம் சுளித்து வான்மதிக்கு தள்ளி விடுவாள் -'

வான்மதி எதற்கும் வாயே திறப்பதில்லை.

'என்னா அழுத்தம் பாரு - அவங்கப்பனை போல...'

தானே பழகி அறியாத தன் தகப்பனை பெரியம்மா புரிந்தது எப்படி என்ற நக்கலான நினைப்பு மட்டும் வான்மதிக்குள் ஓடியது... ஆனால் எதையும் வெளியே கொட்டாமல் உள்ளேயே அமுக்கி வைத்ததில் நசுங்கி நமநமத்தது மனசு...

## 2



'யார் கையால்
நீர் ஊற்றினாலும்
உறிஞ்சிக் கொள்கிறது - வேர்.'

குளியலறையின் கதவிற்குப் பின்னால் பொருத்தப் பட்ட ஆளுயரக் கண்ணாடியில் தன்னை பார்வையிட்ட வளுக்கு யுகபாரதியின் குட்டிக் கவிதைதான் நினைப்பில் ஆடியது.

பாசம் பரிவற்ற கைகளிலிருந்து வந்த உணவுதான் எனினும் தன் உடல் அதை உறிஞ்சி, வளப்பமாய் வளர்ந் திருக்கிறது என்ற ஒப்பிடல்.

குளித்து துடைத்ததால் பளிங்காய் பளபளத்த உடலை சிறு சஞ்சலத்துடன் பார்த்திருந்தாள் - ஐந்தடி ஆறு அங் குலம் என்பது நவீன பெண்களும் ஆசைப்படும் உயரம்...

எந்தக் கூட்டத்திலும் தனித்துத் தெரியுமளவில் கம்பீரமான வளர்த்தி. அதே சமயம் -

'பாவம் ரொம்ப அதிகமாய் வளர்ந்துட்டா - இல்லையா?' என்ற இரக்க வார்த்தைகளும் பார்வைகளும் கிடையாது.

ஐந்தரை அடி உயரத்திற்குப் பாந்தமான கச்சித உடம்பு. நளினமான வளைவுகளோடு அமைந்த கொடி உடல். ஆனால் வான்மதியின் முகத்தைப் பார்ப்பவர்களின் கண்கள் அவளது உடம்பின் அம்சத்திற்கு இறங்கி வருவதற்கு சற்று நேரமாகும்.

நிலவின் பிரகாசம் கொண்ட அவளது முகத்தில் கண்களும், கன்னங்களும் உதடும் சீரான நாசியும் மலர் உதடுகளும் நீயா நானா - யார் எடுப்பு - என்று போட்டி போடும் வகையில் அமைந்திருக்கும்.

அடர்ந்து நீண்ட புருவங்களை அவள் பிடுங்கிச் சுருக்கவில்லை - சற்றே ஒதுக்கியிருப்பாள் - அவ்வளவு தான்.

அவற்றின் கருப்பு வில் அமைப்பு, அவளது அகண்ட கரு நட்சத்திர விழிகளின் கவர்ச்சியைக் கூட்டிக் காட்டின.

அகண்ட ரோஜா இதழ்கள் இரண்டை வளைய வெட்டிப் பதித்தது போன்ற அவளது உதடுகள் பேசக் கேட்கும் பலர் அவற்றின் அசைவிலேயே மதிமயங்கி அவள் சொன்னதைக் கவனிக்காமல் விட்டதுண்டு. அனைத்திற்கும் சிகரமாய் சன்ன அலையடித்த நீண்ட சுருள் கூந்தல்.

'ஒரு அநாதை பெண்ணிற்கு இத்தனை அழகு வாய்த்தது அநியாயம்' என்று உடுத்தியபடி சலித்தாள் வான்மதி.



அவளது அழகு உடம்பை தன்னுள் பொதிந்தது ஒரு மஞ்சள் ஸல்வார். ஏன் சில பேருக்கு மட்டும், எந்தத் துணியும் அவர்களுக்கென்றே நெய்து தைத்தது போலாகிறது? அதுவும் ஒருவித வரம் போல. போன மாதம் பெரியம்மா இதோடு மேலும் நான்கு ஸெட் உடைகள் எடுத்து வந்தார். இரண்டு சகாய விலையிலும் மண்ணிலிட்டுப் புரட்டி எடுத்த நிறத்திலும், மற்றவை 'கள்'ளென்ற விலையிலும் ஈர்க்கும் வண்ணத்திலுமாய்..

கம்மி விலையிலுள்ள உடைகள் இவளது உயரத்திற்கு தோதாய் வராது. கவர்ச்சியாய் இருந்த மஞ்சள் உடையை ஆவலாய்ப் பிரித்த சுசீலா 'பக்'கென்று சிரித்தாள் -

'இதுக்குள் நாம் புகுந்தால் கோமாளி போலிருப்பேன் - இது உனக்குத்தான் சரிப்படும் மதி' என்றபடி.

'அங்கே இங்கே பிடிச்சு தைச்சாப் போச்சு... என்ன வேலைப்பாடு பார்த்தியா?' வைரமணி சிடுசிடுத்தாள் -

'இத்தனை பளீர்ன்ர கலர் என்னைக் கறுப்பாய் காட்டும்மா-'

'இப்படி முகம் கழுவாம, தலை வாராமல் புதுசைப் போட்டுப் பார்த்தா சகிக்குமா? அந்தக் காலத்தில் எல்லாம் பண்டிகை நேரந்தான் புதுசு கிடைக்கும்... அப்படிக் காத்திருப்போம். குளிச்சு, தலை கோதி, பவுடரடிச்சு ஆசை ஆசையாய் உடுத்திக்குவோம்... இப்ப உங்களுக்கு வாரத்துக்கு ஒரு புதுசு கட்டிக்கற குழல்... அதான் திமிர்.''

அத்தனையையும் மௌனமாய் கவனித்திருந்த சுசீலாவின் அப்பா வாய் திறந்தார்.

'அப்படி வாங்கித் தர்றவ நீதானே வைரம்... சுசீ குட்டி கேட்டாளா?'

ஞானதுரைக்கு அவாது உடம்பிற்குத் தோதாய் சற்று கீச்சுக் குரல். அதை அதிகம் வருத்துவானேன் என்பது போல அமைதியாகவே இருந்து விடுவார் -

'என்ன பண்றது? காலம் மாறிடுச்சே - நம்ப வீடு கூட்டற கமலம் மாசச் சீட்டு கட்டி மாசத்துக்கு ரெண்டு புடவை எடுத்துடறா.. எப்படி நறுவிசா வர்றா பாத்தீங்கல்ல?'

நான் ஏன் அதையெல்லாம் பார்க்கிறேன் என்பதாய் விழித்தார் அவர் -

'உடுத்து மாற்றுக்கு சாதாரண விலையில் எடுக்க லாமே..'

'நம்மிடம் சம்பளத்துக்கு இருக்கவ வாங்கற அதே இருநூறு ரூபா விலையிலா நாமும் வாங்கறது? நாலைஞ்சு மடங்கு உசத்தியா வாங்கறதுதான் முறை - இதெல்லாம் உங்களுக்குப் புரியாது..'

அவரிடமிருந்து பதிலில்லை.

வைரமணியின் ஆகிருதி, ஆளுமை, காசை விசிறி யடிக்கும் ஜம்பமெல்லாம் கவனிப்பவர்களுக்கு வைரமணி பரம்பரை பணக்காரியைப் போலவும், கட்டியவர் ஒரு எளிய ஜீவனாகவும் தோன்றும்.

ஆனால் வைரத்தின் யோகம் உசத்திதான் - அல்லது எளிய குடும்பத்திலுள்ள அவளை கோடீஸ்வரியான காந்தாமணி தன் ஒரே மகனுக்கு மணம் முடித்தது ஏன் என்பது முதலில் பிறருக்கும், பிறகு காந்தாமணிக்குமே புரியாத புதிர்தான்!

தூரத்து உறவான வைரமணி புகுந்த வீடு சேர்ந்த ஓரிரு வருடங்களிலேயே அத்தனை பேரையும் நகக்கி வைத் தாள் - நசுக்கப்பட்ட உறவுக் கூட்டம் காந்தாமணியின்



அறையில் அடைந்து குசுகுசுவென பேச, மாமியார் புலம்புவாள் -

'நம் வீட்டில் எல்லாம் நறுங்கித் தெரியுதுங்க.. மூணு பொண்ணுகளுக்கும் பார்க்க கம்பீரமாய் மாப்பிள்ளைத் தேடினேன். கொடுத்த சீர் செனத்தியை வாங்கிகிட்டாலும் சமயம் கிடைச்சப்பெல்லாம் குத்திக் காட்டினாங்க -

'சீராய் பெரிய பெரிய அண்டாவும் குண்டானும் தந் தாலும் பொண்ணை சுண்டெலியாட்டம் தந்துட்டாங் கன்னு!'

ஒரே ஆறுதல் பிறந்த பேரப் பிள்ளைங்க ரொம்ப சோனியாய் இல்லை - ஆனா நம்ப வம்சங்கறது மகன் வழிப் பிள்ளைங்கதானே? அதான் வாட்ட சாட்டமாய் வைரமணியை தேடிப் பிடிச்சேன்.. இப்ப எல்லாம் ஒண் ணிரண்டு குழந்தைகளோடு நிறுத்திடுதுங்களே... பாவம் முடியலை - இந்தப் பொண்ணு அசராம நாலு பிள்ளை களேனும் ஈடும் எடுப்புமாய் பெத்துப் போடுவாங்கற ஆசையில செய்த முடிவு... வருஷம் ஒண்ணாச்சு... இன்னும் வேலைக்காகலை.'

வைரமணி உடனே வாரிசு உருவாக்குவதை விட, தனக்கு வாய்த்தவரை நசுக்கி தன் இடுப்பில் செருகுவதில் மும்முரமாய் இருந்தாள். அத்தனையையும் தன் கையின் கீழ் கொண்டு வந்த பின் கர்ப்பமும் தரிக்க அவள் பூரித்தே போனாள் - ஆனால் ஒற்றை உள்ளங்கைக்குள் ஏந்தி விடுவது போல மகள் பிறந்த போது மனசு 'திடுக்'கிட்டு தொய்ந்தது..

மாமியாரின் ஆசைப்படி சுசீலா என்று பெயரிட்டு, சீராட்டி பாராட்டி வளர்த்தாலும் வம்சவாகின்படி சுசீலா எலிக்குட்டி போலத்தான் இருந்தாள்.

'எங்க வீட்டுல ஒவ்வொண்ணும் அரச குமாரத்தியோ இளவரசோங்கறாப்பல இருப்பாங்க - இதென்ன வம்சமோ' என்று நொடித்தபடி சாதம் ஊட்டுவாள் - தாய் உருட்டும் கவளத்தில் ஐந்தில் ஒரு பங்கு கூட உள்ளிறங்காது' சின்ன சுசீலாவிற்கு.

என்னதான் பட்டும், அடுக்கு நகைகளுமாய் போனாலும், கம்பீரத் தோற்றமற்ற தன் புருஷனை, நோஞ்சான் குழந்தையைப் பிறர் சற்று நக்கலாகவே பார்ப்பதாகப் படும் வைரமணிக்கு.

ஆக அவள் போட்டுக் கொண்ட புது வேடம் தான் தான் ஒரு தான தயாளினி, ஏழைப் பங்காளி, கருணைக் கடல், வள்ளல் - என்பதாகும்.

அவளது வீடு தேடி ஒரு தேவை என்று செல்வோருக்கு ஒரு வேளை விருந்தும் நூறு ரூபாய் தாளும் நிச்சயம். அதாவது நூறு ரூபாய்க்கு நல்ல மதிப்பிருந்த அந்தக் காலத்திலேயே. வேலை தேடி வருபவர்களைத் தன் கணவன் மூலம் எங்கேனும் தகுந்த வேலையில் நுழைத்து விட்டாள்.

'கல்யாணம் தகைந்தது.. ஆனால்' என்று கையைப் பிசைபவர்களுக்கு தாலிக்குப் பவுனும் கூரைப் புடவை யும் கிடைத்தன.

சிறு உதவிகளோடு வாய் கொள்ளாத பெரிய பசப்பு வார்த்தைகளை அவள் கற்று, கையாள... பிறர் மத்தியில் அவளது மதிப்பு ஏறியது.

'வைரமணிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுதான் நா னதையும் செய்றது - பெரிய இடத்துக்கு மருமகளாப் போனாலும் திமிர் இல்லாம, நம்மையும் கவனுச்சுக்க றாளே..'



'மற்றதை விடு - சந்திராவோட மகளை பல வருஷ மாய் தன்னோடு வச்சு வளர்க்கறாளே..'

'அதுவும் ஒரே ஸ்கூல்ல தன் பொண்ணோடு சேர்ந்தே படிக்க வைக்கறதுன்னா... பெரிய மனசுதான்..'

ஆனால் அதனுள் ஓடிய சின்ன எண்ணங்களை வான்மதி சீக்கிரமே புரிந்து கொண்டாள் - ஆனாலும் அத னால் எல்லாம் அவள் தன் நன்றி உணர்வை குறைத்துக் கொள்ளவில்லை.

வைரமணியின் குலக் கொழுந்தான சுசீலாவிடம் முழு மனதாய் அன்பு செலுத்தினாள் -

வீட்டில் எந்த வேலை என்றாலும் இழுத்துப் போட்டு செய்தாள்...

ஹொண்ட் - ஷவரில் இதமான சூட்டில் நீரைக் கலந்த பின் சுசீலா அன்று போட வேண்டிய உடையை நீவி தொங்க விட்டாள்.

''எல்லாம் ரெடி சுசீ... குளிக்க வரியா?''

''ரெண்டே நிமிஷம்..''

தனது ஒரு சாண் கூந்தலை வெகு சிரத்தையாய் சிக் கெடுத்துக் கொண்டிருந்த சுசீலா திரும்பி புன்னகைத்தாள்.

அதையும் ஒரு அற்ப சொற்பமான முகம் என்று விட முடியாது - சின்ன முகத்திற்கு ஒளியேற்றும் வெளிச்ச விழிகள் - மூக்கும் உதடுகளும், பார்க்கும் கண்களை பளீர் என்று ஈர்க்கா விட்டாலும் முகத்தில் ததும்பும் கனிவும் உதடுகளில் உறைந்த இளஞ் சிரிப்பும் பார்க்கப் பார்க்க இனிக்கும். ஆண்களை வெப்பமாக்கும் வளைவுகளற்ற உடல். ஆனால் ஒரு கைப்பிடிக்குள் அடங்கி விடும் இடுப்பும், நளினமும் சுசீலாவிற்கு வாய்த்திருந்தன.

தன்னுள் பொங்கிய நன்றி உணர்வை எல்லாம் வான் மதி வடித்தது சுசீலாவிடம்தான் -

அவளுக்குப் பார்த்துப் பார்த்து பணிவிடை புரிவதில் தனி இன்பம்.

சுசீலா குளித்து வெளியே வருவதற்குள் தனது தலைமுடியை வாரி கட்டி விட்டால், சுசீலாவிற்கு வேண்டிய சின்னச் சின்ன உதவிகளைச் செய்யலாமே என்ற அவசரத்துடன் தன் கூந்தலை 'வரட் வரட்'டென சீவிய போது வீட்டு வாசலில் ஒரு பெரிய கார் வந்து நின்றது.

அவசரமாய் வாசலுக்கு ஓடினாள்.

அழைப்பு மணியின் சத்தம் வீறிட்டால் வைரமணி -

'யாரது... யாராவது வாசல் கதவைப் போய் திறக்கக் கூடாதா? அப்படி என்ன வெட்டி முறிக்குதுங்க சனியனுங்க..' என்று அதட்டலை ஆரம்பித்து அது ஏதோ ஒரு காரணத்தால் வான்மதியைத் திட்டுவதில் போய் முடியும் -

காரிலிருந்து இறங்கிய ஒரு பெரிய கூட்டம், ஒவ் வொருவராய் இறங்கி, உடையைச் சீர்படுத்தி, பேசியபடி வாசல் கதவை எட்டுவதற்குள் ஓடிப் போய் கதவைத் திறந்து விட்டாள் வான்மதி.

''வாங்க..''

''இது.. வைரமணி வீடுதான?''

வரும் பெரும்பாலோனார் விசாரிப்பது இப்படிதான் - மாமாவின் பெயர் ஞானதுரை - அப்படிக் குறிப்பிட்டு வரும் விருந்தாளிகள் சொற்பமல்ல - இல்லை என்றே சொல்லி விடலாம்.



''ஆமா... உள்ள வாங்க.. உக்காருங்க... பெரி.. அம் மாவை வரச் சொல்றேன்.

புதியவர்களிடம் வான்மதி உறவைக் குறிப்பிடுவது வைரத்திற்கு அறவே பிடிக்காது.

'அதென்ன யாரும் வந்ததும் வராததுமா உறவைச் சொல்லி சொந்தம் பாராட்டறே? வெளியாட்களிடம் 'அம்மா'ன்னு போதும்.'

ஹாலின் ஃபேனைச் சுழல விட்டு உள்ளே திரும்பிய வளை தடுத்தனர் விருந்தாட்கள் -

''அடடே, இரும்மா... இப்படி ஓடறே - அம்மாட்ட போய் என்ன சொல்வே?''

''வந்து..''

''அதை முதல்ல எங்ககிட்ட விசாரிச்சு அறிய வேண்டாமா?''

ஒரு முதிய பெண்மணி கேலி பேச, மற்றொரு பெண் பரிந்து வந்தாள் -

''இத்தனை புது முகங்களை ஒன்னு சேர பார்க்க, பாவம் பொண்ணு மிரண்டிடுச்சு... அதான் ஓடறா.. வேறென்ன?''

''நாங்க புதுசெல்லாம் இல்லைம்மா - ரொம்ப சொந் தந்தான் - உங்கப்பா வழியிலே பாண்டியம்மா அத்தை தெரியுமில்ல..''

''அது வந்து..''

''அவங்க வகை உறவு நாங்க. மதுராந்தகத்துல இருக்கோம். எங்க மகளுக்குக் கல்யாணம் நிச்சயமாச்சு... அதுக்கான ஜவுளி எடுக்க சென்னை வந்தோம்..

கொள்ளை நாளாவுதே அண்ணாச்சியப் பார்த்து... வைரமணிட்ட கல்யாண விஷயத்தைச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தோம்... இப்ப வந்து உன்னைப் பார்த்ததும் நல்லதாப் போச்சு.."

மரியாதையான ஒரு முறுவலுடன் நின்ற வான்மதிக்கு உள்ளே உறுத்தியது - அந்த உறவு கும்பலில் நின்ற ஒரு இளைஞன் தன்னையே முழி பிதுங்கிவிடும் அளவில் முறைப்பதில் குறுகினாள் - குடும்பத்தின் பெரியவர்கள் தன்னைச் சுற்றி நிற்கிறார்களே என்ற கூச்சமற்று தன்னை வெறிப்பவனை மனதிற்குள் திட்டினாள்.

"பேரு என்னம்மா?"

"முதல்ல அம்மாட்ட... சொல்லிட்டு.."

"அடடா... இந்தக் காலத்துல இப்படியும் கூச்சப்படற பொண்ணா?" பெண்கள் சிரிக்க அவனும் சேர்ந்து இளித்தான்.

"என்ன குடிக்கறீங்க? காபியா அல்லது ஜூஸா?"

"அப்படிப் போடு. கூச்சம்னாலும் மரியாதை பக்காவாய் இருக்குது பார். அதில் குறையில்லை.."

கூட்டமாய் மெச்சினார்கள்.

"ஒரு நிமிஷம்.." என்று உள்ளே விரைந்தவள் முதலில் சமையல் கட்டிற்குள் எட்டிப் பார்த்து -

"பிரபாக்கா, விருந்தாளிங்க வந்திருக்காங்க - ஏழு பேர்.. காபி தயார் பண்ணிடுங்க." தகவல் தந்து விட்டு மாடிக்கு ஓடினாள்.

ரத்த அழுத்தம் எகிறிவிட, வைரமணி படுப்பது, இருப்பது எல்லாம் மாடி அறைகளில்தான் - சாப்பிட, வெளியில் போக நேரும்போதுதான் படி இறங்குவது..



வாசலின் அழைப்பு மணி ஒலித்தால் அவளது ரத்த அழுத்தம் தானாக மேலேறி விடும்!

'கீழேருந்து அந்த காலிங் - பெல்லை அழுத்தி அழுத்தி எவ்வுயிரை உறிஞ்சிடறாங்க... வர்றதுல பாதிக்கு மேல வேண்டாத கழிசடைங்க... ச்சே.'

மிக சன்னமாய் கதவைத் தட்டி, உறவின் வருகையை பெரியம்மாவிடம் அறிவித்து விட்டு, சுசீலாவிடம் ஓடினாள் தன் வழக்கமான பணிவிடைகளைப் புரிய!

"எனக்கொண்ணும் வேண்டாம்.. நீ முதல்ல தலையைப் பின்னு மதி -

யார் வந்திருக்கா - ஒரே சத்தம்?"

"மதுராந்தகத்திலேருந்து உறவுக்காரங்களாம்."

"ஓ... சரி சாப்பிடலாமா நாம?"

"நீ முதல்ல உட்காரு... நான் அவங்களுக்கு குடிக்க, கொறிக்க ஏதேனும் பரிமாறிட்டு வர்றேன்."

"அதெல்லாம் பிரபாக்கா பார்த்துக்குவாங்க."

"அவங்களை உனக்காய் முட்டை ஆப்பம் போடச் சொல்லியிருக்கேன். சூடாய் சாப்பிட்டாத்தான் ருசிக்கும்."

"ச்சே.. நீ அம்மாவை விட மோசம் மதி - சதா என் வாய்க்குள் எதையாச்சும் திணிச்சுகிட்டே இருக்கே.." சிணுங்கினாள் சுசீலா.

"ருசியாத்தானே திணிக்கறேன் - பிறகென்ன?"

உணவு மேஜையின் தட்டு இட்டு தண்ணீர் டம்ளர்களை வைத்த வான்மதி சமையலறைக்குள் பாய்ந்தாள் -

விருந்தாளிகளுக்கான காபி ட்ரேயை எடுத்து நடந்தவளை நிறுத்தியது பெரியம்மாவின் அடிக்குரல் அதட்டுதல் -

''வைடி நாயே - தட்டைக் கீழே...''

சமையல் அறையே அரண்டு ஸ்தம்பித்தது...

# 3



''நன்றி கெட்ட நாயே... காலங்காத்தால வீட்டுக்கு வந்தவன் முன்னே சிமிட்டிட்டு போய் நின்னியா?''

வைரமணி வீசிய வார்த்தையில் அடிபட்டு விக்கித்து நின்றாள் இளையவள் -

சமையலறையின் வேலையாட்களின் முன்பு பெரியம்மா அப்படி அதட்டுவது அபூர்வம்... அப்படி என்ன தவறை தான் செய்து விட்டோம்... வான்மதி தவித்தாள்.

''வந்தவனை ஒரே பார்வையில் சுருட்டி, பத்தாம் நிமிஷம் உன்னைப் பெண் கேட்க செய்துட்டியே... என்ன மாய்மாலம்டி?''

வான்மதிக்கு இன்னும் முழுக்க புரியாத குழப்பம்..

வந்த விருந்தாளிகளா தன்னைப் பெண் கேட்டது?

''அம்மாவை வரச் சொல்றேன்னியாம் - ஃபோனைப் போட்டு விட்டு, என்ன குடிக்கறீங்கன்னு குழைஞ்சு விசாரிச்சியாம். அப்படியே உருகறாங்க...''

அப்படி உபசரித்ததும் பிழையா என்று நொந்து போனது வான்மதியின் இளமனம்.

மற்ற சமயங்களில்,



'வந்தவங்களை உக்கார சொன்னியா? தாகத்துக்கு ஏதேனும் தந்தியா?' என்று அதட்டும் பெரியம்மா இப்போது ஏன் தனது உபசரிப்பிற்கு ஆத்திரம் அடைந்திருக்கிறார்கள் என்பது புரியாத தவிப்பு.

''உறவுன்னாங்க... பெரிம்மா..''

''அதான் சம்பந்தம் பேச வச்சிட்டியா?'' இளையவளை சற்று ஒதுக்குப்புறமாய் நெட்டித் தள்ளிப் போன வைரமணியின் விழிகள் புது ஆங்காரத்தோடு மின்னின.

இதுவரை தன் பெரியம்மாவின் பலவித கோபங்களை வெவ்வேறு கோணங்களில் பார்த்து, புரிந்த வான்மதிக்கு, இந்த சொல்லொணா ரௌத்திரம் புதியது... வந்து விழுந்த சில கோப வார்த்தைகள் ஆத்திரத்திற்கான காரணத்தைக் கோடி காட்டின. தன்னை விவஸ்தையின்றி விழிகளாய் விழுங்கிக் கொண்டிருந்தவன் சபலப்பட்டு தன் குடும்பத்தாரைத் தூண்டி விட, வந்தவர்களும் தன்னைப் 'பெண்' கேட்டிருக்கிறார்கள் - அதாவது தன்னை பெரியம்மா - வைரமணியின் மகளாய் எண்ணி...

''மன்னிச்சிருங்க பெரியம்மா..''

செய்யாத தவறுக்கு மன்னிப்பு கோரினாள்.

''இப்ப கூப்பிடு நல்லா.. முறையா... அவங்ககிட்ட என்னைய அம்மான்னு சொன்னேல்ல?''

''நீங்கதானே பெரியம்மா... வெளியே அதிகமாய் உறவைச் சொல்ல வேண்டாம்னீங்க...''

''சொன்ன எவ்வாயை செருப்பாலயே அடிச்சுக்கறேன்... போதுமா?''

வைரமணியின் முகம் கோபத்தால் சிவந்து துடித்தது.

"இனி பெரியம்மான்னே கூப்பிடுடீ... அம்மான்னா முதலாளி அம்மாவைக் குறிப்பிடறது போலவா நீ இருக்கே... என்னா தளுக்கு... மினுக்கு? போன வாரம் சுசி குட்டிக்கு வாங்கின தொளாயிர ரூபாய் ஸல்வார்தானே இது - எதுக்கு போட்டே இதை?"

"சுசீதான் கலர் பிடிக்கலை... சைஸூம் ரொம்பப் பெரிசன்னு..."

"உடனே எடுத்து மாட்டிட்டு மாப்பிள்ளை வேட்டைக்குக் கிளம்பிட்டியா?"

விருந்தினருக்கு காபியோடு நொறுக்குத் தீனியும் பரிமாறப்பட்டு அவர்கள் அதை நொறுக்கியும் முடித்திருப்பார்கள் என்பது புரிந்த வைரமணி வார்த்தைகளை விழுங்கி, மூச்சை சீராக்க முயன்றாள்.

முதலில் வெளிறிய வான்மதியின் முகம் இப்போது சிவந்தது -

"மன்னிச்சிருங்க பெரிம்மா... எப்போதும் போல வாசலைத் திறந்தேன்... உட்காரச் சொன்னேன்... இனி.. இனிமேல் கவனமாய் இருந்துடறேன்."

"இதைப் பாரு... உங்கிட்ட முக்கியமான விஷயம் பேசற சமயம் வந்திருச்சு.. சுசி குட்டி காரில கிளம்பட்டும்... விருந்தாளிகளை அனுப்பிச்சுட்டு வரேன்... நீ இரு."

"சரி பெரிம்மா."

அச்சத்தில் வயிறு சுருள, காத்திருந்தாள் வான்மதி.. உணவு இறங்கவில்லை. நாலு இட்லிகளோடு அன்று தன் காலை உணவை முடித்த வைரமணி தன் அறையின்



தனிமையில் இளையவளை நிற்க வைத்து பேச்சைத் தொடங்கினாள்.

"நீ சின்னப் பெண்ணில்லை - இருவது முடிஞ்சிருச்சு... இதுவரை நீ செய்த தில்லு முல்லுங்க எல்லாத்திலியுமிருந்து எம்மக தப்பி மீண்டது கடவுள் புண்ணியந்தான்... இப்போதும் அதையெல்லாம் நினைச்சுப் பார்த்தா மனசு வெந்து போகுதே... சுசிகுட்டியைத் திருவிழாவுல தொலைச்சுட்டு நீ மட்டுமா வந்திராலாம்னு நினைச்சே - நடக்கலை.. அடுத்தது இந்தக் குடும்பத்தோட ஒரே வாரிசை தீயிட்டுப் பொசுக்கிட முயற்சி பண்ணின. ஆனா ஒன்னை நீ புரிஞ்சுக்கணும் - கடவுள் எப்பவும் நல்லவங்க பக்கந்தான்... நீ எட்டடி பாய நினைச்சா ஆண்டவர் பதினாறு அடியாய் பாய்ஞ்சு சுசி குட்டியை காப்பாத்திடுவார்."

"இல்ல.. பெரிம்மா.." இளையவளின் குரல் நடுங்கியது.

"எனக்கு எல்லாந் தெரியும்டி கள்ளி. சுசீ குட்டியை அழிச்சிட்டு, இத்தனை சொத்தையும் நீயே ஆண்டு அனுபவிக்கலாம்னு கோட்டை கட்டாதே.."

அனலில் சுட்ட பூ போல சுருங்கியது வான்மதியின் முகம்.

"அது கடவுளுக்கே அடுக்காது... 'பிறனுக்குள்ள ஒன்றையும் இச்சியாதே'ங்கறது பத்து கற்பனைகளில் ஒண்ணு தெரியும்ல..?"

வார்த்தைக் கத்தி சின்னவளின் இதயத்தைக் குத்தியது... குடைந்தது. 'என்னை வாதித்தது போதும்' என்ற பாவனையில் வான்மதியின் கைகள் கெஞ்சலாய் குவிந்தன.

ஆனால் வைரமணி விடுவதாயில்லை.

"இது சுசீலாவுக்குக் கல்யாண பருவம்.. பெரிய இடம் தான் பார்க்கணும். அவ எடைக்கு ரெண்டு மடங்கா நகை போட்டு ராஜா மாதிரி ஒரு பயலுக்கு அவளைக் கட்டிக் கொடுப்பேன்... அதை உங்கிட்ட சொல்றேன் பாரு... கிறுக்காட்டம்... வயிறு எரிஞ்சிடுவியே.. உனக்கும் கல்யாணம் செஞ்சு வைப்போம்... ஆனா நீ அதுக்குக் கொஞ்சம் பொறுக்கணும்... அதுக்குள்ள இப்படி பல்லைக் காட்டி பயலுகளை இழுத்துட்டு வராதே - கேவலம்.."

கண்களை இறுக மூடிக் கொண்டாள் வான்மதி - வீட்டிற்கு எதிர்பாராமல் வந்த ஒரு விருந்தாளி மூலம் இப்படி ஒரு குழப்பம்.

"*சில்லரை இருக்கா?*"

"என்ன... எதற்குப் பெரிம்மா?"

"ம்ம்... பஸ் பிடிச்சுக் காலேஜுக்குப் போக. போய்ச் சேரு.. சுசிட்ட எதுவும் வத்தி வைக்காதே. அவ மனசு பூப் போல.."

தான் குத்திப் போட்டு மிதித்துக் கொண்டிருந்ததும் அதைப் போலவே மற்றொரு பூ மனம் என்பதை உணராமல் பேச்சை முடித்தாள் வைரமணி.

"வரேன் பெரியம்மா."

"போ."

பேருந்தில் நெரிக்கப்பட்டு கல்லூரியை அடைந்த பின்பும், வகுப்புகளின் போதும் மனம் காலையில் கேட்ட பேச்சையே எண்ணி எண்ணி கலங்கியது. உள்ளங் கையை கொதி எண்ணெய் வேவித்த அன்று மனம் வேறு



எதையும் எண்ணுமா என்ன? வேதனையால் துடித்து. கொப்புளங்களை கண்கள் கண்டு கரையுமே... அதே போல உள்ளத்துக் காயமும் பாடாய் படுத்தியது. மதிய சாப்பாட்டின்போது சுசீலா, மற்ற தோழிகளையும் தவிர்த்து தனியே உட்கார்ந்து சமையல்கார பிரபா அவசரமாய் இவள் கையில் திணித்த உணவின் சுவையறியாது, உண்டாள் -

பெரியம்மா வெறுமே தன்னை நோகடிக்க அப்படிப் பேசினார்களா, அல்லது மெய்யாலுமே தான் சுசீலாவைக் கொலை செய்ய முயன்றதாய் நம்புகிறார்களா?

அப்படியானால் சுசீலாவின் நினைப்பு எப்படி?

இல்லை - அவளுக்கு தன் மீது நிரம்ப நம்பிக்கையும் நேசமும் உண்டு.

ஆனால் பெரியம்மா இப்படிக் கண்டதையும் கற்பனை செய்து பேசி, மகளின் மனதையும் கலைத்து விட்டால்...?

கைகழுவியவள், உப்பு நீரால் நனைந்த முகத்தையும் கழுவிக் கொண்டாள்.

பெரியம்மா குறிப்பிட்ட அவ்விரு சம்பவங்களும் மனதுக்குள் நேற்று நடந்ததே போல ஓடின...

பத்து, பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னை இத்தனை நெருக்கியடித்த நகரமாயில்லை -

நிறைய தனி வீடுகள் - அவற்றின் இடையே பிடுங் கப்பட்ட பல் போல காலி மனைகளும் உண்டு. இரண்டு தெரு தள்ளியிருந்த மைதானத்தில் ஏக ஆர்ப்பாட்டமாய் ஆரம்பித்தது ஒரு பொருட்காட்சி. அப்போது - மேல் வேலைக்கு இருந்த கப்பக்கா அதைப் பற்றி விவரமாய் சொல்லச் சொல்ல, சிறுமிகளுக்கு ஆசை உந்தித் தள்ளியது

அதுவும் பக்கத்து வீட்டுப் பெண்கள் செட் சேர்த்து போய் திரும்புவதைப் பார்த்த சுசீலாவிற்கு தாங்களும் அப்படி தனியே போக வேண்டுமென்ற ஆசை.

அந்த ஆசையைக் கேட்ட வைரமணி அதட்டினாள் -

'என்னது வயசுக்கு வர்ற பருவத்துல உள்ள ரெண்டு குட்டிங்க தனியே ஊர்க்கோலம் போறதாவது? பெத்தவங்க எப்ப கூட்டிட்டுப் போறோமோ அப்ப எங்க கையைப் பிடிச்சபடி வரணும்... ஆமா.''

'ச்சே... போர்..' என்று சின்ன மூக்கை சுளித்தாள் சுசீலா.

இளையவர்கள் தனியே இருந்தபோது தனியே போக சுசீலா திட்டமிட, அஞ்சியது வான்மதிதான்.

'நாம எங்கேயும் தனியாப் போய் பழகலியே சுசி?'

'அதான் பழகலாங்கறேன்... எக்ஸிபிஷன் பக்கத்துல தான மதி?'

'பெரிம்மாக்குப் பிடிக்கலைல்ல?'

'ராட்டினம் இருக்காம்..'

'ம்ம்... அந்த லைட்டுதான் இங்க வரைக்கும் மினுங்குதே... சக்கரமாட்டம்.'

'ம்ம்...'

'பாக்கவி போட்டு வந்த வளையலை பாத்தேல்ல? கல் மோதிரம் அப்படி மினுங்குச்சு.'

'நீதான் நிஜத் தங்கத்துல அதெல்லாம் போட்டிருக்கியே.'

'தினம் இதே டிஸைன் போட்டு போரடிக்குது..'

'ஓஹோ?'

'பஞ்சு மிட்டாய், இனிப்பு - கார மாங்காயெல்லாம் கூட கிடைக்குதாம்..'



'ம்ம்.. அந்த பஞ்சு மிட்டாய் சாப்பிட்ட வாய் கூட ரோஸ் கலர்ல இருந்துச்சு... லதாக்கு..'

'எனக்கும் அப்படி ஆகணும்..'

'பெரிம்மா கூட்டிட்டுப் போவாங்க.'

'பஞ்சு மிட்டாய், மாங்காயெல்லாம் நிச்சயம் 'நோ'தான்.'

அது. உண்மைதான் என்பது போல வெறுமே உட்கார்ந் திருந்தாள் வான்மதி.

'அதான் நம்ம போயிட்டு வந்துரலாம்.'

'காசு?'

'எங்கிட்ட நிறைய்ய இருக்குது.. தோ இங்கேருந்து இங்க வரைக்கும் வளையல் அடுக்குனாலும் தீராது..'

மணிக்கட்டிலிருந்து தோள்பட்டை வரைக் காட்டி முழக்கினாள் சுசீலா.

மறுநாளே அத்தை மாமா ஒரு கேதத்திற்காய் கிளம்ப, சிறுமிகள் 'தோ இங்கதான்' என்று வேலையாட்களிடம் சாக்கு சொல்லிவிட்டு நழுவினார்கள்.

மைதானத்துள் நுழைந்த இருவருக்குமே தலைகால் எல்லாம் உற்சாகம்தான். அது தாளாமல் துள்ளினார்கள் -

அடக்க ஆளில்லாத சுதந்திரம்.

கண் இச்சித்ததை எல்லாம் வாங்கினார்கள் -

கேட்பாரற்ற உல்லாசம்.

'ஐயோ... இது மாங்காயா மாம்பழமா?'

'ரெண்டுக்கும் மிடில்ல... புளிக்குது இனிக்குது!'

எச்சில் ஊறிய வாயையும், காரத்தில் ஒழுக்கிய மூக்கை யும் உறிஞ்சி, ரசித்து சுவைத்தார்கள்.

'போதும் சுசி... காய்ச்சல் வந்துச்சுன்னா பெரிம்மா திட்டுவாங்க.'

'அதெப்படி திட்டுவாங்க? செல்லம் பாவம் எந்தங்கம்னு கொஞ்சுவாங்க.'

ஆனால் தன் நிலைமை அதுவல்ல என்பதை உணர்ந்த வான்மதி பெருமூச்செறிந்தாள்!

"ஜயன்ட் வீல்ல சுத்தறியா மதி?"

"ம்ம்... நீயி?"

"ம்ஹூ–ம்... அண்ணாந்து பாத்தாலே தலை சுத்துது.. மேல போகும்போது 'துரை விலாஸ–'ன்னு நம் வீடு தெரியுமோ?"

"நீ வரலைன்னா... நானும்..."

"நோ மதி... நீ போ... நா எனக்கும் க்ளாஸ் - மேட்ஸ–க்கும் கல் மோதிரம் சூஸ் பண்ணப் போறேன்.. ஸ்டார் டிஸைன் மோதிரம் மூணு ரூபாதானாம் - நா அந்தக் கடைலதான் இருப்பேன்.. வந்திரு."

டிக்கெட் வாங்கிக் கொண்டு ஊஞ்சலாய் ஆடும் அந்த ராட்டின இருக்கையில் முதலாய் ஏறினது வான்மதிதான்... கூட்டம் சேரச் சேர இவள் உயரே கொண்டு போகப் பட்டாள் - மேலிருந்து தெரிந்த ஊர் பயமாகவும் பரவச மாகவும் இருந்தது. ஆனால் சற்றைக்கெல்லாம் அந்த ராட்சச இயந்திரம் வேகங் கொண்டு சுழல, இவளால் தாள முடியவில்லை. வயிறும் இதயமும் எம்பித் தாழ்ந்து குமட்டின. கவிழ்ந்து கண்களை மூடிக் கொண்டாள் -



சுழற்சியில் கிறுகிறுத்துக் கிடந்தாள் - மற்றவர்களின் குஷாலான கூச்சல் காதைக் குடைந்தது... பின் அவை தேய்ந்து நின்றபோது, அந்த இயந்திரத்தின் சுழற்சியும் நின்றிருந்தது புரிந்தது - ஆனால் இறங்கவும் முடியாதபடி கால்கள் துவண்டிருந்தன -

யாரோ 'இறங்கு பாப்பா' என்று தூக்கி ஒரு ஓரமாய் விட்டார்கள். விட்ட இடத்திலேயே எத்தனை நேரம் இருந்தாளோ...

மயக்கம் சற்று தெளிந்தபோது முழுக்க இருட்டி, மின் விளக்குகளின் ஆட்சியில் இருந்தது மைதானம்.

பஞ்சு மிட்டாயால் சிவந்த உதடுகளுடன் மலங்க மலங்க விழித்தவளை ஒருவன் தொட்டுத் தூக்க முயற்சித்தான் -

'பயப்படாதேம்மா - யாரைத் தேடற... எங்க போவணும்?'

உதறிக் கொண்டு எழுந்தாள்.. 'மாமா இங்க தான் இருக்காங்க' என்று புத்திசாலித்தனமாய் சொல்லி விலகினாள் -

ரகம் பாராமல் வயிற்றுக்குள் இட்டதெல்லாம் கலந்து குமட்டின -

மோதிரக் கடையில் சுசீலாவைக் காணாத கலக்கம் வேறு - சுற்றிலும் ஜகஜகவென்று முண்டியடித்த கூட்டம்.. பெரியவர்களின் இடுப்பளவே இருந்தவளுக்கு நுழை வாசலைத் தேடிப் பிடிக்கவே அரைமணி நேரமாயிற்று. உள்ளேயிருந்த வெளிச்சமும் கலகலப்பும் வெளியே இல்லை.. ஒலிப் பெருக்கியின் முழக்கத்தை மீறி அவ ளால் சுசீலாவைக் கூவி அழைக்கவும் முடியவில்லை.

வீட்டிற்கு தனியே போனால் கிடைக்கும் வரவேற்பை எண்ணிய கிலி!

கண்ணீர் வழிய இருண்ட தெருக்களில் நடந்து வீட்டை அடைந்தாள். பயத்தில் கால்கள் தளர்ந்து கிடந்தன.

நெஞ்சம் மட்டும் பலக்கத் துடித்தது.

சமையல்கார பிரபாக்காவிடம் கெஞ்சி, அவர்களையும் கூட்டிப் போய் பொருட்காட்சியில் சுசீலாவைத் தேட வேணும் என்ற யோசனையுடன் வீட்டினுள் நுழைய, மீண்டும் தலை சுழன்றது.

வரவேற்பறை முழுக்க ஆட்கள்... தோட்டக்காரர் முதற் கொண்டு உள்ளே நிற்க கூடவே இரு காக்கி சட்டைகளும்!

நடுவே சுசீலா!

'பாப்பா பயந்தாப்பல நின்னுதா.. கழுத்து காதுல தங்க நகைங்க வேற.. விசாரிச்சா உங்க மகன்னு சொல்லுது.. அதான் பத்திரமா இங்க கூட்டியாந்துட்டேன்..' மூன்றாம் முறையாய் விளக்கினார் போலீஸ்காரர்.

'இங்க பிள்ளைகளைக் காணாத வீடு அல்லோகல் லப்பட்டுதா... அக்கம் பக்கத்துல தேடினோம்... எக்ஸிபிஷனுக்குப் போகும்னு தோணலிங்க...''

'போலீஸ் சார்... என் கஸின் மதியைத் தேடணுமே... அவளும் பயந்திட்டிருப்பா.'

'இப்ப அங்கதான பாப்பா போறோம்... மைக்குல அறிவிப்பு பண்ணி தேடிப் பிடிச்சடலாம்... வரட்டா..'

காவல்காரர்கள் சன்மானத்துடனும் சந்தோஷத்துடனும் கிளம்ப, வான்மதி மெள்ள நுழைந்தாள் -

தனக்கு பெரியம்மா தரப் போகும் தண்டனையை கற்பனை செய்து நடுங்கியது அவள் நெஞ்சம்.



கடும் வார்த்தைகளும், கொட்டுகளும் மட்டுமல்ல பெரியம்மா காட்டும் அலட்சியமும் அவளை வறுத் தெடுக்குமே...

ஆனால் அன்று வார்த்தைகளால் மட்டும் விளாச வில்லை வைரமணி -

கம்பு கொண்டு முதுகில் விளையாடி விட்டாள்.

'ஐயோ... வேணாம்மா... இல்ல பெரிம்மா' என்று கதறல்களுக்கு இரங்காத அடிப்பின்னல்.

'ம்மா... மதிய அடிக்காதீங்க... பிறகு உங்ககூட நாம் பேசவே மாட்டேன்' என்று மூடிய கதவின் பின்னா லிருந்து சுசீலா தட்டிக் கூவிய பிறகுதான் ஓரளவு நிதா னப்பட்டாள் வைரமணி.

புண்ணில் கல் உப்பைத் தூவியது போல வார்த்தைகள் மேலும் வாதித்தன -

'நாயே... இன்னும் ஆறேழு வருஷங் கழிஞ்சதும் சுசீலாவுக்கு கல்யாணமாயிடும் - அவதானே உன்னைத் தாங்கித் தடுக்கி இங்கே வச்சிட்டிருக்கா - அதுக்கப்புறம் உந்தேவை இங்கே எதுக்கு..? கிளப்பிடுவேன் - அதுக்குள்ள ஒழுங்காப் படிச்சு, டீச்சர் ட்ரெயினிங் அல்லது நர்ஸிங்னு சேர்ந்து உன்னைத் தேத்திக்கோ... தெரிஞ்ச ஸ்கூல்ல வாத்திச்சியா சேர்ந்திட்டீன்னா உத்தமம்... இப்படி வம்பு, வழக்குன்னு ஆடாம ஒழுங்காக் கிடந்தா வாழ்க்கையில செட்டில் ஆயிடலாம் நீ... இப்படி ஏதேனும் தந்திரந்தான் பண்ணுவேன்னா இப்பவே வீட்டை விட்டு ஓடிரு..'

அன்றிரவு விசும்பலோடு படுத்தவள் உறங்க பயந்தாள். மனம் அலைபாயும் இது போன்ற சந்தர்ப்பங்களில்

அக்கனவு நிச்சயம் தலை நீட்டும்... புற்றிலிருந்து எம்பிப் பார்க்கும் பாம்பைப் போல... மான் தலையும், பாம்பின் வயிற்றுக்குள் நகரும் அருவெறுப்பான பயணம்... பின் யாரோ துரத்த காற்றைக் கிழித்துப் பறப்பது போலான வழக்கமான துர்க்கனா -

அன்றிரவு சுசீலா இவளைத் தேடி வந்தாள் -

'வானி மதி... உன்னைக் காணாமல் நான் பயந்து... விடு வந்தா.. இங்கயும் நீ இல்ல... அம்மா ரொம்ப திட் னாங்களா...? எனக்குக் கல்யாணமானதும் உன்னைத் தொத்தல்லாம் முடியாது.. நான் எங்கப் போனாலும் உன்னையும் எங்கூடவே கூட்டிட்டுப் போயிருவேனே.'

பசித்த வயிற்றுக்குள் வார்த்த பாலாய் பொழிந்தன சிநேகிதியின் வார்த்தைகள் -

இந்த பாசமும் பாங்கும் இல்லாவிடில் வான்மதியின் இளமை நரகமாகவே இருந்திருக்கும்...

# 4



'மரம் இலைகளை உதிர்ப்பது போல உன் கடந்த காலங்களை நீ உதிர்த்து விடு.'

ஜே.கிருஷ்ணமூர்த்தி உணர்ந்து உரைத்த ஞான வாக்கியம்தான் இது. இதைப் பின்பற்றினாலேயே வேதனை எவ்வளவோ தீர்த்துப் போகும் கூட... ஆனால் நாய், காய்ந்த புண்ணை நக்கி நக்கி மேலும் ரணமாக்கிக்



கொள்வதைப்போல, மனம் பழைய நினைவுகளை மறப்ப தில்லை... மாறாக மறுபடி ஞாபகப்படுத்தி அதிலிருந்து பாடம் படிப்பதாய் சாக்கு சொல்லி, அவதிப்படுகிறது.

அந்த பொருட்காட்சியில் சுசீலாவைப் பிரிந்து, அடி வாங்கிய சம்பவத்திற்குப் பிறகு எத்தனையோ கவனமாய் இருந்தும் நேர்ந்து விட்டது அடுத்த விபத்து!

நாம் எதிர்பாராத ஒரு ஷணத்தில் நேர்பவைதானே விபத்துக்கள்!

அப்போது வான்மதிக்கும் சுசீலாவிற்கும் பதினைந்து வயதிருக்கும்... புடவை கட்டி அழகு பார்க்கும் ஆசையில் ஆளுக்கொரு நைலக்ஸ் சேலையை எடுத்துச் சுற்றிக் கொண்டு - (சேலைகள் வைரமணி பயன்படுத்தாத அவளது பழைய மர பீரோவிலிருந்து சுசீலா கொத்தி வந்தவை) சமையலிலும் இறங்கி விட்டனர்.

'நாங்கெல்லாம் அந்தக் காலத்துல நிலா காயற முற் றத்துல கூட்டாஞ்சோறப் பொங்கி, ஒத்தருக்கொத்தர் பேசிட்டே கடச்கட அதச் சாப்பிடுவோம் பாருப்பா - அத் தனை ருசியாயிருக்கும். ஆளாளுக்கு கிடைச்ச, கைப்பிடி அரிசி, பருப்பு, நாலாவித காய்கறிங்க, விழுதா நெய்யி எல்லாம் பொங்குத பானைக்குள்ள போகும்... அளவு, திட்டமெல்லாம் கிடையாது. ஆனா அத்தனையும் சேர்ந்து குழைய அம்புட்டு ருசியா மாறிரும்.. ஆத்தங்கரையில பொங்கலிட்டுச் சாப்பிடறதும் அப்பிடித்தான்... இப்ப நெய்யும் முந்திரியுமா இறைச்சாலும் அந்த ருசி வர்ர தில்லையே... உங்களுக்கு அந்தக் கொடுப்பினை இல்லை குட்டிகளா' என்று வேலைக்கார ஆயா சொல்ல, இவர்களுக்குள் பரபரவென்று ஆசை ஊற்றெடுத்தது.

'ஆயா... எதுல கூட்டாஞ்சோறு பொங்கணும்?'

'ம்ம்? இந்தக் கழனித் தொட்டியில - போங்கடீம்மா - அளவா ஒரு மம்பானையில பொங்கணும் - நாமளே கள்ளி பொறுக்கி, அதை மூட்டி, முதல்ல பானையில் தண்ணியூத்தி..."

ஆயா சொல்படி அத்தனையும் செய்தார்கள் - அவிழ்ந்த சேலை கொசுவத்தை அள்ளி செருகியபடி, நிமிஷத்திற்கு ரெண்டு முறை 'கிளுகிளு'வென சிரித்தபடி, அவ்வப் போது நீர் சுட்டு விட்டதா என்று பிஞ்சு விரலை பானையினுள்ளே விட்டு விட்டு சோதித்து, கிடைத்த அரிசி, பருப்போடு தினுசு தினுசான காய்கறிகளை இட்டு, உப்பு உறைப்பை மிகுந்த யோசனையோடு சேர்த்து, இடையிடையே பள்ளிக் கதைகளையும் அங்கே இந்த அனுபவத்தை எப்படி பீற்றலாய் விவரிக்கலாம் என்றும் பேசி...

அந்த சுவாரஸ்யத்தில் சுசீலாவின் முந்தானை நுனியைத் தீ தொட்டதை அவர்கள் கவனிக்கவில்லை. வெக்கை மேலேறவும்தான் திடுக்கிட்டு அலற, அவளைக் கீழே தள்ளி உருட்ட வேணும் என்றெல்லாம் யோசிக்கக் கூடாத அச்சத்தில் வான்மதியும் சேர்ந்து கூவ... வேலைக்காரர்கள் ஓடி வந்து தீயை அணைத்தார்கள் -

ஆனால் பெரியம்மாவின் கோபத்தை அணைக்கக் கூடுமா?

எரிமலையாய் வெடித்து கனல் கக்கினாள் வைரமணி.

'சனியனே - வாரிசைத் தீய்ச்சு கரியாக்கிட்டு நீயே அத்தனையும் ஆளலாங்கற கனவை நீ இன்னுமா விட்டுத் தொலையலை? கள்ளமில்லாத இதுவும் உங்கூட சேர்ந்து ஆடுதே.. எடுத்துச் சொன்னாலும் புரியாம அழியப் பாக்குதே..'



வைத்தியரை வரவழைத்த பின்னும் வைரமணி கத்தி புலம்ப, வான்மதி குன்றி ஒடுங்கினாள் -

'ஐயோ சுசீ... வலிக்குதா... காந்துதா... வீசி விடவா?' என்றிவள் தோழியை நெருங்க, பூஜை அறைக்குள் நுழைய முற்படும் நாயை விரட்டி அடிப்பதன் ஆக்ரோஷத் துடன் இவளைத் துரத்தினாள் பெரியம்மா.

'போடி... வேலை அரைகுறையாய் போயிருச்சேன்ற தவிப்பா? உனக்கு சோறு போடற புண்ணியத்தைக் கடவுள் கணக்குல வச்சுதான் எவ்வாரிச காப்பாத்திட்டாரு... இனி சுசீகுட்டி பக்கத்துல மறந்தும் வராத நீ..'

பானையின் கூட்டாஞ்சோறு தீய்ந்து போக, வெறும் வயிறோடு படுக்கப் போனாள் வான்மதி. வயிறு காலியாக இருந்தாலும் மனதுள் அலை அலையாய் நூறு எண் ணங்கள் மாறி மாறி மோதின.

பிரபாக்காவின் தயவில் ஒரு குவளை பால் கிடைத்தது.

'இதையேனும் குடி மதி... இல்லைன்னா கெட்ட கனாவா வரும்..' பயந்து பாலைப் பருகினாலும் கனவு விடாமல் வந்தது.

முன்பை விட மேலும் தெளிவாய், பயங்கரமாய்... திடுக்கிட்டு எழுந்தவள் வியர்த்து நனைந்திருந்தாள்...

தன் எதிர்காலம் மிக மிரட்டுவதாய் இருப்பதாய் தோன் றியது அவ்விளம் பெண்ணிற்கு...

அதிலிருந்து சுசீலாவிடமிருந்து மேலும் ஒதுங்கிக் கொண்டாள் வான்மதி.

தனிமையில் இருவருமாய் சேர்ந்திருக்கும் சந்தர்ப் பங்களைத் தவிர்த்தாள். பெரும்பாலும் இருந்தது. உத

வியது. படித்தது எல்லாமே சமையல் கட்டில்... அங் கிருந்த வேலையாட்களின் மத்தியில்தான் - பள்ளிக்குக் காரில் போகும் சமயம் மட்டுமே சேர்ந்திருந்தனர் -

இடையே ஒரு இளைய ஓட்டுனர் காரை ஓட்ட அமர்த் தப்பட, சிறு பிரச்சனை முளை விட்டது.

'இந்த டிரைவர் சரியே இல்லை... அம்மாட்ட சொல்லி வேற ஆளு மாத்தணும்..'

சுசீலா சொல்ல, அதில் வசுமதிக்கு நிம்மதிதான் -

எப்படிப் பேச்சை ஆரம்பிக்க என்று தயங்கியிருந்தாள் -

'முன்னேருந்தது போல வயசானவராய் இருந்தா தேவலை... ஆனா நான் சொன்னதாய் பெரிம்மாட்ட சொல்லாதே சுசி.'

'எம்ப்பா இப்படி நடுங்கறே? நானே சொல்லிடறேன்... தப்பு ஏதும் நடந்தா அப்பவும் அம்மா உன்னைத்தானே திட்டுவாங்க?'

'நா அந்த ட்ரைவரை நிமிர்ந்தே பாக்கறதில்லையே சுசீ?'

'ஆனா அவன் ரியர்-வ்யூ கண்ணாடி வழியே உன்னையேத் தானே பார்த்துட்டு ஓட்டறான்... கார் எதிலேனும் மோதினா தப்பாச்சே..'

சிரிக்கும் சுசீலாவைக் கட்டிக் கொள்ளத் தோணும்.. ஆனால் அப்படிச் செய்யாமல் சுவர்களில் போஸ்டர்களை ஆர்வமாய் பார்ப்பது போல நடிப்பாள்.

பள்ளியில் 93 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்ற பிறகும் தான் ஆசிரியைப் பயிற்சிக்குப் போவதாகவே சொன்னாள் வான்மதி - ஆனால் ஊரார் வாய்க்கு அஞ்சிய



வைரமணி இவளையும் கல்லூரியில் சேர்க்க, மிக அனு பவித்து கல்வி கற்றாள்.

கற்பிக்கும் திறமையும் அவளுக்கு இயல்பாகவே இருந்ததால் சக மாணவிகளுக்கும்,

'இது எம்மண்டையில ஏறவேயில்லை மதி' என்று அலுத்த சுசீலாவிற்கும் பொறுமையாய் கற்றுத் தருவாள் -

சுசீலாவிற்குப் பிடித்ததெல்லாம் தோட்டத்தில் எதை யேனும் நடுவதும் களை பிடுங்குவதும்தான்..

'ஏன் உங்கையைப் பாழாக்கிக்கறே சுசி?... என்ன செய் யணுமோ நீ சொல்ல நான் செஞ்சுடறேனே..'

'இது எனக்குப் பிடிச்சிருக்கே மதி - நா இந்தக் களி மண்ணை நோண்டறேன். நீ என் தலையிலுள்ள களிமண்ணைத் தூண்டறே - எப்படி?'

'ம்ம்... தோட்டத்து செடியில் அழகு பூ பூக்குது... என் வேலையில் அறிவுப் பூ மலர்ந்தாச் சரி..'

இரு பெண்களும் சேர்ந்து சிரிப்பதும் கூட வைரமணிக்குப் பொறுக்காது.

'ஏண்டி... வெயில்ல நின்னபடி என்ன இளிப்பு? சுசி குட்டி க்ரீம் எல்லாம் வகை தொகையாய் தடவிட்டு இப்படி வெயில்ல காய்ஞ்சால் கருவாடாகிட மாட்ட? என்ன பிரயோஜனம்?'

'க்ரீம்ல சூரியக் கதிர்களுக்கான பாதுகாப்பு இருக்கேம்மா. அந்தத் தைரியந்தான்..'

'வான்மதி நீ குட்டிக்கு குடை பிடியேன்.'

மறுபேச்சின்றி குடையை விரிப்பாள் வான்மதி.

'ச்சே.. வேணாம் மதி... நானென்ன கரைஞ்சிடற பனிக்கட்டியா ப்ளீஸ்.'

சுசீலா தடுத்தால் -

'பெரியம்மா திருப்திக்காக... ப்ளீஸ்.' என்று மதியும் கெஞ்சுவாள். ஆனால் பெரியம்மா லேசில் திருப்தியுறும் ரகம் இல்லையே -

'ஏய்... பார்த்து பிடிடீ குடையை... குடைக்கம்பி சுசீக் குட்டி கண்ணுல குத்திடப் போகுது... ஜாக்ரதை' என்று முறைப்பாய் கண்காணிப்பாள்.

அப்படியும் ஒரு விபத்து நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் வான்மதி சதா, சர்வ ஜாக்ரதையாய் இருந்தாள், நின்றாள், நடமாடினாள்.

'பின்பக்கத் தோட்டத்தில் உட்கார்ந்து படிக்க வசதியாயிருக்கு மதி' என்று பின் பகுதியின் ஒரு சிறு அறைக்கு மாறி ஒதுங்கினாள்.

வீட்டிலிருந்த சின்ன வேலைகள் அத்தனைக்கும் பொறுப்பு ஏற்றாள் - 'ஏடீ' என்று உரத்த குரலில் வைரமணி கூவினால் ஓடி போய் நிற்பது வான்மதிதான்.

ஒரு வேளைக்கு பத்து வேலைகளை ஏவுவதிலும், பிறகு செய்யப்பட்டவைகள் அத்தனையிலும் குற்றம் குறை கண்டு பிடிப்பதுமே வைரமணியின் பிரதான வேலை. இப்படி வான்மதியை தன்னையே சுற்ற வைத்தால் அவளுக்கு சுசீலாவை நெருங்க நேரமிராது என்பதுதான் திட்டம்.. ஆனால் சுசீலாவிற்கு வேண்டியவற்றை இழுத்துப் போட்டு செய்யாமல் வான்மதி விட்டதில்லை... அவளுக்கு அதில் இன்பம்... திருப்தி. அடுத்தபடி வான்மதி ஒட்டிக் கொண்டது சமையலாட்



களிடம்தான் - சிறு வயதிலிருந்து தன்னிடம் வாஞ்சை காட்டி வளர்த்தவர்களிடம் பாசமாய் பழகினாள்...

''சித்த அசங்காமத்தான் இரேன்'' - பிரபா அதட்ட, வான்மதி திமிறினாள் -

''போதுங்க்கா - வெயில்ல போய் நின்னா எம்முடி பத்தே நிமிஷத்துல காஞ்சிடும்.''

''முன்னே ஒரு இழு இழுத்து உட்கார வச்சி கோதி விடுவேன். அத்தனைக்குப் பொடிசாய் வந்தே... இப்ப நா உன்னைய நிமுந்து பாக்க வேண்டியதாருக்கு... நாள் எப்படி ஓடுது பாரு?''

தன் எதிரே நெடுநெடுவென்று கச்சிதமாய் நின்ற இளம் பெண்ணை ஒரு சிறு பெருமூச்சோடு பார்த்துக் குறைபட்டாள் சமையல்கார பிரபாவதி.

''அதுக்காக எப்பவும் உங்க முழங்கால் அளவுலேயே இருந்திட முடியுமாக்கா?'' - சிரித்த இளையவளின் குழைந்த கன்னங்களை தன் முரட்டு விரல்களால் வழித்து நெட்டி முறித்தாள் பிரபா.

"நீ இங்க வந்தப்பமே நினைச்சேன். இந்த குட்டி அழகன்னு. இப்ப பாலிஷ் ஏத்துன தங்க சிலையாட்டம் நிக்கறே.."

வான்மதி பேச்சை மாற்றினாள் -

''ரவா லட்டு பிடிக்கணுங்களேக்கா.. வெயில்ல தலைய உலர்த்திடறேன் - அதுக்குள்ள முந்திரியெல்லாம் வறுத்து, நெய்யை விட்டுக் கலந்திடுங்க - நாம சேர்ந்தே கடக்கடப் பிடிச்சுடலாம்.''

''சரி - சாயங்காலமா கலகலா செய்யணும். சீப்பைக் கொண்டு சின்ன மாவு உருண்டையை அழுத்தி வரி வரியாய் விழ வைக்கறது உனக்குப் பிடிக்குமே மதி.''

''ம்ம்... தோ வரேன்.''

ஞாபகம் இருந்தது - முன்பு பண்டிகை சமயம், பலகாரப் படலம் தடபுடல் படும். அந்நேரம் தேடி வரும் விருந்தாளிகளுக்கு வைக்க - காரத்தில் இரண்டு, இனிப் பாய் இரண்டு வகை என்று. ஆனால் அதில் கணிசமான பங்கு வைரமணியின் வாயில் அரை பட்டு, உடம்பில் சேர, வியாதிகளும் சேர்ந்தன.

'நீங்க வாயைக் கட்டணும்மா - வெயிட் குறையணும். நாற்பது வயசிலேயே ரத்த அழுத்தம், ஷுகர் எல்லாம் வர்றது ஆபத்து. தினம் நாப்பது நிமிஷம் விறுவிறுன்னு நடங்க. பிறகு மறுபடி உங்க உடல் நிலையைக் கணிச்சு மருந்து தர்றேன்.'

மருத்துவர் கறாராய் உத்தரவிட முதல் வெட்டு விழுந்தது பலகாரங்களுக்கு. சமையல் செய்யும் பிரபா வதிக்கு அது ஒரு பெரிய நிம்மதிதான்.

'யப்பா - மூணு வேளை சமைச்சது போக, இனி எண்ணெய்ச் சட்டி முன்னேயும் கிடக்கத் தேவையில்லை' என்று.

வரும் விருந்தினருக்கு 'மாரி' பிஸ்கட்டுகளும் நறுக்கிய ஆப்பிளும் என்றானது!

'இதோ பார் வான்மதி - நறுக்கி வைக்கறதோட நிறுத்திக்க - ஹாலில் சுந்தரி கொண்டு போய் வைக்கட்டும்' - என்றாள் பெரியம்மா.

மேல் வேலைக்காய் நியமிக்கப்பட்ட அப்பெண்ணிற்கு மேற்புற பற்கள் தாராளமாய் தூக்கியபடி நின்றதால், இளமையிருந்தும் வைரமணி அவளிடம் தாராளமாகவே நடந்து கொண்டாள் -



ஆனால் இப்போதோ மறுபடி பலகார வேலை ஆரம்பம். வீட்டை ஒட்டடை அடிக்கவும், ஜன்னல் கம்பி, கண் ணாடிகளைக் கழுவவுமாய் வீட்டில் சதா பரபரவென்று ஆட்கள்.

சூடாய் ரவாலட்டைப் பிடிக்கும்போது சமையல் கட்டில் பேச்சும் சூடு பிடித்தது. மூன்று நான்கு வேலை யாட்கள் புழங்கும் வீட்டில் எந்த ரகசியமும் கசிந்து விடும்.

சாயங்கால 'டீ'யை வாங்க வந்த டிரைவரும் எடுத்துக் கொடுத்தான் - ''சீக்கிரத்துல பிரபாக்காவுக்கு முதுகு ஒடியப் போவுது..''

''ச்சே... கெட்டப் பயலே.. கெட்ட நாக்கு.. நல்லதாப் பேசாம.''

''நல்ல விஷயத்த சொன்னா புரிய மாட்டேங்குதே.''

''எம்முதுகு ஒடிஞ்சா யாருல உனக்கு சுடச்சுட டீ தருவா?''

''சம்பந்தி வீட்டாருக்குச் சமைக்கணுங்கறதச் சொன் னேன்.'' என்றான் அவன் சற்று சுருதி குறைத்து.

''புரியறது போலச் சொல்லேன்.''

''இங்கேயும் க்ளீனிங்கு, பலகாரம்னு அமளிப்படு துல்ல?''

''நீ சொல்லுப்பா.''

''அம்மா நேத்து வெளியே போயிருந்தாங்கல்ல.. எங்க, எதுக்குன்னு நினைக்கறீங்க?''

''அட சொல்லுப்பா.''

"அந்த வீட்டுல பையன்.. அதாவது நம்ம சின்னம்மா வுக்கு ஏத்தாப்பல பையன் இருக்கறான்."

சமீபத்தில்தான் வேலைக்குச் சேர்ந்திருந்தாலும் - அதாவது 'ஜொன்னு' விட்ட பழைய டிரைவர் ரவி வேலையை விட்டு விலக்கப்பட்ட பிறகு - வேலைக்குச் சேர்ந்திருந்தவனுக்கும் வீட்டு விவரங்கள் தெரிந்திருந்தன.

"அடடே... நல்ல சேதிதான்.. மேக்கொண்டு படிக் கணும்னு சுசீ பாப்பா சொல்லவுமே எனக்குக் கவலைதான் - இப்பவே தேஞ்சு கிடக்குது - இனியும் என்னாத்தப் படிப்புன்னு."

"பெரிய இடமா?" விசாரித்தாள் சுந்தரி.

"பின்ன - நம்ம பாப்பா போய் வாழக் கூடிய இடமா இருக்கணும்ல?"

"அவுக வீடும் காரும் தேருமா நிக்கற பெரிய இடந் தான். அவுங்க வீட்டு ட்ரைவராண்ட பேச்சுக் கொடுத்தேன். அந்த முதலாளிக்குத் தோல் வியாபாரமாம்... கைப் பைங்க, பெல்ட், ஷூன்னு தயார் பண்ணி வெளி நாட்டுக்கு ஏத்தி வுடறதாம்."

"ஓஹோ... அப்ப உள்ளூர்ல வியாபாரமில்லே?"

"ஆபீஸ் இங்கனதான்... வீடு அடையாருல அம்சமா நிக்குது.."

"பையனைப் பாத்தீங்களா?" சுந்தரி 'எடுப்பான' சிரிப்புடன் விசாரித்தாள்.

"பெரியவுங்க பேசிகிட்டாங்க... இளையவங்களைக் காணோம் - ஆனா விசாரிச்சுட்டேன்.. ரெண்டு பையனுங்க... மூத்த பொண்ணைக் கட்டி, அது இத்தாலி



நாட்டுல குடித்தனம் பண்ணுதாம் - அவுங்களும் இதே லெதர் வியாபாரந்தாம் போல... அப்பப்ப வந்து போகுமாம். மூத்த பையம் பேரு தங்கராஜ் - இளையவரு தனராஜ்."

"இப்ப யாரு மாப்பிள்ளை?"

"மூத்தவருக்குக் கல்யாணமாச்சாம்... நாலு வருஷ மாயும் இன்னும் குழந்தை இல்லை போல... அதுக்காக டாக்டருட்ட அடிக்கடி போறதுண்டாம்."

"அடடா... நம்ப பாப்பாக்கு சட்டுபுட்டுன்னு உண்டா யிடணும்."

இப்போதே கண் மூடி வேண்டிக் கொண்டாள் பிர பாவதி!

"பெரியவங்க பேசிக்கிட்டாங்க... இனி கதை எப்படிப் போவுமோ தெரியாது..." என்று முடிந்த பேச்சு வான்மதி யின் காதையும் எட்ட, அவளுக்குள் மகிழ்ச்சி, புஸ்வாணமாய் மேலெழுந்து வெளிச்ச பூக்களை அள்ளி இறைத்தது... ஆனால் பின்பு அடங்கி கருகலாய் நின்றது.

சுசீலாவும் திருமணமாகி இவ்வீட்டை விட்டு விலகி விட்டால் தனக்கு எந்த அன்பும் ஆதரவும் இல்லையே என்ற கலவரம்...

பெரியம்மா தன்னைத் துரத்திவிட்டால்..?

இரவில் வரக்கூடிய கனவு மட்டுமல்ல, இப்போது நனவே, நிஜமே, அவளை அச்சுறுத்தியது..!

# 5



சமீபமாய் சென்னையில் திறக்கப்பட்ட நகைக்கடை அது. வைரங்களும் பிற ரத்தினங்களுமே அங்கு பிரதானம் - சரம் சரமான 'பளீர்' தங்க நகைகளுக்கெல்லாம் அங்கு இடமில்லை.

குளிரூட்டப்பட்ட கடைக்குள் வைரமணி நுழைந்த தோரணையிலேயே அங்கிருந்த மேற்பார்வையாளர் அவளது முன் ஆஜரானார்!

''வாங்கம்மா... உட்காருங்க.. நகை உங்களுக்கா, பொண்ணுக்கா?'' என்றார் மிகப் பரிச்சயமுள்ளவர் போல. அவளைப் பார்த்தறியா விட்டாலும் பணமும் பவுசும் கொண்ட பெண் என்று சரியாகவே யூகித்திருந்தார்.

''பொண்ணுக்குத்தான் - கல்யாணம் கிட்ட வந்திருச்சு.''

''இவா வரலியா?''

''அவருக்கு வெளி வேலையே நூறு இருக்கே...'' - பெருமையாய் அலுத்தாள்.

''அம்மா, நீங்க இருக்கையில் அவருக்கென்ன கவலை.. ஒட்டியாணம் காசு மாலைன்னு பெரிய நகை யெல்லாம் தேவைப்படுமேம்மா..''

''அதெல்லாம் பரம்பரையாய் உள்ளதே இருக்கே..'' மோவாயை உயர்த்தி அலட்டினாள்.

''ரூபியில் கனமான செட்ஸ் வந்திருக்குது - ஜெய்ப்பூரி டிசைன். தந்த நிறத்தில் டிசைனர் காக்ரா போட்டு



இதையும் போட்டுட்டா பாக்கறவங்க கண்ணை விலக்க முடியாது - வைரமும் ஒரு 'செட்' தேவைப்படுமில்லையா?''

''காட்டுங்க - பார்ப்போம்'' - மிடுக்காய் உத்தரவிட்ட வைரமணி பழரசமும் காபியுமாய் பருகி அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் இரண்டு 'செட்' நகைகளைத் தேர்ந் தெடுத்து, விலையையும் படிய வைத்தாள்.

''இது இருக்கட்டும் - மகளையும் கூட்டி வந்து ஒரு வார்த்தை கேட்ட பின் பில் போட்டுரலாம்'' என்றவள் எழுந்த நேரம் அவளுக்குப் பழக்கமான புனிதா கடைக்குள் நுழைந்தாள் -

பொதுவான நல விசாரிப்பிற்கு பின் வைரமணி, தான் தேர்ந்தெடுத்தவற்றை பெருமையுடன் காட்ட,

''என்ன, மகளுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருச்சா?'' கேட்டாள் புனிதா ஒரு விதமான தொனியில்.

''ஆன மாதிரிதான் - லெதர் எக்ஸ்போர்ட்ஸ் கருணா கரனின் இளைய மகன்..''

''அது... அவுங்க...'' மற்றவள் இழுத்தது வைரமணிக்கு வலித்தது!

''உனக்கும் அவங்களைத் தெரியுமில்லையா?''

''நல்லாவே பழக்கம். எம்மருமகனும் அவங்க மூத்த மகன் தங்கராஜூம் கிளாஸ் - மேட்ஸ்.''

''அப்ப இளையவனையும் பார்த்திருப்பேல்ல?''

''இப்பகூட ஒரு கல்யாணத்துல பார்த்துப் பேசினேன்... அப்ப...'' புனிதா தயக்கமாய் நிறுத்தினாள்.

''அடடே.. நகை வாங்க வந்த உன்னை மறிச்சுப் பேசிட்டேயிருக்கேம்பாரு...''

''சம்பந்தி வீட்ல விசேஷம்.. சின்ன செயின் ஒன்னு வாங்க வந்தேன்..''

''எடுத்துக் காட்டுங்கப்பா'' கடையே தன்னது என்பது போல வைரமணி உத்தரவிட, சில நிமிடங்களிலேயே பரிசுப் பொருள் தேர்வானது.

''பரவால்லையே... சட்டுன்னு முடிவெடுத்துட்ட... எனக்கு ரெண்டு மணி நேரமானது..''

''பெரிய நகையில்லையா?... சசிலாக்குத்தானே?''

''ஆமா - அவளுடைய சித்து உடல்வாகுக்கு இது பொருந்தாதுன்னு நினைக்கறியா புனிதா? நீ சொன்னாச் சரியாத்தான் இருக்கும்..''

புனிதாவின் மனம் இளகியது.

''சசிலாவோட வந்து போட்டுப் பார்த்து முடிவு பண்ணு.''

''அதுதான் சரி... போற வழியிலே ஏதேனும் காபி சாப்பிட்டுட்டு போலாமே... மற்றபடி நாம நாலு வார்த்தை சேர்ந்து பேச எங்கே சந்தர்ப்பம்?''

வைரமணியின் அழைப்பை மற்றவள் மறுக்கவில்லை.

ஆக வெயிலுக்கேற்றதாய் தயிர்வடை ஆர்டர் செய்து விட்டுப் பேசலானார்கள் - பூந்தித் தூவலோடு வந்த பலகாரத்தை இயல்பாய் ரசித்து உண்பதாய் காட்டிக் கொண்டாலும் வைரமணிக்கு உள்ளே உதறியது. சில முறை 'மாப்பிள்ளை' வீட்டிற்குப் போய் வந்து, ஓரிரு முறை அவர்களும் தன் வீட்டிற்கு வந்திருந்தாலும், ஒரு நெருடலும் இருந்தது.

'ஒரு நிச்சயதார்த்தத்தை லிம்பிளாய் வச்சுடலாமா?' என்ற இவளது கேள்விக்கு அவர்களிடமிருந்து பதிலே இல்லை.



'பையிளை மாற்றி ஒரு மோதிரத்தைப் போட்டுட்டா நமக்கு நிம்மதி - ஹிஹி.''

'பையன் மூணு மாசம் ஆஸ்ட்ரேலியாவுக்கு ஒரு டிரெய்னிங்கிற்காய் போறான்...' இழுத்தார்கள்.

'அவருக்கு சுசி குட்டின்னு ஆன பிறகு போகட்டுமே - போனில் இஷ்டத்துக்குப் பேசிக்கலாமில்லையா?'

'படிப்பு முதல்லங்கறான் பையன்.'

'அவங்களுக்குத் தப்பு, சரி தெரியற வயசில்லையே.. நாமதான் முறைப்படி எல்லாம் நடத்தி வைக்கணும்..'

'அதெல்லாம் நம்ப காலம் - இப்ப சிறுசுங்க பேசிப் பழகி, பிடிக்க வேண்டியிருக்கே?'

போகப் போக பதில்கள் சற்று விட்டேற்றியாகவே வர வைரமணிக்குப் பயம்!

கழுகு போல கண் வைத்தப் பையனைக் கொத்திக் கொள்ள முடியாத எரிச்சல், விசாரித்தவரை, தனராஜிற்குக் கெட்ட பழக்கங்கள் ஏதுமில்லை என்பதால் பிடியை இறுக்கினாள்.

இப்படி நகைகளை வாங்கிப் பூட்டி அவர்களை மகிழ்த்து விடும் நப்பாசை... அப்படி அவர்களும் பிய்த்துக் கொண்டு வேறெங்கே போய் விடுவார்கள் என்ற சின்ன தைரியம்.

ஆக இப்போது காரியமாய் பேச்சை ஆரம்பித்தாள் -

''கருணாகர அண்ணாச்சி குடும்பம் பற்றி என்ன நினைக்கறே - புனிதா?''

''நல்ல குடும்பம் - செழிப்பான பிஸினஸ்.''

''பாவம் - மூத்தவனுக்கு இன்னும் குழந்தை இல்லையல்ல..''

''அதுதான் அவங்களுக்கு இப்ப ஒரே கவலை... அதான் தனராஜ் பற்றியும் யோசிக்கறாங்க.''

''என்ன யோசனை?''

தயிர்வடையை ஸ்பூனால் வெட்டியபடி விசாரித்தாள். புனிதாவின் குரல் குறைந்தது -

''இப்பதைக்குப் பிள்ளை தரிக்கும்னு தோணலை போல... அந்தண்ணி சொல்லி வருத்தப்பட்டாங்க...''

''பொண்ணு கொஞ்சம் நோஞ்சானாய் தெரிஞ்சா... பையன் நல்ல வாட்டசாட்டம்...'' வருங்கால சம்பந்தி வீட்டை விட்டுத் தாமல் பேசினாள் வைரமணி.

''யூட்ரஸ்ல ஏதோ சிஸ்ட்டாம்.''

''நம்ப ஜட்ஜ் வீட்டுப் பிரேமலதாக்குக்கூட சிஸ்ட்... அதாவது கட்டின்னு.''

''ம்ப்ச்... அவளுக்கு வயசு ஐம்பதாச்சு... பேரம் பேத்தி பாத்தாச்சு.. இங்கே மூத்த மருமகளுக்கு... இவ பேர் ரஞ்சி.. இன்னும் குழந்தைத் தரிக்கவேயில்லையே.''

''பாவந்தான்.''

''அதான் அண்ணி யோசிக்கறாங்க... ரெண்டாவது வர்ற மருமகளேனும் வந்த ஜோரிலேயே ஒரு பேரனைப் பெத்துத் தங்கள் மடியிலே போட்டுடணும்னு.''

வைரமணி சிரித்தாள் - ''வெத்தலைக்குச் சுண்ணாம்பு தடவறப்பவேயே நாக்கை நீட்டி சிவந்திருக்கான்னு பார்க்கற கதையில்ல இது? முதல்ல சின்னவனுக்குக் கல்யாணமாகட்டும்... அப்புறந்தானே பேரப் பிள்ளை தரிக்கும்?''

''அதான்... கொஞ்சம் வாட்ட சாட்டமா... வளப்பமாய் பொண்ணு தேடறாங்கன்னு படுது...'' புனிதா இழுக்க, கேட்டவளின் முகம் சுண்டியது.



''சுசீலா சித்தாயிருக்க, அவளுக்குக் குழந்தைப் பிறக்காதுன்னே முடிவு கட்டிடறதா?''

''அப்படியில்லை - மூத்த மருமகளுக்கு இல்லை... வர்றவளாவது உடனே வாரிசைப் பெற்றுத் தந்திடணும்னு ஆசை.''

''சுசீ குட்டி பெத்துக் கொடுக்க மாட்டாளா என்ன?''

புனிதா தயக்கமாய் பூந்திகளை எடுத்துத் தட்டின் ஓரமாய் அடுக்கினாள் -

''சும்மா சொல்லு புனிதா. முதல்ல சம்பந்தம் பேசினப்ப இருந்த அவங்க முஸ்தீபு பிறகு மங்கிடுச்சு...''

''அது வந்து சுசீலா உங்களுக்கு ஒரே குழந்தை. ஆக வம்சமும் எப்படியோன்னு - அவங்க பாட்டி சொன்னாங்களாம்.''

வைரமணியின் முகம் இறுகியது.

பழி மகள் மீது விழப் பாய்ந்தவள், அது தன் மீதும் விழ, சற்று திகைத்து விட்டது புரிந்தது.

''ஒத்தைக் குழந்தை வம்சம்... ஒண்டியாய் வளர்ந்தது அத்தனை சூட்டிகையாய் இராதுன்னு அங்கே யோசனை போல...''

''இப்படி இண்டு இடுக்கிலே புகுந்து குடைஞ்சால் அவங்க மகனுக்குக் கல்யாணம் ஆனது போலத்தான்.''

நக்கலாய் நொடித்தாள் வைரமணி.

''அதிலும் உங்க வீட்டுக்கு அவங்க தனராஜோடு வந்தது பிசகாயிடுச்சு.''

ஆத்திரம் மிகுந்ததால் வெறுமே கேள்வியோடு பார்த்தாள் வைரமணி.

''உங்க வீட்டில வளர்ற அடுத்த குட்டியைப் பார்த்துட்டாங்க... பேரென்ன வளர்மதி... வசுமதியோ? நிறமும் எடுப்புமாய் இருக்காளா... பையன் சபலப்பட்டுட்டான் போல.. நல்ல குடும்பங்கறதால் பெரியவங்களும் ஆட்சேபிக்கலை.''

வைரமணியின் மௌனம் கூராய் இறுகிக் கிடந்தது.

''சரி, சும்மாயிருந்தால் நீ சுசீலாவுக்கு வேற மாப்பிள்ளைத் தேடி முடிச்சிடுவே - பிறகு சின்னவளைக் கேட்டு வரலாம்னு.''

''ச்சே... சின்ன புத்தி... இவங்க வீட்ல சுசிகுட்டியைக் கொடுத்தாலும் நிம்மதியாய் இருந்திருக்க முடியாது போலவே? பொண்ணைப் பார்க்க வீட்டுக்கு வந்துட்டு வேலைக்காரி மேலே கண் வச்ச வம்சம்.''

இப்போது புனிதாவின் முகம் வெளிறியது.

''உன்னிடம் சொல்லிட்டா, நீ அதற்குத் தக்கபடி ஏற்பாடுகளை செய்வேன்னு சொன்னேன் வைரம்... கோவப்படாதே.''

''இனிக்குது... ஆனா இனியும் இளிச்சுட்டு நான் அவங்க வீட்டுக்குப் போக வேணாம்... நீ சொன்னதும் சரிதான் - வேற மாப்பிள்ளைத் தேடணும்.''

''நீ பிரியமாய் இளையவளை கவனிச்சதால்...''

''கவனிச்ச முகத்துல கரியப் பூசிட்டாங்கல? என்னைய விட மதிமேல பாசமும் நம்பிக்கையும் வச்சது சுசி குட்டிதான். ரொம்ப நெருங்கிப் பழகலைன்னாலும் பட்டும்படாமல் நாலு வார்த்தைப் பேசி பழகின மாப்... அந்தப் பையன்ட்ட... இப்ப நான் போய்,



'சுசீம்மா, அவங்க வீடு தேடி வந்தது உனக்காய் இல்லை அந்தத் தண்டச் சோற்றுக்காய்'ன்னா என் மகளின் மனசு வெம்பிடாது?''

வைரமணி குமுறினாள்.

இரண்டு தட்டுகளிலும் தயிர் வடைகள் கிளறப் பட்டுக் கிடந்தன.

''இதை அவங்களே நேரே எங்கிட்ட சொல்லியிருக் கலாம். இப்படி உன்னைத் தூது விட்டு...''

''ஐயோ.. உங்க ரெண்டு பேருமே நல்ல பழக்கங் கறதால் நாந்தான் உரிமை எடுத்துச் சொன்னேன் - தற்செயலாய் பார்த்து, பேசவும் வாய்ப்பு கிடைச்சுதா... ஸாரி வைரம்... நான் பேசியிருக்கக் கூடாது... உனக்குத் தெரிஞ்சுடறது நல்லதுன்னு பட...''

வருத்தமும் குழப்பமுமாய் தடுமாறினாள் புனிதா.

''நல்லதுதான்.. நான் பாட்டுக்கு சேலை, நகைன்னு சேர்க்கறதை விட்டுட்டு இனி நல்ல குடும்பத்துப் பிள்ளையாய் தேடிப் பார்க்கலாம் - பாரு...''

பில்லுக்கான தொகையைக் கட்டி விட்டு இரு பெண் களும் சோர்வாய் கிளம்பினார்கள்.

வெதுவெதுப்பான ஆலிவ் எண்ணெயை பஞ்சில் முக்கி, அதை வகிடுகளாய் பிரிக்கப்பட்ட சுசீலாவின் உச்சந்தலையில் அழுத்தினாள் வான்மதி... எண்ணெய் பதமாய் உள்ளிறங்கியது.

''ஹப்பா... சொகுசு இது...'' கண் மூடி அனுபவித்த சுசீ கேட்டாள், ''இப்படியெல்லாம் செய்தா உன்னளவுக்கு எம்முடியும் நீளுமா மதி?''

"நீளமெல்லாம் பரம்பரை... ஜீன்களைப் பொறுத்து - ஆனா இப்படிப் பராமரிச்சால் ஆரோக்கியமாய் பளபளங்கும்."

"ம்ம்... எவ்வளவு நேரம் ஊறணும்?"

"அரைமணி நேரம் போதும் - பிறகு அலசிடு." என்ற வான்மதி விரல் நுனிகளால் எண்ணெயை மேலும் தேய்த்து விட்டு, பின்பு கொதி நீரில் ஒரு துவாலையை முக்கிப் பிழிந்து தலையில் சுற்றி விட, ஆவி எண்ணெயை மேலும் மயிர்க்கால்களுக்குள் ஆழ இறக்கியது.

"ஆனா... உனக்கு நீ இதெல்லாம் செய்திருக்கியா மதி?"

"ம்ஹூம்..." காரியத்திலேயே கண்ணாயிருந்தாள் வான்மதி.

"உனக்கு அவசியமில்லை - தேங்காய் எண்ணெய் தேய்ச்ச ஷாம்பூ போட்டு அலசிடுவே... ஆனா உம்முடி கறுப்புப் பட்டைப் பரத்தினது போல மின்னும்."

"எங்கம்மாவிற்குக் கைக்கடங்காத கூந்தல்ன்ற ஞாபகம்... ஆக என்னுடையதும் சாதாரண பராமரிப்பிலேயே பாதகமில்லாம இருக்குது."

"உனக்கு நான் தேய்ச்சு விடவா மதி?"

"புஷ்டியான குழந்தைக்கு நெய்யும் முந்திரியும் எதுக்கு?"

"நீ புஷ்டில்லாம் இல்லை - ஸ்லிம்."

"நாம கூந்தலைப் பற்றித்தானே பேசறோம்."

"ஆமாமா... கச்சிதமான உடம்பில் புஷ்டியான கூந்தலழகு... அதனாலதான்."

"ம்ம் - சொல்லு."



"ல்ல - வேணாம்."

சுசீலாவின் கூந்தலை நீவி சிறு பந்தாய் முடிந்தவள் -

"கீஸர் போட்டுட்டு, மெஜந்தா ஸல்வாரை எடுத்து வைக்கறேன் சுசி" என்று கிளம்பினாள்.

"இரேன் - சொல்லிடறேன்."

"எதை?"

"நா சொல்ல வந்ததை."

"சரி சொல்லு."

"நீ ரொம்ப அழகு மதி - அதான் தனராஜ் உன்னையே பார்க்கறார்."

சீப்பு, எண்ணெய்க் கிண்ணத்தை எடுக்கக் குனிந்த வான்மதி அப்படியே உறைந்தாள்.

ஆக சுசீலாவும் அப்பார்வைகளைக் கவனித்திருக்கிறாள்!

தான் கவனித்துக் கணித்ததைப் பிறர் கண்டிருக்கக் கூடாதே என்று மனதுள் தவித்தது வீண் - கவனித்திருக்கக் கூடாதவள் கண்டு கொண்டாள்.

"ச்சேச்சே.. எல்லாரையும் பார்க்கறது போலவேதான் என்னையும் பார்க்கறார்."

"ஆனா என்னை அது போல ஆசையாய் பார்க்கலியே... அவர் இங்கே வந்ததே உனக்காகன்னு நினைக்கறேன் மதி."

இவளுக்கு இதயம் பிசைந்தது.

விஷயம் மேலும் விகாரப்படும் முன்பு இதற்கான முடிவைத் தேட வேணும் -

சுசீலாவின் முகத்தை ஊன்றிப் பார்த்தாள். அதில் கபடோ, கசப்போ இல்லை.

கள்ளமற்ற அந்த அழகில் மனம் கனிய அந்த முடிவை, அந்நேரம் எடுத்தாள் வான்மதி...

## 6



அணை கொள்ளாமல் பீறிட்டுப் பாயும் காவிரியைப் போலல்லாமல் அன்று மிக அமைதியாகவே தன் வீடு நுழைந்தாள் வைரமணி.

'தோட்டம் வறண்டு கிடக்குதே? என்னா முத்து, தண்ணியும் விடறதில்லை களையும் பிடுங்கறதில்லைன்னா எப்படி?'

'வாங்குன சாமானை எல்லாம் மேல கொண்டு வைக்கவும் உன்னைக் கூப்பிட்டுச் சொல்லணுமாடி?' என்று நகர்வலம் முடிந்து வரும் அரசியின் தோரணையில் ஆர்ப்பாட்டமாய் வீடு நுழைபவள் இன்று தோற்று திரும்பும் தளர்வில்!

அமைதியாய் மாடிப்படி ஏறியவள், படுத்து விட்டாள்.

ஞாபகங்களை அலைமோத, எங்கிருந்து ஆரம்பிக்க என்று குழம்பிய நேரம் அறைக்கதவு தட்டப்பட்டது.

யாரை உடனே பார்க்க வேண்டாமென நினைத்தாளோ அவளே நுழைந்து நிற்க, ஆத்திரப்படவும் ஆவியின்றிக் கிடந்தாள்.



''குடிக்க ஏதேனும் கொண்டு வரவா பெரிம்மா?''

மறுப்பாய் தலை அசைந்தது.

''உங்ககிட்ட பேசணும் பெரிம்மா... கொஞ்ச நேரந்தான்.''

கேள்வியோடு நிமிர்ந்தன வைரமணியின் விழிகள். நிலவை ஒரு சில நட்சத்திரங்களோடு சேர்த்து பிசைந்து வார்த்த சிலைபோல தன் எதிரே நின்றவளை ஒருவித அச்சத்துடன் பார்த்திருந்தாள்...

எப்பேர்ப்பட்ட வாழ்வு இந்தப் பெண்ணைத் தேடி வந்து நிற்கிறது?

ஊரில் ஏன் தமிழகத்திலேயே பிரசித்தியான பணமும் பவுசும் கொண்ட ஒரு குடும்பம் வான்மதியைத் தங்களின் மருமகளாய் ஏற்க தயாராய் உள்ளது - அதுவும் வைரமணியின் சம்பந்தத்தை மீறி...

வான்மதி அங்கே வாழ்க்கைப்பட்டு ஒரு குழந்தைக்கும் தாயாகி விட்டால்... அங்கு ராணிதான்!

இவர்களின் வட்டாரத்தில் அரசியாய் பவனி வரலாம்... ஆனால் தன் மகள், சுசீலாவின் நிலை... தன் நிலைமை என்னவாகும்...? சில படிகள் மேலேறிப் போய்விட்ட வான்மதியை அண்ணாந்து பார்த்துக் குமைய வேணுமோ? உள்ளே குழப்பங்கள் அவளைப் பின்னிப் பிடுங்கின.

ஆனால் வைரமணியின் மௌனத்தைச் சம்மதமாய் எடுத்துக் கொண்டு இளையவள் பேசப் பேச மற்றவளின் அச்சம் ஆச்சரியமாய் புரண்டது.

என்ன சொல்கிறாள்..?

இப்படி ஒரு முடிவெடுக்க எப்படி முடிந்தது?

இப்படியாய் இவளை வளர்த்தது தான்தானா?

இப்படி வளர்ந்தவளையா தான் இதுவரை வார்த்தைகளால் வதைத்தோம்? கேள்விக் கொடுக்குகள் அவளைக் கொட்டின...

வான்மதி பேசப் பேச மற்றவளின் இரும்பு மனம் இளகியது.

''உங்களுக்கு நா ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன் பெரிம்மா.. என் நன்றியை, சுசீ மேலுள்ள என் பிரியத்தை எல்லாம் எப்படிக் காட்டறதுன்னு யோசிச்சிருக்கேன் - முழுசாய் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமான்னு ஏங்கியிருக்கேன் - இங்கேருந்து உடனே கிளம்பறதுதான் இப்ப என்னால் முடிஞ்சது... நா யார் கண்ணிலும் படாமல் போயிட்டா, சுசீயின் கல்யாணம் உங்க எண்ணப்படி நடக்கும்னு நினைக்கறேன் - 'இப்படி சொல்லாமக் கொள்ளாமல் ஓடிட்டாளே'ன்னு அவங்க, அதாவது கருணாகரன் ஐயா வீட்டில் ஒரு வெறுப்பு உண்டாகும். எல்லாம் புரிஞ்ச பிறகும் நான் இங்கேயே இருக்கறது முறையில்லை.''

தான் 'எல்லாம்' என்பதின் பொருள் தன் பெரியம்மாவிற்குப் புரிகிறதுதானே என்பது போல இறைஞ்சின சின்னவளின் விழிகள்.

''தோட்டக்கார முருகேசண்ணனின் உறவுக்காரர்தான் அந்த லேடீஸ் ஹாஸ்டலின் வாட்ச்மேனாம்.. அங்கே ஒரு அறை காலியாய் இருக்கறதாய் சொன்னாராம். தற்சமயம் அங்கே தங்கி என் பரீட்சைகளை எழுதி முடிக்கறேன் பெரிம்மா - பிறகு பி.எட். படித்தால் பெரியப்பா ஏதேனும் ஒரு ஸ்கூலில் வேலை வாங்கித் தந்திடுவார் - பிறகு கவலையில்லை.''



பெயருக்கேனும் 'ஏன் இந்த முடிவு - எதற்கு' என்ற கேள்விகளை வைரமணி கேட்கவில்லை.

அர்த்தம்தான் அவளுக்கு அர்த்தமாகி இருந்ததே!

ஆனால் வான்மதிக்கு இப்போதுதான் புரிந்திருக்கிறது. இத்தனை நாளாய் கல்மிஷமற்ற அவளுக்கு தன்னால் இக்குடும்பத்தில் கசப்பு விளையக் கூடும் என்பதே உறைக்கவில்லை... உணர்ந்ததும் அவசரமாய்ப் பதறி விலகுகிறாள்.

சுசீலாவிடம் இது குறித்துப் பேசியிருப்பாளா?

அப்படித் தோன்றவில்லை.. சுசீலாவின் சந்தோஷ வாழ்விற்குத் தான் ஒரு தடை என்ற எண்ணப் பொறி சுட்டதுமே தன்னிடம் ஓடி வந்திருப்பதாய்தான் பட்டது.

இத்தனையும் நடிப்புமல்ல - அது நிச்சயம்.

வான்மதிக்குத் தன் பெரியம்மாவின் முக பாவனை வாழ்நாள் முழுவதற்கும் மறக்காது.. தான் வீட்டை விட்டு வெளியேறுவதாய் தெரிவித்ததும் சதா ஒரு கம்பீர கடினத்துடனிருக்கும் அந்த முகம் ஒரே நொடியில் இளகித் தளர்ந்தது... கண்கள் உறைந்து பனித்தன!

தாயைச் சாகக் கொடுத்து விட்டு ஒரு இருண்ட ஓட்டு வீட்டில், பிற பெண்கள் தள்ளி விட, தன் கைகளில் அடைக்கலமான சின்னப் பெண்... இத்தனை காலமாய் தன் வீட்டுப் பராமரிப்பில் வளர்ந்த பூஞ்செடி... தன்னால் இயன்றளவில் இந்த வீட்டிற்கு நறுமணம் பரப்பியதையும் மறுப்பதற்கில்லை.

இவளில்லாவிடில் சுசீலா தனிமையில் தளர்ந்திருப்பாள். தனக்கும் தன் ஆக்கிரமிப்பில் ஒடுங்கிய கணவனுக்கும் இடையே நசுங்கிய பாத்திரமாகப் போயிருப்பாள்.

சுசீலாவின் முகத் தெளிவிற்கும், சிரிப்பிற்கும் அவளது துடிப்பிற்கும் வான்மதி பெருந்துணை, முக்கிய காரணம். இப்போது துணிந்து இச்சிறு பெண் வீட்டை விட்டு விலகுவதற்கும் அவளது அன்பே காரணம்.

பிள்ளைகளின் குட்டிம புத்தி அலாதி. அவர்கள் உலகைப் பார்க்கும் விதமும் புரிந்து கொள்வதும் முற்றிலும் பெற்றோர்களுக்குப் புரியும் என முடியாது.

ஆக இப்போது கேள்விகள் அவசியமில்லை.

"நான் சுசீயிடம் எதும் சொல்லலை பெரிம்மா... அவ சந்தேகப்படாதது போல என் பெட்டியை அடுக்கிட்டு சமயம் பார்த்துக் கிளம்பிடறேன்... சீக்கிரமாய்.."

இத்தனை வருஷங்களாய் அடைக்கலம் தந்த வீட்டை விட்டுக் கிளம்புவது... அதுவும் எங்கே... இனி எதிர்காலம் என்ன என்றேதும் அறியாமல் புறப்படும் அதிர்ச்சி அந்த இளம் கண்களில் அப்பட்டமாய் தெரிந்தது -

ஒருவேளை தனராஜ் வான்மதியிடம் தன் விருப்பத்தை நேரடியாகவே தெரிவித்திருப்பானோ? இவளும் துணிந்து முடிவெடுத்து விட்டாள். "கொஞ்ச காலம் மட்டும் ஒதுங்கியிரு மதி... பிறகு இங்கேயே வந்திரு. யாருமில்லாம வீடு சூன்யமாத்தானே கிடக்கும்?"

இத்தனை மிருதுவான வாஞ்சையுடன் இதற்கு முன் பெரியவள் இளையவளிடம் பேசியதில்லை!

தலை குனிந்த தங்கச் சிலை போல நின்றவளைக் கண்ட மனசு காந்தியது. ஒரு அபார வாய்ப்பை மதி உதறிப் போவது புரிந்தது -

'சம்மதம்' என்ற ஒரே ஜாடையில் அவளது வாழ்வே பூந்தோட்டமாய் விரியும்... இப்போதோ எதுமறியாத ஒரு வனாந்தரம் போகிறேன் என்கிறாள் -



அவள் நன்றி சொல்லும் விதம் இது...

பொங்கும் பெருந்தன்மை...

ஆனால் அதே நேரம் வைரமணிக்குத் தன் சிறுமை இடித்தது.. முகம் சிறுத்தது.. தான் வளர்த்த பெண் முன் தான் குணமின்றி குன்றி நிற்கும் கேவலம் -

தாள முடியாமல் குறுகிப் படுத்தாள் -

அருகே மண்டியிட்ட வான்மதி பெரியம்மாளின் கைகளைப் பற்றிக் கொண்டாள் - இரு ஜோடி கைகளிலும் நடுக்கம்..

"நன்றி மறக்க மாட்டேன் பெரிம்மா..." குரல் குழறியது...

பிறகு குவிந்த கரங்களுடன் எழும்பினாள்...

ஏனோ தாளாமல் வைரமணி கண்களை மூடிக் கொண்டாள்.

சன்னமாய் கதவு திறந்து மூடப்படுவது புரிந்தது...

வைரமணியின் பெரிய உடல் குலுங்கலாயிற்று... மூடிய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வடிந்தது...

'நல்லதை நினைப்பவர்களுக்கு நல்லதே நடக்கும்' - என்ற ரீதியான தேவதை, நீதிக் கதைகள் வான்மதிக்கு சிறு வயது முதலே மிகப் பிரியம்.

அதன் விளைவோ அல்லது அவளது குண இயல்பே அப்படித்தானோ அவள் நல்லதையே நினைத்து வந்திருக்கிறாள்.

தான் எத்தனை கலக்கம் சோர்வால் அலைக்கழிக்கப் பட்டாலும் பிறருக்கும் தீயது நேர்ந்து அவர்களும் வாடி

வருந்தட்டும் என்று நொந்து நிந்தித்ததில்லை. அப்படி கசப்பின் கசடற்ற மன அழகே அவளது முகத்திற்குத் தனி பொலிவைத் தந்திருந்தது.

சாந்தமும் பரிவும் உண்மையும் கலந்து ஜொலிக்கும் அகண்ட கருவிழிகள். சதைப்பற்றான உதடுகளின் வளைவை பொறுமையும் பிரியமும் மேலும் மிருது படுத்தியிருந்தன - சருமத்தின் மென்மையும் கூட அவள் இதயத்தின் பிரதிபலிப்பே போல...

தோளின் நிமிர்வும் நடையின் நிதானமும் அவளை எங்கும் தனித்துக் காட்டின - கூந்தலின் அடர்த்தி அவளது தயாளத்தைக் குறித்ததோ?

ஆக அவளுக்கு மனிதர் தயவு வாய்த்திருந்தது -

வைரமணியைத் தவிர அவளிடம் யாரும் நிஷ்டூரம் காட்டியதில்லை.

உயிராய் பழகிய சுசீலாவிடமிருந்து விலகினாள் - சமையலறையில் மேலும் ஒண்டினாள்.

ஆனால் அங்கிருந்த பேச்சும் அசௌகர்யப்படுத்தியது.

''என்னக்கா செஞ்சு வச்சப் பலகாரமெல்லாம் அப்படியே கிடக்குது?''

''என் - நேத்து கூட ரெண்டு பேருக்கு வச்சு எடுத்துப் போனே...''

''அதாஞ் சொல்றேன்... யார் யாருக்கோப் போவுதே தண்டமான்னு. நாம இதைச் செஞ்சது மாப்பிள வூட்டுக் காரங்களுக்குப் பரிமாறல்ல?''

''கல்யாணம்னா சதா மாப்பிள்ளை வூட்டுக்காரங்க மட்டுமா வந்து போவாங்க? விசாரிக்கக் கொள்ள உறவுக் காரங்களும் வருவாங்கல்ல?''



'சும்மா அங்க நின்னு கேக்கறதுல கல்யாணப் பேச்சே இல்லியே... பொதுவா வேறேதோ பேசினாங்க.. தனராஜ்னு பேருக்கு எத்தாப்போல ஜம்முன்னு வந்த மாப்பிள்ளைத் தம்பி இப்ப ஆளையே காணலியே... மூணு, நாலு தரம் வந்தவருக்கு இப்ப என்னாச்சு?'

வான்மதியைக் குற்ற உணர்வு குடைந்தது.

'என்னைப் பார் என் அழகைப் பார்' என்றிவள் போய் நிற்கவில்லை. ஆனாலும் தன் மீது தனராஜிற்கு ஏற்பட்ட ஈர்ப்பினால் தானே இக்கல்யாணம் தடைப்பட்டிருக்கிறது?

அழகாய் களை கட்ட ஆரம்பித்த வீடு இப்போது கேள்விகளோடு நிற்கிறது?

ஹாஸ்டல் அறைக்கு முன் பணம் கட்டியவள் தன் பொருட்களை பெட்டிக்குள் சேகரிக்கலானாள். அந்த முன் பணத்திற்காய் பெரியம்மாவிடம் போய் நின்றபோது சங்கடமாயிருந்தது -

''ஸாரி பெரிம்மா... நான் சம்பாதிக்கத் தொடங்கியதும் என்னால் முடிஞ்சளவு பணத்தைத் திருப்பிடறேன்... அன்புக்கு விலையில்லை... ஆனாலும்...''

தன் குற்றம் அல்லாததற்காய் குறுகி நின்றாள்.

''கொஞ்சம் பெரிய ஹாஸ்டலில் ரூம் பார்த்திருக்கலாம் மதி.. நீ முருகேசு மூலமாய் ஏதோ ஏற்பாடு செய்திருக்கே - அதுவும் சரிதான் அவன் மூலம் நாம தகவல் அனுப்பிக் கலாம் - செலவுக்கு வேண்டிய பணம் தர்றேன்... நிம்மதியாய் பரீட்சைகளை எழுதி முடி..''

பெரியம்மாவின் கோபத்திற்குத் தான் ஆளாகவில்லை என்ற நிம்மதி இளையவளுக்கு -

ஆனால் அன்று மாலையே பெரியம்மாவிடமிருந்து 'உடனே அறைக்கு வர' உத்தரவு வர, ஒரு பதட்டத்துடன் போனாள் -

"கூப்பிட்டீங்களா பெரிம்மா?"

கோழிக் குஞ்சாய் நின்றவளை திரும்பிப் பார்த்த வைரமணி அன்று பருந்து போலத் தெரியவில்லை... அவள் முக பாவனைகள் இப்போது இளையவளை பயமுறுத்தவில்லை எனினும் குழப்பின.

வேலைக்காரப் பெண் வெளியேறக் காத்திருந்த வைரமணி மெள்ளச் சொன்னாள் -

"கதவை மூடு மதி.."

அதன்படி செய்தவள் மேலும் தணிவாய் வினவினாள் -

"என்ன பெரிம்மா?"

கருநீலப் பட்டில் கம்பீரமாய் நின்ற வைரமணி தன் கையிலிருந்த நீள வெள்ளைக் கவரை நீட்டினாள்.

விரைந்து வாங்கிக் கொண்டாலும் அதைப் பிரிக்க வில்லை இவள்.

"அது 'ஜீவன் எஸ்டேட்'டிலிருந்து வந்த கடிதம் மதி."

"சரி பெரிம்மா."

"உனக்கு வந்த லெட்டர்... ஏதோ நினைப்பில் பிரிச் சுட்டேன்..."

"ம்ம்..."

"நல்லதும் கெட்டதுமான சேதி."

உள்ளே பொங்கிய படபடப்பை மதியின் விழிகள் காட்டின.



"அது உங்கப்பாவின் எஸ்டேட் தெரியுமா?"

"பேர் தெரியாது பெரிம்மா... நாங்க முன்னே ஒரு எஸ்டேட்டில் இருந்ததாய் ஞாபகம்.."

"உங்கப்பா பேர் ஜீவானந்தம் - முன்னே சிறு சொத் தாய் இருந்ததை விஸ்தீரிச்சிருக்கார் போல... ஆனால்."

உலர்ந்த உதடுகளைப் பிரித்துக் கேட்டாள் இளையவள் -

"சொல்லுங்க பெரிம்மா."

"இப்ப உங்கப்பா இறந்துட்டாராம் மதி."

வான்மதிக்கு ஒரு முழு நிமிஷம் ஏதும் புரியவில்லை.

என்ன சேதி இது?

இத்தனை நாட்களாய் தான் அநாதை என்று மறுகி யிருக்க வேண்டாமா? அப்பா... அதிலும் ஒரு எஸ்டேட் டின் முதலாளியானவர் உயிரோடு இருக்க, ஏன் மகள் பிறர் தயவில் வளர்ந்தாள்?

15 வருஷங்களால் ஏன் அப்பா தன்னைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கவேயில்லை?

இறந்த தகவலை மட்டும் ஏன் அனுப்பியிருக்கிறார்கள்?

இருந்ததாகவே நினையாத ஒரு உறவின் இழப்பை அறிவிக்க வந்த அந்த வெள்ளை உறையை சிறு வெறுப்புடன் பார்த்தாள்.

"பிரிச்சு வாசி மதி... அப்பா ரொம்ப நாளாய் படுத்த படுக்கையாய் இருந்திருப்பார் போல... அந்நிலைமையில அவர் யாரையும் பார்க்கப் பிரியப்படலை போல.."

ஒளியெல்லாம் வடிந்த சக்கையாய் இருந்த ஜோடிக் கண்கள் சொன்னவளை வெறித்தன -

"ஆனால் தன் சொத்தை - அதாவது ஐநூறு ஏக்கர் பரப்புள்ள தன் எஸ்டேட், அதன் நடுவே உள்ள பெரிய வீட்டை எல்லாம் உன் பேரில் எழுதி வச்சிருக்கார்."

கண்களின் ஒளி மீளவில்லை.

சொத்து தந்தவர் ஏன் இத்தனை நாள் சொந்தம் தரவில்லை என்ற கேள்வி மட்டும் உள்ளே ஓடிக் கொண்டிருந்தது!

உறவின் பாதுகாப்பும் உல்லாசமுமாய் கழிந்திருக்க வேண்டிய அவளது இளமை... வாழ்வின் இனிய 15 வருடங்கள் கலக்கமாய் கழிந்தனவே.

எத்தனை இகழ்ச்சி, இடிசோறு, ஏக்கங்கள், அவமானம், ஊமைக் கண்ணீர், பயம், பதட்டம் என்று...

"சில கோடி பெறுமானமுள்ள சொத்துக்கு இப்ப நீ உரிமையுள்ளவள். உங்குணத்துக்குக் கிடைச்ச பரிசு இது மதி..."

ஆனால் எந்த மகிழ்வையும் உணராதளவில் மரத்துப் போயிருந்தது வான்மதியின் மனம்.

# 7



'நம்பிக்கைத் திரிகளற்று இருண்டு போய் கிடக்கின்றன மன விளக்குகள்' -



இத்தனை காலமாய் திரியற்று கிடந்த மனதுக்குள் மெள்ள மெள்ள ஒளியின் சாத்தியம்... நம்பிக்கை இருக்கிறதோ என்ற நெகிழ்வு...

யாரும் வான்மதியின் அதிர்ஷ்டத்தைக் கண்டு பொறுமவில்லை. வீட்டு வேலைக்காரர்கள் அனைவரும் ஏதோ தாங்களே அதிர்ஷ்டத்தால் அடிபட்டவர்கள் போல அகமகிழ்ந்து போனார்கள் - தோழியைக் கட்டிக் கொண்டு வாழ்த்திய சுசீலாவின் குரலில் விசும்பலும் இருந்தது.

"அப்ப கிளம்பிடுவேல்ல மதி? விசாரிச்சேன் உன் எஸ்டேட் ரொம்ப தூரத்தில் எல்லாம் இல்லை. இங்கேருந்து திருவனந்தபுரம் ஃப்ளைட் - பிறகு ரெண்டு மணி நேர ஜீப் பயணம்னு அரை நாள்தான் ஆகுமாம்..."

"நினைச்சா நீ என்னைப் பார்க்க வந்துடலாம்."

"ஆமாமா... நாந்தான் வரணும் - நீ இனிமே எஸ்டேட் முதலாளியம்மா நீ - வேலையும் பொறுப்புமாய் பின்னியெடுக்கும்."

"நீயும்தான் என் பொறுப்பு சுசீ.. நீ சந்தோஷமாய் இருக்கணும் - உன் கல்யாணத்துக்கு ஓடி வந்துருவேன்."

"இப்ப யார் அங்கே இருக்கறாங்களாம்?" தன் குட்டைக் கூந்தலைக் கோதியபடி சுசீலா கேட்க, வான்மதி விழித்தாள் -

"எங்கே?"

"ம்ப்ச்... அதான் உன் பெரிய எஸ்டேட்டில்? இப்ப யார் அதை நிர்வாகம் பண்றது?"

"தெரியலியே... ஏதும் தெரியலை சுசீ. பெரியம்மா லெட்டர் எழுதிய வக்கீலுடன் போனில் பேசினாங்க...

பரீட்சை முடிஞ்சதும் கிளம்பி வரச் சொல்றார் - தேதியைத் தெரிவிச்சால் ஒரு ஆளை அனுப்பி என்னை வீட்டிற்கு அழைத்துப் போவதாய் சொன்னாராம்.''

''நல்லவேளை இன்னும் பத்து நாள் பரீட்சை இருக்குது. இல்லைன்னா உடனே கிளம்பியிருப்பேல்ல?''

வான்மதியின் நீண்ட விரல்களுடன் தன் வெண்டை விரல்களைப் பின்னியபடி குறைபட்டாள் சுசீலா.

தான் நல்லபடியாய் கிளம்புவதற்கே இப்படி வருந்துபவள் சொல்லாமல் மறைந்திருந்தால் கலங்கிப் போயிருப்பாள்.

பெரியம்மாவும் 'பரீட்சையை முடிச்சுட்டு ஒரேயடியாய் கிளம்பலாம் மதி' என்றுவிட ஹாஸ்டல் திட்டம் கைவிடப்பட்டது.

இது ஒரு சந்தோஷப் புறப்பாடு - பிரிவு - காரணமேதும் சொல்லாமல் காணாமற் போயிருந்தால் அது கேவலம் தான்... காத்த கடவுளுக்கு மனமார நன்றி கூறினாள்.

''ஆனா... அங்கே... உங்கப்பாவைப் பார்க்க முடிஞ்சிருக்குமானால் சந்தோஷப்பட்டிருப்பல்ல மதி?''

தனக்குத்தானே கேட்டு வான்மதி குழம்பிய இடம் இது...

'தெரியலியே' என்பது போல விழித்தாள்.

மதிமுகத்தின் துக்கமும் கசப்பும் தாளாமல் நெருங்கி அணைத்துக் கொண்டாள் சுசீலா.

''அவர் எப்படியோ... ஆனா பார்த்திருக்கலாம்.''

''இனி அப்படி யோசிச்சுப் பயனென்ன சுசீ? எங்கம்மாக்கும் அப்பாவுக்கும் ஒத்துப் போகலை... அவங்



களிடையே என்ன பிரச்சனைங்கறது யாருக்கும் தெரியலை. ஆனா ஒருவரை விட்டு மற்றவர் முழுக விலகற அளவுக்கு பெரிய பிரச்சனைதான். அம்மா இறந்தப்ப கூட அப்பா அங்க வரலியே.. அதாவது வந்ததாய் நினைவில்லை.''

''அவருக்குத் தகவல் போச்சான்னும் தெரியாதே.''

''ஆனா நான் உயிரோடு இருந்தது அவ... அப்பாக்குத் தெரிஞ்சிருக்குதே. இப்ப சொத்திற்காய் அனுப்பிய கடிதத்தைக் கொஞ்சம் முன்னே அனுப்பியிருந்தால்..? ஆக அவருக்கு அம்மா மேலிருந்த வெறுப்பு என் மேலேயும் படர்ந்திருக்குது.''

''வெறுப்புன்னா தன் சொத்தை ஏன் உனக்குத் தரணும்?''

''ஒண்ணும் புரியலை சுசீ. அப்பப்ப அப்பாவப் பற்றி நினைச்சிருக்கேன். மறு கல்யாணம் செய்து குடும்பத்தோட வாழ்றாரன்னு, செத்துப் போயிட்டா போலன்னு.''

''தனியாத்தான் இருந்திருக்காங்க போல... மனசுக்குள்ள அன்பு இருந்திருக்கு'' ஊர்ஜிதமாய் சொன்னாள் சுசீலா.

''பார்க்கக்கூட பிடிக்காதளவு அன்பா?''

வான்மதிக்குக் கசப்புதான் - 'ஒண்ணும் வேணாம் போ' என்று உதறித் தள்ள ஆசைதான் - ஆனால் இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்த வீட்டை விட்டு விலக இந்த அழைப்பு ஒரு கௌரவமான மாற்றல்லவா?

'நல்ல குணமுள்ளவங்களை ஆண்டவன் கைவிடமாட்டாரு மதிம்மா - பாரு' - என்று சுற்றியுள்ளவர்கள் வாயார வாழ்த்தி, பூரிக்க, ஒரு மகிழ்வான சூழலில் விடைபெறலாம்.

இதுவரை தன் தந்தை ஆண்ட பூமியை, தானும் தன் தாயும் ஐந்து வருடங்கள் புழங்கிய இடத்தைக் காணலாம் என்ற ஆர்வமும் உந்தியது.

இது தவிர தன்னுடையது என்று ஆகியிருந்த அந் நிலத்தைத் தொடர்ந்து எப்படி பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யும் கடமையும் இப்போது சேர்ந் திருந்ததே.

அங்கு உழைப்பவர்களுக்கே அதை உடமையாக்கி விட்டால்..? அல்லது ஒரு ட்ரஸ்ட் போல நிறுவி, வருமானத்தைத் தேவையுள்ளவர்களுக்கு உதவப் பயன்படுத்தலாமா?

இதையெல்லாம் மீறி அவள் யோசிக்கத் தயங்கின ஒரு காரணமும் இருந்தது.

எஸ்டேட்டிற்குப் போனால் இதுவரை புதிராயிருந்து அவளைப் புரட்டியெடுக்கும் அந்தக் கனவிற்கு அர்த்தம் புரிய வருமோ?

தன்னைக் காற்றில்லாத ஒரு கண்ணாடி அறை போல என்னுள் மூடி வைத்துக் கொண்ட அந்தக் கனவு...

பல இரவுகள் இவளை வியர்வையில் நனைத்து மூச்சுத் திணற வைத்த அந்த சொப்பனம்...

அக்கனவின் கண்ணாடி அறைக்கு ஒரு வாசல் இருந்தே ஆக வேண்டும். விளிம்பு புலனாகாத ஒரு கண்ணாடி நீள் சதுரம்...

கண்டு பிடித்துத் தள்ளி திறந்து விட்டால் உள்ளே காற்றையும், வெளியே இவளையும் விடக்கூடிய ஒரு கண்ணாடி வாசல்...!



அங்கே போனதும் வாசல் விளிம்பு தெரிய வரலாம்.. எங்கே, எங்கே என்று தவித்துத் தடுமாறும் தன் விரல் களுக்கு அது தட்டுப்பட்டு அந்தத் துர் கனவிலிருந்து விடுதலையும் தரக்கூடும்.

அந்நினைப்பு இவளை உற்சாகப்படுத்தியது.

மான் கொம்பும், பாம்பின் வயிறு போன்ற அந்த இருண்ட பாதையும், பிறகு ஏதோ ஒரு வாகனத்தில் காற்றைக் கிழித்தவாறு பயணித்ததும்... இதே தானே அவளைக் கனவில் வந்து மிரட்டின...? அவை எல்லாம் நிஜமாய் நிகழ்ந்தவையா?

அல்லது வேறு எவருக்கோ நிகழ சிறுமியாய் வாண்மதி கண்டு மிரண்ட சம்பவமா..?

அல்லது யாரோ சொல்லக் கேட்ட கதைதான் தன்னை இத்தனை பாதித்து விட்டதா?

யோசிக்க யோசிக்க நெஞ்சின் குறுகுறுப்பு கூடியது.

அக்கனவை நினைத்தாலும் கூட உடம்பே பதறுகிறது. யாரோ தன்னைத் துரத்தும் அச்சம்... வளைவான பாதை யில் விரைய.., ஒவ்வொரு திருப்பத்திலும் பிடிபட்டு விடுவோமோ என்ற மருட்சி...

நினைப்பிலும் கூட வியர்த்தது -

உள்ளங்கையில் பயத்தின் பிசுபிசுப்பு.

இதிலிருந்து விடுதலை கிடைத்தாலும் போதும்.

ஒரு நிம்மதியான சொச்ச நாட்களை எதிர்நோக்கத் தயாராகி விடுவாள். அங்கே இவளுக்காய் காத்திருக்கும் சொத்திற்காய் அல்ல - அதன் மூலம் கையகப்படும் பணம், அதிகாரத்திற்காய் அல்ல -

நிம்மதிக்காய்...

அச்சம் நீங்கிய சுதந்திர வாழ்விற்காய்.

கண்ணாடி வாசல் விரிந்து தன்னை விடுவித்த ஆசுவாசத்திற்காய்...

இப்படி வான்மதித் தன்னையே தேற்றிக் கொண்டாலும் சுசீலாவைத் தேற்றுவது சுலபமாயில்லை.

தோழியைப் பற்றிய சுசீலாவின் சின்ன கைகளில் நடுக்கம் -

''நான் இனிமேத் தனிதானே மதி?''

''அசடாட்டம் பேசக்கூடாது... பெத்தவங்க கூட இருக்கையிலே அதென்ன தனி? தவிர உனக்கான ராஜகுமாரன் வேறு வந்துட்டே இருக்கார்!''

''அவர் வந்து எனக்குத் தாலி கட்டற சமயம், நீ வருவேல்ல?''

''பின்னே? மணப்பெண் தோழி நானில்லை?''

''நிச்சயமானதுமே நீ ஓடி வந்திரணும் - ஆமா உனக்கு எப்படித் தகவல் தெரிவிக்கறது? அங்கே போன் போட்டு பேசறதுக்குள்ளே போதும் போதும்னாயிடுச்சு அம்மாக்கு - செல் போன் உனக்கு வாங்கித் தந்திருவேன் மதி... ஆனா.''



''அங்கே ரீச் ஆகாதுன்னு நினைக்கறேன்.''

''உங்கிட்ட பேசாம எனக்கு தலை வெடிச்சிருமே... எஸ்டேட் விலாசம் குறிச்சு வச்சிருக்கேன். ஆனா லெட்டர் எழுதி, அது உனக்குச் சேர்ந்து... நீ அதை வாசிக்க.. பிறகு..''

''ஓடியே வந்திடறேன் சுசீ...''

தோழியின் அன்பு வான்மதிக்கு தனி தைரியம் தந்தது.

''என்னை மறந்துடாதே மதி... ஆள், அம்புன்னு ராணியாட்டம் வாழப் போறதில..''

''உனக்குன்னு அவர் வந்ததும் உனக்குத்தான் என்னைய மறந்திரும்...

சும்மா பழியை எம்மேல சுமத்தாத.''

''ம்ப்ச்... இப்பதான் எனக்கே கல்யாண ஆசை துளிர் விடுது மதி. எனக்கே எனக்குன்னு ஒருத்தர் அவசியங்கற எண்ணம் - அவர் கிடைச்சதும் முதல் கண்டிஷன் என்ன தெரியுமா - மாசத்துக்கு ஒரு தரமேனும் உன்னை விசிட் பண்ணணும்னுதான்.''

''அட... இப்படி என்னைச் சாக்கு வச்சு உடனடி திருமண திட்டமா?''

''அதெப்படி உடனடி? அம்மா தேடற ரேஞ்சில் எனக்கு மாப்பிள்ளை லேசில் கிடைச்சிருமா?''

சிறு பொம்மை போல உதடு பிதுக்கினாள் சுசீலா.

''நானும் உன்னளவு அழகா இருந்திருந்தால் அம்மா கேட்கற அந்தஸ்தில் புலி மாதிரியான மாப்பிள்ளை சிக்குவார்... நாம் பூனை மாதிரியில்ல இருக்கேன்...''

"புலியும் பூனையும் கஸின்ஸ்னுதானே விஞ்ஞானம் சொல்லுது.. அதாவது ஒரே இனத்தைச் சேர்ந்தவைன்னு... அம்மா செய்றது. எல்லாம் உன் நன்மைக்காகத்தானே - கொஞ்சம் பொறுத்துக்கோங்கம்மா."

"உனக்குப் பெத்தவங்க இல்லைன்னாலும் கடவுள் எல்லாம் உன் நன்மைக்கே முடியப் பண்ணியிருக்கார் இல்லியா மதி? உம் மனசுக்கு, குணத்துக்கு இனி நீ எங்கேயிருந்தாலும் நல்லா இருப்பே."

"இதுவரையும் கூட நல்லாத்தானே இருந்தேன்? நல்ல குடும்பத்திலே ஒரு அங்கமாய், உன் அன்பு, வேண்டிய படிப்புன்னு."

"தினம் பேசுவியா?"

"ஓ... போன் மக்கர் பண்ணாமல் இருந்தால் தினம் பேசலாம் - இல்லைன்னாலும் லெட்டர் எழுதித் தள்ளலாம்."

கட்டிக் கொண்ட இருவரும் வெகு நேரம் விலகவே யில்லை.

வான்மதியைத் தன் அறைக்கு அழைத்து ஒரு கவரை நீட்டினாள் வைரமணி.

"பிரிச்சுப் பாரு."

"இவ்வளவு பணம் எதுக்குப் பெரிம்மா?"

"நீ போறது எஸ்டேட்டின் முதலாளியாய் - அதற்கேற்ற தோரணையில் போகணுமில்லியா? செமி - கிரேப்பில இருசாறு சேலை எடுத்துக்கோ - மற்றது டஸர், ஜார்ஜெட்னு உம்மனசு போல.. ஒவ்வொண்ணுக்கும் ஸாரி ஃபால் வச்சு தச்சு, தகுந்த ரவிக்கை ரெடி பண்ணவே நூற்று இருவதுக்குக் குறையாது. உள்ளாடைகளும் அந்தஸ்தாய் எடுத்துக்கோ."



"சரி.. பெரிம்மா."

"சசியைக் கூட்டிக்கோ. நானுந்தான் வந்திருப்பேன் - மாமாக்கு உடம்பு முடியலை... எல்லாருமாய் வீட்டை விட்டுப் போக வேண்டாம்னு பார்க்கறேன்."

உண்மைதான் - பெரியப்பாவிற்கு திடீரென முதுகுவலி அவஸ்தை. எக்ஸ்-ரே, ஸ்கேன் எல்லாம் எடுத்தாயிற்று - பெரிய பழுதொன்றுமில்லை என்று மருத்துவர்கள் சொன்னாலும் வலி விலகாமல் படுத்தியது. படுத்தாலும், நின்றாலும் விடாமல் தொடர்ந்தது. கணவரின் உடல் நிலை வைரமணியை மிகவே பாதித்தது -

'என்னங்க இப்ப தேவலையா? ஒத்தடம் கொடுக்கவா?' என்று கூடவே நின்றாள்.

'உன்னோட கூட இந்த வீட்டை விட்டு அதிர்ஷ்டமும் விலகுதுன்னு நினைக்கறேன் மதிம்மா. இல்லைன்னா ஐயாக்கு திடீர்னு ஏன் இப்படி உடம்பு படுத்துது?'

'அதெல்லாமில்ல பிரபாவதிக்கா - சசிக்குக் கல்யாணம் நிச்சயமானதும் பெரியப்பா எப்படி வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்யப் போறார் பாருங்க.'

'உஞ் சொல்படியே ஆவட்டும்.'

பரீட்சையோடு, துணிமணிகள் வாங்குவதும் நடந்தது.

'காது, கழுத்தில் மின்னுற புது நகையோட, இந்தப் புடவைகளில் நீ அப்படியே அள்ளிருவே மதி.'

'சில நாள் கூத்துதான் சசி இது. எத்தனை நாள் நான் அங்கேயே தங்க முடியும்னு எனக்குத் தெரியலை.'

'உளறாமல் இதையெல்லாம் பாரு...'

'இதெல்லாம் எதுக்கு?'

'பிடிச்சிருக்குதா? இது முத்து ஸெட் - இது கார்னட் - இந்த பச்சை - ஜேட் மாலை அட்டகாசமில்லை.'

'ஐயய்யோ?'

'எல்லாம் விலை கம்மிதான் - ஆனா மலிவாய் தெரியாது - தோரணையாய் எடுப்பாய் காட்டும்.'

'பயம்மாத்தான் இருக்குது சசீ.'

'என்ன பயம்..? நீ உன் இடத்துக்குப் போகப் போறே.'

உண்மை. இது அடைக்கலமாய் வந்த வீடு... அது அவளுக்கே உரிமையான இடம்... அவள் தந்தை அவளுக்காய் விட்டுப் போன சொத்து...

'எங்கள் தந்தையர் நாடெனும் போதினிலே புது சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாரதி பாடினதற்கொப்ப தந்தை தந்த பூமியில் துணிந்து போய் இறங்கித்தான் பார்ப்பது...

# 8



ஓடிக் கொண்டே இருந்தாலும் உள்ளிருந்து வெளிவர முடியாத கடிகார முள்ளின் நிலையில் தானிருப்பதாய் வான்மதிக்கு அடிக்கடி படும்.

கனவின் கண்ணாடி அறைக்குள் சிக்கியிருந்தவளுக்கு இந்தப் பயணத்தின் ஆரம்பமே ஒரு விடுதலை உணர்வைத் தந்தது.



பெரியம்மா வைரமணி கல்யாணங்களுக்கென்று சிறிது பயணப்படுவது உண்டென்றாலும், குடும்பத்தோடு அவர்கள் விடுமுறைக்கென எங்கும் சென்றதில்லை.

கண்ணீர் மல்க அனைவரிடமுமிருந்து விடை பெற்றாலும் புதிய அனுபவமான விமானப் பயணத்தை ரசிக்கவே செய்தாள். இரண்டு மணி நேரத்திற்குள்ளாய் திருவனந்தபுரத்தை அடைந்த போது, தெரிந்த வித்தியாசமான சூழலை, பேச்சை, உடைகளையும் ரசித்தாள்.

தன் வாழ்வின் முதல் ஐந்து வருடங்களைக் கழித்த அந்த இடத்தைக் காணப் போகும் எதிர்பார்ப்பு வேறு.

தன் தாயைப் பார்த்துப் பழகியவர்கள் இன்னும் அந்த எஸ்டேட்டில் இருப்பார்களா? அவர்களிடம் பேச, இறுக மூடிக் கிடந்த கண்ணாடி வாசல் முழுவதுமாய் திறந்துவிடுமோ?

முழு விடுதலை!

இனி உறங்கும்போது மூச்சுத் திணறாது - நிம்மதியாய் படுத்து, திருப்தியாய் எழலாம்.

மூடிய கண்ணாடி ஜன்னலை பலக்க அறைந்துத் தள்ளிய மழை இப்போது வேகம் குறைந்திருந்தது. சிணுங்கலாய் விழுந்த மழையைப் பார்த்தபடி நின்றாள் -

'திருவனந்தபுரம் ஏர்போர்ட்டில் உங்களுக்காய் கார் காத்து நிற்கும் - இருட்டறதுக்குள்ளார எஸ்டேட் போய் சேர்ந்திடலாம்' என்று இவளிடம் சொன்னபடி நடக்கவில்லை. மேகமூட்டம் என்று தாமதமாய் கிளம்பிய விமானம் அவளைத் தாமதமாகவே கேரளாவிற்குக் கூட்டிச் சென்றது. காத்திருந்து சோர்ந்த காரின் டிரைவர் தூங்கிப் போய்விட, உரிய காரைத் தேடி, ஏறி உட்கார

இவளுக்கு மேலும் ஒரு மணி நேரமானது. 'பெட்ரோல் லீக்'கைச் சரி பார்க்க மேலும் சிறிது நேரம் - பிறகு இருட்ட ஆரம்பித்தது - போன சாலையும் அப்படி சுகமில்லை.

இந்த சுனாமி வந்ததேம்மா... பூமி அதிர்ந்ததுல கடலலை மலையாய் பெருகி கரைய அழிச்சுதே... அதுக்கப்புறமே பூமியோட சீதோஷணமெல்லாம் மாறிப் போச்சு... இது மழைக் காலமா என்ன? ஆனா பெய்து ரோட்டை நாசம் பண்ணிருச்சு.'

காரின் ஓட்டுனர் சொல்ல இவள் 'ம்ம்' கொட்டியபடி வந்தாள். துணைக்கு அனுப்பப்பட்டிருந்த தாமஸும் தன் பங்கிற்குப் பேசினார் -

'இது கேரள, தமிழ்நாடு பார்டரும்மா - ஆக ரோடெல்லாம் ஏற்கெனவே கொஞ்சம் மோசமான நிலையிலதான் இருந்திச்சு - மழை ஓங்கி அடிச்சதுல குண்டும் குழியுமாச்சு.'

இத்தனை நாட்களாய் பரீட்சைக்குப் படிக்க, பழகிய இடத்தை விட்டுக் கிளம்ப, புது இடத்தைப் பற்றிய பதட்டமுமாய் இருந்தவளுக்கு சரியான உறக்கமில்லை. முதல் விமானப் பயணத்தின் பரபரப்பு வேறு. சிறு சதுர கண்ணாடி ஜன்னலின் வழியே கீழே விரிந்த சின்ன உலகைக் கண்டு அதிசயித்தவள், மேக மெத்தையின் ஊடாய் பறப்பதையும் ரசித்தாள். விமானப் பணிப்பெண் பரிமாறிய உணவு வித்தியாசமாய் இருந்தாலும் இரண்டு மணி நேரப் பசிக்கே தாங்கியது...

தனித்துப் பிரயாணம் செய்கிறோம் என்ற எச்சரிக்கை உணர்வில் விழித்தே இருந்தவளுக்கு தனக்கான காரில் ஏறியதும் அசதியோடு உறக்கமும் சேர்ந்து அமுக்கியது.



தாமஸ் எஸ்டேட்டின் ஊழியரோ, அவரிடமிருந்து என்னவெல்லாம் அறியலாம் என்றெல்லாம் உள்ளம் குறுகுறுத்தாலும் மற்ற புலன்கள் ஒத்துழைக்க மறுத்தன!

காரின் குலுங்கல் முற்றுமாய் நின்றதும் செருகிய விழிகள் சற்றேப் பிரிந்தன - சாலையே தெரியாதளவு நீர் மூட்டம்... 'ஹோ'வென்ற மழைப் பொழிவு.

சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''இன்னும் எஸ்டேட் சேர எவ்வளவு தூரம்?'' நீரின் இரைச்சலை மீறி சற்று உரக்கவே கேட்டாள்.

''பாதி வழிதாம்மா வந்திருக்கோம் - பாதை மோசம்ன்றதால மெள்ளவே ஊர்ந்து வந்தோம்... இப்ப இப்படியான பேய் மழை...''

ஏற்றின கண்ணாடிகளையும் மீறி குளிர ஆரம்பித்திருந்தது.

''இப்படியே நிற்க வேண்டியதுதானா?''

''அத்தனை மோசமில்லம்மா - பக்கத்துல ராமுவோட கெஸ்ட் ஹவுஸ் உண்டு. ரெண்டே அறைங்கதான் - ஆனா சுத்தமாயிட்டு வச்சிருப்பான் - சாப்பிடவும் ஏதேனும் கிட்டும்.''

''அது... அது பக்கத்துலதானா?''

''ஆமாம்மா - ஆனா இப்பப் பாதையே தெரியலியே. ஊத்தறது கொஞ்சங் குறையவும் அங்கப் போய் சேர்ந்துடலாம்.''

தாமஸ் சொன்னது மழைக்கும் கேட்டது போலும் - மனமிரங்கி தன் வீச்சைச் சற்று தணித்தது - நீரைத் தன் மஞ்சள் ஒளியால் ஊடுருவியபடி மெள்ள முன்னேறியது

வாகனம். இதைத் தவிர சுற்றிலும் ஒரு பொட்டு வெளிச்சமில்லாத காட்டுச் சூழலை, சற்று அச்சத்துடனேயே கவனித்தாள்.

"இங்கே மின்சார வசதி கூட இல்லை போலியே?"

"ஆங்காங்கே உண்டுங்க. ஆனாப் பொதுவாய் கோரைவில் எட்டு எட்டரை வரைதான் கரெண்ட் சப்ளை. இந்தக் கடும் மழையில ஏதேனும் ஒயர் கட்டாகிப் போயிருக்கும். கேஸ், காண்டில் லைட் கொண்டு சமாளிக்கணும்."

"நீங்களும் அந்த ராமு விடுதியிலதான் தங்குவீங்க?"

"இல்லம்மா - ஒரு அஞ்சு கிலோ மீட்டர் தொலைவுல என் சிஸ்டர் வீடுண்டு. அவ பிள்ளைங்க எம்மேல ரொம்பப் பிரியமாயிருக்கும். போன வாரம் இளையவளுக்குப் பிறந்த நாளு... போன் பண்ணவும் சந்தர்ப்பம் வாய்க்கலை. அதான் நேரே போய் வாழ்த்தி அதுங் கையில நூறோ இருநூறோ தானும்... அதுங்களுக்கும் சந்தோஷம் எனக்கும் திருப்தி."

பூமியின் கடும் இருட்டை அவ்வப்போது வெட்டிய மின்னல் சிரித்து சிரித்து வேடிக்கை பார்த்தது. மரங்களிடையே தெரிந்த அந்த ஓலை வேய்ந்த கட்டத்தையும் வெட்டி மறைந்த வெளிச்சத்தில் இவள் பார்த்தாள். இருளை நனைத்த மழையும், காற்றும் இவளைத் தொட, வான்மதிக்குச் சிலிர்த்தது.

"இங்கே நான் தனியாகவா தங்கறது?"

"ராமுவோட வைஃப் தங்கமும் இங்கதானே உண்டும்மா - எந்தப் பயமுமில்லை. கீஸர், லைட்டுன்னு அந்த மாதிரி வசதிகள் கிடையாதுன்னாலும் காலைல குளிக்க வெந்நீரும், பசிக்குப் புட்டும் பழமும் கிட்டும். இப்ப நீங்க நல்லாத் தூங்கி எழணும் - முகம் அசந்து போச்சே."



அசதியோடு அச்சமும் சேரத்தான் அந்த அறைக்குள் நுழைந்தாள் வான்மதி. சற்று மக்கின வாடை மிச்சமிருந்தாலும் அறை சுத்தமாகத்தான் வைக்கப்பட்டிருந்தது. ஒட்டின குளிப்பறையில் சிறு இரும்பு வாளியில் வெந்நீர் விறகின் வெப்பத்தில் சூடேறிய நீருக்கு ஒரு தனி சுகம் உண்டு. புகை மணத்துடன் கூடிய ஒரு இதம் - அதை அனுபவித்தபடி மேனி, முகம் எனக் கழுவித் துடைத்தவள் மேஜையிலிருந்த ஃப்ளாஸ்க்கைத் திறந்து டம்ளரில் ஊற்ற, ஆவி பறக்கும் கடுந் தேநீர் நிரம்பியது. டம்ளரைக் கையிலெடுக்க, தேயிலையின் மணம் அவளை எட்டி உற்சாகமூட்டியது. சுற்றிலும் தேயிலைத் தோட்டங்கள். ஆக தேயிலையின் தரம் சிறந்ததாய், புதியதாய் இருக்கிறது போலும் என்ற எண்ணத்துடன் ரசித்துப் பருகினாள்.

பால் தேநீரின் சுவை, மணத்தைக் கொன்று போடும் எனக் கேள்விபட்டதுண்டு - உண்மைதான் போலும்.

பால் சேராத அப்பானத்தின் சுவை அலாதியாய் இருந்தது. தவிர சோர்ந்த உடலையும் வேறு அது சுறுசுறுப்பாக்கி விட்டது போலும்... புத்துணர்வு பெற்றவளுக்கு அதைக் கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை -

இது ஓய்வெடுக்க வேண்டிய நேரம் - ஆனால் மனதில் சந்தேகங்களும் சஞ்சலங்களுமாய் பின்னிக் கிடக்க, நிச்சிந்தையாய் படுக்க முடியவில்லை. வீட்டில் செய்ய எத்தனையோ வேலைகள் - வேண்டாதவைகளையும் போட்டு மூடி வைத்திருக்கும் அலமாரி அல்லது இழுப்பறைகள் நிச்சயம் இருக்கும். ஆக பிரித்துப் போட்டு வேண்டாதவைகளைக் கழித்து, துடைத்து, புது பேப்பர் விரித்து, தேவையானவைகளை மட்டும் சீராய் அடுக்கலாம்.

இப்போதோ மனசுக்குள் கடந்து சில காலமாய் இட்டு அமுத்தி வைத்திருந்த சில செய்திகளை வேண்டுமானால் சாவகாசமாய் பிரித்து ஆராயலாம்.

அறையை மறுபடி சுற்றிலும் நோட்டமிட்டாள். ஜன்னலின் மூங்கில் சட்டங்கள் கேஸ் லைட்டின் வெளிச்சத்தில் எதிர் சுவரில் கறுப்பு சதுர பிஸ்கட்டுகளாய் பதிந்திருந்தன. அதில் தன் விரல்களைப் பதித்து, வரைந்தவளின் மனம் பின்னோக்கி நகர்ந்தது -

வீட்டை விட்டுக் கிளம்பும் சலுகையில் பெரியம்மாவிடம் பேசி, புது விவரங்களைச் சேகரித்திருந்தாள் -

அதில் மிக முக்கியமானது வான்மதிக்கு மிக அதிர்ச்சி தந்தது - தன் தாயார் தன் தகப்பனுக்கு இரண்டாவது மனைவி என்பதுதான்.

இளையவளின் முகம் போன போக்கைப் பார்த்த வைரமணி சமாதானப்படுத்தினாள் -

'என்ன அப்படி பாக்கறே மதி? உங்கம்மா சந்திரா இரண்டாந்தாரம்னாலும் முதல் மனைவி இறந்த பிறகு நேர்ந்த, முறையான கல்யாணம்தான் அது..'

'ஓ..? பெரியவங்க நிச்சயம் பண்ணின கல்யாணம் இல்லைன்னும் தெரியும் பெரிம்மா.'

'ம்ம் - காதல்தான். சந்திராவின் அப்பா போடியிலுள்ள ஒரு எஸ்டேட்டின் பொறுப்பாளராய் இருந்தார் - ஏலக்காயும் காபியும் விளையற பூமி - அதை மொத்த வியாபாரிகளிடம் விற்க ஏலம் விடற இடத்திற்கு போகும் இடத்திற்கும் சந்திராவும் போயிருக்கா - அங்கேதான் உங்கப்பா ஜீவானந்தனை சந்திக்க... பிறகு பழக்கம் தொடர்ந்திருக்குது.'



'அப்பவே அப்பாவின் முதல் மனைவி இல்லல்ல?'

வைரமணியின் முகம் கனிந்தது. தன் தந்தையும் தாயும் யாருக்கும் துரோகம் பண்ணவில்லையே என்று பதைக்கும் ஒரு இளம் பெண்ணைப் பார்க்கும் ஒரு கனிவது.

'இல்லைம்மா... மனைவிய இழந்தவர், துடிப்பும் சிரிப்புமான இளம் பெண்ணைக் கண்டதும் சட்டுனு மனசைப் பறி கொடுத்துட்டார். அடிக்கடி சந்திக்கிற சந்தர்ப்பங்கள். முக்கியமாய் சந்திராவிற்கு வேறு செல்வாக்கான இளைஞர்களைச் சந்திக்க நேரலை - உங்க தாத்தாவிற்குமாய் சேர்த்து ஜீவானந்தம் சகாயமாய் ஏலத் தொகையை முடிச்சுத் தர, அவங்க தொடர்பிற்குத் தடையில்லை - வீட்டிற்கும் போக, பழகன்னு நெருங்கிட்டாங்க.'

தன் பெற்றோரின் காதல் கதையைக் கேட்கும் போதே வான்மதிக்குக் கூச்சமான ஒரு கூச்சம்!

அப்படி ஆவலாய் நெருங்கிப் பழகியவர்கள் ஏன் பிரிந்து விட்டார்கள் என்ற ஏக்கமும் கூடவே.

'சந்திராவைப் பெற்றவங்களுக்கு - அதாவது என் பெரியப்பாவிற்கு மகளை இரண்டாந்தாரமாய் தர மனமில்லை. ஜீவா பத்து வயதிற்கு இளைய தங்களது மகளை மணக்கக் கேட்டது அவங்களுக்கு அதிர்ச்சிதான். தவிர...'

'சொல்லுங்க பெரிம்மா.'

'வந்து... ஜீவாவின் முதல் சம்சாரம்... எப்படி இறந் தாங்க... ஏன்னு தெரியாமல் விசாரிக்காம சின்னப் பெண்ணை எப்படித் தர்றதுன்ற நியாயமான பயம்... ஆனா சந்திரா ஒத்தக் காலுல நின்னுட்டாளாம்.' தந்தை மீது தன் தாய்க்கு அத்தனை நேசமா என்ற வான்மதியின் பெருமிதம் சீக்கிரமே அழிந்தது -

'எல்லோரையும் மீறி செய்துகிட்ட கல்யாணம், நீ வயித்துல தரிச்சதுமே சந்திராக்கு அலுத்திருச்சு! தனிமையான எஸ்டேட் - ஏகாந்தமான இடத்தின் நடுவே நூறாண்டு பழைய வீடாம் - மாளிகையாட்டம்.

'எம்பட்டு ரவிக்கைகளை மூனு மாசம் அலமாரியில வச்சப் பூட்டிட்டா பூசணமே பிடிச்சிடுது.. எனக்கும் அதே நிலைமை வந்திருமோன்ற பயத்துல அழுந்தத் தேய்ச்சுத் தேய்ச்சுக் குளிக்கறேன். ஆனா என்னை யாரு பார்க்கறாங்கன்னு இப்படிக் குளிச்சு, சிங்காரிக்கன்னு அலுத்துக்குவாங்களாம்.'

'அம்மா இதையெல்லாம் உங்களிடம் சொல்லலியா - பெரிம்மா?'

'வெவ்வேறு வாய் சொல்லக் கேட்ட விவரங்களை உனக்குத் தொகுத்துச் சொல்றேன். அடிக்கடி வெளியேவும் போக முடியலைங்கற அலுப்பு சந்திராக்கு. வயிற்றில் உன்னோடு குண்டும் குழியுமான ரோட்டில் பயணிக்கறது நல்லதில்லைன்னு சந்திராவை ஜீவானந்தம் பொத்தி வச்சிட்டார்... நீ அவரோட முதல் வாரிசு.'

'அப்ப அவர்.. அப்பாவோட முதல் மனைவிக்குப் பிள்ளையில்லை?'

'இல்லை போல.. ஆக உம்மேல அவருக்கு ரொம்பப் பிடித்தம். ஆனா பிரியத்தை வெளிக்காட்டிக்கத் தெரியாத ரக மனுஷர் - என் உங்க பெரியப்பா கூட சசிக்குட்டியைக் கொஞ்சறாரா - வெளிய வாசலுக்கு கூட்டிப் போறதுண்டா? பெரும்பாலான அப்பாக்களைப் போலத்தான்..'

உண்மை என்று இவளும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.



'எஸ்டேட்டிலிருந்த ஆறேழு வருஷம் சந்திரா திருப்தியாயில்லை - சொத்தை வித்துட்டு நல்ல ஊராய் போய் செட்டிலாவணும்னு ஆசை... அதைக் கேட்ட ஜீவானந்தத்திற்கு ரொம்ப ஆத்திரம் - ஆக அவர் அவளிடம் பேச்சைக் குறைச்சுக்க வெந்நியில விட்ட மீனாட்டம் துடிச்சுட்டா சந்திரா... பாவம்... இதை அவளே எங்கிட்ட சொன்னதுண்டு.'

'நீங்க... மற்ற உறவுக்காரங்க, அம்மாவைப் போய்ப் பார்க்கலியா பெரிம்மா?'

'ல்ல - அவரு கொஞ்சம் ஆளண்டாப் பிறவி - விருந்தாடிப் போய் நிலைமைய மேலும் மோசமாக்குமோன்னு அவளைப் பெத்தவங்களே ஒதுங்கித்தான் இருந்தாங்க.'

'தனிமைத் தாங்காமல் என்னை அம்மா தூக்கிட்டு ஓடி வந்த பிறகு... அப்பா எங்களைத் தேடியே வரலியே பெரிம்மா..'

'உங்க அப்பான்னு இல்லை மதி.. ஆம்பளைக் கர்வம் அவங்களை இளக விடாது. உனக்காகவே எம்மகளுக்காகவோ கூட உம்பின்ன வருவேன்னு நினைக்காதேங்கற வீம்பு! ஆக அவர் வரலை...'

'இப்ப மட்டும் ஏன்..?'

'ஒரே வாரிசு நீ. தன் சம்பாத்தியம், தன் சொத்து தன் ரத்தமில்லாத வேற யாருக்கோ போறது அவருக்குத் தாளலை. அது முறையுமில்லையே. நீ எங்கே இருக்கேன்னு ஜீவானந்தத்திற்குத் தெரிஞ்சிருக்குது. மகள் பத்திரமான இடத்தில் வளருதாங்கற திருப்தி.. இல்லை அவர் இறந்ததுமே தகவல் கடிதம் வருமா?'

''நா... நா அப்பாவைச் சடலமாக்கூட பார்க்க முடிலியே''

''பெரிய வியாதியோட போராடினவர் - ஆக அதற்கும் விடலை போல - நீ நல்லபடி போறதில் என நிம்மதி மதி. இங்கே என் இக்கட்டான நிலைமை உனக்கும் புரியுது..''

மூத்தவளின் கைகளைப் பற்றிக் கொண்டாள் வான்மதி.

'எனக்கு இங்கே எந்தக் குறையுமில்லை பெரிம்மா.'

'சுருக்குனு பேசியிருக்கேன்.'

'அம்மான்னாலும் என்னைத் திட்டாமலேயா வளத் திருப்பாங்க?'

வைரமணியின் உதடுகள் துடித்தன.

'இப்போப் போற இடம் உனக்கு உரிமையானது மதி. நீ ஆள முடியுமான்னு பாரு... உங்கம்மாவைப் போல உனக்கந்த இடத்தில் தாக்குப் பிடிக்க முடியலைன்னா வந்திரு.. என்ன?'

மூடிய கண்ணாடி ஜன்னலை அறைந்து தட்டியது மழை. மாரிகாலத்திற்கே உரிய சில்வண்டின் ரீங்காரம்... குளிர் அவளைத் தொட்டு உலுக்கியது... பரீட்சை முடிந்ததுமே இப்படிக் கிளம்பி வந்திருப்பது சொத்தின் மீதுள்ள மோகத்தால் அல்ல -

முதல் காரணம் - வளர்த்த பெரியம்மாவிற்கு நிம்மதி தர வேண்டும் என்பது.

சசிலாவின் வாழ்வில் எந்தக் குறுக்கீடும் குழறுபடியும் நேரக் கூடாது என்பதற்காய் -

தவிர தன் பயங்கர கனவிற்கான கண்ணாடி வாசலுக் கான சாவி கிடைக்குமா என்ற பதட்டமான ஆவல்.

இதுவரை மத்தளத்தின் ஒரு புறம் அடி பட்டாகி விட்டது. பட்டி அடுக்கிக் கொண்டது இரண்டு வாரங்களுக்கு



மட்டுமே - இந்த இரு வாரங்களில் மறுபக்கம் என்ன விதமான இடி கிடைக்கப் போகிறது என்பதை அனுப வித்து பிறகு முடிவெடுக்க வேணும்!

அங்கேயே இருப்பதா... அல்லது வேறு வேலை தேடிக் கொண்டு விலகுவதா என்று... குளிருக்குத் தோதாய் ஒரு சிறு சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள் -

பசித்தது - வெளியே போய் உணவு வேண்டுமெனக் கேட்க வேண்டும்.

அல்லது அது வருவதற்காய் காத்திருக்க வேணுமா?

வெறும் வயிற்றில் படுத்தால் உறக்கம் வராமல் பிகு பண்ணும்.

ஆக சாப்பிட்டு விடுவது... கதவு புறமாய் இவள் நடந்து நெருங்க, வாசற்கதவு மெல்லத் திறந்தது!

சற்று துணுக்குற்ற வான்மதி நின்றாள்.

மகுடியின் அதிர்வுக்குக் கட்டுண்டு நிற்கும் நாகம் போல அசைவற்று நின்றாள். வலதுபுறத்திலிருந்து மட்டும் வந்த ஒளிக்கற்றையின் பாதையில் அவள் நின்றதில் ஒரு மெழுகுச் சிலை போலத் தெரிந்தாள்.

போர்த்திய சால்வையை மீறிய அவளது தந்தக் கழுத்தும், இருளின் மறுபாதியில் ஒளிந்திருந்த அவளது இடதுபுறமும் அவளுக்கு ஒரு மர்மமான அழகைத் தந்திருந்தன.

அறையில் நுழைந்தது ஒரு பெண்.

நுழைந்து சிலை போல எதிரே, மிக அருகே நின்ற வளைக் கண்டு சற்று திகைத்த அப்பெண்ணின் பார்வை வான்மதியின் மீது பரவியது.. முகத்தை நன்கு கவனித்த வளின் முகம் வெளுத்தது.

கையிலிருந்த உணவுத் தட்டைக் குனிந்து தரையிலேயே வைத்தவள் சரேலெனத் திரும்பி விட்டாள்.

'ரொம்ப தாங்க்ஸ்... நாளைக் காலை எத்தனை மணிக்கு...' வான்மதியின் பேச்சைக் கேட்க அங்கு யாருமே இல்லை.

# 9



"அங்க... அங்க ரூமிலே ஒத்தையா நிக்கற பொண்ணு யாரு?"

கழுவிய கண்ணாடி தம்ளர்களை ஈரம் போக உதறிக் கவிழ்த்துக் கொண்டிருந்தான் ராமு.

"உங்கிட்டதான கேக்கறேன்?"

அதட்டலாய் கேட்ட மனைவி தங்கத்தைப் பார்க்காமலேயே சொன்னான்.

"ஒத்தையா இருந்தாலென்ன மூணா அடைஞ்சாலென்ன - நமக்கு வேண்டியது காசு. ஒரு ப்ளேட் சாப்பாடுதன்னே எடுத்துப் போனா?"

"அது... அது யாரு?"

"நேற்று ராத்திரி தாமஸ் கூட்டி வந்தப் பொண்ணு."

"இத்தனை அழகானப் பொண்ணை இந்த ராத்திரியில, காட்டுக்குள்ள ஏன் தனிச்சுக் கூட்டி வந்தது தாமஸ்?"

"யம்மாடி - இது அவங்களைக் கேக்க வேண்டிய கேள்வி."



"ஏன் - நீ தாமஸ்ட்ட கேட்கலியா?"

"ஏன் - கேட்காத ரூம்பை வாடகைக்கு விடக் கூடாதா? நான் எம் பட்டை பெல்ட்டுல அமுக்கற ரூவாயை உருவி நீ உன் ரவிக்கையில செருகிக்கறியே..." ராமுவின் கண்கள் மனைவியின் மதர்த்த மார்புகளை மேய்ந்தன - "இப்படியெல்லாம் கேட்காமலிருந்தா வாங்கற காசு அங்கேருந்து பறந்து போயிருமா என்ன?" - சீண்டினான்.

"எப்பவுமா உன்னைய இப்படிக் கேட்டேன்?"

தங்கத்தின் குரல் தளர்ந்து தழைய அவன் பார்வை அவளது முகத்தை ஆராய்ந்தது.

அந்த மழை நாள் இருளில் ஹரிக்கேனின் மங்கிய ஒளியில் மனைவியின் முகபாவனை துல்லியமாய் பிடிபடவில்லை.

நெருங்கி இடக்கையால் அவளது தாடையை சற்று முரட்டுத்தனமாய் பற்றி நிமிர்த்தி கவனித்தான் -

"என்னாங்கற இப்ப?"

தங்கம் இல்லாமல் இந்த அரை அத்துவானக் காட்டில் இப்படியொரு தொழிலை அவன் செய்துவிட முடியாது. இரண்டே அறைகளுள்ள இந்த லாட்ஜில் திடுதிப்பென்று வரும் விருந்தினர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து சமாளிப்பது லேசில்லை. இங்கேயிருந்து குமுளி ஒரு மணி நேரப் பயணம் - மறுபக்கம் தனியார் எஸ்டேட்டுகள் மட்டுமே. ஆக சீரான சாலைகளும் அதில் வந்து போவோரும் அதிகமில்லை.

துணைக்கு காக்கா குருவிகள்தான்!

பேச்சுத் துணை, ஆளின் அண்மையின்றி இங்கு ஒரு வாரம் இருந்தால் சற்று புத்திப் பிறழக் கூடும்!

அதற்கே தங்கத்திற்கு இவன் கடமைப் பட்டவன் -

அவளும் அதிகம் பேசுபவளில்லை. ஒரே மகனைப் பற்றிய பேச்சு வந்தால் மட்டும் புதுக் கிளர்ச்சியோடு, புன்னகையோடு பேசுவாள்.

மற்றபடி சொற்ப சொற்களோடு சில வாக்கியங்களே. அவள் கண்களின் பாவனை புதியதாய் பட்டது - இது வரை அவன் காணாதது.

சற்று நயமாய் விளக்கினான்.

நம்ப தாமஸுஎஸ்டேட்டிலிருந்து அழைச்சு வந்தப் பொண்ணு திடும்னு மழை பொத்துக்கவும் இங்க தங்கிட்டாங்க.''

''தாமஸ்ன்னா இவங்க போறது ஜீவா எஸ்டேட்டுக்கா? அங்கயா போவுது இந்தம்மா?''

மனைவியின் புது மரியாதையில் ராமுவின் புருவங்கள் உயர்ந்தன.

''என்ன புள்ள தங்கம் - உம்மவனுக்கு தின் பண்டங் கொடுத்து விடனுமா? தாமஸிட்டவே தந்தனுப்பு.''

''இல்லை... இந்தம்மா..''

''அவங்க கூட கொண்டு போகலாம் - பார்க்க சாதுவான பொண்ணாத்தான் தெரியுது.''

தங்கத்தின் கண்கள் மேலும் மிரண்டன.

வழக்கமாய் ராமு 'உம்மவன்' என்றதும் சிலிர்த்தபடி வள் காட்டும் பொய்க்கோபம் கூட இன்றில்லை. தகங்கள், தொலைக்காட்சி என்று புத்தியை விஸ்தாரப் த்தும் சாதனங்கள் அங்கு இல்லாததால் அந்தத் திகளின் சிந்தனை, சீண்டல் எல்லாம் சிறு வட் ற்குள்தான் சுழலும்.



அவர்களின் ஒரே மகன் சோமு குட்டி - தற்சமயம் வேலை செய்வது ஜீவா எஸ்டேட்டில் - அங்கு போபவர் களிடம் தாய் தங்கம் ஆசையாய் ஏதேனும் மகனுக்குத் தந்தனுப்புவாள் -

''அந்தப் பொண்ணு சாப்பிட்டிருக்கும் - போய் தட்டை எடுத்து வந்திரு - அந்தப் பொண்ணை நாளைக் காலைல எப்ப எழுப்பணும்னும் கேட்டுக்கோ - தாமஸ் எட்டுக் கெல்லாம் வருமின்னது.''

''நா போகலை..''

இம்மாதிரியான முரண்டும் ராமுவிற்குப் புதிது.

''ஏய் புள்ள என்னாச்சு?''

''எனக்குப் பயம்மாருக்கு.''

''ஏனாம்? அதொண்ணும் மோகினியல்ல - பொண்ணு தான்.''

''அந்த முகம்... அதே அம்மாளான்னு தெரியலை... அப்படி இருக்கவும் முடியாதே... விசித்திரந்தான்.''

''ல்லியே... பொண்ணு நல்ல சித்திரம் போலத்தானே உண்டு? விசித்திரம் ஏதுமில்லையே!''

முயன்று ஜோக்கடித்து சிரிக்கலானான் ராமு.

கணவன் சிரிக்கும்போது தன்னையும் மீறி முறுவலிப் பவள் இன்று ஜடமாய் நின்றாள்.

''யப்பா... எம்மேனி சிலிர்த்திடுச்சு... கதவத் திறந் தேனா.. நேர் எதிர்க்க நின்னா அந்தப் பொண்ணு... வடிச்ச சிலை போல! ஆடாம என்னையேப் பார்த்தபடி அந்த முகம்.. அதே முகம்.. உடம்பு சில்லின்னு போச்சே எனக்கு! எடுத்துப் போன ட்ரேயை விடாம கீழே வச்சுட்டு வந்ததேப் பெரிசு.''

''எல்லாருக்கும் ஒரே முகந்தானப் பிள்ள? ரெண்டு கண்ணு, நடுவால ஒரு மூக்கு, அளவாய் வாய் அதுக் குள்ளே முப்பது பல்லுன்னு.''

''ஷ்... சந்திராம்மாளே வந்து நின்னது போலிருந்தது...''

முணுமுணுத்தாள்.

''அதாரு?''

''எனக்கு உங்கம்மா பேரே மறந்திரும்'' - சலித்தாள் - ''ஜீவா எஸ்டேட்டின் முதலாளியம்மா - 15 வருஷத்துக்கு முன்னே நா அங்க வேலை பார்த்தது இவங்களுக்குக் கீழ தானே..''

''ஓ.. ஓ? ஓடிப்போன ஜீவா சாரோட சம்சாரமா - பூத் தான எஸ்டேட் மேனேஜரோடு ஓடிப் போய்..''

''ஷ்... நமக்குத் தெரியாத கதை அதெல்லாம் - போனப்ப அவங்க மகளுக்கு அஞ்சு வயசிருக்கும்.''

''அடடே.... அப்ப இது அவங்க மகளாத்தான் இருக் கணும். வயசு பொருந்துதே.''

''சந்திராம்மாளை ஒற்றி எடுத்தாற்போல ஜாடை.... ஆக இது அவங்க மகதானோ? ஏன்னா சந்திராம்மா மரிச்சுப் போனதாய் தகவல் வந்ததே கொள்ளை காலத்துக்கு முன்னே? இனி பூமியில இல்லைன்னு ஆன ஒரு உயிர் சிலையாட்டம் எம் முன்னே நிற்கக் காணவும் எனக்கு நடுங்கிருச்சு.''

''சரி நீ இரு. நா போய் குடிக்க வெந்நீர் தந்துட்டு, சாப்பிட்ட தட்டும் எடுத்து வரேன்.''

''அவங்க பேர் என்னன்னு கேட்டு வர்றியா?''



''அந்த விசாரணையெல்லாங் காலைல.. நீ அவுங்களைக் கண்டு நடுங்கினது போல... நீ பேச்சுத் தாராம ஓடினதுல அவங்களும் திகிலடிச்சுதான் போயிருப்பாங்க.''

வழுவழுப்பான மூங்கில் கம்பத்தை பற்றி அதில் சாய்ந்த தங்கம், வேகமாய் பெய்து ஓய்ந்து இப்போது வியர்வை போல சொட்டிய மழைத்துளிகளைப் பார்த்தபடி நின்றாள்.

தன்னிடமிருந்த நீரையெல்லாம் பொழிந்த அயர்வில் வற்றி, வெளிறிக் கிடந்தது வானம்.

செடி மழை மட்டும் இன்னும் ஓயாது சொட்டுக்களை வடித்தபடி... அறைக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்த வான்மதியின் முகமும் வெளிறியே தெரிந்தது.

''வாங்கம்மா - நல்ல உறக்கமா?''

சட்னிக்கான வெங்காயத்தை அரிந்து கொண்டிருந்த ராமு விசாரித்தான். மையமாய் தலையசைத்தவள் -

''டீ கிடைக்குமா?'' எனக் கேட்க, கத்தியைப் போட்டு விட்டுப் பதறினான்.

''இன்னுமா உங்களுக்குத் தேத்தண்ணி வரயில்ல? அவ கொடுத்திருப்பான்னு நினைச்சுட்டேன்.. ஒரே நிமிஷம்.. குளிக்க வெந்நீயும் ரெடிதாம்மா...''

''தாங்க்ஸ்.''

பின்புறம் போனவன் அங்கு அமர்ந்திருந்த தங் கத்தைக் கடிந்தான் -

''அந்தப் பொண்ணுக்கு குடிக்க ஏதும் தரலியா?''

வெட்டிப் பிரித்த பன்களுக்கிடையே வெண்ணெய், ஜாமை கவனமாய் தடவிக் கொண்டிருந்தாள் தங்கம்.

அவளருகே 'மிக்கி டெக்ஸ்'ஸின் மஞ்சள் துணிப் பையொன்று நிரம்பிக் கிடந்தது.

என்ன உம்மவனுக்குக் கொடுத்தனுப்பவாக்கும்? முதல்ல காசு தர்ற கெஸ்ட்டைக் கவனிக்கணும். இவங்க மட்டும் எஸ்டேட்டின் முதலாளியம்மையா இருந்தா உனக்கு இனியொரு கெஸ்ட்டும் வரவிடாத லாட்ஜை இழுத்து மூட வச்சிருவாங்க... அதுக்கு முன்ன உம் பிள்ளை சோறு குட்டிக்கு சீட்டு கிழிஞ்சிரும்."

சற்று பதட்டமாகி எழுந்தாள் தங்கம்.

"இத்தனைச் சீக்கிரமா எழ மாட்டாங்கன்னு நினைச்சேன் - வாளியில வெந்நி ரொப்புறேன் - நீ சாய் போடு."

"அது ரெடி கொடுத்துக்கறேன். நீ பதமாய் வெந்நி விளாவி வை - வேறேதும் வேணுமான்னு கேளு."

அவன் தேநீர் கொடுத்த சில நிமிடங்களில் வெந்நீர் வாளியுடன் தங்கம் மெள்ள நடந்து போனாள். நீர் தளும்பாமல் இருப்பதற்காய் மட்டுமல்ல, அவள் கால்களின் தயக்கத்திற்கு வேறு காரணமும் இருந்தது அவனுக்குப் புரிந்தது.

"அதொன்னும் மோகினியல்ல - அம்சமான பொண்ணு தான் - சும்மாப் போ.." - தைரியம் சொன்னான்.

"அதில்ல... கேட்கட்டா வேண்டாமா?"

"கேட்கலைன்னா உந்தலை வெடிச்சிருமே!"

முன்தினம் போல அல்லாமல் கதவைத் தட்டி அனுமதி வரக் காத்து நின்றாள் தங்கம்.

குரல் கேட்டு கதவைத் திறக்க, இரு பெண்களும் ஒருவரை மற்றவர் பார்த்தபடி சில கணங்கள் உறைந்து நின்றார்கள்.



"வெந்நி... உள்ளே பாத்ரூம்பில ஊற்றட்டா?"

"ம்ம்."

"ரா முழுக்க மழ."

"ஆமா.. இல்லைன்னா நான் இங்கத் தங்க நேர்ந்திருக்காது."

"நல்லா உறங்கனீங்களா?"

குளியலறையின் கனத்த பித்தளை அண்டாவினுள் குளிக்க ஏற்ற வெதுவெதுப்பில் நீரை விளாவலானாள் தங்கம்.

வான்மதிக்கு முந்தின இரவு நிம்மதியான நித்திரையில்லை. அறிந்தவர் யாருமற்ற புது சூழலில் மறுபடி அக்கனவு அவளைப் பிழிந்தெடுத்திருந்தது.

வாய்க் குழறலும் வியர்வையுமாய் அவள் விதிர்த்து விழிக்க, இருட்டு அறையும், எதிர் சுவர் முழுக்க அப்பியிருந்த கருஞ்சதுரங்களும், மழை நேர இரைச்சல்களும் அவளை மேலும் மிரட்டின. முன்பு மின் விளக்கை எரியவிட்டு தலையணையைக் கட்டிக் கொள்ளுவாள் - சின்ன ஆசுவாசம் கிடைக்கும். ஆனால் நேற்றிரவின் நிலைமை வேறு. ஓரிரு மணி நேரப் பயணத்தில் முன்பு தான் தன் தாயோடு வாழ்ந்த வீடு பற்றிய நினைப்பு... எந்தச் சூழலில் தாங்கள் அங்கிருந்து தப்பினோம் என்ற குறுகுறுப்பு எல்லாமுமாய் சேர உருண்டு புரண்டு தவித்தாள். இடையிடையே வெட்டிய மின்னலும் உறுமிய இடியும் மேலும் அக்கொடுங் கனவு தொடருவதான பிரமையைத் தந்தன.

யாரையும் துணைக்கு அழைக்கவும் முடியாது.

நேற்றிரவு தனக்கு உணவை எடுத்து வந்த அந்தப் பெண் ஏன் அப்படிப் பதறி விலகினாள்?

ஏதும் சித்தம் கலங்கினவளோ?

இப்படித் தனிமையான இடங்களில் வசிப்பவர்களுக்குச் சித்தம் பிசகி விடுமோ? பேச, பழக ஆளற்ற கொடுமை அவர்களைக் குலைத்து கிறுக்காக்கி விடுமோ?

அதனால்தான் தன் தாயும் எஸ்டேட்டிலிருந்து தப்பி ஓடியதா?

சுசீலாவின் சிநேகமும், பள்ளித் தோழிகளும் மனதுள் வந்து நின்று ஆடினார்கள். எத்தனை மகிழ்வான நாட்கள் அவை... பெரியம்மாகூட சமீப நாட்களில் பிரியமாகவேப் பேசி பழகினார்கள் -

'பாரு வான்மதி - அங்கே உனக்குப் பொருந்தி வருதான்னு பாரு - சமாளிக்க முடியலைன்னா எங்களுக்குச் சொல்லிடு. பெரியப்பாவைக் கொண்டு ஜீவா எஸ்டேட்டை விற்கவோ, லீஸிற்கு விடவோ ஏற்பாடு செய்திடலாம். நீ மேற்கொண்டு படி - தகுந்த வேலைல சேரு... இல்லை ஏற்ற பையனாய், பார்த்து முடிப்போம் - தாய் வீடு உனக்கு இதுதான்னு வை... சரிதானே?'

விஸ்தாரமாய் ஒரு சொத்து கைக்கு வந்தது பெரும் பலம் தான். அநாதையான பெண்ணிற்கு அடுத்த வேளை உணவு பற்றிய பயத்தை எல்லாம் புடைத்துத் தள்ளிய பலம்.

உலகத்தில் தானும் சமாளித்து நின்று விடலாம் - நான்கு திசைகளையும் பரிசீலித்து எதில் நடக்கலாம் என்று நிதானமாய் தேர்ந்தெடுத்து நடை போடும் புதுத் தெம்பு அவளுக்குள் ஊறியது.

"வெந்நீ ஆறுவதுக்குள்ள குளிச்சிருங்கம்மா - துவாலை போட்டிருக்கேன் - பத்து நிமிஷத்துல, புட்டும் சாயாவும் எடுத்து வரேன்."



"தாங்க்ஸ்" - புன்னகைத்த வான்மதியின் முகத்தை ஆவலுடன் மொய்த்தன அப்பணிப் பெண்ணின் கண்கள்.

"தாமஸ் சொன்ன நேரத்திற்குள் வந்திடுவாரா?"

"ஆமாம்மா - எட்டே காலுக்குள்ள வந்திரும்."

"அப்படீன்னா நா முதல்ல ரெடியாகிடறேன்."

குளித்து, பூக்கள் தூவப்பட்டாற்போன்ற ஒரு பனீர மஞ்சள் புடவையைக் கட்டித் தயாரானவள், பெட்டியை மறுபடி மூடினாள்.

அந்நேரம் வாசனையாய் உணவு வந்தது.

வான்மதி சாப்பிட அமர, காலி வாளி, ஈரத் துவாலையுடன் வெளியேறிய தங்கம், மதி கைக்கழுவும் நேரம் மறுபடி வந்து கவரோரமாய் நின்றாள் -

"தாமஸ் வந்தாச்சா?"

"வந்திருவார்... பக்கத்தில்தான் நீங்க ஜீவா எஸ்டேட் போறதாய் சொன்னாங்க."

"ம்ம்..."

"அங்கதான் எம் மகன் வேலை பார்க்கறான் - பேரு சோமனன்.. நாங்க சோமு குட்டின்னு கூப்பிடறது."

"ஓ... எஸ்டேட் தோட்டத்தில் வேலையா?"

தங்கத்தின் முகம் சற்று மங்கியது - சோர்வுடன் தலையாட்டினாள்.

"இல்லைம்மா... அவனுக்கு அவ்வளவாய் போதாது - வயசு பதினாறு, பதினேழு ஆச்சன்னாலும் குழந்தையாட்டம் புத்தியும் குறைபட்ட பேச்சுமாய்... அவனை நினைச்சா எனக்கு வருத்தந்தான்."

'வருந்தாதே' என்பதான ஒரு கனிவான பாவனையில் இவள் பார்த்திருந்தாள்.

"கண்ணெதிரே பெத்ததை அரைகுறை அறிவோடப் பாக்கப் பாக்க நெஞ்சு பதைக்கும். நமக்குப் பிறகு இந்தப் பிள்ளை என்னாகுமோன்ற வேதனை... எவ்வீட்டுக் காரரும் அவன்ட்ட கடுக்கு சுருக்குன்னு ஏதேனும் பேசிட பிள்ளை முகம் வாடிரும்.. அப்பதான் கடவுளாப் பார்த்து அவனுக்கு அந்த வாய்ப்பைத் தந்தார். எஸ்டேட் வீட்டுல சமையல்ல ஒத்தாசை பண்ணவும், அறைகளைத் துடைச்சு வைக்கவும்னு.. அது பழங்கால வீடுல்ல? சதா துடைக்கலைன்னா தூசோட, பூஷணம் பிடிச்சிரும்."

"அப்ப நீங்க அந்த... வீட்டைப் பார்த்ததுண்டா?"

"சும்மா என்னைய 'நீ'ன்னே சொல்லுங்கம்மா... நா முன்னே அங்கே வேலைப் பார்த்திருக்கேனே..."

"முன்னேன்னா?"

"பதினாறு, பதினேழு வருஷத்துக்கு முன்னே... அங்கே உங்கம்மா எஜமானியா இருந்தப்ப..."

மருட்சியும் மலர்ச்சியுமாய் திமிர்ந்தது இளையவளின் முகம்...

# 10



'உற்சாகம் எனும் வெளிச்சம் உனக்குள் இருந்தால் எந்த இருட்டு சந்தர்ப்பத்திற்குள்ளும் தயக்கம், பயமின்றி நுழையலாம்' என்பது உண்மைதான் போலும்!



தன் எதிரே நின்ற தங்கம் பல வருடங்களுக்கு முன்புதான் எனினும் தன் தாயிடம் பணிபுரிந்தவள் என்றறிந்ததும் வளர்மதியின் பயத்தையெல்லாம் விரட்டி யடித்தது ஒரு புது உற்சாகம்!

புதுக் கண்களுடன் தன் எதிரே நின்றவளை அழுந்தப் பார்த்தாள். வளப்பமான உடலமைப்பு, வசீகரமான முகம் என்றாலும் சோகம் வலிமையாய் தங்கத்தின் கண்களை இருட்டடித்திருந்தது.

தங்கம் ஒரு பெருமூச்சுடன் பேசினாள்.

"உங்கம்மா போ... போன பிறகு அங்க ஏதும் சரி யில்லைங்கம்மா - எனக்குங் கல்யாணம் நிச்சயமாயிட்ட தால நானு அங்கேருந்து விலகிட்டேன்."

"அப்படீன்னா என்னைச் சிறு பிள்ளையாய் நீங்க பார்த்திருக்கணுமே?"

"உண்டும்மா... இப்ப பார்க்கறப்போ உங்கம்மாவை யேப் பாக்கறது போலிருக்குது - எதிர்பாராம உங்களை இந்த அறையில கண்டதும் திகைச்சுட்டேன்... அதான்..."

"அம்மா இறந்து பதினாலு வருஷமாச்சு."

"அவங்க போனதுமே பங்களாவோட அமைப்பு அழகெல்லாம் போச்சம்மா. ஐயாவோட ஒரு சித்தியம்மா வந்திருந்து அவருக்குப் புத்தி சொன்னது... இன்னும் அப்படியே நினைப்பிருக்குதும்மா -

'ஜீவா - ஆம்பளைக்கு உடம்பு பலம் ஜாஸ்திதான் - ஸ்டீலால செய்த காரைப் போலன்னு வையேன். ஆனா அதை இயக்க அந்த பலம் போதாது - பெட்ரோல் தேவை. அந்த எரிசக்தி போல ஆணுக்கும் பெண்தான் சக்தி. அவளில்லாமல் உலகமென்ன வீடும் இயங்காது.

சிரமம்... இது புரியாமல், உன் சக்தியை நயந்து பாது காக்காமல், இப்படி விட்டுட்டியேப்பா'ன்னு வருத்தப் பட்டாங்க. ஆனா ஐயா அவங்களுக்குப் பிடிவாத குணம். பெண்டாட்டி முக்கியமாய் தன் பெண் குழந்தையும் போன அதிர்ச்சிய அவரால தாங்கக் கூடலை... சாப்பாடு இறங்காது - ஆத்திரமாக் கத்துவாரு... தாளாத வயித்து வலியுஞ் சேர, டாக்டர் வந்து 'ஐயாக்கு அல்சரு.. அவருக்கு இன்னின்னபடி சமைக்கணும்'னு எங்கிட்ட சொன்னார்... எங்களால இயன்றளவு ஐயாவ நாங்கக் கவனமாப் பாத்துக் கொண்டாலும் அந்த வீட்டுக் களை போனது போனதுதான்.."

"எங்கம்மாட்ட பேசிப் பழகியிருக்கியா தங்கம்?"

"அதிகம் பேசமாட்டாங்க... ஏதோ வாசிக்கவும், எழு தறது, வரையறதுமாய் இருப்பாங்க.. அங்கே அவங் களுக்குப் பொழுது நகரலை - சமைக்கவும் பிடிக்காது. அவங்க பேச்சு புரியறளவு எங்களுக்கும் விவரம் போதாதே." புன்னகையுடன் அத்தனையையும் கேட்டுக் கொண்டாள் வான்மதி.

நேற்றிரவும் கூட தான் இங்கு வந்தது சரியா, தேவையா என்று குழம்பிய மனதில் இப்போது ஆர்வக் குறுகுறுப் புடனான புதுப் பிரகாசம்.

தான் வந்தது நல்லது.

தன் தாயைப் பற்றி நிறைய விசாரித்துத் தெரிந்து கொள்ள வேணும். தாய்மையின் அன்பு, அணைப்பை அனுபவியாமல் போனவளுக்குத் தாயைப் பற்றிய சில தகவல்கள் கிடைத்தாலும் போதும் என்ற ஆர்வக் காந்தளிப்பு.



வெளியே ராமுவின் குரல் அழைத்தது.

"எம்புள்ள - தாமஸ் வந்தாச்சு - அம்மா ரெடிதன்னே?"

"கிளம்புங்கம்மா - பெரிய வீட்டுல எல்லாரும் உங் களைக் காண ஆசையாக் காத்திருப்பாங்க.. நேத்து ராவே போக வேண்டியது - முடிஞ்சா... அங்க.."

"சோமனைப் பார்க்கணும் - கண்டிப்பாப் பார்த்து நீங்கக் கேட்டதாய் சொல்றேன்."

"நன்றிம்மா... ஒண்ணு ரெண்டு துணிமணியோட வெண்ணெய்த் தடவுன பன்னும் வச்சிருக்கேன். தாமஸ்ட்ட தந்தா சோமு குட்டிட்ட சேர்ப்பிச்சிடும்."

"எங்கிட்ட தந்தால் நானும் பத்திரமாய் சேர்த்திடறேன் - நானும் அவனைப் பார்த்தது போலாகுமே.. வந்து தங்கம்... எஸ்டேட்டில் அப்பாக்கு உதவியாய் யார் இருந்தாங்க?"

"வீட்டு வேலைக்கு ஆளுங்க உண்டும்மா... ஆனா நாள் போகப் போக பெரியவரால் நிர்வாகத்தை இழுத்து கவனிக்க முடியலை... தளர்ந்துட்டார். மனசோட உடம்பும் விட்டுப் போகுதே... இப்ப ஏழெட்டு வருஷமா இளைய வரில்லாமல் அவரால ஒண்ணும் முடிஞ்சிருக்காது."

"இளையவர்னா யாரு?"

"வசீகரன்ய்யாதான் - அவரில்லாத எஸ்டேட் ஸ்தம் பிச்சு போயிருக்கும் - இளையவருதான் எம்பிள்ளைக்கும் தயவாய் அங்க வேலைப் போட்டுத் தந்ததும் கூட."

"அவர்... அப்பாக்கு எப்படிச் சொந்தம்?"

'பாவம் - உனக்கு எதுவுமே தெரியாதா?' என்பதான ஒரு இரக்கப் பார்வையுடன் தங்கம் விளக்கினாள்.

"பெரியவர் உங்கப்பா கடைசி சில வருஷங்களாய் படுக்கையிலதான் பக்கவாதம்மா - அதுக்கு முன்னமே

வசீகரனய்யா எஸ்டேட்டுக்கு வந்து தங்கி வேலையும் பழகிகிட்டது நல்லதாப் போச்சு. எப்படி சொந்தம்னா..." கண்ணை மூடி ஒரு கணம் யோசித்தாள் தங்கம்.

தன் குடும்பத்தைப் பற்றி ஒரு வேலைக்காரப் பெண்ணிடம் கேட்டறியும் அவலத்தில் உரியவளுக்கு முகம் சிறுத்தது. ஆனாலும் காத்திருந்தாள் -

"ஒன்னு விட்ட அக்கா மகன்னு நினைக்கேம்மா.. சின்னவர் பெரியவரை 'மாமா'ன்னுதான் விளிப்பார். ஆனா பிள்ளையாய் பாசங்காட்டி உடனிருந்தாரு கடைசி வரை பொறுப்பாவரு. தொழிலாளிங்களுக்கு சின்னவர் மேல பெரும் நம்பிக்கை - அவரும் மனுஷ அபிமானம் உள்ளவரும்மா. இல்லைன்னா எல்லாரும் கேணயன்னு கேலி பேசி எம்பிள்ளைய எஸ்டேட்டில கொண்டு போய் சம்பளமும் தந்து வச்சுக்க வேண்டிய அவசியமில்லையே..."

இனிமேலும் வெறுமே குரல் கொடுத்துப் பயனில்லை என்பது புரிந்தது போல தாமஸும் ராமுவும் வந்து தலை நீட்டினார்கள்.

"பெட்டிகளைக் காரில ஏத்தலாந்தானே?"

"ம்.. தங்கம் முன்னே எஸ்டேட்டில் வேலையிலிருந்த போது எங்கம்மாவைப் பார்த்ததுண்டாம்."

தங்களின் தாமதத்திற்கான காரணத்தைக் கோடி காட்டினாள் வான்மதி.

"அங்கேயும் இது போல பல பேர் இருப்பாங்கம்மா... உங்கப்பாவோடு கடைசி வரையிருந்து கவனிச்சவங்க.. உங்களைக் குழந்தையாத் தூக்கினவங்களும் இருக்கக் கூடும். வனம் இறுக்கமாய் உண்டு - எந்நேரமும் மழை மறு படி பொத்துக்கும்ன்றது போல, விரைவாய் போய்ச் சேரணும்."



"ம்ம்... சோமுக்குத் தர்றதாய் சொன்ன பார்சல்..." இவள் கேட்டு முடிப்பதற்குள் தங்கம் ஓடினாள்.

அறையை ஒரு முறைப் பார்த்தவள் வெளியேறினாள். வெளியேயும் மப்பாய் இருந்ததால் உலகமும் ஒரு இருண்ட அறை போலவே இருந்தது - இப்போது வான்மதிக்குள் புதுக் குழப்பங்கள் - புதிதாய் கேள்விபட்ட அந்த வசீகரனைப் பற்றிய பல சந்தேகங்கள் உள்ளே முண்டின.

ஆக பல காலமாய் தன் தந்தைக்கு துணை, பக்க பலமாய் இருந்தவர் அந்த வசீகரன் - அப்பா அவரையே தன் வாரிசாய் வரித்திருக்க வேண்டியதுதானே?

ஏன் தனக்கிந்த திடீர் அழைப்பு?

அந்த வசீகரனுக்கு எத்தனை வயசிருக்கும்?

பெயரைப் போல கவர்ச்சியானவனா அல்லது முரட்டு உழைப்பாளியா? தன் மனைவி, குழந்தைகள் என்று குடும்பமாய் அங்கே தங்கி உழைத்தவன், முதலாளி என்ற அந்தஸ்தில் திளைத்தவன் இப்போது உரியவள் என்று தான் போய் நின்றால் சந்தோஷமாய் வரவேற்கக் கூடுமா?

அல்லது நாயைக் கண்ட பூனை போல விறைத்து சண்டைக்கு சிலிர்த்து நிற்பானா?

"அம்மா, இந்தப் பைய இப்படி ஓரமா வக்கட்டுமா?" தங்கம் தன் மகனுக்கான பரிசுப் பையை காரில் வைத்தாள்.

"ம்ம்... நானே கூப்பிட்டுத் தந்துடறேன் - அவனும் அம்மாட்டேருந்து ஏதேனும் வருமான்னு எங்கிட்டுதானே இருப்பான்."

தங்கத்தின் விழிகள் கலங்கின.

குரலைத் தழைத்து வினவினாள் - "எந்தங்கம், அங்கே எங்கம்மா படம் ஏதும் இருக்குமா?"

"நா அங்கே போய் நாளாச்சம்மா... ஆனா இருக்கணும். அழகான அம்மையின் ஒரு படமேனும் இல்லாமயாப் போகும்?"

கார் கிளம்ப, வான்மதி ஒரு வித இறுக்கத்துடன் அமர்ந்திருந்தாள். மனசும் மரத்தாற் போலிருந்தது.

கால்மணி நேரத்தில் ஒரு மங்கிய கருப்புப் பலகை அம்புக் குறியோடு.

'ஜீவா எஸ்டேட் - 15 கி.மீ.' என்று அறிவித்தது.

"இன்னுங் கொஞ்ச தூரத்திலேருந்து நம்ம பூமிதாம்மா, தனியார் ரோடுங்கறதால சுமார்தான் தவிர இப்படி அடிக்கடி பெய்யும் மழை வேற..."

ஆனால் சாலையின் இரு மருங்கும் மரமும் பசுங் கொடிகளும் பூக்களுமாய் ஆர்ப்பாட்டமான அழகு. ஒடுங்கிய வளைந்த சாலையில் உறுமலாய் முன்னேறியது வாகனம்.

16 வருஷங்களுக்கு முன்பு, இதே பாதையில்தான் பயணித்திருப்பார்கள். அந்நேரம் அம்மாவின் அணைப்பிற்குள் இருந்திருப்பாள் -

கண்ணீரும், 'இனி இங்கே திரும்பவேக் கூடாது' என்ற வைராக்கியத்துடன் அம்மா...

'இனி உங்களைப் பார்க்கவே மாட்டேன்... ஒழியுங்க' என்று கொடூரமாய் அப்பாவும் முறுக்கிக் கொண்டாரோ?

ஆக பெற்றவர்கள் இருவரும் மண்ணோடு போன பிறகுதான் இந்த மண்ணை மகள் மிதிக்கப் போகிறாள்!

தன்னது என்று சொல்லிக் கொள்ள சொந்தங்கள் அற்ற தனக்கு இப்போது இந்த பூமி மட்டும் சொந்தம்...



ஆனால் இதுவும் எப்படியெப்படி தன்னைப் புரட்டித் தள்ளப் போகிறதோ?

திடும்மென மேலும் இருண்டது.

தலையைச் சற்றேக் குனிந்து வெளியே பார்வையோட்டினாள். சாலையின் இருபுறமும் மரங்கள் கவிழ்ந்து குடை போலிருந்ததால் ஏற்பட்ட இருள் - மழை விட்டுச் சென்ற குளிருமாய் சேர்த்து அவளை அசத்தின. முந்தின இரவு தடைபட்ட உறக்கத்தை அவள் நன்கு அனுபவிக்க ஆரம்பித்த நேரம், பெரிய பறவையொன்று கிரீச்சிட்டது போன்ற ஒலி ஒன்று அவளைத் தட்டி எழுப்பியது.

அவளது அலமலந்த பார்வையைக் கவனித்த தாமஸ் விளக்கினார்.

"ஒன்னுமில்லம்மா - கேட் திறந்த சத்தம்..."

இரட்டை இரும்புக் கதவின் மறுபாதியும் ஒரு ராட்சத கழுகின் கூச்சல் போன்ற ஒலத்துடன் விலக, ஒரு விநோத பட்சியின் உள்ளே தான் பிரவேசிப்பது போலொரு மிரட்சி இவளுக்குள்.

"வீடு ஏதும் தெரியலியே..."

"ரெண்டே நிமிஷந்தான் - இந்த வளைவு தாண்டியதும் புலப்படும்."

"ஓ... இந்த கேட்டிற்கு எண்ணெய் விடணும். பெயிண்ட் அடிச்சும் பல காலமாயிருக்கும் போல..."

சொன்னவளை ஒரு புது மரியாதையோடு பார்த்தார் தாமஸ் -

"ரொம்ப விஸ்தாரமான இடமில்லையாம்மா - மெயின்டெனன்ஸ் சிரமந்தான் - ஆனாலும் நீங்க ஒரு வார்த்தை சொன்னா எல்லாம் நடக்கும்."

அவர் சொன்னது போலவே வளைவு திரும்பியதும் தெரிந்தது வீடு... நாள் முழுக்க தாகத்தில் வரண்டவன் நீர்க்குவளையை வாயில் சரிக்கும் வேட்கையோடு கண்கள் அக்காட்சியை உள்ளிறக்கின.

மிகப் பெரியதும் பழையதுமான வீடு.

சாம்பல் நிற சதுரக் கற்களைக் கொண்டு எழுப்பப்பட்ட வலிய சுவர்கள் - ஆனால் கட்டமைப்பில்லை - தோன்றியபடி அங்கும் இங்குமாய் கிளைவிட்ட ஒரு காட்டு மரம் போன்ற விசித்திர அமைப்பு. வாழ்ந்து சலித்த ஒரு ராட்சசன் ஓய்ந்து சரிந்திருந்தது போன்ற ஒரு தோற்றம். பளிச்சென்ற நிறமே காணாத இருண்ட மாளிகை.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவாத வீடிது!

அவர்களின் சண்டைச் சச்சரவில் சலித்த இடம்... இங்குதான் தன் வாழ்வு ஆரம்பித்திருக்கிறது.

தன்னுள் வாழ்ந்தவர்கள் மகிழ்வாய் இல்லை என்பது புரிந்தது போல கனத்த கறுத்த அப்பெரிய வீடு இறுக்கமாய் நின்றது. பாசி படர்ந்த கல் சுவர்களைப் பார்த்தபடி, நெடுக ஓடிய கல் படிகளில் ஏறியவளுக்குள் கலவையான உணர்வுகள்.

ஒதுங்கி நின்ற பலரின் பார்வை தன்னை ஆர்வமாய் நோட்டமிடுவதையும் வான்மதியின் பார்வை தவற விடவில்லை - வேலைக்காரர்கள் போலும்.

முன்னே சென்ற தாமஸ் அதட்டினார்.

''சின்னவர் எங்கே?''

''இத்தனை நேரமாய் காத்திருந்து பின்னே ஒரு போன் வந்ததுன்னு இப்பதன்ன ஐயா போனது...''



முண்டும் ரவிக்கையும் மேலே போர்த்தின ஒரு சன்ன கட்டமிட்ட துண்டுமாய் நின்ற ஒரு பெண் விளக்கினாள் -

போன் என்றதுமே சுசீலாவின் நினைப்பு வந்தது - அவளோடு பேச வேணும்...

''அம்மாவுடைய பெட்டிய அவங்க அறைக்குக் கொண்டு போகலாமில்லையா - அசதியான பிரயாணம்.''

''ஓ... ரூம்பெல்லாம் ரெடியாயிட்டுண்டு.. சோமு வரு. பெட்டியெல்லாம் எடுத்தோ.''

இதுதான் சோமு குட்டியோ? இல்லை வந்தவருக்கு நாற்பதைத் தொடும் வயது. பெட்டிகளைச் சுமந்தபடி அந்த சோமு படியேற - அவனது சற்றே வளைந்த, சுரணையான கால்களைப் பார்த்தபடி படியேறினாள். வேறெங்கும் பார்க்க முடியாதபடி ஒரு இருட்டு.

காலை நேரமுமேக் கூட மின் விளக்குகளின் தயவு வேண்டும், போலவே, ஒடுங்கிய, உயர்ந்த படிகளில் ஏறி முடித்தபோதுதான் எதிரே தன் வருகைக்காய் காத்திருந்தது போல நின்ற அந்த நெடிய உருவம் அவளுக்குத் தெரிந்தது. அகலமும் உயரமுமான அந்த ஆணை நெருங்க நெருங்க நெஞ்சம் படபடத்தது.

''வா... வாங்க மதி. ஸாரி - இத்தனை நேரம் உங்களுக்காய் காத்திருந்தேன். உங்க ரூமிற்கு கீஸர் ஆர்டர் செய்திருந்தேன் - அதன் அளவு பற்றி சந்தேகத்தோடு கடையிலிருந்து போன் வந்தது. அதான் உன்... உங்க அறைக்கு வந்தேன்... பிரயாணம் கொஞ்சம் நீண்டிடுச்சு இல்லையா?''

நிறுத்தி நிதானமாய் பேசிய அவனது குரல் மிகக் கவர்ச்சியாயிருந்தது.

"நீங்க...?"

"வசீகரன்" கைகுவித்தபடி அவன் முறுவலிக்க, இவளது கைகளும் தன்னிச்சையாய் குவிந்தன.

இவளது உயரம், உருவம், முகம், குரல், பேசும் விதம் எல்லாமே வசீகரமானவைதான் என்ற பாராட்டு இவளுள் ஓடியது.

"வணக்கம் - வக்கீலும் இங்கே இருப்பார்னு நினைச்சேன்."

"தன் வேலை முடிஞ்சதும் கிளம்பிட்டார் - ஆனா உங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் வரச் சொல்லலாம்" - என்றபடி அவன் வழிவிட்டு நிற்க, இவள் அவன் காட்டிய அறைக்குள் நுழைந்தாள் -

நல்ல வேளை அங்கு விளக்கின் பிரகாசம் இருந்தது.

தன் பின்னே தொடர்ந்தவனை ஆவலாய் திரும்பிப் பார்த்தாள் - வெளிச்சத்தில் அவன் தோற்றத்தைக் காணும் ஆர்வம்!

"நீங்க வந்ததில் எனக்கு மகிழ்ச்சி, மதி" என்றவனின் முகத்தை ஆராய்ந்தாள் -

இல்லை - அவன் வார்த்தையில் உண்மையில்லை. அவன் விழிகளில் ஏதோ ஒரு வருத்தம் நிழலிட்டிருந்தது. ஆனால் ஏன் வருந்த வேணும்?

"இது உங்க ரூம் - பிடிச்சிருக்குதா?"

அந்த வெளிச்சமும், அதற்குத் தோதான வெள்ளைச் சுவர்களையும் நிம்மதியாய் பார்த்து நீள மூச்சு விட்டாள்... புதுப் பெயின்ட்டின் நெடி சிறிது மிச்சமிருந்தது.



இளநீலத்தில் இதமான நீலத்தில் திரைச் சீலைகள் ஆடின. தூசியில்லாது துப்புரவாய் துடைக்கப்பட்ட அறை.

உயர்ந்த சீலிங். அங்கு ரெட்டைப் பிறவிகள் போலத் தொங்கிய லஸ்தர் விளக்குகள் - நீள் சதுரமான அறையில் அளவான மரச் சாமான்கள் - கட்டில். அவளது பெட்டிகள் அதற்குள் அவற்றிற்கான இடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

"அருமையான அறை... இது எங்கம்மாவின் அறையா?"

"இல்லை - இது புதுப்பிக்கப்பட்ட அறை - இணைப்பாய் குளியலறை தேவைப்படும்றதால் மாற்றி அமைச்சேன்... கீஸர் இன்னும் பொருத்தப்படலை... இப்ப குளிக்க வெந்நீர் வரும்... நாளை கீஸர் வந்திடும்... ஸாரி."

சிறு அசௌகர்யங்களையும் தாள முடியாத ஒரு இளவரசியாய் தன்னை அவன் நினைப்பதில் வான்மதிக்கு ஆச்சரியந்தான்.

"விருந்தாளிகள் வந்தால் ஓரளவு வசதியாய் தங்கணும்னு கட்டினேன்." அவன் பேச்சின் பின்னே முன்னான ஒரு அர்த்தம் இருப்பதாய் பட்டது.

'நீ உன்னை இந்த வீட்டின் வாரிசு உரியவள் என்றெல்லாம் நினைத்து விடாதே பெண்ணே, வந்திருக்கும் விருந்தாளி மட்டுமே.' என்று குத்துகிறானோ?

"ஏற்கெனவே குளிச்சாச்சு - தாங்க்ஸ் - நீங்க ரொம்ப சிரமப்படாதீங்க மிஸ்டர் வசீகரன் - நான் இங்கே தங்கப் போறது சில நாட்கள்... மேபி பத்தே நாட்கள்... அதற்கு இந்த வசதி போதும்.."

மணியடித்தது போல இவள் பேச வசீகரனின் முகம் வெகுவாய் மாறியது... அது ஏன் என்பது இவளுக்குப் புரியவில்லை.



# 11

பிரயாணம் எத்தனை வசதியாய் அமைந்தாலும் உடலில் ஒரு அலுப்பு. அழுக்கான உணர்வைத் தந்து தான் விடுகிறது. மாற்றங்களால் புத்துணர்வு கொள்வது மனம் மட்டுமே!

குளியலறைக்குள் முகம் கழுவலாம் என நுழைந்தவள் பிரமித்துப் போனாள் - ஷெல்ஃபில் அத்தனை அழகு சாதனங்களும், பூச்சக்களும் அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றாய் முகர்ந்து, சற்றுத் தடவிய பின், குளித்தும் விட்டால் என்ன என்று தோன்றியது.

அண்டா நிரம்ப வெந்நீரும் இருக்கவே, தேய்த்த எண்ணெய், பூச்சக்கள் போக தலைக்கே ஊற்றிக் கொண்டாள்.. ரேடியோவின் புல்லாங்குழல் இசையைக் கேட்டபடி நனைந்தது பிடித்திருந்தது... ஷாம்பூ கமகமத்த கூந்தலைத் துவட்டி, பின் பிரித்து ஆற்றியபோது, மனக் கண்ணில் வசீகரனின் தோற்றம் தெளிவாய் வந்து நின்றது.

ஆண்களை இவள் நுணுக்கமாய் கவனித்து ரசித்ததில்லை எனினும் தன் தோழிகள் அனைவரும் வசீகரனைப் பார்த்திருந்தால் புகழ்ந்து மாய்ந்திருப்பார்கள் என்பது நிச்சயம்... இப்படிப்பட்டவர் இத்தனைத் தனிமையான இடத்தில் வாழுவானேன்?

நண்பர்களோ, கேளிக்கைகளோ சாத்தியமற்ற ஒரு பிரதேசத்தில்? ஒரு வேளை இவருக்கு இந்த ஏகாந்தம் பிடித்திருக்கிறதோ அல்லது பழகிப் போனதா?



தலை ஆற்றியபடியே எண்ணங்களையும் கோதினாள். பிடிக்காவிட்டால் இங்கே தங்க வேண்டிய அவசியமென்ன? ஏதோ சொல்வார்களே - 'புலிக்கு வாலாய் இருப்பதை விட பூனைக்குத் தலையாய் இருக்கலாம்' என்று. ஆக இந்த ஆளண்டா பிரதேசத்தின் அரசனாய் இருப்பது இவனது தேர்வு போலும். தான் தொடர்ந்து அரசாள வேண்டும் என்றுதான் தன்னை விருந்தினர் அறையில் தங்க விட்டிருக்கிறான்.

மறைமுகமான எச்சரிப்பு -

'ஆசையேதும் வளர்த்துக்காதே - வந்தோமா - இள வயசில் வளர்ந்த வீட்டை, அப்பாவின் சொத்தை பார்த்தோமா - போனோமா' என்றிரு என்ற ரீதியில்!

பத்து நாட்களில் தான் கிளம்பி விடுவதாய்ச் சொன்னதும், பிறகேன் வசீகரனின் முகம் அப்படி மாறியது?

அவனது விழிகள் இருண்டல்லவா போயின?

'ஒழிந்தது சனி' என்ற நிம்மதியான பிரகாசமல்லவா அவற்றில் சுடர் விட்டிருக்க வேணும்?

மனதை ஒருமுகப்படுத்தி அவன் கண்களின் பாவனையை நினைவுபடுத்தி ஆராய்ந்தாள் -

கடும் ஏமாற்றமும் கசப்பும் தெரிந்தனவோ? இவளது ஆராய்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல கதவு தட்டப்பட்டது.

கதவிற்கு வெளியே நின்றது ஒரு புதுமுகம் -

"அம்மாக்கு சாப்பாடு இங்க கொண்டு வரவா... ல்ல... கீழே வருமோ?"

"ம்ம்... முதல்ல சோமுவை... அதாவது சோமனைப் பார்க்கணுமே... அவங்கம்மா அவனுக்காய் ஒரு பை தந்து விட்டாங்க."

''தாங்கம்மா... நா அவன்ட்ட சேர்ப்பிக்காம்.''

''உடனடியாய் சாப்பிட வேண்டிய பண்டம்னு நினைக் கறேன் - அதான். நேற்று ராத்திரி மழைங்கறதால் அவங்க விடுதியில் தங்க வேண்டி வந்தது.''

பவ்யமாய் தலையாட்டிய பணிப்பெண் இவள் தந்த பையை வாங்கிக் கொண்டாள் -

''உங்க சாப்பாடு...?''

''நான் வரேன்... எந்தப் பக்கம்?''

''நான் இட்டுப் போறேம்மா.''

''உங்க பேர்?''

''ஐய்யே... இத்ர மரியாதையெல்லாம் அவசியமில் லம்மா... எம்பேர் சொர்ணா.''

சொர்ண நிறம்தான் - சற்று பருமனான உடலமைப்பு.

''இங்க நிறைய பேர் வேலை பார்க்கறாங்க போல?''

''அப்படியேனும் மனுஷ முகங்களப் பார்க்கலாம்னுதான் பெரியவர் எங்களையெல்லாம் வேலைக்கமர்த்தினது... இத்ர பெரிய வீட்ட பராமரிக்கறதும் லேசில்லம்மா.. மழை மாசங்கள்ல ஒரு மாசம் பூட்டி வச்ச அலமாரிக்குள்ளே எல்லாம் பூஷணம் வைக்கும் - எல்லாம் பாழாப் போகும்.. ஆக துடைக்க, அடுக்கன்னு அத்ர பேருக்கும் வேலை இருக்கும்..''

ஆனால் இவளுக்குத் தெரிந்து இரண்டு ஆண்கள் மட்டுமேப் புழங்கிய வீட்டில் அப்படி காபந்து பண்ண என்ன இருக்கும் - என்றுதான் நினைத்ததைக் கேள்வி யாக்கினாள் வான்மதி.



''பொன்னும் பட்டுமில்லம்மா... எல்லாம் பேப்பரு... வகை தொகையில்லாத காகிதக் கட்டுகள். பழைய நியூஸ் பேப்பரு, பத்திரம், பத்திரிகைன்னு... என்னையக் கேட்டா அத்ரயும் குப்பைதான்... ஆனா தூசி தட்டிப் பத்திரப் படுத்தணும்.''

சொர்ணாவுடன் பேசியபடி நடந்தவள் சாப்பாட்டு அறைக்கு வந்தாள் - மேஜையில் கண்ணாடி பாத்திரங் களுடன் வெள்ளியின் மினுமினுப்பும் இருந்தது. அவி யல், சாம்பாரின் கமகமப்புடன், டோஸ்ட், வெண்ணெய், முட்டை, பழரசம் என்று விதவிதமாய்.

''அவர்... சின்னவர் சாப்பிட்டாச்சா?''

''வர்ற சமயந்தான்... உங்களுக்குப் பசிக்குமோன்னு கூட்டி வந்தேம்மா - சின்னவர் உத்தரவு அப்படித்தான்.''

''ஓ...'' - பரிமாறிக் கொண்டு அறையை நோட்டமிட்ட படி உண்டவளுக்கு சுவையே உறைக்கவில்லை.

''சொர்ணா, எங்கம்மா அறை எங்கேருக்குப் - பார்க்கணுமே.''

''அது... நா இங்க வேலைல சேர்ந்து மூணு வருஷந் தன்னே ஆச்சம்மா - வின்னியக் கேட்டுச் சொல்றேன். மேற்குப் பக்க ரூமாத்தான் இருக்கும். அதை சுத்தம் பண்ணி மாளலைன்னு வின்னி புலம்பும்...'' என்றவள் தான் அதிகம் பேசிவிட்டதாய் கருதி வாய் மூடிக் கொண்டாள்.

''அப்ப அந்த வின்னிட்ட கேட்டுட்டு வர்றியா - நா சாப்பிட்டதும் அங்க போலாம்?''

''அம்மா சரியா உண்ணலியே.''

"போதும் சொர்ணா..." என்றவள் ஒரு அவசரத்துடன் கை கழுவலானாள்.

வின்னி வரும் வரை ஹாலைச் சுற்றிப் பார்த்தவளுக்கு, சற்று மங்கலான அந்த இடத்தை ஏதோ புகை மூட்டத்தி னூடே காண்பது போலிருந்தது - ஒட்டடையோ, தூசோ இல்லாவிடினும் அந்த சுவர்களுக்கிடையே ஏதோ மர்மம் புதைந்திருப்பது போன்ற பிரமை!

இவளது உயர்ந்த விழிகளைப் பிடித்து நிறுத்திக் கொண்டது அந்தப் படம் - அது ஒரு புகைப்படம்.

அழுத்தந் திருத்தமான அமைப்பிலிருந்த அந்த ஆண் முகம் அவளை மிக ஈர்த்தது - மீசை இல்லாதிருந்தும் கம்பீரம் குறையாத, அந்தக் கால ஹாலிவுட் நடிகர் போல அதிலிருந்தவர்... தன் தந்தைதானோ? உலர்ந்த மாலையின் நடுவே புன்னகைக்காத அம்முகத்தை ஆர்வமாய்ப் பார்த்தாள் -

போட்டோ எடுத்தவர் புன்னகைக்கச் சொல்லியும், புன்னகையைக் கூட வெளியே கசிந்து விடாதபடி கவனமாய் அடக்கிய ஒரு பாவனை - உணர்வுகளை லேசில் வெளிப்படுத்தப் பிரியப்படாதவர் போலும்.

யாரோ அறையுள் நுழையும் அரவத்தில் திரும்பினாள்.
"மறுபடி மன்னிக்கணும் மதி. கொஞ்சம் எதிர்பாராத வேலை - அதான் உன்னோடு சேர்ந்து சாப்பிட முடியலை."

"பரவாயில்லை - இப்ப சாப்பிடுங்க."

இவள் இயல்பாய் சொல்ல அவன் சற்று திகைத்து நின்றான்.

"என்ன?"



"இல்லை... வந்து உங்கப்பா படத்தைப் பார்த்திட் டிருந்தே.."

"ஓ... நினைச்சேன்... அப்பாதானா?"

அறியாத தகப்பனைப் பற்றிப் பேசச் சற்று சங்கடமாயிருந்தது -

"ம்ம்... எங்கம்மா அவரது கஸின் - பெரியப்பா மகள் - எங்கப்பா இறந்த போது அம்மாக்கு நிர்கதியான உணர்வு... அப்ப நானும் எங்கக்காவும் சிறு பிள்ளைங்க."

"இப்ப உங்கக்கா எங்கே?"

"கல்யாணமாகி வட இந்தியாவில் இருக்காங்க..."

"உங்கம்மா?"

"இப்ப உயிரோடு இல்லை."

"இருந்தவரை அவங்கதான் இந்த வீட்டை நிர்வகிச் சிருப்பாங்க - இல்லியா?"

அழுந்தத் தலையசைத்தான்.

"இல்லை - இந்த இடம் பெண்களுக்கு ஒத்து வரா துன்னு முடிவு பண்ணிட்டார் மாமா. இந்தத் தனிமையிடத்தில் பிள்ளைகள் வளருவதும் ஆரோக்கியமானதில்லைன்னு நினைச்சதால், எங்களுக்கு நாகர்கோயிலில் ஒரு வீடு பார்த்து அங்கே வச்சார் - படிப்பிற்கும் எங்களுக்கும் அது வசதியாய் போனது - ஆனா வீக் - என்ட்ஸ் இங்கே வருவோம் - அப்ப அம்மாவும் வீட்டை ஓரளவு ஒதுங்க வச்சு, மறுவாரத்திற்கான மெனுவெல்லாம் சொல்லுவாங்க."

"ம்ம்... நீங்க முதல்ல சாப்பிடுங்க. நான் அம்மா.. எங்கம்மா ரூமைப் பார்க்கலாம்னு நினைச்சேன் - சொர்ணா கூட்டிட்டுப் போறேன்னா.."

மெள்ள முறுவலித்தான் - அதில் அவனது வசீகரம் கூடிப் போனதைக் கவனித்தாள்.

"எனக்குப் பசிக்கலை மதி.. நீ இங்கே இருக்கும் வரை உன்னைக் கவனிக்கணும்."

"பத்து நாள் எனக்கும் பொழுது போகணுமே... ஏதேனும் வேலை இருந்தாச் சொல்லுங்க."

"ஆக அதில் மாற்றமில்லை - ம்ம்?"

"எதிலே?"

"இங்கே சில நாட்கள் மட்டுமே நீ தங்கப் போவதில்?"

சட்டென பதில் தர முடியாமல் விழித்தாள்.

"உன்னை வற்புறுத்துவதும் நியாயமில்லை... இப்படிப் பட்ட ஒரு காட்டில் அதற்கு மேல் ஒரு பெண்ணால் இருக்க முடியாதுதான் போல.."

நிஜமான வருத்தத்துடன் அவன் சொல்ல இவளது மன ஓரத்தில் சிறு இளக்கம்.

தான் சீக்கிரம் கிளம்பி விடுவேன் என்பதில் வருந்துகிறானா இவன்?

ஆனால் பெண்களைப் பற்றி எல்லாம் அறிந்தவன் போல பேசுவானேன் என்ற எரிச்சலும் கிளம்பியது.

"இத்தனை காலம் என் அப்பா இருக்கார்... அதாவது உயிரோடு இருந்தார்ன்றதே கூட எனக்குத் தெரியலை... தெரிவிக்கலை. ஒரு அநாதை போல வாழ்ந்து, எதிர் காலத்தைப் பற்றி திகைச்சிருந்த சமயம் என்னை இந்த எஸ்டேட்டிற்கு வரவழைச்சீங்க.."

அவன் கண்களில் புது புரிதல் - 'அடடே, இதில் நம்ப தப்பும் இருக்கிறதே' என்பது புரிந்த ஒரு அவஸ்தையான தெளிவு.

"ம்ம்... உனக்கும் இது ஒரு அதிர்ச்சிதான் மதி - அதில் உடனே நீ இங்கேத் தங்க முடிவெடுப்பான்னு நான் எதிர்பார்க்கக் கூடாதுதான்."



இப்போது அவளும் மென்மையாய் முறுவலித்தாள்.

"அத்தை - அதாவது உங்கம்மாவிற்கு இங்கே வாழ்வு சுலபமானதாய், சந்தோஷமாய் இல்லை... உனக்கு எவ்வளவு ஞாபகமிருக்குதோ... எனக்குத் தெரியலை..."

வான்மதிக்குத் தன் கனவு மட்டுமே ஞாபகம் வந்தது!

"அழைச்சதும் நீ இங்கே உடனே வந்ததில் எனக்கு சந்தோஷம். ஆனா..."

"சொல்லுங்க..."

"இது உன்... உனக்கான சொத்து. மாமா இதை உனக்காக வைத்துப் போயிருக்கார்... நீ இதையெல்லாம் அனுபவிக்கணும்றது அவரது ஆசை... அதாவது இங்கேயிருந்து.."

"உரிமை பற்றிப் பேசறீங்கன்னு நினைக்கறேன். ஒரு இடத்தில் நாம தங்க உரிமையைவிட உறவு முக்கியம். இது என்ன சொந்த ஊர், பிறந்த மண்ணுன்னு எல்லாம் நாம குறிப்பிடறது அந்த இடத்தைப் பற்றியில்லை..."

மேஜையிலிருந்த சின்ன உலக உருண்டையை ஆள்காட்டி விரலால் தடவி, உருட்டியபடி வான்மதி சொன்னதை உன்னிப்பாய் கேட்டிருந்தான் வசீகரன். உலர விட்ட கூந்தலும் அழகுமான ஒரு பெண், தன் கருத்துக்களை நின்று சொல்லும் அந்நிலை அவனை சற்று பிரமிக்கச் செய்திருந்தது.

"மனுஷங்களைத்தான் குறிப்பிடறோம். 'என் ஊர்'ன்னு உருகறோமே... அந்த மண்ணை ஒட்ட வைக்கும் ஈரம் மனுஷ உறவுக்குத்தானே உண்டு? அங்கு பழகிய பாசம்தானே நம்மை உருக வைக்குது. மற்றபடி மண்ணெல்லாம் ஒண்ணுதானே? இங்கே வெவ்வேறு ஊரின்

மண்ணைத் தனித்தனியே போட்டு வச்சா அடையாளம் காண முடியுமா என்ன - இது சென்னை மண், அது சேலத்து மண்ணுன்னு?''

வியப்பு நீங்காமலேயே தலையாட்டினான் -

''உண்மைதான் 'மண்'ணுன்னு நாம குறிப்பிட்டாலும் அது மனுஷரைத்தான் குறிக்குது.. அந்தப் பரிவை, உறவின் பிடிப்பை மாமா... நாங்க உனக்குத் தரத் தவறிட்டோம், மதி...''

உதட்டைக் கடித்தபடி தலை கவிழ்ந்தாள்.

''மாமா உன்னை 'மதி'ன்னே குறிப்பிட்டதால், நானும் உரிமையாய் அப்படி உன்னைக் கூப்பிடறேன்... மாமா அடிக்கடி உன்னைப் பற்றி பேசுவார்...''

உணர்வு பெருக்கால் தன் முகம் சிவந்ததை உணர்ந்தவள் தலையை நிமிர்த்தவேயில்லை.

''ஸாரி மதி - ஆண் உலகத்தை, உறவுகளை தட்டையாய்தான் பார்க்கிறான் - அதை அன்பால் உணர்ந்து உலகத்திற்கு மறுபக்கமும் உண்டென்பதை அவனுக்குத் தெரிவிப்பது பெண்தான் போலும்... அந்த அனுபவம் எங்களுக்கு வாய்க்கவில்லை... அதான்.''

''அப்பாவின் அறை எங்கே?''

பேச்சை மாற்றினாள்.

''பார்க்கலாம் - உங்கம்மாவின் அறையையும் - அவங்க வாசித்தது, எழுதினதுன்னு அத்தனையையும் மாமா கலைக்காமல் பத்திரப்படுத்த சொன்னாங்க - இருபது வருஷங்களாய் அந்தக் காகிதங்கள் மங்கி, மடிந்து போயிருக்கும்... ஆனாலும் உனக்கு வேண்டியதைப்



பத்திரப்படுத்திட்டு, மற்றதை ஒழிச்சிடலாம்... அதுவே உனக்கு இப்போதைக்குப் போதுமான வேலைன்னு நினைக்கறேன்...''

''நீங்க பிஸிதான் இல்லியா?''

ஆல்வேஸ். திடீர்னு நாம் போய் பேசி தீர்க்க வேண்டிய சச்சரவு அல்லது பேரம் இருக்கும்... மற்றபடி... நான் உன்னோடு தான் இருப்பேன்... அதாவது முதல் சில நாட்களாவது...!

இருவரின் முகங்களும் சற்று சிவந்து அசடு தட்டின!

''உங்க மூலம் அப்பாவை அறிஞ்சுக்க முடியும்... அதுல ஓரளவு நிம்மதி, திருப்தி எனக்கு..''

நான் சொல்ல வந்ததும் அதேதான் என்பதாய் அவனும் புன்னகைத்தான்.

''ம்ம்... நீ தேடி வந்ததும் என்னைத்தானே.''

இவளது புருவங்கள் சற்று மேலேறின -

''ஊர்ன்றது உறவுதான்னு அழகாய் சொன்னியே மதி... இப்ப உனக்குள்ள ஒரே உறவு நான்தானே?''

''ம்ம்...''

சாமர்த்தியசாலிதான் என்று உள்ளே ஒரு மெச்சல் எழுந்தது.

''முதல்ல சாப்பிடுங்களேன்'' அவன் பதிலுக்குக் காத்திராமல் உணவு மேஜையை நோக்கி நடந்தான் - பரிமாறி உதவினாள்.

''சாம்பார் ஆறிப்போச்சே... சொர்ணா..'' அழைத்து, சுட வைக்கக் கோரினாள் -

அவன் புதிதாய் ஒரு உயிரினத்தைப் பார்க்கும் ஒரு வயதுச் சிறுவனைப் போன்று இவளையே கவனித்திருந் தான்.

''பெண்களால் இந்த எஸ்டேட்டில் இருக்கவே முடியாதுங்கறது மாமாவின் முடிவு... ஆனால் அது தப்புன்னு தோணுது மதி... ஒரு பெண்ணிருந்தால் எங்க வாழ்வு சுவாரஸ்யப்பட்டிருக்கும்.''

''அப்பா அதற்குச் சொன்ன காரணம் என்ன?''

''கடைகள், சினிமா, கிளப்னு பொழுதுபோக்க இங்கே இடங்களில்லையே... அந்த உல்லாசங்கள்தான் பெண் களைக் காந்தமாய் இழுத்து இருத்தி வைக்கும்... அதில் லாமல் தவிச்சிடுவாங்கன்றது அவர் கணிப்பு.. காதல் கண் மூடித்தனமானது - கல்யாணம் கண்களை விரியத் திறந்து வைக்கும்... அப்போதான் முன்பு புரியாததெல்லாம் புரியும்னுவார்...''

''ஒஹோ... அதான்..''

''சொல்லு மதி.''

''நீங்க கல்யாணம் பண்ணிக்கலையா... இல்ல... செய்து குடும்பத்தை வேற்றூரில் விட்டு வச்சிருக்கீங்களா?''

கேட்டு விட்டாள்.

''ஒன்று ஆள்வதும் மற்றொன்று ஆளப்படுவதும் இயற்கையின் விதி - ஆக ஆண் ஆள்கிறான், பெண் ஆளப்படுகிறாள்.''

சம்பந்தமில்லாமல் வந்த சுடும் பதிலில் அவன் முகம் சிடுசிடுப்பதைக் கண்ட அவளது விழிகள் குறும்பாய் மின்னின -



''ஐயோ, இது நா சொன்னதில்லை மதி - உங்கப்பா கூட இல்லை - அரிஸ்டாட்டில்!''

இவளையும் மீறிச் சிரித்து விட்டாள்!

''ஆண்கள் இப்போ அப்படிப்பட்ட ஈகோவுடன் இருப்பதில்லை மதி - ஆனால் பெண்களும் சம்சார பந்தம்ன்றது கூண்டு அல்ல கூடுங்கறதை உணரணும். கூண்டுக்கும் கூடுக்குமான வித்தியாசம் தெரிஞ்சுட்டால் பிரச்சனையில்லை.''

ஆமோதிக்க தலையாட்டும் போதே இவன் தன் தாயைக் குற்றப்படுத்துகிறானோ என்ற நெருடல் கிளை விட்டது... அதே நேரம் போன் மணி விநோதமாய் அலற, அதை எடுத்தவன்.

''ஒரு நிமிஷம்'' என்று சொல்லி இவளிடமாய் நீட்டி னான். அதில் கேட்ட சுசீலாவின் குரல் இவளை மொத்த மாய் ஆக்கிரமித்துக் கொண்டது.

''யப்பா... முதலாளியம்மா எப்படியிருக்கே? குரல் சும்மா கணீருங்குது?''

''சும்மா... அப்பா போட்டோ பார்த்தேன் சுசீ... அழகாய் இருக்கார்.''

''பின்னே உன் அப்பாவாச்சே.. அம்மா?''

''இன்னும் பார்க்கலை..''

அம்மாவை மறந்து அப்பாவிலேயே மூழ்கியது போலொரு குற்ற முள் அவளை உறுத்தியது.

''இங்கே மும்முரமாய் மாப்பிள்ளைத் தேடும் படலம்... உன்னை ரொம்ப மிஸ் பண்றேன்..'' மூச்சு விடாமல் பேசினாள் சுசீலா.

''பெரியப்பாவின் முதுகு வலி தேவலையா? எல்லாரையும் நா அன்போடு விசாரிச்சதாய் சொல்லு சுசீ... அப்புறமாய் பேசறேன். வைக்கவா?''

வெளி அறையில் தெரிந்த தாமஸின் தலையை பார்த்தவள் வெளியே நடந்தாள் - இவளைப் பேச விடும் வகையில் வசீகரன் காணாமல் போயிருக்க, தாமஸ் சற்று தயங்கி தயங்கி எட்டிப் பார்த்த விதம் இவளை வெளியே இழுத்திருந்தது.

''கிளம்பிட்டீங்களா தாமஸ்... நன்றி - நீங்க துணையிருந்தால் நிம்மதியாய் வந்து சேர்ந்தேன்.''

''அதெல்லாம் நம்ப கடமைம்மா... வக்கீல் சொல்லிட்டார் - சின்ன எஜமானியம்மாளை நீதான் பத்திரமாய் கூட்டி வரணும்னு. வரட்டா? வந்து...''

அவர் எதற்குத் தயங்குகிறார் என்பது புரியாமல் நின்றாள்.

''நீங்க கொஞ்சம் ஜாக்ரதையாய் இருந்துக்கணும்.''

இவள் கேள்வி ஏதும் கேட்கும் முன்பே திரும்பிப் போய் விட்டார். எதற்கிந்த எச்சரிக்கை?

யாரைக் குறித்து அப்படி சொன்னார்?

தன்னிடம் பத்திரமாய் பாதுகாத்து வைக்கும்படி என்ன உண்டு இந்த உயிரைத் தவிர? இளக்காரமாய் ஒரு எண்ணம் உள்ளே ஓடிய போதே... விதிர்த்தது.

'உன் உயிர் ஜாக்ரதை' என்றுதான் சொன்னாரோ? அதனால்தான் இவள் முகம் பார்க்கப் பொறுக்காமல் அப்படி 'விருட்'டென விலகிப் போனாரோ தாமஸ்?

''அறைகளைப் பார்க்கப் போகலாமா?''



வசீகரன் அழைக்க இவள் கால்கள் அவனைத் தொடர்ந்தாலும் எண்ணங்களில் தேக்கம்...

யாரோ தன்னைக் கவனிப்பது போன்ற உணர்வு அவளை நிமிண்டியது... திரும்பிப் பார்த்தாள் -

எங்கும் இருண்ட மூலைகள்தான்... அதில் பதுங்கியிருக்கும் யாருடைய ஜோடிக் கண்கள் தன்னை இப்படிக் கொத்திப் பிடுங்குகின்றன?

தடுமாற்றத்துடன் தொடர்ந்தாள்.

## 12



கனவுகளற்ற ஆழ்ந்த தூக்கத்தின் திருப்தி அலாதி - புதிதாய் பிறந்தது போன்ற உற்சாகத்துடன் எழுந்தாள் வான்மதி.

மணி ஆறைத் தாண்டி விட்ட பின்னும் இருட்டாகவே இருந்தது - திரைச்சீலைகளை விலக்கி விட்டு, முகம் கழுவினவள் ஜன்னல் வழியே பாய்ந்த காலைக் காற்றை அனுபவித்தாள். கூந்தலைக் கோதி சிக்கெடுத்தவள் தன் அறையை ஒரு தரம் சுற்றி வந்தாள்.

முக்காலியில் பளபளவென்று பல பத்திரிகைகள் -

'உனக்குப் பொழுது போகணுமேன்னு வரவழைச்சேன்....' வசீகரனின் விளக்கம் ஞாபகம் வந்தது.

பெரியம்மா வீட்டிலும் பத்திரிகைகள் வருவதுண்டு எனினும் இவள் விச்ராந்தியாய் அமர்ந்து புரட்டவோ, வாசிக்கவோ மனம் வராது!

அது ஏதோ அதீத உரிமை எடுத்துக் கொள்வது போல உறுத்தும் - இங்கோ இவையெல்லாம் இவள் பிரித்து வாசிப்பதற்கென்றே...!

முதலில் சற்று புரட்டியவள், விஞ்ஞான பரிச்சயமுள்ள எழுத்தாளர் ஒருவரின் கனவு பற்றிய கட்டுரையில் ஆர்வமாய் அமிழ்ந்தாள் -

'மூளைக்கும் உறக்கம் உண்டு. நாம் தூங்க, மூளையும் ஓய்வு நிலைக்குப் போய் விடும் - ஆனால் ஏதும் அபாயம் வர, சட்டென விழித்துக் கொள்ளும் மூளை, மற்ற சமயங்களில் நினைவலைகளில் உள்ள நம் எண்ணங்களை எடுத்து தூசி தட்டிப் பார்க்கும் -

அதுதான் கனவுகள்...'

ஆக இவளது அந்தக் கனவு இவள் எண்ணங்களில் என்றோ பதிந்த சம்பவமா?

ஆனால் அதே கனவு ஏன் மறுபடி மறுபடியுமாய் வந்து தன்னை மூச்சுத் திணற செய்கிறது?

அடையாள அட்டை வைக்கப்பட்ட புத்தகம் திறக்கப்படும் போதெல்லாம் அதே பக்கம் விரிந்து கொள்வது போல மிக அழுத்தமாய் தன்னில் பதிந்த சம்பவம் ஒன்று, அழியாமல் மீண்டும் மீண்டும் தன் நினைவில் ஆடுகிறதோ?

ஆனால் நேற்றிரவு நிச்சலனமான உறக்கம்.

'ஏதும் தேவைன்னா இந்த மணிய அழுத்துங்கம்மா' என்று சொர்ணா சொல்லியிருந்தாலும் யாரையும் எழுப்ப மனமில்லை.

தானே கீழே சமையலறைக்குப் போய் ஒரு காபி கலந்து கொள்வது - என்று படியிறங்கியவளைப் பாதி வழியிலேயே சொர்ணம் பார்த்து விட்டாள்.



"எழுந்து நேரமாச்சாம்மா? மணி அடிக்கலையே நீங்க... காபி எடுத்தாரட்டே?"

சம்மதித்து மீண்டும் படியேறியவள் கூந்தலை சிக்கு நீக்கி முடிந்தாள். மேலுக்கு ஊற்றியபின் உடுத்த வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து கட்டிலில் பரத்தினாள் - அது அவள் மிக ஆர்வமாய் வாங்கிய நீல நிறப் புடவை. பளீர் வானத்திலிருந்து ஒரு துண்டை வெட்டியெடுத்து, அதில் பொடி வெள்ளை மலர்களைத் தூவி அழகுபடுத்தியது போன்ற நெசவில்.

'இந்த சேலைக்கு குண்டு முத்துக் கம்மலும் இந்த முத்து மாலையும் சேர்ந்தால் கச்சிதமாயிருக்கும்...' என்று சுசீலா சிலாகித்திருந்த நகையையும் எடுத்து பக்கத்தில் வைத்தாள் - இது அவளது வீட்டில் அவள் கழிக்கப் போகும் முதல் நாள் -

நேற்றே வந்திருந்தாள் எனினும் நேற்று மனப் படபடப்பில் எதையும் உள் வாங்கவில்லை - மாடிப்படியில் உயரமாய் நின்ற வசீகரனைக் கண்ட அச்சம் வேறு! படத்திலிருந்த அப்பாவின் அழகிய முகம், அவசரமாய் பார்த்த அவரது. அம்மாவின் அறைகள்... எல்லாவற்றையும் மறுபடி ஆற அமர கண்டு மனதில் பதித்துக் கொள்ள வேணும்.

குளித்ததும் முதல் வேலை அம்மாவின் அறைக்குப் போவதுதான். நேற்று வசீகரன் உடன் நின்றதால் அலமாரிகளை எல்லாம் திறந்து குடைய முடியவில்லை. மேஜை இழுப்பறைகளையும் மறக்காமல் பார்த்து விட வேணும். அதுவும் சீக்கிரமாய்.

ஏனெனில் காலை உணவிற்குப் பிறகு எஸ்டேட்டையும், தொழிலாளர்களையும் பார்க்கப் போக வேண்டுமென

வசீகரன் சொல்லியிருந்தான் - அவனைப் பற்றிய நினைப் பில் ஒரு புது மகிழ்வு பூப்பதை உணர்ந்தாள் - ஆச்சரிய மாய் இருந்தது - எஞ்சிய தன் ஒரே உறவினன் என்றா?

தான் சில நாட்கள் மட்டுமே இங்கிருப்பேன் என்றதும் அவன் முகமும் எப்படி ஏமாற்றத்தில் சுருங்கி விட்டது...

''மன்னிக்கணும்... அம்மைக்கு நாளை சீக்கிரமே காபி எடுத்தாரேன்...''

''பரவால்ல சொர்ணா... தாங்க்ஸ்.''

''அப்படியே வெந்நீரும் கொண்டு வரச் சொல்லிட் டேன்... அம்மா... நீங்க பெரியம்மை போல தாமசமாய் எழுந்திரிக்கும் நினைச்சோம்.''

''பெரியம்மான்னா - என்னுடைய அம்மாவா?''

''ம்ம்.'' சொர்ணா கழுத்தில்லாத தன் தலையை உருட்டினாள்.

''ஆனா நீ மூணு வருஷங்களாய்தானே இங்கே வேலை பார்க்கறே...''

''மூத்ததுக சொல்லக் கேட்டதுதன்னே...'' என்றபடி படுக்கையைத் தட்டி சீராக்கினாள் சொர்ணா. பெரிய பித்தளை அண்டாவில் வெந்நீரைப் பதமாய் விளாவியவள்,

''புதுத்துண்டு போட்டேம்மா?'' கேட்டாள்.

தான் சில நாட்களுக்கு முன்பு வரை இது போன்ற சேவை களை சுசீலாவிற்கு செய்தது ஞாபகம் வந்தது.

''ஷெல்ஃபில் தானே இருக்குது - நானே எடுத்துக்க றேன்.''

ஆனால் இவள் குளியலறைக்குள் போன போது புதுத் துண்டு இருந்தது.



ரசித்து காபியைப் பருகினாள்.

வெளியே காத்திருந்தாள் போலும் - காலி கோப்பையை எடுக்க வந்த சொர்ணா - ''மேலுக்கு எண்ணை தேச்சு விடட்டேம்மா?'' கேட்டாள்.

நேற்றிரவு படுக்கும் முன் பாதாம் எண்ணையை சருமத் திற்கு இதமாய் தேய்த்து விட்டுதான் உறங்கினாள் -

''இல்ல சொர்ணா - பதினைஞ்சு நிமிஷத்தில் ரெடி ஆயிடுவேன். பிறகு அம்மாவின் ரூமிற்குப் போகணும்.''

''நல்லதும்மா.''

குளியலையும் ரசித்தே செய்தவள், 'ஹம்' செய்தபடி புதுப் புடவையை உடுத்தலானாள் - முடித்து கண்ணாடி யில் பார்த்தவள் சற்று ஸ்தம்பித்துதான் போனாள் - பளபளவென மெருகேற்ற பொற்சிலை போல தெரியும் பிம்பம் தன்னுடையதா?

இந்த பளீர் நீலம் தனக்கு மிகப் பொருத்தம்தான் -

முத்துக்களையும் மாட்டிய பின் கூந்தலைத் தளரப் பின்னினாள் - புடவை மிக மெல்லியதாய் இருக்கிறதோ என்ற சந்தேகத்தில் இரு மடிப்பாய் வைத்து 'பின்' குத்தினாள். அம்மெல்லிய துணி தனது கொடியுடலை கச்சிதமாய் சுற்றி ஓடியதை முன்னும் பின்னுமாய் திரும்பி ரசித்தாள் -

சென்னையில் இதற்கெல்லாம் ஏது நேரம்?

வைரமணி பெரியம்மா புதிதாய் உடுத்தும் போதுகூட இப்படிதான் ஆளுயரக் கண்ணாடியின் முன்பு நிற்பார்கள். ஆனால் முகத்தில் கடுகைப் பொரிக்கலாம்!

'எத்தனை ஆயிரம் போட்டு எடுத்தாலும் இப்போதுள்ள புடவைங்க படியாமல் நிற்கறதைப் பாரேன் - ரவிக்கையைய

யும் அலங்கோலமாத் தச்சிருக்கான் அந்தப் படுபாவி டெய்லர். போனதரம் சதையை இறுக்கிப் பிடிச்சதுன்னால் இப்ப கழுத்து பக்கம் லொடலொடங்குது - கடைசி பட்டனைப் போல முடியலை... சச்... அவன்ட்ட போய் கொடுத்து சரியா ஆல்டர் பண்ணிட்டு வாடீ...'

சுசீலா சிணுங்குவாள் - 'போங்கம்மா - மதிதானே வழக்கமாய் அவர்ட்ட கொடுக்க, வாங்க போவா? அவனே போய் சொல்லட்டும் - அந்த டெய்லர் ஒரு சிடுமூஞ்சி.'

ஆக வான்மதிதான் அந்த சிடுமூஞ்சியின் முன் போய் நின்று பெரியம்மாவின் குறைகளைக் கொட்டிக் கவிழ்க்க வேணும்!

கத்தரித்துக் கொண்டிருக்கும் வேலையை முடித்து விட்டு நிமிர்பவர், 'இதப் பாரும்மா - ரவிக்கை ஒரு உடம்புல கச்சிதமாய் பொருந்தணும்னா முதல்ல உடம்பு கச்சிதமாயிருக்கணும்! நிமிஷத்திற்கு நிமிஷம் வீங்கற உடம்புக்கு அந்த மயனே வந்து தச்சாலும் திருப்தியாய் வராது - புரியுதா நான் சொல்றது?' - என்றபடி அடுத்தத் துணியை எடுத்து வைத்து வெட்ட ஆரம்பித்து விடுவார்!

அவர் சொன்னதைப் பெரியம்மாவிடம் சொல்லத் துணியாவிட்டாலும் இப்போது நம்பத்தான் தோன்றுகிறது!

தன் மீது படிந்தாற்போலிருந்த சேலை சிறிதும் இழுக்கவோ, பிடிக்கவோ இல்லையே - சேலையும்தான் ஒவ்வொரு வளைவிலும் எத்தனை வாகாய் வடிந்திருந்தது?

இனியும் தொடர்ந்து கண்ணாடியின் முன் நின்று தன்னையே மெச்சிக் கொள்வது வான்மதிக்கு அதிகப்படி அலட்டலாய் தோன்ற, சிறு வெட்கச் சிரிப்புடன் அறைக் கதவைப் பூட்டிவிட்டு நடந்தாள். முன்தினம் கவனமாய்



தாயின் அறைக்குப் போகும் வழியை புத்தியில் பதித்திருந்தும் சற்று தடுமாறினாள் - ப வடிவத்தில் திரும்பி, சில படிகளை ஏறியதும் அந்தக் கதவு தென்பட்டது - கதவு சாதாரணமானதுதான் என்றாலும் விசித்திரமான சிங்க முகப் பிடியுடனான கைப்பிடி - இதுவும் அவள் மனதில் சில ஞாபகங்களைக் கிளறினவோ...?

'அத்தைக்கு... அதாவது உங்க அம்மா சிம்ம ராசிங்கறதால் இதைப் பொருத்தினதாய் சொன்னார் மாமா...'

ஆக இவளது தந்தை தன் மனைவியைப் பற்றி பேசியிருக்கிறார்..... மனைவிக்காய் நுட்பமான யோசனையுடன் சிலவற்றை செய்ததும் உண்டு.

'கதவைப் பூட்டாமல் வெறுமே சாத்தி வைக்கிறேன் மதி... நீ எப்போது வேணுமானாலும் வந்து பார்க்க வசதியாய்....'

வசீகரன் சொல்லியிருந்ததால் கதவை அழுத்தித் திறந்தாள்.

அறைக்குள் இன்னும் இருட்டுதான் -

இப்போது கட்டிட நிபுணர்கள் அறைக்குள் போதுமான காற்றும், ஒளியும் வருவதில் கவனம் செலுத்துகிறார்கள். இது மிக முன்பு எழுப்பப்பட்ட கட்டிடம் - மனம் போன போக்கில்,

'இந்த இடம் சும்மாத்தானே கிடக்குது - மேலும் ரெண்டு பக்க சுவர் எழுப்பினால் பயன்படுமே' என்ற ரீதியில் எழும்பி இருட்டுக் குகை போலிருந்தது அந்த அறை.

அதிலும் மருந்தைக் கணக்காய் ஒரே தேக்கரண்டிதான் குடிக்க வேணும் என்பது போல, வளியும் ஒளியும் இவ்வளவு நுழைந்தால் போதுமென்ற ரீதியில் குறுகிய

ஜன்னல்கள்தான். ஆனாலும் குளிர்ச்சிக்குக் குறைவில்லை.

ஜன்னல்களை விரித்து விட்டாள்.

பெருக்கித் துடைத்த பின்பும் இன்னும் மக்கின நெடி மிச்சமிருந்தது. அன்றாடம் மனிதர்கள் புழங்கினால் மட்டுமே தொலையும் வெடி அது. ஆங்கில 'T' அமைப்பிலிருந்தது அறை. நீண்ட உள்பகுதியில் ஒடுங்கிய மூன்று அலமாரிகள் வரிசையாய்.

விளக்கேற்றி அதில் ஒன்றைத் திறக்க, அந்துருண்டையின் வாடை மூக்கைத் துளைக்க, தும்மினாள்.

கைக்குட்டையால் மூக்கைத் துடைத்தபடி, மேலும் ஆராய்ந்தவளுக்கு பின்புறமிருந்து யாரோ தன்னை ஆராய்வது போலொரு சங்கடம்!

ஆனால் திரும்பிப் பார்ப்பது சிறு பிள்ளைத்தனமாய்பட, பார்வையை அலமாரியில் வரிசையாய் நின்ற புத்தகங்களில் ஓட விட்டாள். அனைத்தும் சற்று மட்டரகமான காதல் நவீனங்கள்தான் - காதல் கவிதைகள் என்ற பெயரில் பல பிதற்றல் புத்தகங்களும்.

அடுத்த அலமாரியில் ஆல்பம் போலிருந்த கனத்த தொகுப்புகள் - அழகிய சில இயற்கை காட்சிகள் அதில் வெட்டி ஒட்டப்பட்டிருந்தாலும் பெரும்பாலும் வெள்ளித்திரைப் பிரபலங்களும் காட்சிகளுந்தான் - கறுப்பு வெள்ளைப் படங்களிலுமே மிகக் கவர்ச்சியாய் தோன்றிய ஒப்பனை முகங்கள் - வாசித்த பத்திரிகைகளில் தன்னை ஈர்த்த படங்களை, செய்திகளை வெட்டி ஒட்டி சேகரிக்கப்பட்டிருந்தன - அம்மா அத்தனைப் பத்திரிகைகளையும் வாசித்திருக்க வேண்டும் - அதனால்தான் தனக்கும் அவற்றை வசீகரன் வரவழைத்திருக்கிறான்....



மீண்டும் முதுகு துளைபடுவது போன்றொரு விசித்திர உணர்வு. திரும்பிப் பார்க்க அச்சமாயிருந்தது....

யாராய் இருக்கும்?

ஒரு வேளை... தாயின் ஆன்மாவே தன்னை மேலுலகிலிருந்து இப்படி கவனிக்கிறதோ?

நிம்மதி இன்றி அலைந்த அம்மாவின் உயிர்ச் சுடர் இந்த அறையில் வீட்டில் அடைக்கலமாகி நிற்கிறதோ?

இயல்பாய் திரும்புவது போல திரும்பினாள்....

இல்லை... பின்னால் யாருமில்லை -

ஆனால் அறையின் நிழல் பகுதியில் சின்ன அசைவு தெரிந்ததோ?

முகம் பார்க்கும் வட்டக் கண்ணாடியின் கீழேயிருந்த இரு இழுப்பறைகளை இழுக்க முயன்றாள் - முடியவில்லை.

அந்நேரம் வெளியே காலடி ஓசை கேட்க, வந்தது சொர்ணா.

''சாப்பிடலாமேம்மா - மணியாச்சே...''

''அவர்... வந்தாச்சா?''

''ஆமம்மா - உங்களுக்குப் பசிக்குமோன்னு சின்னவர் கீழே வந்தாச்சு... அம்மாக்கு நீல நிறம் ரொம்ப எடுப்பாயிட்டு உண்டு....''

''தாங்க்ஸ்...''

''எஸ்டேட் ஆட்களுக்கு உங்களைப் பார்க்க ரொம்ப ஆசைம்மா..''

''ம்ம்.''

''பார்த்ததும் அத்தனை பேரும் பிரமிச்க போகும்.''

''என்?'' கேட்டவளுக்குத் தன்னைப் பார்த்ததும் பேயறைந்தாற்போல நின்ற தங்கத்தின் முகம் ஞாபகத் திற்கு வந்தது -

''ரொம்ப சௌந்தர்யவதி - நீங்க...''

''ஓ... நா அப்படியே அம்மாவின் ஜாடைன்னு சொல் வேன்னு நினைச்சேன்.'' சிறு கூச்சத்துடன் புன்னகைத் தாள்.

''ஆனா பெரியம்மாளை அறிஞ்சவங்க இங்கே இப்ப சொற்பந்தன்னேயம்மா?''

''இங்கே அம்மாவின் படம் ஏதும் இல்லையே சொன்னா...''

''தெரியலியேம்மா - விசாரிக்கட்டே?''

''இல்லை.. நானே அவர்ட்ட கேட்டுக்கறேன்.''

வசீகரனிடம் கேட்பதே முறையாய் பட்டது. இங்கு தங்கும் பத்து நாட்களில் வேண்டிய விவரங்களை நேரே அவனிடமே கேட்டு விடுவது - அவன் முதுகிற்குப் பின் னால் இவள் ஏதும் செய்வதாய் அவன் நினைத்து விடக் கூடாது.

'முதுகிற்குப் பின்னால் ஒரே ஒரு காரியம்தான் செய்ய வேணும் - அது முதுகைத் தட்டிக் கொடுப்பதாக இருக் கட்டும்' என்று ஆஸ்கார் ஒய்ல்ட் தெரியாமலேயா சொல்லியிருப்பார்?

அவசரமாய் உணவு அறைக்குப் போக, அங்கு இவளை வரவேற்ற அவனது பார்வையிலிருந்த பாராட்டு மினு மினுப்பு அவளை உற்சாகப்படுத்தியது. உணவை முடித்து அவனோடு ஜீப்பில் அருகே அமர்ந்து போனதும் கூட அவளுக்குப் பிடித்திருந்தது.



எஸ்டேட்டில் விளைவிப்பது என்ன, அதை எப்படி விற்கிறார்கள் என்றெல்லாம் எளிமையும் தெளிவுமாய் அவன் விளக்கியதை இவள் கேட்டிருந்தாலும், அவை இவளது புத்தியில் பதிந்தது என்பதற்கில்லை. அவனது குரலை, அதன் தொனியை, மென்மையை ஆராய்ந்து அதில் மயங்கிக் கிடந்தது -

''தொழிலாளிகள் உனக்காய் காத்து நிற்கறாங்க - மதி'' என்றவன் சொல்லவும்தான் இவளது கவனம் சற்றுக் கலைந்தது.

ஜீப்பிற்காய் வழிவிட்ட கும்பலின் நடுவேயிருந்து இறங்கி நின்றவளுக்கு கூச்சமாகவே இருந்தது - அத் தனை ஜோடிக் கண்களும் தன்னைத் துருவுவது புரிந்த கூச்சம். ஆனாலும் தன்னைச் சுற்றிலுமிருந்த முகங்களை - அவற்றின் கலவையான உணர்வுகளைக் கணிக்க முயன்றாள் -

கனிவும் காத்திருப்புமாய் சில முகங்கள் -

பலவற்றில் ஒரு வித அலட்சியம் - வேறு சிலதில் 'வந்து விட்டாளா 'இவள்' என்பது போல ஒரு கசப்பு கூட தெரிந்தது.

வான்மதிக்கு காரத்தோடு இனிப்புக் கலந்த ருசி பிடிக்கும் -

காரச் சட்னியில் துளி சீனியைத் தூவி ருசிப்பாள் - இதுவும் அதே போலொரு உணர்வுதான் - காரத்தின் நடுவே தலை நீட்டும் இனிப்பு போல, பலரின் காட் டத்தினூடே சிலரின் கருணை! வயதான ஒருவர் நடுங்கும் குரலில் சொன்னார் -

''அப்படியே உங்கம்மாவ உரிச்சு வந்திருக்கீங்கம்மா... ஐயாவ, பெரியவரை அப்பப்ப வந்து ஒரு எட்டு பார்த்

துட்டுப் போயிருந்தால் அவுங்க எத்தனை சந்தோஷப் பட்டிருப்பாங்க...''

உரிமையான குற்றச்சாட்டு.

'அந்த ஐயா உயிரோடு இருந்ததே எனக்குத் தெரியாதே' என்று தான் சொல்ல முடியாதே - தான் நற்பெயர் சம்பாதிப்பதற்காய் தந்தையின் பெயரை இழிவுபடுத்த முடியுமா?

'அடடா, பெரியவர் வீம்பு பிடிச்சில்ல இருந்திருக்கார். பெத்த மகளைப் பற்றி அறிஞ்சும் மூச்சு விடாத ஏன் இருக்கணுங்கறேன்?' என்று இவர்கள் குறை சொல்ல இடம் தராமல்,

'அப்படி வந்து பார்க்க எனக்குத்தான் கொடுத்து வைக்கலை' என்றாள் மென்மையாய்.

அருமையான சீதோஷணம் என்பதால் மதியம் வரைச் சுற்றியும் அலுப்பாயில்லை. கொண்டு வந்திருந்த பழ ரசத்தை வேறு அவ்வப்போது இவளுக்கு ஊற்றி நீட்டினான் வசீகரன் -

இத்தனைப் பரபரப்பில் அவள் அதை மறந்தே போனாள், ஆனால் வீடு திரும்பவும் அந்த உணர்வு மறுபடி அவளைப் பற்றி ஏறிக் கொண்டது.

'நிச்சயமாய் தன்னை யாரோ வேவு பார்க்கிறார்கள் - இது பிரமையில்லை - அது யார், எதற்கு என்பதை இன்றே கண்டு பிடித்தாக வேண்டும்' என்றொரு பிடிவாதம், பயத்தைப் பின் தள்ளிவிட்டு முன்னே வந்து நெஞ்சு நிமிர்த்தியது...



# 13



பெயருக்கு ஏற்றாற் போல இரண்டு நாட்களிலேயே அவன் வான்மதியை வசீகரித்துதான் விட்டான் -

அன்று காலை வசீகரன் யாரிடமோ பேசிக் கொண்டிருக்க, பேச்சு இவள் காதிலும் விழுந்தது -

'அதாருங்க கண்டது? பொம்பளை மனசை ஆழங் காண முடியுமா? அதைப் புரிஞ்சுக்க முடியாதுங்களே' என்று யாரோ புலம்ப வசீகரன் நறுக்கென்று சொன்ன பதில் இவளது கருத்தோடு அப்படியே ஒத்துப் போனது -

'மனசுன்னாலே அது மறைவானதுதான் - இதில் ஆண், பெண்ணுன்னு பிரிச்சு பேசி பயனில்லை - என் மனசில் என்னங்கறதை உங்களால் என் விருப்பமில்லாமல் தெரிஞ்சுக்கவே முடியாதே...' இப்படி சொல்லிவிட்டு சில நிமிடங்களில் வீட்டிற்குள் வந்தவனை வாய்விட்டே பாராட்டி விட்டாள்!

''ஸாரி - கேட்கணும்னு கவனிக்கலை - ஆனா நீங்க பேசினது காதில் விழுந்தது - நான் அப்படியே உங்க கட்சி'' - எனவும் அவன் முகம் மலர்ந்தது.

ஆனால் அன்று மாலையே அவர்களுக்கிடையே மலர்ந்து கொண்டிருந்த 'நட்பூ' வெட்டுப்பட்டது.

''சில தொழிலாளர் குடும்பங்களை இன்று சாயங்காலமாய் போய் சந்திக்கலாமா மதி?''

என்றவன் கேட்க, இதமாகவே மறுத்தாள் -

"அம்மா அறையை உருட்டலாம்னு இருக்கேன் -"

"ரைட் - காபி கொட்டை விற்பனைக்குத் தயாராய் இருக்குது - நான் டவுன் வரை அது சம்பந்தமாய் போய்ட்டு வரேன். உனக்கு வெளியே போகாமல் போர் அடிக்குமோன்னுதான்... அடைஞ்சே கிடக்க முடியாதே..."

"ஒரு மாற்றம் வேணும்னு பட்டால் வெளியே ஒரு நடை சுற்றி வந்தால் போச்சு..."

அவன் முகம் 'சட்'டென கடுமையானது.

அவன் கோபப்படும்படி என்ன சொன்னோம்?

நல்ல உயரத்திற்கேற்ற ஆளுமை, கம்பீர முகம் என்று அவனை வியந்து ரசித்திருந்தவள் அவள் - செதுக்கி விட்ட நாசியும் முகவாயும் தவிர அவனது கண்களின் கவர்ச்சி தனி - அதன் நீரோட்டத்தில் கனிவு கலந்திருக்கும். ஆனால் சரேலென இழுபட்டு விலகிய முகமூடி போல அந்தக் கருணை நொடியில் கடுமையானதை ஒரு திடுக்கிடலுடன் பார்த்திருந்தாள் -

அவளது திகைப்பும் கேள்வியும் அவனை எட்டி விட்டன போலும் -

"நீ தனியே எங்கும் போக வேண்டாம் வான்மதி."

இவளது பெயரை முழுமையாய் அவன் முதன்முறையாய் சொன்னான் - அத்தனை நாராசமாய் தன் பெயரை அதுவரை அவள் கேட்டதில்லை!

தவிர இதென்ன உத்தரவு?

இந்த வீட்டில் உறவும் உரிமையும் கிடைத்ததால்தான் தன் தோற்றம் கூட மெருகேறி சோபிப்பதாய் நினைத்தாளே - இங்கும் இவளுக்கு விதித்தது அடிமை வாழ்வு தானா?



சொன்னபடி இயங்க வேண்டிய ஒரு இயந்திரம்தானா?

துக்கமும் கோபமுமாய் அவள் முகத்தை சிவக்க வைத்தன -

"நீ கவனமாய் இருந்துக்கணும் வான்மதி. இது உன் சொத்துதான் - ஆனால் இங்கு நீ புதியவள் - இங்குள்ள நிலைமை உனக்குப் புரிபட நாளாகும். ஆக ஜாக்கிரதையாய் இருக்கறதில் தப்பில்லை - நீச்சல் தெரியாதவன் ஆற்றுக்குள் இறங்க வேண்டாம்ங்கறதில்லை? அது போல நான் சொல்றதைப் புரிஞ்சுக்கணும் நீ..."

"எனக்கு நீந்தத் தெரியக் கூடும்னு ஏன் உங்களுக்குத் தோணலை? எந்த சந்தர்ப்பத்தையும் சமாளிக்கக் கூடியவளாய்தான் நான் வளர்ந்தேன்."

"இது புது ஆறு... இங்கே எங்கெங்கே சுழலும் ஆபத்தும் இருக்குங்கறது புரியும் வரை நிதானமாய்... அதாவது நீச்சலடிக்காமல் இருக்கலாமே?"

இப்போது அவன் முகத்தில் பழைய கடுமை குறைந்திருந்தாலும் கண்டிப்பு இருக்கவே செய்தது.

தாமஸூம் தன்னை எச்சரித்தது அவள் நினைவிற்கு வந்தது - எதைக் குறித்து எச்சரித்தார் தாமஸ் - வசீகரனைக் குறித்தோ என்று முன்பு ஒரு சின்ன சந்தேகம் - இப்போது வசீகரனின் எச்சரிப்பு யாரைக் குறித்து?

ஒரு நடை சுற்றி வர முடியாதபடி இங்கென்ன ஆபத்துண்டு?

"இப்ப அம்மாவின் அறைக்குப் போகலாமா... இல்லை அதற்கும் ஏதும் தடையுண்டா?"

"ஆட்சேபணையில்லை..." என்றவன் அமைதியாய் நின்று வான்மதி படபடப்புடன் போவதைப் பார்த்திருந்தான்.

தாயின் அறைக்குள் புகுந்தவன் முதல் வேலையாய் அறைக் கதவைத் தாளிட்டாள். யாரையும் பார்க்கும், பேசும் மனநிலையில் இல்லை அவள்.

போன முறை இழுபட முரண்டிய இழுப்பறையை வலுவுடன் முயன்றாள் - விரல் சிவந்த முயற்சியில் 'சட்'டென ஒரு உறுமலுடன் அது உருவ, அறையின் மற்றொரு மூலையிலிருந்து ஒரு சிறு சத்தம் கேட்டது - இரு ஒலிகளும் ஒன்று மற்றொன்றில் ஒன்றி விட்டாலும் நிச்சயமாய் அது வேறு சத்தம் என்பது புரிய, அறையின் நடுவே வந்து நின்றாள். இன்னும் முழுக்க இருட்டாததால் அனைத்து மின் விளக்குகளையும் அவள் ஒளிர விடவில்லை. ஆக அறையின் மூலைகளை இருள் மூடியிருந்தது -

அங்கு யாரேனும் பதுங்கியிருக்கக் கூடும் -

அங்கிருந்து யாரோ மூச்சிழைப்பது போல கேட்பது நிஜமா, பிரமையா?

பாம்பின் சன்ன சீறலா இது - அவளது கனவு, படமாய் விரிந்தது -

இருளும் ஈரமுமான ஒரு குகைக்குள் தான் நகங்கி நகர்வது போன்ற அருவெறுப்பான அக்கனவு... இங்கு அவளை விழுங்க அந்த மலைப்பாம்பு காத்து கிடக்கிறதோ? அறைக் கதவு தாளிடப்பட்டது ஞாபகம் வர, மதியின் கால்கள் கதவை நோக்கி பின்னடைந்தன. நெருங்கியதும் அவசரமாய் கதவைத் திறந்தாள் - வெளியேயிருந்து வெளிச்சம் அறையை நிரப்பி விட வில்லை ஆனால் அவளுள் தைரியம் நிரம்பிக் கொண்டது.

ஆக வெளியே ஓடாமல் அந்த இருட்டு மூலையை ஆராய்ந்தாள் ஒரு சின்ன மேஜை மூலையில் ஓலையால்



பின்னப்பட்ட பெரிய வண்ணான் கூடையும் இருப்பது வரிவடிவமாய் புலனானது -

தப்பி விடுமளவில் வாசலின் அருகே நின்று கொண்டு அதட்டினாள் -

"உள்ளே... மூலையில் பதுங்கியிருக்கறது யாராயிருந்தாலும் சரி - இப்ப வெளியே வந்தாகணும்..."

குரல் மிக உயரவில்லை எனினும் உத்தரவின் தொனி அதிலிருந்தது - "வரலைன்னா அறைக் கதவை பூட்டிட்டு போயிடுவேன் - வரும்போது நாலு பேரை கம்பு கழியோட கூட்டிட்டு வருவேன்... அப்போக் கிடைக்கிற அடியைத் தாங்க முடியும்னா நீ அங்கியே இரு..."

யாரிடம் பேசுகிறோம் என்றே தெரியாத மிரட்டல்!

கூடை அசைந்தது!

மேஜைக்கும் அதற்கும் நடுவே இருந்த இடைவெளி வழியே அந்த உருவம் எழுந்து வர, அயர்ந்து போனாள் வான்மதி!

ஆக தன்னை யாரோ கண்காணிப்பதாய் தோன்றியது வெற்று பிரமை அல்ல! மூச்சிழுத்து இறுக்கியவளின் கால்கள் பின்னோக்கி, அதாவது அறையின் வாசலை நோக்கி நகர்ந்தன -

"சீக்கிரம் வெளியே வா" - கால் முட்டுகள் தளர்ந்தாலும் உதடு துணிந்து அதட்டியது!

கத்தியோடு கம்போடு அவன் பாய்ந்து தாக்கினால்... என்ற பீதியில் ஒடுங்கியவள் வந்து நின்ற உருவத்தைக் கண்டு மலைத்து நின்றாள் -

வியர்வையில் நனைந்த சட்டையும் தலைமுடியுமாய் நின்றவனை சிறுவன் என முடியாது - விவரமானவனாயும் தோன்றவில்லை.

முட்டை விழிகளும் சற்றே திறந்திருந்த உதடுகளும் அவனுக்கு ஒரு அசட்டுக் களையைத் தந்திருந்தன - கும்பிய தலை அவனை பரிதாபமாகவும் காட்டியது.

"நா... நா போயிடறேன்."

"நீ சோமு குட்டிதானே?"

முட்டை விழிகள் தெறித்துப் பிதுங்கின.

"ஐயோ... ஐயையோ..." குழறினான்.

"என்ன?"

"உங்களுக்கும் என்னைத் தெரியுமா?"

"உங்களுக்கும்னா... உனக்கு என்னை எப்படி தெரியும்?" சற்று முன்பு பொங்கிய படபடப்பு அடங்கிக் கொண்டிருக்க, வினவினாள்.

"படத்துல பாத்திருக்கேன்ல?"

"எந்தப் படம்?"

"இங்கன பூட்டி வச்சிருக்க படத்துல."

"நான் தந்து விட்ட பன், சட்டையெல்லாம் கிடைச்சதா?"

"ஆங்... அது எங்கம்மா கொடுத்து விட்டது..."

"ஆமா. உங்க லாட்ஜில நான் தங்கினப்போ உங்கம்மா என் மூலம் தந்து விட்டாங்க..."

"சொர்ணாக்கா தந்தது..." தலையைச் சரித்து சந்தேகப்பட்டான்.

"அவங்ககிட்ட தந்து உன்னிடம் சேர்ப்பிக்க சொன்னேன் - உன்னை பார்த்து எனக்குத் தெரியாதில்லையா..."



"இப்ப எப்படி தெரிஞ்சது?"

தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொள்வது போல அவனது குச்சித் தோள்கள் குலுங்கின!

'சற்று புத்திக் குறைந்தவன் என்பது உன்னைப் பார்த்ததும் புரிந்து போனது' என்றா சொல்ல முடியும்? ஆக.

"எனக்கு அதெல்லாம் தெரியும்" என்றாள் அமர்த்தலாய்!

"நீங்க மோகினிப் பிசாசுங்கறதாலயா?"

சற்று திடுக்கிட்டுப் போனாள் - "என்னது பிசாசா?"

"அந்தப் படத்துல உள்ளவக செத்துப் போயாச்சாம் - இப்ப வந்து நடமாடுறீக... பாக்கவும் அளகா இருக்கீங்க - அப்ப மோகினிதானே?"

இந்த விளக்கம் அவளுக்கு ஆசுவாசத்தோடு சிரிப்பையும் சேர்த்து கொண்டு வந்தது -

"அப்படி யார் சோமு சொன்னா? - இப்படி வியர்த்துப் போனியே.. இப்படி பேனின் கீழே வந்து நில்லு... வா..."

கையைத் தூக்கி சட்டையிலேயே தன் முகத்தைத் துடைத்தபடி "நா போறேன்" என்றான்.

"இரு போகலாம் - ஏதோ படமிருக்குன்னு சொன்னியே - அது எங்கே?"

"எது - உங்கப் படமா?"

"அது நானில்லை - எங்க அம்மா."

"பொய்யி..."

"நிஜந்தான்டா சோமு குட்டி - பெத்தவங்க ஜாடையிலதானே பிள்ளைங்க இருப்பாங்க?"

"அதுவும் பொய்யி - அப்ப நா ஏன் மைக் மண்டையனாப் பொறந்தேன்? எங்கம்மா, அப்பா இப்படியில்லையே..."

மெலிந்த அவன் கைகள் அவனது பருத்தத் தலையைத் தடவ, இவளுள் இளகியது.

"சில பிள்ளைகள் ஸ்பெஷலாய்... அதாவது வித்தியாசமாய் பிறக்க, மற்றவங்கல்லாம் சாதாரணமாய் பெத்தவங்களைக் கொண்டு பிறப்பாங்க -"

"ஓஹோ - அப்ப அது உங்க அம்மாளா?"

"ஆமா - இப்ப காட்டறியா?"

"அதெல்லாம் எனக்கு மட்டுந்தான் தெரியும் - வேற யாருக்கும் தெரியாது..." என்றவன் கண்ணாடி மேஜையின் கீழே முழந்தாலிட்டு குனிந்தான் - கைவிட்டு எதையோ துழாவி பின் இழுக்க, கீழ்தட்டு திறந்தது - அங்கிருந்த பிரேமிட்ட படங்களை எடுத்து வான்மதியிடம் தந்தான் - கரும்புள்ளி விழுந்து பழுப்பேறிய படம்தான் -

ஆனால் அதிலிருந்த முகத்தின் அழகு அபாரமாய் இருந்தது.

அம்மாவின் சில படங்களை மகள் பார்த்ததுண்டுதான். ஆனால் முகத்தின் எடுப்பும் வனப்பும் இத்தனைத் தெளிவாய் அதில் தெரிந்ததில்லை - சில பேரோடு ஒருத்தியாய் ஓரிரு அங்குல உயரத்திலுள்ள நிழற்படத்தில் அவ்வளவு தானே பதிவாகியிருக்கும்? இது கண்ணிமைகளும் தெளிவாய் தெரியும்படியான படம் -

உதட்டின் மோகன வளைவும், மோவாயின் நடுவிலுள்ள சிறு குழியும், கன்னங்களின் மழுமழுப்பும் கூட பதிவாகி இருந்தன -



மாங்காய் மாலை அலங்கரித்த நீண்ட சங்கு கழுத்தை ஒரு வித ஒய்யாரத்துடன் சரித்து காமராவை நோக்கியபடி அம்மா...

இவளுக்குத் தொண்டை அடைத்தது...

அன்பான அம்மா, உக்கிரமான தாய்கோழியாய் தன்னைப் பாதுகாத்த தன் அம்மா. விரல்கள் இன்னுமொரு படம் இருப்பதை உணர்ந்து அதை உருவின அது அம்மாவுடையதல்ல.

"இது யார் சோமு குட்டி?"

"அது... இந்தம்மாளோட அக்கா."

"அக்காவா... அப்படி யாரும் கிடையாதே..." சொல்லி முடிக்கும் முன்பே புரிந்தது - இது அப்பாவின் மூத்த சம்சாரம்! அம்மாவின் துடிப்பும் எடுப்பும் இல்லையென்றாலும் நிதானமான ஒரு அழகுதான் அவர்களும்.

"இது அக்கான்னு உனக்கு யார் சொன்னா, சோமு?"

"ம்ம்... வந்து..."

"சொல்லேன்."

"கூனக் கிழவிதான் சொல்லுச்சு. இங்கன யாருக்குமே தெரியலை இது யாருன்னு... அது கொள்ளை நாளாய் இங்கன இருக்கறதால அங்கன கொண்டு போயி, படத்தை காட்டிக் கேட்டேனா...

'எங்கேருந்துடா இதெல்லாம் திருடின? கொண்டு போயி அங்கியே வைடா ராஸ்கோலு'ன்னு திட்டுச்சா துடைச்சு இங்கனயே வச்சுட்டேன்."

"ஓஹோ... எப்படி அந்த கீழ்தட்டைத் திறந்தே சோமு?"

''வின்னியம்மாளுக்குக் குனிய முடியாதா? என்னையத் தான் தரை துடைக்க சொல்வாக... கீழே கொம்பு கணக்கா தட்டுப்படும் - அதத் திருகினா திறந்துகிச்சு...'' கண்கள் உருள சொன்னான்.

''நல்ல பையன்டா... இதை நானே இனி வச்சுக்கறேன்.''

''அப்ப இது?''

''எது?''

குனிந்து துழாவியவன் அரக்கு நிற பழைய டைரி ஒன்றை எடுத்துத் தந்தான் -

ஆவலுடன் அதை வாங்கியவள், பரபரவென்று புரட்டினாள் -

இது அம்மாவின் கையெழுத்துதானா என்பதெல்லாம் தெரியாது - ஆனால் முதல் பக்கத்தில் 'சந்திரா ஜீவா னந்தம்' என்ற அதே உருண்டை எழுத்துக்கள் - உள்ளே என்னென்ன பதிவாகியிருக்கும்?

அம்மாவின் அனுபவங்கள்... பிற்காலத்தில் மகளிடம் பகிரக் கூடிய அவளது வாழ்வின் சம்பவங்கள்...?

''ரொம்ப நன்றி சோமு குட்டி'' நிஜமான நன்றி பெருக் குடன் அவனது மெல்லிய பலவீனமான கைகளைப் பற்றிக் குலுக்கினாள் -

''உனக்கு சாக்லெட்ஸ் பிடிக்குமா?''

''அப்படீன்னா?''

''வந்து... அம்மா அனுப்பற பட்டர் பன்னை விட ரொம்ப இனிப்பாயிருக்கும்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' - ஒத்துக்கொண்ட வனின் கண்களில் ஆசையின் ஆர்வ ஒளி.



''நிறைய வாங்கித் தரேன் சோமு... நீ இல்லைன்னா இதெல்லாம் இத்தனை சுலபமாய் என் கைக்கு வந்திருக் காது...''

''திரும்ப பத்திரமாய் உள்ள வச்சிடணும்.''

''இல்லை இத்தனை காலம் இது காத்திருந்தது என் கைக்கு வரத்தான். நான்... இனி எங்கிட்ட பத்திரமாய் இருக்கும் - சரியா?''

அறையின் விளக்கை அணைத்து பூட்டியவள் தன் புதுச் சேலையினாலேயே தாயின் படத்தைத் துடைத்து அதைத் தன் மார்போடு அணைத்தபடி நடந்தாள்.

உள்ளே ஆர்வமும் ஆனந்தமுமாய் திமிறின -

நடுங்கும் விரல்களால் அந்த டைரியைத் தடவினாள் -

அதில் தான் அறிய விரும்பாத சில தகவல்களும் இருக்கக் கூடும் என்பதேத் தோன்றவில்லை வான் மதிக்கு...!

## 14



அதை கடை என்று சொல்ல முடியாது.

சைக்கிளில் உலா வரும் தேநீர் கேன் போல, அகன்ற தேக்கு மரத்தின் அடியில் மாலை சில மணி நேரங்கள் மட்டுமே முளைத்து மறையும் சிறு தேநீர் ஸ்டால் அது.

கொதிக்கும் பானத்தில் நனைத்து சாப்பிட தோதாய் பொறையும் பன்னும் இருக்குமென்றாலும் அவை

புதிதாகவோ மிருதுவாகவோ இராது. கடுந்தேநீரில் தோய்த்து உள்ளிறக்கத் தோதுவான ஒரு பதார்த்தம் - அவ்வளவுதான்.

அந்தப் பெரிய தேநீர் கேன், மங்கா தன் கணவன் இறந்தபோது, கைக்கு வந்தத் தொகையில் வாங்கிப் போட்டது. கட்டினவனைப் போல இப்போது அவளுக்குக் காக தந்து மானமாய் வாழச் செய்வது அதுதான்.

அது நிரம்ப கொதிக்கும் தேநீரை ஊற்றி எடுத்து வருபவள், மரத்தின் அகண்ட வேரில் அதை வாகாய் வைத்து, சில குவளைகளையும் பரத்தி வைத்து, பன்னைக் கட்டித் தொங்க விட்டதுமே அவளது வியாபாரம் களை கட்டி விடும்.

போட்டியில்லாத வியாபாரம் அல்லவா?

எஸ்டேட்டின் கூலியாட்களுக்கு என்று வேறு யார் தேநீர் தயாரித்து சுமந்து வருவார்கள்?

மாலை மூன்றரைக்கெல்லாம் அந்த இடத்தில் கூட்டம் கூடி விடும் - தேநீர் சுமார்தான் என்றாலும் அவ்வப்போது பேச்சு சூடு பரத்தும் - சிரிப்பும் சீண்டலும் சுவை சேர்க்கும் - அதனாலேயே எல்லோரும் அங்கு வந்து, நின்று போவதுண்டு.

அன்று கடையின் கூட்டம் ஜாஸ்திதான் -

''என்ன மங்கா வராமப் போயிட்டியே?'' தேநீரைச் சீப்பியபடி ரங்கன் பேச்சை ஆரம்பித்தான்.

''எங்க?''

''நேத்தே சொல்லலை? சின்ன எசமானி வர்ரான்னு?''

''ஆங்... சொன்னப்பா - உங்க வேலை இந்த மண்ணுல - உங்க எஸ்டேட்டு முதலாளிப் பொண்ணு வந்தா நீங்கெல்லாம் ஆஜர் தானும் - எனக்கென்ன?''



''சரிப்பா, அப்ப மங்காக்கு யாரும் எந்தத் தகவலும் சொல்லாதீக...''

''முறுக்கிக்காதப்பா - சொல்லு - பொண்ணு எப்பிடியிருந்தாக?''

''சினிமா ஸ்டாராட்டம் அழகுக்கா'' - ப்ளாஸ்டிக் கவரில் தொங்கிய பன்னில், ஒன்றைப் பிய்த்து எடுத்தபடி பெண் ஒருத்தி சிலாகித்தாள்.

''அடடா... எனக்கும் பாக்க ஆசைதான்... ஆனா கேனு லீக்கு விடறாப்பல இருந்ததா - அத ரிப்பேரு பண்ண ஆளு கூட்டியாந்திருந்தான் மருமவன் - முக்கிய ஜோலிய விட்டுட்டு ஊர்கோலம் போவ முடியாதேன்னு உக்காந்துட்டேன் - பொண்ணுக்கு என்ன வயசிருக்கும்?''

''அதெல்லாம் முன்னமே தெரியுமே. அது ஊர விட்டு ஓடறப்ப ஐஞ்சாறு வயசு - அதாச்சு பதினஞ்சு வருஷம் - ஆக இப்ப இருபது வயசுப் பருவம்.''

''அதென்ன ஓடற, சாடறங்க? அவங்கம்மைக்கு என்ன நிலைமையோ, நேரமோ மகளோட தாய் வூட்டுக்குப் போயாச்சு.''

''தனியாப் போகலியே... எஸ்டேட் மானேசரு கூடல்ல போச்சு அந்தம்மா? பெரிய வூட்டு விவகாரமெல்லாம் ஒரு தினுசுதான்.''

''அட... உடனே அப்படி சொல்லிடுவீங்களே - உங்கப்பன் போன வருஷங் கூட உனக்கொரு சின்னம்மாவக் கொண்டு வரலை? அந்தக் கதைய மறந்துட்டியா?''

''சரி - நம்பதுல அது சகஜம் - பெரிய வூட்டுல அவங்க என்னக் குறைன்னு ஓடறது? பணமில்லையா இல்ல சோத்துக்குத் தாளமா?''

''அம்புட்டுத்தானா வாழ்க்கை? அத மீறி எத்தனையோ பிரச்சனைகள் - சரி வந்தப் பொண்ணைப் பத்தி பேசப்பா...''

''அழகுதான்... வானத்தக் கிழிச்செடுத்தாப் போல நீலச் சேலைல ரொம்ப அம்சந்தான் - அதுவும் சின்னவரு பக்கத்துல ஜோடியா அது நிற்க, கண்ணே நிறஞ்சுப் போச்சது...''

''சின்னவர் - ஆளு கம்பீரமில்ல?''

''அந்தப் பொண்ணு பேரு வான்மதியாம் - அதுவும் குட்டையில்லை, நிறமும் முகலட்சணமுமாய் ரெண்டு பேரும் ராஸா, ராணியாட்டமே இருந்தாக...''

''அட தோலைப் பாத்து மயங்கிருக்கங்க பொட்டைங்க, அந்த ராணி இம்புட்டு நாளு இங்க எந்தலையே காட்டலை. காசு... சொத்து வரவும் ஓடியாந்த, ராமாயணக் கூனி...''

''ந்தா, பெரியவரு மக அது - அந்த மருவாதி வேணாம்?'' மூத்தவர் ஒருவர் எச்சரித்தார்.

''ஆனந்தன் பேச்சும் வாஸ்தவந்தானே? பெரியவர் வாதங் கண்டு படுக்கையாக் கிடந்தப்ப வராத பொண்ணு, தகப்பன் சொத்துக்குத் தான் வாரிசுங்கவும் வந்து நிக்கறதும், இப்படி சொத்தைச் சுத்தி பாக்கறதும் பெருமை படறாப்பல இல்லியே...''

''ஆனா ஊட்டுக்குள்ள பேச்சு என்ன தெரியுமா?'' சுகிர்தன் சொல்ல மற்றவர்கள் கவனித்தனர் - ஏனெனில் அவனது மனைவிக்கு முதலாளி வீட்டில் வேலை. ''அந்தப் பொண்ணு இங்கயே தங்கறாப்பல வரலியாம் - பார்த்துட்டு, இருந்த, பத்து நாளு இருந்துட்டுப் போயிருமாம்...''



''அப்ப... சொத்து?''

''சின்னவர் வசமே இருந்துட்டுப் போவுது - பிரச்சனையேயில்ல - அவருக்கு நம்பளை, நம்ப பிரச்சனை எல்லாந் தெரியும் - புதுசு வர்றதுக என்ன செய்யுமோ, மாத்துமோன்ற அச்சமில்லல்ல?''

''அடடே... இவந்தான் அஞ்சறவனாக்கும்? யாரு ஆண்டா என்னப்பா? நம்ப உழைப்புக்கு வர்ற கூலிய வாங்கிட்டு கிடக்க வேண்டியதுதானே? இந்த மடம் இல்லைன்னா சந்த மடம்.''

''பிரச்சனையில்லாத நல்ல மடம்னு கண்டா அங்கயே ஒதுங்கிக்கறதுதானப்பா கெட்டிக்காரத்தனம். நமக்கும் உடம்பும் மனசும் ஓயுதுல்ல? புதுசா ஒரு இடத்தத் தேடி அங்கப் பழகிப் பொருந்தி... முடியலல்ல?''

சேர்ந்த சில்லரைகளை எண்ணிப் பார்த்த மங்கா குறுக்கிட்டாள் -

''சரி இங்கனயே இருந்துக்கோங்கப்பா... எங்கை சாயாவ விட மனசாகலைப் போல...''

மற்றவர்களின் பேச்சை அவ்வப்போது மங்கா இப்படி கிளறி ஆற்றிவிடுவாள் - சில சமயம் பேச்சின் சூடு அதிகமாகி கையில் இருப்பதை தூக்கியடிப்பார்கள் - ஆக அவள் கண்ணாடி டம்ளர்களை விட்டு, ஸ்டீல் குவளைகளை வாங்க வேண்டியதானது.

''வந்து சுத்திப் பார்த்துட்டுக் கிளம்பிருமா அந்த குட்டி. அதுங்கையில நாம சம்பளம் வாங்கறதா? அதுவுங் கல்யாண பருவத்துல நிக்கிற பொண்ணு வேற...''

''அதுக்குக் கல்யாணம்னா உனக்கேன் பொருமலு? காலாகாலத்துல கல்யாணங்கட்டி, காரியமானதும் கட்டினவனைத் தூரத்தியும் விட்டுட்ட கெட்டிக்காரனில்ல நீ?''

''சும்மாருக்கா - இந்த ராணியக் கட்டுறவன் ஒண்ணு இந்த சொத்துக்காகக் கட்டுவான்... இல்ல இங்க வந்து இதெல்லாம் பாத்து வாயப்பிளப்பான் - பிறவு இத்தனைக் காக எனிந்த எஸ்டேட்டில முடங்கிக் கிடக்கணும்னு பெரிய விலை பேசி வித்துப்பிட்டு, காச மூட்டையோட பட்டணத்து பக்கம் போயிருவான் - நம்ப பூமிய வாங்கற முதலை எப்படியிருக்குமோ... நம்ம விட்டு வைக்குமோ அல்லது நறநறன்னு தின்னு தீக்குமோ?''

முதலாளி மாற, தங்கள் நிலைமை என்னாகுமோ என்ற பயம் அவர்களுக்குள் புகுந்திருந்தது.

பெரியவர் மறுபடி அதட்டினார் -

''ஏல, பெரிய வூட்டுப் பெண்ணு வந்து, நம்மளப் பாத்து தேவதையாட்டம் கையெடுத்து கும்பிட்டுப் போச்சே... அத்தோட விடாம, நூறு கற்பனை செய்தான் - மாலுமி வானத்து நிலாவப் பாத்து கப்பலைச் செலுத்தி னாப்பல...''

''அப்படீன்னா என்ன?''

''வட்ட நிலாவப் பாத்து ஓட்டினா கப்பலு சமுத்திரத்த சுத்தி வருமேத்தவிர, கரை சேராது - நட்சத்திரத்த இல்லை, கலங்கர விளக்கத்தப் பாக்கணும் -

கற்பனைய வுடுல்லே - கடவுளை நம்பி இரு - எல் லாம் நல்லபடிதான் போகும்...''

''அப்புறம் எதுக்கு எனக்கு ரெண்டு காலு, கையி, இந்த புத்தியெல்லாம்? முரட்டு தோள்களை ஆட்டியபடி கேட்டான் முதலாவது பேசினவன் -

''நாமே பாத்து முடிவு பண்ணணும் பெருசு...''



''தவிர நேத்து இங்கன வந்து நம்ம முதலாளியம் மாவப்பாத்த புதுப்பயல் அவம் பேரு ரவியா? அதான் டிரைவரா பக்கத்து எஸ்டேட்டுல சேந்திருக்கானே அவன் என்ன தெரியுமா சொன்னான்?''

''சொல்லுப்பா... சொன்னாத்தானே தெரியும்.''

''இங்க ராணியாட்டம் வந்த பொண்ணு சென்னையில அவங்க உறவுக்காரங்க வூட்டுல கஷ்டப்பட்டுத்தான் இருந்ததாம் - இவங்க பெரியம்மா வூட்டுல இவன் டிரைவராய் இருந்தப்ப இந்த வான்மதிய லேசா 'ஸைட்' அடிக்க, சீட்டு கிழிஞ்சிருச்சாம்.''

''சரிதான அது. என்ன சொல்ல வர்றே?''

''அவங்க பெரியம்மாட்ட 'நை' பட இந்த ராணி அங்க மறுபடி போகாதுங்கறேன். பத்து நாளுல கிளம்பிடறேங் கறதெல்லாம் கப்சா... கப்னு கிடைச்சத பிடிச்சுட்டு இங்கயே டேரா அடிச்சிரும். நம்ம நிலைமைதான் டேஞ் சரு - நம்ம டேராவ தூக்கணுமா வேண்டாமான்னு...''

''பாருங்க ராசாக்களா... எனக்கு சேர வேண்டிய பாக்கி பைசாவெல்லாம் தந்துட்டு பிறவு மத்த வேலையெல் லாம் பாருங்க..'' - என்ற மங்கா குவளைகளைத் தேய்த்து கழுவ ஆரம்பித்திருந்தாள் - அவள் கிளம்ப போவதற்கான அறிகுறி அது.

அன்று அவள் கொண்டு வந்திருந்த தேநீர் சீக்கிரமே காலியாகிவிட்டிருந்தது.

வாசிக்க வாசிக்க நேரம் நழுவினதே தெரியவில்லை. அந்தியின் இருள் எழுத்தை மங்கலாய் காட்டவும்தான் வான்மதிக்கு இன்னும் தான் விளக்கேற்றவில்லை என்பது உறைத்தது.

எழுந்து ஸ்விட்சைத் தட்டியவளுக்கு தொண்டை உலர்ந்ததான உணர்வு - ஏதேனும் குடித்தால் தேவலை. மணியை அழுத்திவிட்டு முகத்தைக் கழுவப் போனாள் - துடைத்தபடி அவள் வெளியே வரவும் சொர்ணா வரவும் சரியாய் இருந்தது.

"குடிக்க ஏதேனும் கொண்டு வரட்டேம்மா?"

அவளது மலையாளம் கலந்த தமிழின் இனிமையை ரசித்தபடி தலையாட்டினாள் வான்மதி.

"நினைச்சதைச் சொல்லிட்டே சொர்ணா."

"எலுமிச்ச அவல் கிளறினோம் - சூடான சாய்யோடு அதுவும் எடுத்தாராம் - உங்க பாத்ருமில கீஸர் ஸ்விட்ச் போட்டு வச்சேம்மா - குளிச்சா ஃப்ரெஷ்ஷாய் இருக்கும்."

இங்குள்ளவர்களுக்கு தினம் தலைக்கு ஊற்றிக் கொள்ளும் பழக்கம் - மாலையும் மறுபடி மேனிக்கு ஊற்றி உடை மாற்றிக் கொள்வதைக் கவனித்திருந்தாள் -

"சரி சொர்ணா... மணி ஏழாயிடுச்சே... நீ அதை எடுத்து வந்திடு... நான் டின்னருக்குக் கீழே வரலை... அதுவே போதும்."

வசீகரன் இவள் தனியே எங்கும் போகக் கூடாதென்று கடுமையாய் தடுத்ததில் மனசு சற்று கடுத்திருந்தது.

"ஐயையோ... சின்னவரு உங்களுக்காய் இறால் மீன் வாங்கித் தந்து வறுக்கச் சொல்லியாச்சேம்மா... பொடி இறால் போட்டு ஃப்ரைட் ரைஸ் வேறு... அத்தனையையும் அவர் தனியே உட்கார்ந்து உண்டால் எனக்கே மனசு கேளாதேம்மா..."



"ல்ல... வர்ரேன் சொர்ணா" - என்றதும் வேலையாளின் முகம் மலர்ந்தது - உரிமையாய் தான் சொன்னதை எஜமானி முகம் கோணாமல் ஏற்று கொண்ட மகிழ்ச்சி.

"வெந்நி விளாவி வச்சிட்டு போகட்டே..."

"ல்ல... சின்ன கப் டீ மட்டும் போதும்."

"நல்லதும்மா... இல்லைன்னா நீங்க ஏதும் உண்ணாது."

அறைக் கதவை தாளிட்டவள், ஆடைகளைக் களைந்து, கை - ஷவரில் பதமாய் வெந்நீரை வரவழைத்து நனைந்தாள். குழைத்த சோப்பின் பூ வாசனை புத்துணர்வு தந்தது. துடைத்து அவசரமாய் உடுத்திய போது கதவு தட்டப்பட, பிரிக்காத புடவையை இடப்புற தோளில் போட்டபடி கதவைத் திறந்தாள் - சொர்ணா தேநீர் எடுத்து வந்திருப்பாள் என்ற நிச்சயத்துடன்...

ஆனால் வெளியே நின்ற வசீகரனைக் கண்ட கணம் மூச்சடைத்தது -

அவனது முகமும் சிவந்துதான் போனது - "ஸாரி... நான் குரல் தந்திருக்கணும்."

"ஸாரி - நான் சொர்ணான்னு நினைச்சு..."

அவசரமாய் விலகினான். உதறிய விரல்கள் சேலையைச் சுற்றின. என்ன ஒரு அவசர புத்தி... வசீகரனை கூச்சப் படுத்தி... ஏற்கெனவே அவன் மீதிருந்த எரிச்சல் இப்போது புதுவித சங்கடமாய் மாறியது.

வந்த தேநீரை ரெண்டே மடக்கு மட்டும் பருகியவள் -

"போதும் சொர்ணா... சின்னவர் வந்திருந்தார்.."

"ஆமம்மா... வழியிலே பாத்தேன் ஒண்ணுமில்லா... இன்னைக்கு எட்டுக்கே டின்னர் தயாராகிடும்... சாப்பிட உங்களைச் சீக்கிரமாய் வரச் சொல்லணும்னு வந்தாராம்.."

ஆக இவள் விம்பாய் விறைத்துக் கொள்ள கூடாதென்று தேடி வந்திருக்கிறான் - வந்தவனை இக்கட்டில் நிறுத்தியதை நினைத்தவளின் கன்னங்கள் சூடேறின. தலைசீவி முகத்திற்கு துளி பவுடரைப் பூசியவளின் மனம் மறுபடி கட்டிலில் கவிழ்க்கப்பட்டிருந்த அரக்கு டைரிக்குத் தாவியது. இன்னும் முக்கால் மணி உண்டே... அதுவரை வாசிக்கலாம் என்று அதைக் கையிலெடுத்தாள் -

இதுவரை வாசித்ததில் விசேஷம் என்றோ வினோதம் என்றோ எதுமில்லை. அம்மாவின் நாட்கள் இங்கு எப்படி கழிந்தன என்பது பற்றிய பொதுவான குறிப்புகள்தான்...

அலுப்பான நாட்களைப் பற்றிய சற்று புலம்பலான பதிவுகள்!

எஸ்டேட்டில் அம்மாவிற்குப் பொழுது லேசில் நகரவில்லை...

சலிப்புடன் நாட்களை நெட்டித் தள்ளியிருந்தது புரிந்தது.

சமையல், தோட்ட வேலை, பண்ணை நிர்வாகம், தொழிலாளர் நலன் - இப்படியான ஆர்வங்கள் இல்லாமல் இங்கு நாட்களை சுறுசுறுப்பாய் வாழ்வது முடியாதுதான். அம்மா ஏன் அப்படியேதும் முயற்சிக்கவில்லை?

'வாழ்வை இயலாமையினால் தோற்றவர்களை விட முயலாமையினால் தோற்றவர்களே அதிகம்' - எட்கர் ஆலன்போ சொன்னது ரொம்ப சரி.

வேறு ஒரு நோட்டில் அம்மா எழுதியிருந்தவையும் கானல் நீர் போன்ற பொய்யான கவிதை வரிகள் - ஆனால் அவை எல்லாம் அம்மாவின மனதில் தோன்றி கைகள் வடித்தவை என்பதே மகளான இவளுக்குத் தனி ஆறுதலாயிருந்தது.



அந்த இதம் தேடி டைரியைத் தொடர்ந்து வாசிக்கலானாள். இவற்றை அம்மா எழுதிய காலத்தில் தான் கைக்குழந்தையாய் இருந்திருக்க வேண்டும்.

பக்கத்தைப் புரட்ட, கையெழுத்து சற்று மாறியிருந்தது போலிருந்தது - ஒரு வித பதட்டத்துடன், தன் எண்ணங்களை வார்த்தையாக்கிவிடும் வேகமெடுத்த எழுத்து அது...

வான்மதியும் வேகமாகவே வாசித்தாள் - பிறகு மறுபடி மெள்ள ஒரு முறை அதையே வாசித்தாள் -

* *'தாரணி சொன்னது உண்மையாய் இருக்குமோ? நினைக்க நினைக்க ரொம்ப பயமாயிருக்குது... அது மட்டும் உண்மைன்னால் நா இங்க இருக்கவே கூடாது... இவரை நம்பி இங்கு வந்ததே தப்பு... ஆபத்து...'*

## 15



இறால் புலவும் வறுவலுமாய் உணவு பிரமாதம்தான் - ஆனால் மனவண்டு அதில் லயிக்காமல் சற்று முன்பு தான் வாசித்த டைரியின் வரிகளையே மொய்த்தது -

"ஸாரி மதி... நான் அப்படி பேசியிருக்கக் கூடாது.."

"எப்படி?"

"உன்னைத் தனியே வெளியே போக வேண்டாம்னு தடுத்தது உன் நன்மைக்காய்... அதை கொஞ்சம் முரட்டுத் தொனியில் பேசினது தப்பு.."

"பரவாயில்லை... நான் அம்மாவின் டைரியைக் கண்டெடுத்து வாசிச்சேனா... அந்த ஞாபகத்துல இருந்தேன்..."

ஆக அவள் வருத்தம் தன் பேச்சினால் அல்ல என்ற நிம்மதியில் வசீகரனின் தோள்கள் தளர்ந்து இயல்பாகின!

"டவுன் போயிருந்தேனா... அங்கே இதைப் பார்த்ததும் உன் ஞாபகம்.. இங்கு இருட்டியதும் குளிர் கொஞ்சம் ஜாஸ்திதான்... பழக்கமில்லாத உன்னை அது பாதிக்குமோன்னு வாங்கிட்டேன்..." என்றபடி தயக்கமாய் ஒரு அழகிய பெட்டியை நீட்டினான்.

இவளை நினைத்து வாங்கினதாமா...? என்னது?

ஆவலாய் பிரித்தாள் -

'பளீர்' ஆகாய நீலத்தில் மிக மிருதுவான காஷ்மீர சால்வை - நுணுக்கமான வேலைப்பாடுடன் -

"ரொம்ப அருமையாயிருக்குது - நன்றி.."

"உனக்கு இது பிடிச்ச நிறம்னு நினைக்கறேன் - உனக்கு மிகப் பொருத்தமாயிருந்தது - அதான்..."

ஆக இவன் ஆடைகளை கவனித்திருக்கிறான் - மிக அழகான மன்னிப்புகோரும் முறையும் கூட!

ஒருவேளை இதைத் தரத்தான் இவளைத் தேடி மாடிக்கு வந்தானோ?

"பிடிச்சிருக்குது - நன்றி... உங்க வேலை எல்லாம் முடிஞ்சதா?"

"ரொமன்தான் - வேலைகளை இழுத்துப் போட்டு செய்தால்தான் நமக்கு போர் அடிக்காது - அதாவது அலுப்பு நம்மை அடிச்சு வீழ்த்தாது."



"உண்மைதான்" என்று புன்னகைத்தவளுக்கு அம்மாவின் அலுப்பான டைரி வரிகள் நினைவிற்கு வந்தன -

* "இன்னைக்கு எழுந்து, குளிச்சு, உடுத்தி - பிறகு என்ன செய்றதுன்னு தெரியாமல் அந்த இருட்டு அறைகளைச் சுத்தி வந்தேன் - படமெல்லாம் வெட்டி ஒட்டினதுல பிடரி வலி..."

- இதோடு தாரணியைப் பற்றிய குறிப்பும் கூட.... அது யார் என்பதை வசீகரனிடம் கேட்டால் என்ன?

"ம்மா - உங்களுக்கு ரூமிலே பால் வைக்கவா?"

மதியை முந்திக் கொண்டு அவனே சொன்னான்.

"வச்சிடு சொர்ணா - அம்மா சரியாய் சாப்பிடலை. தவிர நீ ரொம்ப நேரம் விழித்திருந்து வாசிப்பேன்னும் நினைக்கறேன் - ம்ம்?"

"ஆமா... நல்லவேளை ஜெனரேட்டர் வச்சிருக்கீங்க... கேரளாவின் பெரும்பாலான பகுதிகளில் ஒன்பதுக்குள் கரண்ட் - கட்டாயிடும் போல?"

"ஆமா - கடைகள் எல்லாம் மூடிருவாங்க.. ஆன எங்களுக்கு அது ஒரு விதமாய் பழகிப் போனது எனலாம். ஆனால் மாமாவின் உடல்நிலை ரொம்ப தளர்ந்ததும், கண்டிப்பாய் ஜெனரேட்டர் தேவைன்னு எனக்குப் பட்டது. ராத்திரி வெகு நேரம் தூக்கம் வராமல் அவர் சிம்னி வெளிச்சத்தில் புரண்டபடி கிடந்தது பொறுக்கலை - தவிர ஏற்கெனவே இருட்டான இந்த வீட்டின் இருள், சோர்வை ஏற்படுத்தறதாய் தோன்றியது மதி - வெளிச்சமிருந்தால் மாமா ஏதேனும் வாசிப்பாங்க - நாங்க சீட்டோ செஸ்ஸோ ஆடலாம்... குளிர் மாதங்களுக்கு ஒரு ஹீட்டர் வைத்து அறையை வெதுவெதுப்பாக்கலாம்.. அதான் பயர்ப்ளேஸ் புல்லானதை வாங்கினோம்."

"ஓ?" மரங்களுக்கிடையே பதுங்கியிருந்த ஒரு மிருகம் போல நேற்றிரவு அதன் இயந்திர உறுமலைக் கேட்டதும், கேட்டபடி உறங்கிப் போனதும் நினைவிற்கு வந்தது.

ஆக அப்பாவின் நாட்கள் இங்கு ஓரளவு சௌகர்யமாய் கழிய உதவியவன் இவன் -

"மருத்துவ வசதிகள் இங்கே எப்படி?"

"டாக்டர் ராஜன் கூப்பிட்டதும் தயங்காமல் வருவார் - இப்போதுள்ள ஸ்பெஷலைசேஷன் எல்லாம் அவருக் கில்லை ஆனால் மாமாக்கு அவரது வைத்திய முறையின் மீது நம்பிக்கை உண்டு. சென்னைக்கு வருஷத்திற்கு ஒரு தரம் போய் செக் - அப்பும் செய்திடுவோம்."

ஆக அப்பாவின் நலத்தைப் பேணுவது, தொழிலை கவனிப்பது, வீட்டிற்கான வசதிகளை செய்து தருவது என்று வசீகரன் யாதுமாகி நின்றிருக்கிறான்.

"நீங்க வந்து, இங்கேயே தங்கினதில்... அப்பா அதிர்ஷ்டசாலிதான்." மனமார சொன்னாள்.

"மாமா அதைக் கடவுளின் கிருபைன்னுவார் - அது தான் சரி - என்னா இங்கே இருந்ததை நானும் ரசிச்சேன்... அனுபவித்து செய்த வேலை இது - உற்பத்தியைப் பெருக்கி, அதை தகுந்த இடம், நேரம் பார்த்து விற்று, இங்குள்ள தொழிலாளிகளின் குறை அறிஞ்சு உதவினது எல்லாமே நிறைவான அனுபவம் - இல்லைன்னா வேறு வேலை தேடி போயிருக்கக் கூடும் நான்... அத்தனை தன்மையில்லாதவனில்லை நான்..."

மனம் திறந்த அவன் பேச்சை உள்ளாக மெச்சினாள்.



"தொடர்ந்து நீங்க இங்கயே இருந்து எல்லாத்தையும் பார்த்துக்கணுங்கறதுதான் என் விருப்பமும் வசீகரன்..."

உரிமையாய் அவன் பேரைச் சொல்ல முடிந்ததில் அவளுக்குள் புது துள்ளல்...

அவன் தன் உள்ளங்கைகளை சற்று நேரம் பார்த்து விட்டு பேசினான் - ஏதோ ஜோதிடம் சொல்பவன் போல -

"இந்த சொத்து முழுக்க உன்னுடையது மதி. நான் இங்கிருப்பது உபத்திரவம்னு தோணுச்சுன்னா கிளம்ப என்னை நான் தயார் படுத்தியே வச்சிருக்கேன் - கோவிந் தன்ங்கறவருக்கு நம்ப எஸ்டேட்டை நிர்வாகம் செய்ய ஓரளவு பயிற்சியும் தந்தாச்சு... நாணயமான மனுஷன். ரொம்ப ஸ்மார்ட் இல்லைன்னாலும் எந்த பிரச்சனையை எப்படி கையாளணும், ரூட்டீன் எல்லாம் ஆறு வருஷங் களாய் பழகினவர் - சமாளிக்க முடியாத புதுப் பிரச்சனைன் னால் உடனே நா வந்திடுவேன் உதவ..."

"நீங்க இங்கேருந்து போகவே வேண்டாம்னுல்ல சார் நான் சொல்லிட்டிருக்கேன்? இப்ப வந்த நான் உரிமை கொண்டாடறது முறையேயில்ல..."

"மாமா அதையும் யோசிக்காமலில்லை."

"எதை?"

அறையின் ஓரத்தை ஒட்டினாற் போலிருந்த சோபாக் களில் இருவரும் வசதியாய் சாய்ந்திருக்க, அவர்களிருந்த இடத்தை மட்டும் இதமாய் வெளிச்சப்படுத்தியிருந்தது ஒரு விளக்குத் தண்டு - அதன் ஆரஞ்ச் நிற தொப்பி போன்ற 'ஷேட்' வழியே சுகமான ஒளி - அதில் அவன் பேச்சைக் கேட்டபடி இரவு முழுக்கக் கூட இருக்கலாம் போலிருந்தது -

"மாமாவின் அனுபவங்கள் அவருக்குத் தொலை நோக்கைத் தந்திருந்தது மதி. நான் எஸ்டேட்டில் வளர்ந்து, வேலை பழகியதில் அவருக்கு திருப்திதான்னாலும் அதில்... அதிலும் கவனமாய் இருந்தார்..."

"எதில்?" - கிளிப்பிள்ளையாய் கேட்டாள்.

"நான் எதிலும் உரிமைப் பாராட்டி விடக் கூடாதென் பதில் -"

அவன் இயல்பாகவே சொன்னாலும், கேட்டவளுக்குத் சற்று சங்கடமாய் இருந்தது.

தன் இளமையை இங்கு கழித்த, உழைப்பாளியிடம், பிரியமான உறவினனுக்கு மறுக்கப்பட்ட உரிமை, வாரிசு என்ற ஒரே காரணத்திற்காய் தனக்குத் தாரப்படுவது பற்றிய குற்ற உணர்வு.

"அது முறையில்லைன்னு நினைக்கிறேன்."

மெள்ளத் தலையாட்டினான். மங்கிய அந்த பொன்ஒளி யில் அவனது அசைவு வருத்தமானதா அல்லது வெறுமே மறுப்பா என்பதை மதியால் தீர்மானிக்க முடியவில்லை!

"பெரியவங்களின் முடிவுகள் சரியானதாவே இருக் கும்ன்றதை நாம புரிஞ்சுக்கணும், மதி."

அதற்கும் ஒப்புதலாய் தலையாட்ட இவளுக்கு மன மில்லை.

பெரியவர்கள் தங்கள் வாழ்வை சொதப்புவதோடு இளைய தலை முறையினரின் வாழ்வையும் அல்லவா குழப்பி விட்டு போகிறார்கள்?

தன் பெற்றோர் சமரசமாய் சேர்ந்து வாழ்ந்திருந்தால் எத்தனை இனிதாயிருந்திருக்கும் தன் வாழ்வு?



அம்மா இளவயதில் இறக்கவோ, அப்பா முதுமையில் தனியே தவிக்கவோ நேர்ந்திராது.

வசீகரனின் குரல் இவளது சுய இரக்கத்தில் குறுக் கிட்டது -

"இந்த சொத்திற்கு உரியவனாய் நான் நினைச்சுடக் கூடாதென மாமா எனக்கான சம்பளத்தைத் தந்திட்டார் மதி. ஆரம்பமே மூவாயிரம் ரூபாய் ஒரு இளைஞனுக்கு அது நல்ல பூஸ்ட்! தவிர சென்னைக்கு மாமா வந்தால் ஷாப்பிங் கூட்டிப் போவார் -

'இளவயதில் ஸ்மார்ட்டாய் உடுத்த வேணாமா? கூட நாலு ஷர்ட்ஸ் எடுத்துக்கோ - ஷூ பழசாய் தெரியுதே - சாக்ஸை அடிக்கடி மாற்றணும்னு' தேவைக்கு மேலேயே வாங்கிக் குவிப்பார்."

அதே சென்னையில் மகள் இருந்தது அப்போது அப்பா விற்குத் தெரியாதா என்ன? துக்கம் நெஞ்சையடைத்தது வான்மதிக்கு.

தான் அஞ்சி அஞ்சி உடுத்த ஞாபகம் குத்தியது. சுசீலா பாவம் பார்த்து வேண்டாம் என்று கழித்தால்தான் சில நல்ல உடைகள் இவள் கைக்கு வரும் - அதையும் 'பளிச்' சென்று அலங்காரமாய் உடுத்தி நின்று விட முடியாது - பெரியம்மா உலுக்கி விடுவார்கள்!

பெருமூச்செறிந்தாள்....

"என்ன போர் அடிக்கிறேனா?"

"நோ நோ... அப்பாவைப் பற்றி, உங்க இளமைக் காலமெல்லாம் பற்றி அறிய சுவாரஸ்யமாய் இருக்குது..."

"இப்ப என் சம்பளம் பத்து மடங்காயிடுச்சு... போனஸ் சமயம் மேலும் மூன்று மடங்காய் கைக்கு வரும்...

தங்குமிடம், சாப்பாடு எல்லாம் இலவசம் - பங்கு - மார்க்கெட்டில் பரிச்சயம் உண்டுங்கறதால் என் சேமிப்பைப் பெருக்கியிருக்கேன் - நல்லபடி முதலீடும் செய்திருக்கேன் - இந்த அனுபவத்திற்கு மற்ற எஸ்டேட்ஸிலும் எனக்கு வேலை கிடைக்கும் - இல்லை ஸிட்டிகளில் சியல் எஸ்டேட்டில் முயன்று பார்க்கலாம் - எதிர்கால பயமில்லை..."

"நல்லது - ஆனா என்னால் இங்கேத் தனியே தங்கி இந்த விஸ்தாரமான சொத்தை நிர்வாகம் செய்ய முடியும்னு தோணலை - அந்த ஆசையும் இல்லை..."

"உனக்கு ஆசை இல்லாமல் போனாலும் இந்த சொத்து உன்னுடையது மதி. உன்னைச் சேரணும்ற வாஞ்சையோடு உன் அப்பா கட்டி காப்பாற்றின பூமி..."

"ஒரு ஆணுக்கு இது பெரிதாய் படலாம் - எனக்கு... எங்கப்பாவின் அன்பு, அண்மை பெரிது... அது கிடைச்சிருந்தால் பூரிச்சிருப்பேன்... அவர் சென்னை வரும்போது என்னைப் பெரியம்மா வீட்டில் வந்து பார்த்திருந்தால், என்னை... ஷாப்பிங் கூட்டிப் போய் சுற்றியிருந்தால், எப்போதேனும் சசிலாவையும் என்னையும் இந்தப் பெரிய வீட்டிற்கு அழைத்து தங்க வைத்திருந்தால்..."

வசீகரனின் கண்கள் கனிந்தன -

"இது பெண்களுக்கான இடமல்லங்கறது மாமாவின் முடிவு..."

"பின்னே - அதை இப்ப ஏன் எனக்கு தரவேணும்?"

அவன் எதையோ சொல்ல நினைத்து, முடியாமல் தவிப்பது போல அவளுக்குப் பட்டது.

"என்ன வசீகரன்?"



"ல்ல... ஒரு முதலாளியின் கண்ணும் காலும் பட்டால்தான் ஒரு சொத்து விருத்தியாகும்னு சொல்வாங்க... நான் ஒரு ஊழியன்தான் - மாமா இருந்த வரை - சரி - இனிமேல் நீ அவர் இடத்தில் இருந்தால் தான் சரிவரும்."

இப்படி ஒரு பெருந்தன்மையை அவள் எதிர்பார்க்கவில்லை.

மனம் கனிந்திருந்தது -

தந்தையை, இவனையும் சற்று தப்பாய் கணித்து விட்டோமோ என்ற வருத்தம் வேறு...

தன் தாய் இந்த வாழ்வில் அலுத்து குறை சொல்லி பின் விலகியே விட்டதால்தான் அப்பா இவளை இங்கிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறார் - பட்டணத்தில் தாய்வழி உறவினர் வீட்டில் மகள் நிம்மதியாய் இருக்கிறாள் என்று எண்ணி விட்டார் போலும்... ஆனால் இந்த மன இளக்கமெல்லாம் ஒரே நாளில் திரிந்து போகும் என்றவள் அறியவில்லை.

"சரி - படு மதி... உனக்கு வேலை... இருக்கக்கூடும்..."

"ம்ம்... அப்பா டைரி எழுதியதுண்டா?" திடும்மென கேட்டாள்.

அவன் சற்று தயங்கினான்.

"ஆமா - அது உங்கம்மாவிடமிருந்து அவருக்குத் தொற்றிய பழக்கம்னு நினைக்கிறேன். பிறகு அவருக்கது பிடித்தும் போனது - 'நம் நாட்களை, அனுபவங்களை குறித்து வச்சிட்டு அதையே ரெண்டு மூணு வருஷங் கழிச்சு வாசிச்சா ஒரு நாவலை விட சுவாரஸ்யமாயிருக்குது வசீகர்... நம்ப வளர்ச்சி, சரிவையும் கூட கணிக்க முடியுது'ன்னுவார்."

''அதை... அதை நான் பார்க்க முடியுமா?''

''அவர் அறையின் காட்ரெஜ் பீரோவில் இருக்குன்னு தெரியும் - ஆனா அதை நா ஒரு நாளும் எடுத்துப் பிரிச்சதில்லை மதி...''

''புரியுது... ரொம்ப பர்ஸனலான பதிவுகள்தான் அவை, அன்றாட நடப்புகளோடு அவங்கவங்க அந்தரங்கங்களும் புதைஞ்சிருக்கக் கூடும்... ஆனா...''

''உன் அப்பாவின் அண்மையை இதுவரை அனுபவி யாத உனக்கு இதையும் மறுப்பது சரியில்லைன்னுதான் படுது - அதே சமயம் அவர் டைரியை வாசிப்பது... முழுக்க வாசிப்பது ரம்யமான அனுபவமாயும் இருக்காதுன்னு நினைக்கிறேன்..''

அவனது எச்சரிப்பு சரிதான்... தாயின் குறிப்பேட்டை வாசித்த பிறகு அம்மாவின் குறைகள் தெரிகின்றன - அவர்கள் வாழ்வைத் தவறாய் புரிந்து கொண்டதும் அலட்சியமாய் அணுகியதும் எல்லாம் தெளிவு. ஆனால் நிஜமான அம்மாவை அனுபவித்திருந்தால் இப்படி நிழல்களைத் தேடி தூர்த்த வேண்டியதில்லை....

டைரியில் குறிப்பிடப்பட்டிருந்த அந்தத் தாரிணி யார்?

''ஒரு வேண்டுகோள்...''

புன்னகைத்தான் - அவன் கண்களில் துளிர்க்கும் புன்னகை பிறகு அவன் உதட்டில் விரியும் விதத்தை அவள் இப்போதும் ரசித்தாள்.

''இத்தனை நேரம் நான் சொன்னது உன்னில் பதி வாகலையா - ஜமானியம்மா?''

''என்னது?''



''என்னதா? இத்தனை நேரம் இவன் ஏதும் சொன்னா னாங்கறியா மதி?'' பாவமான அவனது பாவனையைக் கண்டு சிரித்தாள்.

''ல்ல... சுசீலா, என் கஸினும் என்னை இப்படி 'மதி'ன்னுதான் கூப்பிடுவா..'' சமாளிப்பாய் எதையோ சொன்னாள்.

''மாமா உன்னை அப்படி குறிப்பிட்டதால... சுருக்க மான அந்தப் பெயர் சுலபமாய் என் நாக்கில் ஒட்டிகிச்சு... ஹோப் யு டோன்ட் மைன்ட் மதி - வானத்தில் உயர்வாய் இருக்கும் விஷயமில்லையா?''

''ஏன் - இங்கேயும் இருக்குமே'' என்றவள் சுட்டு விரலால் தன் தலையைத் தட்டினாள்.

''யு ஆர் ரைட் - இருக்கும் மதியை அதாவது புத்தியை நாம பயன்படுத்திக்கணும் - அதுதான் விஷயம்...''

''நவ் யு ஆர் ரைட் ரீ...''

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

''வேண்டுகோளில்லை - உத்தரவிடுங்கள் மதியாரே...''

''எங்கம்மா படத்தை கண்டெடுத்தேன்... கூடவே... பெரியம்மாவின் அதாவது அப்பாவின் முதல் மனைவி யின் படமும் இருந்தது...''

''ஸாரி - அவை எங்கே இருந்ததென்று எனக்குத் தெரியலை. முன்னே... மாமா ஒரு தரம் என்னிடம் காட் டினதோடு சரி...''

''ம்ம்... இப்ப அவை என் ரூமில் இருக்கு. சுத்தப்படுத்தி பொருத்தமான புது சட்டம் போட்டு... ஹாலிலிருக்கிற அப்பாவின் படத்திற்கு இருமருங்கும் அவைகளைத் தொங்க விடலாமான்னு...''

"ஷுர் -"

உடனடியாய் அவன் சம்மதித்ததில் உற்சாகம் பெற்று அடுத்த கேள்வியையும் கேட்டு விட்டாள்.

"அம்மா காலத்தில் இங்க தாரிணின்னு யாரும் வேலை பார்த்தாங்களா?"

மறுபடி முகமூடி இறங்கியதுபோல மாறியது அவன் முகம்!

தொனியும் கூட.... "நீ வந்து மூன்று நாட்களாகப் போகுது மதி... இன்னும் ஒரு வாரம் நீ பத்திரமாய் இங்க இருக்கணும்னு நினைக்கிறேன்" என்றவன் 'சட்'டென எழுந்துவிட்டான்.

இனி பேச ஒன்றுமில்லை என்றாற்போல...

வேதாளம் மறுபடி முருங்கைமரம் ஏறி விட்டதா என்று பொறுமிய இவளுக்குள்ளும் ஆத்திரம் 'சுருசுரு'வெனக் கிளம்பியது!

# 16



அது தேதிவாரியாய் விவரம் சொன்ன டைரி அல்ல. ஆங்காங்கே தேதி குறிப்பிடப்பட்டிருந்தது - மாதங்கள் மட்டுமல்ல, வருஷங்களே கூட முன்னுக்குப் பின்னாய் குழறுபடிதான் - அந்த கனத்த நோட்டின் கிடைத்த பக்கத்தில் அம்மா எழுதியிருந்தாள் - தோன்றிய போது தேதி விட்டு... மற்றபடி மறந்து.... என்று!



அம்மாவின் குணாம்சத்திற்கு வேறென்ன சான்று தேவை? உணர்ச்சி வயப்பட்ட, எதையும் யோசனையும் கிரமுமாய் செய்யாத ஒரு நபர் - என்பது அவர் டைரி எழுதிய முறையே சொல்லியது -

ஆக தாரணி பற்றி அக்கனத்த ஐநூறு பக்க நோட்டு புத்தகத்தில் தொடர்ச்சியான தகவல் இல்லை. ஒரு பக்கம் துள்ளலாய், தன் பிக்னிக் அனுபவத்தைப் பதிவு செய்திருந்த அம்மா, அடுத்த பக்கத்தில் புலம்பித் தீர்த்திருந்தாள் - மகளைப் பற்றிய வர்ணனை, கணவனைப் பற்றிய மருட்சி, தன் தனிமை மீதான அலுப்பு, வாழ்வு மீதுள்ள எரிச்சல் என்று அவியல் பதிவுகள். இதில் தாரணி பற்றி மேலும் மர்மங்கள் எந்தெந்த பக்கங்களில் புதைந்து கிடக்கின்றனவோ?

வாசித்த பக்கத்திற்கு அடையாளமாய் ஒரு அட்டையைச் செருகியவள் தொடர்ந்து புரட்டினாள் -

மக்கின வாடை எழும்பியது - சற்று காற்றாட வைக்கலாம்தான் - ஆனால் சேதமாகி விட்டால் பெரிய இழப்பல்லவா?

இவளுக்காய் காத்திருந்த பொக்கிஷமல்லவா இது?

அப்பாவின் டைரியையும் பத்திரமாய் தன்னோடு எடுத்துப்போய் விட வேணும்.

முகம் கழுவி, இரவுக்கான உடையை மாற்றியபின் - தலையணையை வாகாய் வைத்து, அதில் சாய்ந்தபடி மறுபடி அந்த குறிப்பேட்டை கையில் எடுத்தாள். ஜெனரேட்டரின் தயவில் எரியும் விளக்குகள் சிறிது நேரத்தில் அணைந்து போகும் - அதுவரை டைரியை மேயலாம்.

பக்கங்களுக்கு எண் இடலானாள் - எந்த பக்கத்தில் எந்த சம்பவம் என்று தேடி பிடிக்க, எதுவரை வாசித்தோம் என்றறிய இது அவசியம் என்று பட்டது.

அந்த வேலையை முடித்து வாசிப்பைத் தொடர்ந்தாள் -

✸ இன்னைக்கு மாம்பழ கலர் பட்டுப் புடவையைக் கட்டிகிட்டேன். போன தரம் மதுரைக்கு இவரோடு போனப்ப வாங்கினது - பளிச்சுன்ற கலர் ஆனா துணி மட்டம்னு நினைக்கறேன். சீக்கிரமே கசங்கிருது - கறுப்பு வெல்வெட் கவுன் போட்ட மதிக்குட்டிக்கு கண் மையை கொஞ்சம் பட்டையாவே பூசினேனா - பொம்மையாட்டம் நின்னா. என் சிறு வயசு படத்தப் பாக்கறாப்பல இருக்கு... என்னையே அச்செடுத்தது போல...

ஆனா அதுல ஜீவாவுக்கு வருத்தம் -

'மதி என் ஜாடையிலேயும் இருந்திருக்கலாம்னு' குறைபடுவார். பொண்குட்டி அம்மாவக் கொண்டு இருக்கறதுதான அழகு... அதுவும் அவ அம்மா ரொம்ப அழகாயிருக்கப்போ?

அதிலேயுமா குறை கண்டு பிடிப்பாங்க?

'எங்குணமாச்சும் எம்மகளுக்கு வந்தாத் தேவலைம் பா' - ஏதோ குணத்துல தான் நிறைகுடமாட்டம்!

மனசு பூரா பொறாமை.

முந்தா நாள் நாங்க ஷ்யாமோட 'சித்ர குளம்' வரை போனதுக்கு எத்தனை ஆத்திரப்பட்டார் ஜீவா?

அந்தக் குளம் வரைஞ்ச சித்திரம் போலத்தான் இருந்தது. அதைச் சுத்தியும் பன்னீர் பூ மரங்க...



அதிலேருந்து உதிர்ந்த வெள்ளைப் பூவெல்லாம் தண்ணீரிலும் தரையிலுமாய் விழுந்து மூடியிருந்தது ரொம்ப அழகு. காத்துல கூட அதனோட வாசனை கமகமன்னு... நா ஒரு ஓரமாய் உட்கார்ந்துட மதிக்குட்டி ஓடி ஓடி பூ பொறுக்கினா... ஏதோ வெள்ளிக்கட்டி, வைடூரியத்தை சேகரிக்கறது போல அவ கவனமாய் ஓடி சேர்த்ததைப் பார்க்க எனக்கு அலுக்கவேயில்லை - ஷ்யாம் ஏதோ பேச்சு கொடுத்தார் - மதிக்குட்டியோட வெல்வெட் கவுனிலிருந்த ரெண்டு பாக்கெட்டும் பூவால ரொம்பிடுச்சு... மனசும் நிரம்பி பூரிச்சுதான் நா வீடு திரும்பினேன்... ஆனா வீட்டுல ஜீவா ரொம்ப கோவமாய் நின்னார். மதிக்குட்டி சேர்த்த பன்னீர் பூவை எல்லாம் பிடுங்கி எறிஞ்சுட்டார்... ஷ்யாமும் நிலைமையைப் புரிஞ்சுகிட்டு கிளம்பிட்டார்...'

ஒரு பக்கத்தை வாசித்து முடித்தவள் மறுபக்கம் திருப்ப, ஆச்சரியப்படும் வகையில் மறுநாளின் பதிவு தான் அது -

✸ 'சும்மா சித்திரக்குளம் வரை போனோம் - என்று நான் பேச்செடுத்தும் ஜீவா எதும் சொல்லலை... பிறகு... ச்சே... இதெல்லாம் எழுத கூச்சமாத் தானிருக்குது - ஆனா வேற யாரிடமும் இதையெல்லாம் சொல்ல முடியாதே? எல்லா சம்பவத்தையும் எழுதி வச்சு, மொத்தமாய் வாசிச்சால் ஜீவாவின் குணம் புரியுமோங்கற தப்பாசையும் ஒரு காரணம். கல்யாணமான இத்தனை வருஷத்துல - (எத்தனை என்பதை தேதியில்லாததால் அனுமானிக்க முடியவில்லை வான்மதியால்) - இவர் குணம் எனக்குப் புரியலை - அடிக்கடி குணக்கேடுங்கறதைத் தவிர

அதுவும் நேத்து ராத்திரி என்ன மூர்க்கமாய் படுக்கையில் எம் மேல விழுந்தார்... ச்சே அவரத் தள்ளி விட்டுட்டேன் -

'என்ன சந்திரா - காதல் கணவனை இப்படி நெட்டித் தள்ளலாமா?'ன்னார் -

'இது காமம் கூட இல்லை - பெண்டாட்டி மேலுள்ள கோபம்ன்னால் சிரிக்கிறார் -

'காமக் கிழவா'ன்னு கத்தலாம் போல வருது - பிறகு அவரு கோபத்தைத் தாங்க முடியாதே... கட்டில்ல எல்லாக் காரியமும் ஆன பிறகு குப்புற படுத்து விதவிதமாய் குறட்டை விடறார்.

வான்மதி குற்ற உணர்வும் கூச்சமுமாய் தொடர்ந்த சில வரிகளைத் தவிர்த்துத் தொடர்ந்தாள் -

✱ 'மறுநாள் ஜீவா மறுபடி கிளிப்பிள்ளையாட்டம் சொல்றார் -

'இதோ பாரு சந்திரா - ஷ்யாம் நம்மிடம் சம்பளம் வாங்கற வேலைக்காரன் - அவனோட நீ இப்படி சுத்தறது கேவலம்'னு.

'அப்ப நீங்க எங்களை வெளியே கூட்டிட்டு போங்களேன்'னா கண்ணை மூடி 'புஸ" புஸ"'ன்னு மூச்சு விடறார்!

அடிச்சிடுவாரோன்னு பயம்மாயிருக்குது.

எங்க குடும்பத்துல தெரியாம எச்சரிச்சாங்கதான் -

'சந்திரா - இந்த ஜீவானந்தம் உன்னைய விட 14 வயசுக்கு மூத்தவர் ஏற்கெனவே ஒரு தாரத்தைச் சாகக் கொடுத்தவரு - சின்னவ நீ அவரோட



பொருந்தி வாழறது லேசில்லை - வாழ்வு சிலந்தி வலையாட்டம் உன்னைப் பின்னியெடுக்கும்னு' -

ஆனா அப்ப எம்மனசு வேற.. அது முழுக்க 'ஜீவா ஜீவா' இவரு பேரும் நினைப்புந்தானே? சந்திச்ச முத நாளே என்னைய ஜீப்புல ஏத்தி விட்டோதாய் அவர் எம் முழங்கையத் தொட்டதுமே... ஐயோ... எப்படி ஜிவ்வுனு இருந்துச்சு... அன்னிக்கு ராவெல்லாம் தூங்காம புரண்டு புரண்டல்ல தவிச்சேன்? ஆனா நேத்து ராத்திரியும் அவரு என்னைய கசக்கின பிறகு நா தூங்கத்தான் இல்லை... அவரு குறட்டையும் தாங்காம எழுந்தவளைக் கேட்டாரு -

'என்ன தூங்கலையான்னு?'

'இல்ல... உடம்பெல்லாம் வலிக்குது... நீங்க முரட்டுத்தனமா நடந்துக்கறது பிடிக்கலைன்னேன்...'

'அப்பதான நீ ஷ்யாம் போல மத்த பயலுங்க பின்னே சுத்தமாட்டே. எங்கிட்ட திருப்திபட்டுட்டா பேசாம வீட்டுல தங்குவேல்லை'ன்னு ஜீவா அலட்டாம சொல்ல எனக்கு 'ச்சே'ன்னு போகுது...'

மகளுக்குத் தொடர்ந்து வாசிக்க முடியாத வேதனை!

அழகாய் கோதி முடிந்திருக்க வேண்டிய உறவைத் தன் பெற்றோர் சிக்கலாக்கி, பின் அறுத்திருந்தது புரிந்தது -

அதே சமயம் பிறரது, அது பெற்றவர்களாய் இருப்பினும், அந்தரங்கத்துள் எட்டிப் பார்ப்பது இவளது தப்பும் தான். தான் பார்த்து, பழகி, புரியாத அவர்களை எப்படியேனும் அறியும் ஆவலில் மகள் செய்த பிழை...

அடுத்த பக்கம் அம்மா மறுபடி ஷ்யாமின் புகழ் பாடியிருக்க, வான்மதிக்கு அழவா சிரிக்கவா என்பது புரியாத நிலை!

* *'ஷ்யாம் எந்நேரம் கேட்டாலும் ஜிப்போட கிளம்பிடுவார் - நா ஷாப்பிங் செய்றவரை பொறுமையாக் காத்திருப்பார் -*

*'இந்த பிங்க் புடவை எப்படியிருக்கு?'ன்னு அவர்ட்ட அபிப்ராயம் கேக்கலாம்.*

*'போன வாரம் நீங்க் கட்டியிருந்ததும் ஏறக் குறைய இதே கலர் அந்த சிவப்பு எடுத்துக் கோங்களேன்னு' சொல்லுவார் -*

*மதிக்குட்டியத் தூக்கி வச்ச வேடிக்கைக் காட்டு வார் - இதே போல ஜீவாவோட வந்தா, 'வெயில் ஜாஸ்தி' - 'மழை வரும் போலிருக்குன்னு' ஏதோ ஒரு சாக்குல வீடு திருப்பறதிலேயே திப்பார். ஸ்டேட்டுல அடைபட்டு மூச்சுத் திணுற நமக்கு ஒரு மாற்றம்னு தான - வெளிய வர்ரது? அப்பவும் இவர் உபத்திரவம்னா எப்படி?'*

தாயின் உணர்வுகளும், தாம்பத்திய விரிசலுக்கான காரணமும் புலனானது.

ஆனால் இந்த எளிய பிரச்சனைக்கு அவர்கள் சேர்ந்து தீர்வு கண்டிருக்கலாமே என்ற ஏக்கமும்தான்.

கண்ணீர் உறுத்திய விழிகளை சற்று நேரஞ் சென்று திறந்தபோது திகைத்தாள் - முழு இருட்டு...

நள்ளிரவை எட்டியிருந்ததால் ஜெனரேட்டரை நிறுத்தி விருப்பார்கள்.



பிளாஸ்க்கிலிருந்த பாலை தான் பருகவில்லை என்பதும் ஞாபகம் வந்தது - டார்ச்சின் ஒளியில் அதைச் செய்யலாம்... ஆனால்எதையும் செய்யப் பிடிக்காத அளவு உடம்பும் உள்ளமும் அலுத்திருந்தன. போர்த்திக் கொண்டு சுருண்டாள்.

உறக்கம் அவளைத் தன்னுள் இழுத்து அணைத்தது.

காலை நேரம் கழித்தே விழித்தவள், தயாரானதும் சுசீலாவின் டெலிபோன் அழைப்பு அவளுக்காய் காத் திருந்தது -

வீட்டாரின் நலனை விசாரித்தபின், சுசீலா தன் தாயின் வலைவீச்சில் சிக்கியிருந்த சில மாப்பிள்ளை மீன்களைப் பற்றி விவரித்தாள் -

'பாவம் அந்தப் பையன் ஆறரை அடி உயரம்... என்னைப் பார்த்த அதிர்ச்சியில் அவன் கண்ணு கூட லேசாய் கலங்கிருச்சு - தெரியுமா -என்று!

வான்மதியும் தன் பக்க செய்திகள் சிலவற்றைச் சொன்னாலும் தன் பெற்றோரின் குறிப்பேடுகளைப் பற்றி அவள் மூச்சு விடவில்லை. அது தனக்கே தனக்கான ரகசியம் எனப்பட்டது.

அன்று முழுக்க அவள் தன் பெற்றோரின் அறைகளை யும், அவர்களின் குறிப்புகளையே பூவைச் சுற்றும் வண்டாக மொய்த்திருந்தாள் -

மாலை முகம் கழுவித் துடைத்தவளை ஜன்னலின் வழியே தெரிந்த 'பனீர்' வானமும் பசும் நிலமும் ஈர்க்க, பின்புற தோட்டத்தில் சற்று உலவி வர இறங்கினாள் - பின் கதவு வழியே தோட்டத்துள் இறங்கியவள் ஒரு கணம் உறைந்து நின்று... பின் புன்னகைத்தாள் அவளைத் திடுக்கிட வைத்தது ஒரு பருத்தத் தவளை!

நடக்கத் தோதாய் புல்வெளியில் பதித்திருந்த சிமெண்ட் வட்டங்கள் அது தத்தித் தாவி அல்லாட, ஒதுங்கி நடந்த வான்மதிக்குத் தன் நிலையுமே அதே போலத்தான் என்று பட்டது.

பெற்றோர் பதிவு செய்து விட்ட சில சம்பவங்களில் மாறி மாறி குதித்து யோசித்துத் தவிக்கிறது -

அம்மாவிற்கும் அப்பாவிற்கும் இடையேயான வித்தியாசம் வெறும் வயசோ, படிப்போ மட்டுமல்ல...

வாழ்வு பற்றிய கண்ணோட்டமே வேறு.

வாழ்விற்கான அவர்களது திட்டங்களும் வேறுதான்.

அப்பாவின் எழுத்தில் ஓரளவு முதிர்ச்சி தெரிந்தாலும் அவருக்குமே பாவம் குழம்பிய மனநிலைதான்...

அவரது டைரியில் ஒரு சுவாரஸ்ய குறிப்பை அவள் அனுபவித்து வாசித்திருந்தாள் -

*'டான்டலஸின் தாகம்' பற்றி ஒரு கதை வாசித்தேன் - டான்டலைஸ் எனும் ஆங்கில வார்த்தை கைக்கெட்டும் விதத்தில் ஆசைக்காட்டி தூண்டி ஏமாற்றுவதைக் குறிக்கும் - அவ்வார்த்தை உற்பத்தியான விதம் பற்றிய கதை அது -*

*கிரேக்க நாட்டிலும் தேவர்களைப் பற்றி பற்பல கதைகள் உண்டு போலும். தேவர் தலைவன் ஜுபிட்டரின் மகன் இந்த டான்டலஸ். தனக்கு மிஞ்சி தேவலோகத்தில் யார் என்ற கர்வம் அவனை பிற தேவர்களை பழிக்க வைத்தது! நம் பக்த பிரகலாதனைப் போல, டான்டலஸின்மகனே இது பற்றி தகப்பன் எதிர்த்து கண்டிக்க, ஆத்திரத்தில் தன் மகனைக் கொன்று, விருந்தாகவே சமைத்து*



*தேவர்களை அழைத்து விருந்து வைத்து விடுகிறான் டான்டலஸ்!*

*தாங்கள் உண்ணுவது என்ன என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடிகிறதா என்ற சவால் வேறு அவனுக்கு... இது அத்தனையாலும் கொதித்த ஜுபிடர் நம் மனுநீதி சோழன் போல பாசத்தைவிட நீதி உயர்வென்று மகனை நரகத்துள் தள்ளி விடுகிறார்.*

*அது நரகத்தின் கொடிய இடம் - டான்டலஸ் தண்ணீருக்குள் நிற்க வைக்கப்படுகிறான். அவன் கழுத்து வரை தளும்பும் நீர் - வாய்க்கு சற்று மேலே பழுத்த பழக்குலை தொங்குகிறது. தாகம் தாளாமல் அவன் குனிய நீர்மட்டம் சரேலென இறங்கி வறளும். பழத்தை உண்ண எம்பினால் காற்று, பழங்களை தள்ளி விடும். ஆக தாகம், பசியை நீக்கும் விஷயங்கள் அருகே இருந்தும் அவை கிடைக்காத டான்டலஸின் தவிப்பே அந்த வார்த்தையின் அடிப்படை..*

*உலகில் அது போன்ற நரக வேதனையை மனிதன் அனுபவிக்க என்றே இறைவன் பெண்ணைப் படைத்தாரோ?*

*இவளைக் கட்டி நம்மோடு வைத்துக் கொண்டால், தனக்கு அன்பு, பாசமான குடும்பம், வாரிசு எல்லாம் கிடைக்கும் என்று முட்டாள் ஆண் நம்பி கால்கட்டைப் போட்டுக் கொள்கிறான் -*

*ஆனால் அவன் ஆசைப்பட்ட எதுவும் கிடைப்பதில்லை.*

கிடைப்பதெல்லாம் குதர்க்க பேச்சும், பழிச் சொல்லும், ஏமாற்றமும் வெறுமையான தனிமையுந்தான்.

கூடவே ஊராரின் கேலிப்பேச்சும்... கேவலப் பார்வையும்...!

ஆனால் ஊர் உலகில் சந்தோஷமாய் வாழும் ஆண்களும் இருக்கிறார்கள் போலவே?

அவர்கள் எல்லாரும் வேஷம் போடுகிறார்களோ அல்லது எனக்கு மட்டுந்தான் தாம்பத்ய இன்பம் வாய்க்கவில்லையா?

இரு திருமணங்களுமே எனக்குத் தந்தது விரக்தி... வேதனையைத் தான்....

இனி ஒரு பெண்ணிற்கு என் வாழ்வில் இடம் தந்தால் - என்னைப் போலொரு முட்டாள் இருக்க முடியாது -

அது சகோதரியோ, மகளோ... யாராய் இருந்தாலும்... வேண்டாம்.

அப்பாவின் மனக்கசப்பை இவளால் உணர முடிந்தது. மேலும் கீழுமாய் நடந்தவள் மறுபடி வீட்டினுள் நுழைய, எதிரே வந்த வசீகரனின் விழிகள் இவளை உறுத்தன.

"எங்கே போனே வான்மதி? தனியே போக வேண்டாம்னு சொன்னேனே?"

அவன் தொனி மிகக் கடுமையாயிருந்தது.

பின்புறமிருந்து எட்டிப் பார்த்த வேலைக்காரர்களின் முகத்திலும் நிறைய பதட்டம். ஏனிப்படி ஒன்றுமில்லாததை கற்பனை பண்ணி எல்லாரையும் பதற வைக்கிறான்?



"ஏதும் சாப்பிடறியா?" அவன் கேட்க, இவள் மாடிப்படி நோக்கி 'விடுவிடு'வென நடந்தாள்.

"எனக்கு இரவு சாப்பாடும் கூட மாடிக்கு, என் அறைக்கே வந்திடட்டும்" - உத்தரவுடன் படியேறினாள்.

## 17



வைரமணியின் ஆங்கார வார்த்தைகளை, ஆணவ நடத்தையை நிறைய பயத்துடனும் சிறிது வெறுப்புடனும் முன்பு கவனித்ததுண்டு வான்மதி.

'பெரியம்மா ஏனிப்படி பேசி பிறர் மனதை நோகடிக்கிறார்கள் - சற்று பொறுத்துப் போனால் என்ன?' என்று வருந்துவாள்.

ஆனால் பிறர் அப்படி வருந்தக்கூடிய விதத்தில் இப்போது தான் நடந்து கொண்டது அவளுக்கே அதிர்ச்சிதான்.

பணத்தோடு இப்படி வேண்டாத சுபாவமும் வந்து ஒட்டிக் கொள்ளுமோ?

இல்லை - பெரியம்மாவைப் பார்த்து இவளுக்குள் பதிந்தவை இப்போது சமயம் பார்த்து வெளிப்படுகின்றனவா?

ஆக 'நான் உன்னோடு சேர்ந்து உண்ண விரும்பவில்லை' என்று தான் ஆணவத்துடன் வசீகரனைப் புறக்கணித்த விதம் அவளைப் புரட்டி புரட்டி வறுத்தது.

சொல்லிவிட்டு திரும்பி பார்க்காமல் விலகியாயிற்று... வசீகரனின் முகம் வாடியிருக்குமா... அல்லது கோபத்தில் சிவந்திருக்குமா?

ஆனால் அவரும் அப்படி சிடுசிடுத்திருக்க வேண்டாமே... வெளியே சற்று காற்றாட நிற்க, நடக்கக் கூட தனக்கு இங்கே அனுமதி இல்லை என்றால் எப்படி? இப்படி அடைத்து வைக்கவா தன்னை இங்கு வருந்தி அழைத்தார்கள்?

குழந்தைக்கு இனிப்பு அல்லது விளையாட்டுப் பொருளைக் காட்டி 'நறுக்'கென ஊசியைக் குத்தும் டாக்டர் போல, இங்கு வந்தவளுக்கு அப்பாவின் படம், டைரி, அம்மா தன் கையால் பின்னிய மணிப்பை, டைரி என்று கிடைத்தாலும் இங்கு ஏதோ மர்மமும் புதைந்திருக்கிறது தான்... அதை வெளிப்படையாய் சொல்லாமல் இப்படி மறைமுகமாய் அதட்டுவதுதான் புரியவில்லை... பிடிக்கவுமில்லை.

அவள் இங்கு வந்தது வெற்று மண்ணை சொந்தங் கொண்டாட இல்லை - உறவு மரங்களற்ற மண்ணில் என்ன இருக்கிறது...? அதோடு புதைந்து மக்க இந்த வான்மதி தயாரில்லை...

இந்தக் கடுப்பான சிந்தனைகளோடு தன் தந்தையின் பழைய டைரிகளைப் புரட்டினாள்... அவற்றில் இலக்கின்றி மேய்ந்த அவளது விழிகள், சற்று நேரத்தில் கனிந்து பின் கசிந்தன -

அப்பாவின் கிறுக்கலான கையெழுத்து அடிக்கடி 'குட்டிம்மா' என்று தன்னைக் குறிப்பிட்டிருந்ததே காரணம்...

ஆக எல்லாப் பெற்றவர்களைப் போலவும் தன் பெற்றோருக்கும் தன் மீது கொள்ளைப் பிரியம்தான் -

இந்தப் பாசம் தன் பெற்றோரை இணைத்து வைக்கும் சங்கிலியாய் ஏனில்லாமல் போனது?



அப்பாவின் சந்தேகமும் அம்மாவின் பொறுமை இன்மையுமா காரணங்கள்...?

'சுருக்'கென ஒரு நினைப்பு குத்தியது - அதே குறைகள் தன்னிடமும் உள்ளனவோ?

பிறகேன் வசீகரன் மேல் அத்தனை கோபம், சந்தேகமெல்லாம்? அவன் தன்னை ஒடுக்குவதாய் நினைப்பதும், அதற்காய் இப்படி முறுக்கிக் கொண்டு தன் அறைக்குள் அடைபடுவதும் சிறுபிள்ளைத்தனம்.

குற்ற உணர்வு குறுகுறுத்தது - முந்தினம் தாமதமாய் படுத்ததாலோ என்னவோ தூங்கியும் போனாள் -

எழுந்த போது மணி நாலரை... அவசரமாய் முகம் கழுவி தோற்றத்தைச் சீராக்கிக் கொண்டு அவசரமாய் கீழிறங்கினாள். ஏறக்குறைய ஓடியவள் லகான் இழுக்கப் பட்ட குதிரை போல நின்றாள்... முகம் சிவக்க.

அவளைக் கண்ட அவன் விழிகளில் சிரிப்பு!

''சொர்ணா உனக்காய் காபி கலக்கிட்டிருக்கா மதி... ரெண்டே நிமிஷத்துல உன் அறைக்கு வந்திருப்பா...''

கோபத்தில் முறுக்கிக் கொண்ட ஒரு நான்கு வயது சிறுமியைச் சீண்டுவது போலிருந்தது வசீகரனின் தொனி.

ஆனால் சிரித்த அவன் கண்களில் பின்னே வலியும் மிச்சமிருந்ததோ?

''ஐ'ம் ஸாரி'' - என்றாள் மனமார.

அவன் முகம் முழுக்க மலர்ந்தது -

''வேற ஏதோ கோபத்தில் என்னைக் காய்ந்ததாய் எடுத்துக்கலாமா?'' பவ்யமாய் கேட்டான்.

''ல்லல்ல - கோபம் உங்க மேலதான்... ஏதோ இப்ப தான் நிற்க ஆரம்பிச்ச குழந்தை ஏணி ஏறப் போறது கண்டு பெத்தவங்க பதறுர மாதிரி அதட்டுனீங்களே...''

''நல்ல உவமானம்!''

''ஆனா ஸாரி.. நா அப்படி சாப்பிடாமல் போயிருக்கக் கூடாது...''

''இல்லையே...''

''என்ன?'' என்பதாய் அவனை ஏறிட்டாள்.

''மாடி தேடி வந்த மீல்ஸை நல்லாத்தான் சாப்பிட்டிருந்தே...'' அவன் சிரிக்காமல் சொல்ல, வான்மதி வாய்விட்டு சிரித்தாள்.

''ம்ம்... வயிறைக் காய போடுவானேன்?''

''அதுசரி - இப்ப வயிற்றுக்கு காபியும் காரப்பணி யாரமும் தரலாமா?''

''ஷுர்.''

மேஜையின் எதிர் எதிராய் இருவரும் அமர்ந்து சாப்பிட்டது அவளுக்குப் பிடித்திருந்தது -

இதென்ன முரணான உணர்வுகள்?

ஒரு நேரம் வசீகரனுக்கு முதுகு காட்டி ஓடுவதும் மறு நேரம் அவனருகே இருப்பதை ரசிப்பதுமாய்?

குழம்பியபடி டிபனைக் கொறித்தாள்.

''என்ன மதி.. ஒரே டைரி - வாசிப்பா?''

''ம்ம்... அங்கும் இங்குமாய்...''

''சிறப்பான வாழ்வு எது தெரியுமா? ஆரோக்கியமான உடல்நலமும் மோசமான ஞாபகசக்தியும்தான்.''



கையில் ஆவிபறக்கும் தேநீர் கோப்பையை எடுத்தவள் அவன் சொன்னதை உள்வாங்கி விழி விரித்தாள் -

''பயங்கரமான தத்துவத்தைச் சொல்றீங்களே?''

''அது என்னுதில்லை. 'ஸென்' தத்துவம்'' - இதமாய் சிரித்தான்.

''மற, மன்னின்னு சொல்லுது இல்லையா? பழசை எல்லாம் மறந்து நிகழ்காலத்தில் லயிக்கலாம்தான்... ஆனால்...''

என் தவிப்பு உனக்குப் புரிகிறதா என்பது போலப் பார்த்தாள் -

'நிச்சயமாய்' என்ற பாவனையில் அவன் தலையசைத்தான்.

அந்தப் பரிவைப் பயன்படுத்தி இவள் சில தகவல்களைச் சேகரிக்க முயன்றாள்.

''நீங்க இந்த எஸ்டேட்டிற்கு வந்தப்ப... யார் மானேஜராய் இங்கிருந்தது?''

புருவம் சுருங்க யோசித்தவன் -

'பெயரெல்லாம் நினைவில்லை...' என -

''அடடே - மோசமான ஞாபகசக்தி. குட்'' என்றிவள் பாராட்ட, வாய்விட்டு சிரித்தான். மனந்திறந்து ரசித்த சிரிப்பு!

''மானேஜர்களுக்கு மாமாவின் கோபத்தைத் தாக்கு பிடிக்க முடியலை - அடிக்கடி மாறியதால் என் நினைவிலும் யாரும் பதியலைன்னு நினைக்கறேன் - ஆனா மாமாக்கும் பொறுமை குறைவுதான்.''

அந்த 'க்கும்' மில் அவன் தந்த அழுத்தம் வான் மதியைக் குத்தியது. ஆனால் வசீகரனின் விழிகளில் தெறித்த விஷமம் இவளுக்குள் சிரிப்பை உண்டாக்க -

''எனக்கும் பொறுமை போதாதாக்கும்? அதான் ரெண்டு 'ஸாரி' சொன்னேனே?'' குறைபட்டாள்.

''என்ன, ஏதுன்றது புரியாமல் கோபப்பட மாட்டீங் கன்னா இன்னும் நிம்மதியாய் இருப்பேன் - ரெண்டு 'ஸாரி'யை வச்சு நான் என்ன பண்றது?''

''ம்ம் - கட்டிக்கறது...'' - கல்லூரித் தோழிகளிடம் வாயாடிக்கும் நினைவில் சொல்லிவிட்டு, பின் சற்று அசட்டுத்தனமாய் வழிந்தாள்.

''அது எனக்கு அத்தனை பொருத்தமாயிராதுங்கறது என் அபிப்ராயம்'' என்றவன் மறுபடி விஷயத்திற்கு வந் தான் -'' மானேஜர்களில் சுந்தர் ராஜன்னு ஒருத்தர் எனக்கு நினைவிருக்குது. மாமாவின் எதிர்பார்ப்பிற்கு கோபத் திற்கு ஈடு தந்து ஓரளவு தாக்குப் பிடிச்சவர் அவர்தான் - அவருக்கு அறுபது வயசானதும் அவர் விலக, அதற்குள் ஓரளவு எஸ்டேட் வேலைகள் எனக்குப் புரிஞ்சிருந்ததால் நானே பொறுப்பேற்றுகிட்டேன்.... கேரளா எல்லையி லிருக்கும் இங்கே தொழிலாளர் யூனியன் ரொம்ப வலிமையாயிருக்கும்... 'எல்லாத்தையும் வித்துட்டுப் போயிடலாமா?'னு வெறுக்குமளவு யூனியன் நமக்குத் தலைவலி திருகுவலியெல்லாம் உண்டாக்குவாங்க - சில சந்தர்ப்பங்கள் ஆபத்தாய் கூட வரும்...''

''அப்பா பிறகும் ஏன் தன் வாழ்நாளெல்லாம் இங்கேயே இருந்தாங்க?''

''முதலாளியின் கண்ணும் காலும் பட்டால்தான் ஒரு தொழில் விருத்தியாகும் என்பதில் மாமாக்கு மட்டுமல்ல



எனக்குமே உடன்பாடுதான் - ஈடுபாட்டுடன் கவனித் தால் லாபம் மட்டுமில்லை... ஆர்வமும் பெருகிடும். இல்லைன்னா நானும் கூட வெளியே வேலை தேடி யிருக்கக் கூடுமே..''

''நல்லவேளை அப்படி ஆகலை... நீங்களும் போயிருந் தால் அப்பாவின் நிலைமைப் பரிதாபமாயிருக்கும்...''

''அவர் அதில் ரொம்பக் கவனமாயிருந்தார் - முதுமைக் காலத்தில் பிறர் தன்னை அலட்சியப் படுத்தக் கூடாது என்பதற்காயும் கூட மாமா ஆக்ரோஷமாய் நடந்துகிட் டார்... வேலையாட்களை சதா அதட்டுவார்...''

''முதுமை வாழ்வின் முடிவல்ல; அது ஒரு பருவம் அதை இனிமையாய் அனுபவித்து வாழ முடியும்'னு ஒரு அனுபவஸ்தர் சொல்லியிருக்கார்...''

''புரியுது - அதை நீயே சொல்லக்கூடிய பருவ மில்லையே உனக்கு.'' இருவருமே சன்னமாய் புன்ன கைத்தனர்.

''அப்பா சற்று கடுமையான மனுஷர்தான்... பொறுத்து இங்கேயே இருந்ததற்காய் நான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.''

''அந்த அநாவசிய தனிமைப் பற்றி நானும் அவ்வப் போது மாமாவிடம் பேசியதுண்டு...''

''என்னன்னு?''

''வான்மதியை இங்கே அழைச்சுக்கலாமேன்னு. ஆனா அவர்...''

இவள் மூச்சைப் பிடித்தபடி கவனித்தாள் -

அவன் கனைத்தபடி தொடர்ந்தான் -

"மதிக்குட்டி இங்கே படிக்கக் கூட முடியாது. பேசிப் பழக அவ வயசுப் பெண்கள் கிடையாதுன்னுவார்..."

"அதற்காய் அப்பா இருந்ததே கூட தெரியாதபடியா?... விடுமுறை சமயமேனும் நான் இங்க வந்து... அப்பாவைப் பார்த்திருக்கலாம்.." சொன்னவளின் குரல் பிசிறடித்தது.

"அப்படியும் சொன்னேனே... அவமானத்தை வலிய தேடிக்க சொல்றியான்னு கூச்சலிட்டு என்னை அடக்கிடுவார்..."

மகளை அவமானமாய் கருதினாரா... அவள் முகம் கறுத்தது. "ஸாரி மதி. நான் தெளிவாய் சொல்லலைன்னு நினைக்கறேன். இறந்த மூத்த அத்தையும் இங்க நிறைவாய் வாழலை... குழந்தையில்லாத குறையோட அவங்க இறந்த பிறகு வந்த உங்கம்மாவும் இங்கே மகிழ்வாய் இல்லை... சொல்லாமல் அவங்க... விலகினது மாமாக்கு பெரிய அடி..."

'ஓடிப் போன'தை நாசூக்காய் விலகினது என்கிறான்.

"ஆக இந்த இடம் பெண்களுக்கானதல்ல என்பது மாமாவின் கணிப்பு. எங்கம்மா - அதாவது மாமாவின் ஒன்றுவிட்ட அக்கா வர்றது, தங்கறது கூட அவருக்குப் பிடிக்காது -

"நீ கிளம்பு ரமணி - இந்தக் காட்டுல உனக்கென்ன வேலை?'ன்னு விரட்டுவார் - தவிர அன்று டி.வி., போன் வசதிகளும் கிடையாதே..."

"ஆனா தாயற்ற எனக்கு அப்பாவேனும் இருந்திருந்தால் பெரிய ஆறுதல், பலம்."

"மகளைப் பார்க்க, பழக அவருக்கு ஆவல் இருந்தது மதி. ஆனா அஞ்சி அடக்கிட்டார்..."



"அப்படியென்ன பயம்?" - சற்று கோபத்துடனேயே கேட்டாள்.

"பிரிவின் வலியை எண்ணி அஞ்சினார்... எங்கம்மா மாமாவை மறுகல்யாணம் செய்துக்க சொன்னாங்க... மும்முரமாய் பெண் கூட தேடினதாய் ஞாபகம் - ஆனா மாமா நிர்தாட்சண்யமாய் அந்த யோசனையை கிள்ளி எறிஞ்சிட்டார் - 'வர்றவளுக்கும் கஷ்டம் - அவ ஓடினதும் எனக்கும் வேதனை... ஆறாத ரண வேதனை - என்னை விட்டுரு ரமணி'ன்னு மாமா கத்தின பிறகு அம்மாவும் ஒதுக்கிட்டாங்க. மாமாக்கு வந்த டயாபடீஸ் கூட ஸ்ட்ரெஸ் - இன்ட்யூஸ்ட்ன்னர் டாக்டர்... அதாவது..."

"புரியுது. மனதின் அதிர்ச்சியை உடம்பால் தாள முடியாமல் புரள்றது."

"ரைட், மன அழுற்சிதான் அவரது பக்கவாதத்திற்கும் காரணம் - ஆக உன்னை ஒதுக்கிட்டு நிம்மதியாய் இருக்கலை அவர்."

வான்மதிக்கு தொண்டை அடைத்தது... தொடர்ந்து பேசுவது சிரமமாய் பட, மெள்ள எழுந்தாள் -

"வெளியே போகணுமா மதி?"

"இல்லை... என் அறைக்குதான்..."

ஆக ஷ்யாம் என்ற மானேஜரை வசீகரனுக்குத் தெரியவில்லை. அம்மா இங்கிருந்து கிளம்பினதும், அப்பா அந்த மானேஜரை விரட்டியடித்திருக்க வேணும்...

அப்பாவின் டைரியை புரட்டி ஷ்யாமின் பெயரைத் தேடினாள் - தட்டுப்பட்டது.

* *'ஷ்யாம் வேலையில் எப்படியோ மற்றதில் கைகாரன்தான் - என் குட்டிம்மா கூட அவனை*

'ஷியாசர்'ன்னு கூப்பிட்டு பின்னாடியேல்ல போகிறாள்? எஸ்டேட்டில் அவனை 'ஷியாம் ஸர்' என்று பிறர் அழைப்பதைக் கேட்டிருப்பாள் போலும். பெற்றவனை ராட்சசனாய் எண்ணிப் பம்மும் குழந்தை எவனிடமோ ஒட்டிக்கொண்டு....

எனக்கு இனிக்க இனிக்க பேசத் தெரிய வில்லைதான்...

அப்படிக் குழையும் ஷ்யாமை, தாயும் மகளும் எறும்பாய் மொய்க்கிறார்கள்... அவன் தோளில் தொற்றிக் கொண்டு சவாரி செய்யும் குட்டிம்மா என்னை அரைப் பார்வையாய் பார்க்க எனக்குள் வலிக்கிறது...'

வாசித்தவளுக்கு நெஞ்சு அடைத்தது -

இது உறவின் விசித்திர பின்னல்... அம்மெல்லிய இழைகளை துளி தப்பாய் கொண்டு போனாலும் சிக்காகி விடுகிறது - பிரிக்கவே முடியாமல் அறுக்குமளவிலான சிக்கல்..!

✱ 'நான் சந்திராவை எல்லா வகையிலும் திருப்தி படுத்தப் பார்க்கிறேன் - ஆனால் என்னைக் காமந் தான் என்று பழிக்கிறாள்! பெண்கள் கடுமையான புதிர்தானோ? நான் என்ன சொல்கிறேன்?

'நாம சம்பளம் தரும் வேலைக்காரன் ஷ்யாம் - அவனோடு சேர்ந்து சுத்தாதே - முறையில்லை அது. சதா எதையோ வாசிச்சிட்டும், கிறுக்கிட்டும் உட்காராமல் எழுந்து வீட்டு வேலைகளைப் பார் - இல்லை என்னோடு வந்து எஸ்டேட் கணக்குகளை சரிபார்க்க உதவு. பெண் தொழிலாளர்களை விசாரி. பொழுது பழமட்டம் நழுவும் என்றுதானே?



அதென்ன அத்தனை சிரமமா?

மூஞ்சைத் தூக்கி வைத்து, கண்கள் சிவந்து வீங்குமளவு அழுவதற்கான கொடுமையா?'

## 18



✱ 'காதல் ஒருவர் மீது ஒருவர் வைக்கும் நம் பிக்கை.

நம்பிக்கை ஏமாற்றுவதில்லை.'

இது... இதுவா அர்த்தமில்லாத கவிதை?

ஜீவா அப்படித்தான் கத்தறார்.

'இதெல்லாம் கிளுகிளுப்பான கிறுக்கல், குப்பை - இதையெல்லாம் வாசிச்சு வாசிச்சுதான் உம்புத்தி குப்பை மேடாயிடுச்சு - தூக்கி எறி'ன்னு.

'நீங்க என்னைய நம்பலையான்னு' அவரக் கேட்டு இந்த ரெண்டு வரியை வாசிச்சதுக்குத்தான் இந்தத் திட்டு.

காதலும் கவிதையும் புரியாத இந்த மனுஷன் ஏன் கொலை செய்ய மாட்டார்? தாரிணி சொன்னது ஏன் உண்மையாயிருக்கக் கூடாது?'

நெஞ்சம் படபடக்க தாயின் எழுத்துக்களை வாசித்தாள் மகள்.

யாரிந்த தாரணி - அவளைப் பற்றி யாரிடம் விசாரிப்பது என்று தயங்கியது போக, இப்போது அவளைப் பற்றிய

விவரங்கள் தன் கைக்குள் - எம்பித் துடித்த நெஞ்சை இடது கையால் அழுத்தியபடி வாசிக்கலானாள் வான்மதி...

அன்று காலை வசீகரன் அவளை வலுக்கட்டாயமாய் டவுனிற்கு அழைத்துச் சென்றிருந்தான் - ஒன்றேகால் மணி நேர குலுங்கல் பயணத்தில் உடல் சற்று நொந்தாலும், டவுனின் மனிதக் கூட்டமும், சிரிப்பும் கலந்த சளசளப்பும், வண்ணத் துணிகளோடு ஆடிய சின்னக் கடைகளையும் பார்த்தவள் உற்சாகமானாள்.

"இதுதான் மெயின் ரோட்" - இருமருங்கும் வரிசையாய் கடைகள் இருந்த சாலையில் ஒரு முறை காரை ஓட்டியவன் ஒதுக்கி நிறுத்தினான்.

"குமுளி சின்ன ஊர் - ஒரே கடைத் தெருவிற்கு நிறைய நகைக் கடைகள் இருக்குதே?"

"நீங்க தாராளமாய் வாங்கத்தான்."

"நோ நோ..." என்னிடம் நகை வாங்குமளவு ஏது காசு என்று சொல்ல நினைத்ததை அடக்கியவள் "எதற்கு அநாவசியமாய்?" என்றாள்.

"பார்ப்பதற்கு என்ன தடை?"

"தேவையில்லாமல் பார்ப்பானேன் - சும்மா ஒரு நடை சுற்றி வர்றேன் - நீங்க உங்க வேலையை முடிப்பதற்குள்."

"ஒரு மணி நேரமேனும் ஆகும் மதி - நம்ப ஏலம், கிராம்பின் விளைச்சலின் 5% இங்குள்ள ரீடெய்ல் கடைகளுக்கும் சப்ளை பண்றோம். தேக்கடி பகுதிக்கு சுற்றுலா பயணிகள் அதிகம் வர்றதால உடனே வித்துடும் -"

"இங்கே வந்து வாசனைப் பொருட்கள் வாங்குவாங்களா?"



"தரம்தான் காரணம். நாலாய் போட வேண்டிய பதார்த்தத்திற்கு ஏலக்காய் ரெண்டைத் தட்டிப் போட்டாலே போதும்..."

"போதும் போதும்" - சிரித்தாள் - "என்னிடமே வித்திடுவீங்க போல?"

"ம்ஹூம்" - வருத்தமாய் தலையாட்டினான் - தங்க நகைகளையும் பார்க்க மறுக்கும் தங்களை கேவலம் ஏலக்காய் வாங்கத் தூண்டக் கூடுமா அடியேன்?"

உல்லாசமான ஒரு கையசைப்புடன் வசீகரன் நகர, இவளும் நடக்கலானாள் - சின்னதாயிருந்தாலும் சிங்காரமாய் தோன்றிய ஆபரணக் கடைகள் இவளை ஈர்த்தன.

சுசீலாவின் தயவில் அபூர்வமாய் ஜவுளிக் கடைகளை விஜயம் செய்திருந்தாலும், நகைக் கடைகளின் ஜொலிப்பை எட்ட நின்று வியந்ததோடு சரி - நெருங்கி விசாரித்ததில்லை.

தயங்கி ஒன்றினுள் நுழைந்தாள்.

வரவேற்றவருக்கு ஒரு கூச்சப் புன்னகையைத் தந்துவிட்டு தங்கத்தின் அணி வகுப்பில் பார்வையை ஓடவிட்டாள். கடையில் வேறு எவருமில்லை என்பதால் முதலாளி இவளிடமாய் நின்றார் -

"என்ன டிஸைனில் பார்க்கணும் மேடம் - கம்மலோ நெக்லஸோ?"

"ச்சும்மா... இங்குள்ள டிஸைன்ஸ் பார்க்கறேன்."

"தாராளமாய் - பிடிச்சதைச் சொல்லுங்க - காணிச்ச தாரம்."

"தாங்க்ஸ்."

வான்மதியின் காதில் ஒரு சிறு தங்க வளையம்தான் - கழுத்தில் மெல்லிய செயின். பள்ளி காலத்தில் இவளுக்கு தங்க வளையலெல்லாம் கிடையாது. யாரோ பெரியம்மா விடம் அடகு வைத்து இழந்த தட்டை வளையல் ஒன்று சில வருஷங்களுக்கு முன் இவள் கைக்கு வந்தது.

'வெறும் கண்ணாடி, ரப்பர்னு நீ போடறது சிலதுங்க கண்ணை உறுத்திடும் - உன்னைய பஞ்சத்துல விட்டு வச்சிருக்கதாய் பேசங்க - எதுக்குக் குறை' என்றபடி வைரமணி செய்திருந்த ஈகை அது.

சிறு முத்துத் தோடு போட்டுக் கொள்ள வேணுமென்ற ஆசை வான்மதிக்கு முகத்தை மென்மையாகவும் நாகரீக மாகவும் காட்டும் வித்தை முத்திற்கு இருந்ததாய் அவளுக்கு ஒரு கணிப்பு. நாலைந்து தினுசு முத்து தோடு களில் தனக்கு நேர்த்தியாய் பட்டதை சுட்டிக் காட்டி -

"இது எவ்வளவு இருக்கும்...?" என்றிவள் கேட்டதும் பாய்ந்து அதை கண்ணாடிக் கூண்டிலிருந்து வெளியே எடுத்தவர் கால்குலேட்டரில் தட்டி -

"நாலாயிரத்துக்கு உள்ளேதான் மேடம்" என்றதும் இவள் திகைத்தாள்.

அரைப்பவுன் சமாச்சாரமே இவ்வளவு எனில் விளம் பரங்களில் பட்டையும், சரமுமாய் மினுங்கும் வகைகள் லட்சக்கணக்கில் இருக்கும் போல என்பது புரிந்த பிரமிப்பு!

"இந்தத் தோட்டிற்கான நெக்லஸை நீங்க பார்த்தா உடனே பில் போடச் சொல்லிருவீங்க..." உற்சாகமாய் ஷோ - கேஸிலிருந்து ஒரு கருநீல வெல்வெட் சதுரத்தை எடுத்து அவள் முன் வைத்தார் - வெளியே நின்று பார்க்கும்



பார்வையாளர்களை தூண்டிலிட்டு உள்ளே இழுப்பதற் கான தூண்டில் போலும் அது... அமர்க்களம்தான்... அதில் பதிந்த கண்களை அவளால் பறித்தெடுக்க முடிய வில்லை.

மிக நளினமாய் பின்னப்பட்ட தங்கக் கொடியில் ஆங்காங்கே மல்லிகை மொட்டு விட்டதுபோல அமைப்பி லிருந்தது அந்த ஆபரணம்.

"கம்மலும் நெக்லஸுமாய் சேர்ந்து மூணே பவுன் - இருவது முத்துக்கள்."

மறுபடி கால்குலேட்டரின் அவரது விரல் கோழி இரை கொத்துவது போல கொத்த, குறுக்கிட்டாள்.

"ரொம்ப அழகுதான்... ஆனால் இப்ப வேண்டாம்... நான் பிறகு வர்றேன்." - அவர் வேறேதும் சொல்லுமுன் கிளம்பியும் விட்டாள்.

முதன் முறையாய் கையில் பணமிருந்தால் வாழ்க்கை மேலும் ரசிக்கக் கூடியதாய் இருக்குமோ என்றொரு நினைப்பு!

சோமுக்குட்டிக்காய் சில சாக்லெட்டுகளை வாங்கி னாள். சகாயவிலையில் தேநீர் கோப்பைகளைக் கண்டதும் அதிலும் ஒரு செட் வாங்கிக் கொண்டாள் -

'சாய் குடிக்க கப்தன்னேம்மா வசதி - ஆனா விருந்தாள் வரப்போ புழங்க நல்ல செட் மட்டுமே வீட்டுல உண்டு. ஆக எங்களுக்கு டம்ளர்லதான் சாய்' என்று சொர்ணா சொன்னதுண்டு.

இந்தக் கோப்பைகளைக் கண்டால் வேலையாட்கள் எப்படி மகிழ்வார்கள் என்ற நினைப்பிலேயே இவள் முகமும் மலர்ந்தது -

'ஈத்துவக்கும் இன்பம்' - புரிந்தது!

அங்கேயே கருநீலத்தில் வெள்ளி நட்சத்திரங்களுட னான ஒரு கனத்த கோப்பையைக் கண்டவளுக்கு அது வசீகரனின் கையில் கச்சிதமாய் இருக்கும் எனப் பட்டது. மொத்த செட்டிலிருந்து இவர்களுக்காய் உருவப்படும் கோப்பைகள் உடைந்தாலும் போச்சு. அவன் தினம் இருமுறை பருகும் கப் தன் பரிசாய் இருந்தால்...?

தன் ஞாபகம் அவனில் மங்காதிருக்குமே...

அருகே ஜோடி போல ரோஜா வர்ணத்தில் பொன், பூக்களோடு நின்ற கோப்பையையும் சேர்த்தே வாங்கிக் கொண்டாள்.

பொன் வைக்கும் இடத்தில் பூ போல, பொன் நகை வாங்க இயலாவிட்டாலும் சிறிய பயனுள்ள ஒரு பொருளை தனக்காயும் வாங்கிக் கொண்ட திருப்தி.

ஆனால் ஊர் திரும்பும்போது இந்த பீங்கான் கோப் பையை பத்திரமாய் எடுத்துக் கொண்டு போவது சிரமம் -

போகிறது - நாற்பது ரூபாய் பொருளை இங்கேயே விட்டுப் போவது - முழு சொத்தையே வசீகரனிடம் விட்டுப் போகப் போகிறாள்.

அவன் மனைவியாய் இந்த எஸ்டேட்டிற்கு வருபவள் பயன்படுத்திக் கொள்ளட்டும்...

இந்த நினைப்பில் அதுவரை குமிழிட்ட பாலாயிருந்த உற்சாகம், துளி எலுமிச்சஞ் சாறு விழுந்த ரீதியில் திரிந்து முறுகியது!

அது ஏன் என்று ஆராயத் துணியாமல் வேறு சில கடை களை ஏறி இறங்கினாள். காஷ்மீர பாணியில் உருவான



சில வெள்ளி நகைகளின் விலை கூட ஆயிரங்களில்தான். ஆக வீட்டில் உள்ளோர்களுக்காய் நேந்திரம் சிப்ஸ், இனிப்பு என்று வாங்கியவளை, வசீகரன் எதிர் கொண்டான்.

''என்ன பிடிச்சது போல் ஏதேனும் பார்த்தியா?''

''பார்த்ததை வாங்கியாச்சு.''

''குட் - 'மிக்கி'ன்ற கடையில் நல்ல ஸாரிஸ் கிடைக்கும்.''

''வேண்டாம், வசீகர். இப்பதான் பெரியம்மாவும் சுசீயும் நிறைய பரிசுகளாய் வாங்கித் தந்தாங்க.''

மேலும் ஏதோ சொல்ல வந்தவன், வார்த்தைகளை விழுங்குவதாய் பட அவனைக் கேள்வியுடன் ஏறிட்டாள்.

''காரில் உட்கார் மதி. சில சாமான்கள் வர பத்து நிமிஷமாகும்.'' என்றவன் அவளை உட்கார வைத்துக் கையில் ஒரு ஐஸ் க்ரீமைத் தந்து சென்றான்.

இங்கு இதமான சீதோஷ்ணம்தான் - ஆனாலும் நடந்து திரிந்ததில் தொண்டை வறண்டிருந்ததுதான் - அது புரிந்தது போலிருந்த அவனது உபசரணை மனதையும் குளிர்வித்தது.

ஓரிரு கடைகளில் அவன் நின்று பேசியதையே கண்ணெடுக்காமல் பார்த்திருந்தாள் -

பத்தாம் நிமிஷம் திரும்பியவன் காரைக் கிளப்பியபடி கேட்டான்.

''ஏன் - இன்று நான் விநோதமாய் தெரியறேனா மதி?''

''ல்லையே - ஏன்?''

''என்னையே பார்த்தே.''

''பொய்.''

"எப்படிப் பொய்யிங்கறே?"

"வந்து நீங்க எம்பக்கமாய் பார்க்கலையே.." சொல்லும் போதே அவளுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டது!

அங்கு புறப்பட்ட சிரிப்பு அவனையும் தொற்றிக் கொண்டது.

"பார்க்கலைதான் - ஆனால் முதுகு குறுகுறுத்தது."

சோமுக்குட்டி பின் தொடர்ந்த போது தனக்கு ஏற்பட்ட உணர்வு அவளுக்கு ஞாபகம் வர, எண்ணங்கள் எங்கெங்கோ பறந்து படபடத்தன. தாரணியைப் பற்றி கேட்கலாம்... ஆனால் இந்த சகஜமான பேச்சும் சிரிப்பும் தொலையும்... என்றெண்ணி அடக்கிக் கொண்டாள். மாற்றம் அவளை அசத்த உறங்கி எழுந்தவள் மறுபடி தாயின் குறிப்பேட்டில் நுழைய, தாரிணி பற்றிய தகவல் இருந்தால் மிக ஆர்வமாய் வாசிக்கலானாள்...

✱ *தாரிணியை ஜீவாவுக்குப் பிடிக்காது.*

*'அருணா இறந்ததுமே இந்தப் பொம்பளைய வேலையிலிருந்து தூக்கி வீசியிருக்கணும் - நம்ப முன்னேக் குழைஞ்சு கும்பிடு போட்டாலும் எம் முதுகுக்குப் பின்னே அவ நிக்கிற, பேசற தோரணையே வேறன்னு அவ முகமேச் சொல்லுது - கபடக் கண்ணு'ணுவார்.*

*ஆனா எனக்கு மத்தபடி பொழுது நகராதே!*

*தாரிணி பேசினா நாளெல்லாம் கேக்கலாம்... அது பொய்யா, 'மெய்யான்னு பிரித்தறிய முடியாது.. ஜீவாட்ட அதெல்லாத்தையும் சொன்னா - 'கற்பனைக்கு உயிரூட்டுவது விபரீதம்'ணுவார் - தாரிணி கற்பனையாச் சொல்றது நிஜம் போலவேத் தான் இருக்கும்... எனக்கு வெறுமே சுவாரஸ்யமா யிருக்கும் - அவ்வளவுதான்.*

*ஆனா அவ அங்க இங்க சுத்தி, பிறகு மூக்கைப் பிடிச்சுத் திருகினாப்பல சொன்ன அந்த விஷயம்... ரொம்ப ஷாக்காயிட்டேன்..*

*தாரிணி சொன்னா.*

*'அருணாம்மா, அதான் ஐயாவோட மூத்த தாரம், எப்படி செத்தாங்கன்னு ஐயாட்ட கேட்டிருக்கீங் களான்னா...*

*'ல்லன்னேன்' - இறந்த மூத்த மனைவி பற்றி லேசு பாசாய் சொல்லியிருக்கார் - நாலைஞ்சு வருஷம் சேந்து வாழ்ந்து, செத்தவளைப் பற்றி நாங் கேட்டுக் கிளறினதில்ல... நா நைலக்ஸ் கட்டிட்டு அடுப்புப் பக்கம் போகக் கூடாதுன்னுவார் - 'அருணா தீப்பிடிச்சு செத்ததில் எம்மனசும் பல காலம் கருகிக் கிடந்தது'ம்பார்...*

*'கேட்டாலும் அவரு எப்படி சொல்லுவார்... அது கொலைன்னு?' தாரணி சொன்னது முதலில் எனக்குப் புரியலை. துளைச்சு கேட்ட பிறகு காதுக்குப் பக்கத்துல வந்து ஓதினா:*

*'இங்க வேற யாரும்மா கொல்லணும்? எல்லாம் கட்டினவருதான்' என்று அவ சொல்ல எனக்கு மூச்சுத் திணறிடுச்சு.*

*எட்டு மணிக்கு மேலே மின் வெட்டு... மங்கின வெளிச்சத்துல தாரணி தன் மை இழுவிய கண்ணை உருட்டி கிசுகிசுத்தபோது எனக்குப் பிடரியில கூசினது!*

'முதலாளியையுங் குத்தஞ் சொல்ல முடியா தும்மா - பெரியவங்க யாருமில்ல, அருணாம்மாக்கு 'இஸ்டீரியா'ன்னு ஏதோ கோளாறு உண்டாம்.'

'ஹிஸ்டீரியாவா? கூச்சலாய் அழுது ஆர்ப் பாட்டம் செய்வாங்களா?'ன்னேன்.

'அடிக்கடி அழுகதான். நாலைஞ்சு வருஷம் போயும் குழந்தையில்லாதது ஒரு பொண்ணுக்குக் குறைதான்? ஆம்பளைங்க அத வெளிக் காட்டிக்க லன்னாலும் அவங்களுக்கும் உள்ளே உதைக்கும். தன்னால ஏலலை... பெண்டாட்டி அழுது கரை யறாளேன்னு பயமிருக்கும். ஆக அவங்களுக் கிடையே உறவு கசந்திருச்சு. அப்பப்ப கடிச்சு, பிறவு கூடிக்கிறதுதான் பொதுவாய்... ஆனா இந்த அத்துவானத்துல சிறுசாய் ஆரம்பிச்ச சண்டை பிறகு வலுத்து... கொலையில முடிஞ்சது.'

எனக்கு அப்படி ஜீவாவை விட்டுத் தர முடியல. கேட்டேன்:

'அதென்ன அப்படிச் சொல்ற தாரணி? கொலைன்னா போலீஸ் விசாரணை இராதா? ஊரார் பேசுவாங் களே... பிறகு என்னைய இவர் எப்படி கல்யாணங் கழிச்சு கூட்டிட்டு வர முடிஞ்சது?'

'இதென்ன ஊரா? அவரு சொத்து, தனி சாம் ராஜ்யம் ஆக யாரு கம்ப்ளேண்ட் தருவா? பிறகுல்ல போலீஸ்ு விசாரிக்கும்?

'எங்கண்ணாட்டி தீயில கருகிட்டா'ன்னு ஐயா புலம்ப, மக்களும் வந்து பூத்தூவிட்டுப் போயாச்சு.'

'தீப்பிடிச்சது எப்படி தாரிணி? சமைக்கும் போதா?'



'தோ இந்நேரத்துக்குத்தான் - நாம மெழுகுத்திரி, சிம்னி தயவுலதான நடமாடணும்? ஆக அதை லேசாய் விபத்துன்னாச்சு..'

'அது ஏன் நிசமாலுமே விபத்தாயிருக்கக் கூடாது?'

தாரிணி மேலும் நெருங்கிக் குனிந்தாள் - திரியின் ஜுவாலையில் அவ கண்ணு மர்மமாய் ஜொலிச்சது... எனக்கு வியர்த்துப் போச்சு.. ஆனாலும் கவனமாக் கேட்டேன் -

'அகஸ்மாத்தாய் சேலை, துண்டுல நெருப்புப் பிடிச்சா, தட்டியோ, உருண்டோ அமத்திடலாமே... நொடியில உயிர் போகணும்னா மண்ணெண் ணெய் ஊற்றி, அது ஊறவும் ஒரு சுடர் 'இப்படி'ன்னாப் போதுமே அவ விரலைச் சொடக்க எனக்குள் நடுங்கினது.

'பிசாசாட்டம் தீ பரவி தின்னுப்பிடாது?'

'இவரு... ஜீவா நிச்சயம் கொசினை ஊத்தி யிருக்க மாட்டாரு...'

யாரிடமும் நான் ஜீவாவை விட்டுத் தர மாட்டேன்.

'மனசொடிஞ்சு.. இனி இருந்துதான் என்னன்னு கிடக்கிறவ கைக்கு எட்டறாப்பல சீமெண்ணைய வச்சாச்சு... தீயும் என்னையத் தொட்டுக்கோ தடவிக்கோன்னு ஆடி ஆடி எரியுது - அப்ப இதுவும் கொலைதான?'

ஷ்யாமிட்ட இது பற்றி பிறகு கேட்டேன் - வேறு யாரையோ பற்றி விசாரிக்கறது போல -

அவரு 'தற்கொலைக்குத் தூண்டுவதும் குற்றம் தாங்க - அதை 'அபெட்மெண்ட்'னுவாங்க - இ.பி.ஸி. செக்ஷன் 306ன்படி அது குற்றம் - உதாரணமாய் வரதட்சணை கொடுமையில் மருமகளே தற்கொலை பண்ணிக் கொண்டாலும் அதற்கான குற்றவாளிகளாய் அந்த மாமி, மாமனாரைத்தான் சட்டம் தண்டிக்கும்னு விவரிச்சாரு...

வாசித்த வான்மதியின் உதடுகள் உலர்ந்திருந்தன - கைகள் உதறின. தன் அப்பா கொலையாளியா... கொலைக்கு தூண்டுதலாய் இருந்தவரா?

படத்தில் கண்ட அவர் முகத்தை மனதுள் கொண்டு வந்து ஆராய்ந்தாள்.

அது கனிவான இளகிய முகம் அல்ல...

ஆனால் கொடூரத்தனமானதும் இல்லையே...

வசீகரமான அம்முகத்தில் வக்கிரமோ வஞ்சகமோ நிச்சயம் இல்லை.

அந்நேரம் கதவு தட்டப்பட்ட, ஒரு திடுக்கிடலுடன் டைரியை மூடி விட்டு, கதவைத் திறக்க எழுந்தாள்...

# 19



'எல்லாத் தண்ணீரையும்

இறைத்து முடித்தும்



கிடைக்கவேயில்லை

கிணற்று நிலவு..'

கலைந்த கூந்தலைப் பிரித்து சீவியபோது என்றோ ரசித்த கவிதை மனதிற்குள் வந்து சிரித்தது. இவளும்தான் அங்கும் இங்குமாய் தவ்வித் தாண்டி தேடுகிறாள் - விவரங்களை இறைத்து இறைத்துப் பார்த்தாயிற்று. மிஞ்சியது குழப்பங்களே..

இறைத்த அலுப்பிலும் கிடைக்காத ஏமாற்றத்திலும் நிலாவைக் கோபித்து என்ன பயன்?

குற்றம் நிலாவினது அல்லவே.

வானத்து சந்திரனைக் கேணிக்குள் தேடியவளின் புத்திக் கோளாறு அது!

தாய் தந்தையிடம் பேசிப் பழகியிராத இவள், அவர்கள் ஏதோ உணர்வு வேகத்தில் எழுதிய சில பக்கங்கள் மூலம், அவர்களை அறியக் கூடுமா?

படுக்கையில் சுருண்டு வாசித்திருந்தவளை சொர்ணாவின் அழைப்பு எழுப்பியது - பிறகுதான் இரவு உணவிற்கான நேரமது என்பது புரிந்து பதறினாள் வான்மதி -

''என்னம்மா பசிக்கலையா? படுத்திருந்தீங்க போல - மேலுக்கு சுகமில்லையா?''

''நேரம் போனதேத் தெரியலை... எட்டேகால் ஆச்சே... தே அஞ்சே நிமிஷத்துல வர்றேன் - கீழ ஸார் காத்திருக்காரா?''

''பின்னெ? இப்பல்லாம் ஸார் 'டான்' எட்டு மணிக்கு உன்ண வருன்னது.. நீங்க வராததால ஏதோ போன் பேசறார்.''

"தோ வந்துட்டேன்."

"பட்டலரை வரச் சொல்லி உங்களுக்கு மொகல் பிரியாணி தயாரிக்கச் சொன்னார் ஸாரு... உங்களுக்குப் பிடிச்சதாய்..." முடிக்காமல் முழுங்கினாள் சொர்ணா.

"எனக்கும் பசிக்குதுதான்" என்றபடி முகத்தைக் கழுவித் துடைத்தவள், துளி பவுடரை வாசனைக்காய் பூசிக் கொண்டாள். நைலான் புடவை என்பதால் உதறி மறுபடி கொசுவி செருக, நறுவிசாய் நின்றது.. அவசரமாய் பின்னியதில் காதோரம் ஒரு கற்றை முடி மட்டும் சுருண்டு தொங்க, அதைச் சரியாக்க நினைத்தவள், அது தன் முகத்திற்கு புது கவர்ச்சி சேர்ப்பதாய் பட, அப்படியே விட்டுவிட்டுக் கிளம்பினாள் -

காலையில் எல்லோருக்குமாய் வாங்கிய பரிசுப் பொருட்களுடன், இவள் படியிறங்க, வசீகரனின் முகம் ஆவலாய் நிமிர்ந்தது - தொலைபேசி பேச்சை அவசரமாய் அவன் முடித்துக் கொண்டதும் இவளுக்குப் பிடித்திருந்தது. தன்னைப் பார்க்க, பேச அவன் ஆர்வம் காட்டுகிறான் என்ற கர்வம், களிப்பு!

இடதுபுறக் கேசச் சுருளையும் அவன் கண் தவற விடவில்லை. அவன் பார்வை அதை வருடிய விதம் அவளுக்குக் கூச்சமாயும் சுகமாயும் இருந்தது -

"ஸாரி... காத்திட்டிருந்தீங்க போல - வாசித்ததில் நேரம் போனது தெரியலை...

'என்ன வாசித்தாய்' என்றெல்லாம் அவன் கேட்கவில்லை - தெரிந்ததை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவும் மனமற்றவன் போல பேச்சை மாற்றினான்.

"உனக்கு என்ன மாதிரி உணவு பிடிக்கும்னே தெரியலை மதி நீயே சொல்லிடு."



"அதிக இனிப்பும் பிடிக்காது - அதிகாரமும் ஆகாது" என்றாள் ஒரு விஷமச் சிரிப்புடன்.

"நினைவு வச்சுக்கறேன் - இந்த ஸ்பெஷல் பிரியாணியைக் கேசவன். நல்லா செய்வான் - அதான்.."

"ம்ம்... சொர்ணா சொன்னா.."

"அந்த ஓட்டை வாய் வேறென்ன சொன்னா?"

"சொல்லிடவா? கடந்த வாரமாய் நீங்க 'டான்'னு சரியான நேரத்துக்கு சாப்பாட்டு மேஜைக்கு வந்துடறீங்களாம்."

ஒரு ஆணுக்கும் கூட இப்படி முகம் சிவக்குமா?

வான்மதி வியந்து அயர்ந்தாள் - தானும் இப்படி சகஜமாய் விஷயத்தைப் போட்டு உடைத்திருக்கக் கூடாதோ? ஆனாலும் ஏன் இவன் கேலியைச் சாதாரணமாய் எடுத்துக் கொண்டு சிரிக்காமல் அவன் முகம் சிவக்க வேணும்?

மறுபடி அவனே சுதாரித்து பேச்சை மாற்றினான் -

"கையில் என்ன பார்சல்ஸ் மதி... அழகாய் 'பாக்' செய்திருக்கே?"

இப்போது இவள் முகம் வெப்பமானது - கடவுளே சிவந்து போகிறதா என்ன?

அவன் விழிகள் அதை ஆவலாய் கவனிக்கவும் வேறு செய்கிறதே.. அந்தப் பதட்டத்தில் வர்ண பேப்பரைப் பிரித்தவள் கையை உதறினாள் -

"அடடா... என்ன முட்டாள்தனம்... இது... உங்களுக்கு நான் வாங்கின பரிசு... உங்களிடம் தராமல் நானே பிரிச்சு..."

''நோ பிராப்ளம்... ஆனா எனக்கு... எனக்கேதும் இன்று...'' முடிக்க முடியாமல் நிறுத்தினான்.

''ல்ல, செட்டாயிருக்கும் கப்புகளில் இரண்டை எடுத்து நமக்கு டீ பரிமாறுறாங்க - ஒன்று உடைஞ்சாலும் போச்சு... அதான் இப்படி வாங்கினேன் - தினப்படி பயன்படுத்த.''

''நல்லது - அந்த செட் பாங்காக்கிலிருந்து வந்தது... இது எனக்கா?'' அவள் நீட்டியதை ஆர்வமாய் வாங்கிக் கொண்டான் -

''தாங்க்ஸ் மதி.. இந்த பெரிய கப் கூடுதல் டீ பிடிக்கும்.''

''ம்ம்.. குடிக்கும் போது என்னை நினைச்சுக்குவீங்க இல்லையா...'' உள்ளூர நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

ஏனிப்படி உளறிக் கொட்டுகிறேன் - என்று!

''ஒரு பெண் இருந்தால்தான் வீடு வீடாய் இருக்கும்.. இப்படி சின்னச் சின்ன கரிசனையான கவனமான மாற்றங்கள்.''

''சூடு ஆறுறதுக்குள் சாப்பிடலாம் - உட்காருங்க.'' புன்னகையுடன் பரிமாறினாள்.

''அடுத்தது இப்படி சாப்பிட உபசரிக்க எனக்காய் யாரும் இதுவரை இருந்ததில்லை - மாமா வேளைக்குச் சாப் பிடுவார். நான் பசிக்கற நேரம் வந்து எதையோ சாப் பிடுறது... சூடு, சுவையெல்லாம்... ம்ப்ச்..''

உண்ட உணவின் சூடும் சுவையும் அசத்தின.

''பிரமாதம் - எனக்காய் நீங்க ரொம்ப சிரத்தை எடுத் துக்கறீங்க...''

''அப்படியேனும் நீ இங்கேயே தங்க முடிவெடுக்க மாட்டியாங்கற சிறு நப்பாசை...''



வான்மதியின் மனம் நெகிழ்ந்தது -

இங்குள்ள தனிமை சற்று கொடுமைதான் - ஆனாலும் அதற்காய் தானும் இங்கேயே தங்குவதெனில்.

மறுபடி வசீகரன் பேச்சைத் திசை திருப்பினான் - இவளுக்கு சமைக்கத் தெரியுமா என்று கேட்டு, தன் அசுப்பை அனுபவங்களைச் சிரிக்க சிரிக்க விவரித்தான் -

சரி மற்ற பரிசு பார்சல்ஸ் என்ன, மதி?

''நம்ப கிச்சன் - ஸ்டாஃப்பிற்கும் டீ கோப்பைகள் வாங்கினேன் - டம்ளரில் டீ குடிச்சா ருசிக்கலைன் னாங்க... இது சோமு குட்டிக்கு சாக்லெட்ஸ்.''

ஒரு கணம் தயங்கினாள் தன் தாயின் படம், டைரி எல்லாம் கண்டெடுத்துத் தந்ததற்கான பரிசு இது என்பதைச் சொல்லவில்லை...

''இதெல்லாம் இருக்கட்டும் - நாளை காலை கொடுத் துக்கலாம்...''

''ஏன்...?''

''ம்ம்... ச்சும்மாதான் - அது என்ன?''

ஒரு சிறுவனின் ஆர்வத்துடன் வந்த வசீகரனின் கேள்விகளை ரசித்தாள் -

''இது எனக்கு...''

''அடடே.... அப்ப நான் பிரிச்சுத் தரேன்.''

மிக மென்மையாய் அவனது நீண்ட விரல்கள் வர்ண காகிதத்தைப் பிரிப்பதை லயித்து பார்த்திருந்தாள் -

''அட, இது என் கப்பிற்கான ஜோடி - அதாவது உனக்கு?''

பிங்க் நிற கோப்பையை இவளிடம் தர, அவசரமாய் விளக்கினாள் -

''எனக்காய் 'ஸெட்'டாக இருக்கும் ஆறு கோப்பைகளில் ஒன்றை உருவ வேண்டாமேங்கற நல்லெண்ணம்.''

''நீலமும் பிங்க்குமாய் கச்சிதமான ஜோடி - இப்ப நமக்கு இதில் டீ கொண்டு வரச் சொல்லவா மதி?''

''காலைல டவுன் போனோம் - இப்ப நிறைய சாப்பிட்டாச்சு - கண்ணைச் செருகுது... டீ வேண்டாமே.''

''சரி - அப்ப பாலை மேலே அனுப்பவா?''

இந்தக் கரிசனை அவளுக்குப் பிடித்திருந்தது.

''தவிர பால் குடிச்சு படுத்தா ஆழ்ந்து தூங்கி... காலை நீ சீக்கிரமே ஃப்ரெஷ்ஷாய் எழலாம்...''

சற்று நேரம் பேசிவிட்டு மேலேறிய போது நிஜமாகவே இவளுக்கு அசத்தியது. முன்தின இரவு போல விளக்கணையும் நள்ளிரவு வரை வாசிக்க முடியாது...

வசீகரன் ஏதோ சீக்கிரம் எழுவது பற்றி சொன்னானே...

நாளை டவுன் அல்லது எஸ்டேட்டிற்குப் போவதாய் திட்டமில்லை. பிறகேன் ஃப்ரெஷ்ஷாய் எழ வேணும்...?

ஆனால் நெருக்கிய உறக்கம் அவளை அதிகம் சிந்திக்க விடவில்லை.

சின்னமாய் கதவு தட்டப்பட்டதோ?

விழிப்பு தட்டி சற்று புரண்டவள் சோம்பல் முறித்தபடி எழுந்தாள் - மனம் லகுவாய், உற்சாகமாய் இருந்தது -

ஏன்?

காரணத்தைக் கிளறாமல் காலை கடன்களை முடிக்க, மறுபடி கதவு தட்டப்பட்டது.



''வா சொர்ணா...''

தேநீர் தட்டுடன் நுழைந்த சொர்ணாவின் முகத்தில் வழக்கமான மரியாதைப் புன்னகை இன்று மிக விரிந்திருந்தது.

''நல்லா உறங்கனீங்களாம்மா?''

''ஒ... இதென்ன குட்டிக் கிண்ணத்தில?''

''பாலும் தேனும் கலந்து வந்ததம்மா - மேனிக்குத் தடவி குளிச்சா பளபளங்கும்.''

''ஷெல்ஃபில இருக்கற க்ரீம், எண்ணைகளை அப்பப்போ தடவிக்கறேனே?''

''உங்க மெருகு கூடியிருக்கே... இது எந்திருப்திக்கு - நானும் ஏதேனும் தாணுமில்லே?''

''ஏன் திடீர்னு...?''

''இன்னைக்குத் தலைக்கு ஊத்தணுமல்லே? ஆலிவ் ஒயிலை வெதுவெதுப்பாய் தேச்சு விடட்டே?''

''சரி - உன்னிஷ்டம்.''

இவள் தேநீர் பருகி முடிக்க, சொர்ணா தலைக்கு இளம் சூடான எண்ணையைத் தேய்த்து நீவினாள்.

''இதெல்லாம் சரியில்லை சொர்ணா?''

''ஏனாக்கும்?''

''வைரமுத்து பாடறது போல இது 'ராஜ சுகம்'மால்ல இருக்கு? ஊருக்கு திரும்பின பிறகு ஏங்கிடமாட்டேனா?''

''உங்களுக்கு இனி ராஜ வாழ்க்கைத்தாம்மா - நீங்க ஏன் வேறெங்கோப் போகணும்... அதுவும் இன்னைக்குப் போற பேச்செல்லாம் கூடாது...''

"அதென்ன - இன்னைக்கு?"

வான்மதியின் எதிரே மண்டியிட்டு அவள் மேனிக்கு பாலிட்ட தேனை இதமாய் தடவிய சொர்ணா அதே இதத்துடன் வினவினாள் -

"நிஜமாலுமே தெரியாதாம்மா?"

இவளுக்கு ஒரு விதமாய் படபடத்தது.

"புதிராய் பேசாதயேன்."

"குளிங்கம்மா முதல்ல - அடடா இன்னைக்கும் அம்மா பாலைக் குடிக்கலியா? பிளாஸ்க் கனத்திருக்கே..."

"மறந்திடுது... வந்து..."

வான்மதி மேலும் தொடரும் முன் கிளம்பி விட்டாள் பணிப்பெண் - கதவை மூடும் முன் "நேரத்துக்கு தயாராயிடுங்க" என்ற ஒரு உத்தரவுடன்!

மனம் புது வித மகிழ்வில் தத்தளிக்க முழுந்தாளிட்டு பிரார்த்தனை செய்தாள் - நிறைய நன்றிகளுடன் - 'இங்கேயே தங்க வேண்டுமென' உரிமையாய் சொல்லுமளவு தன்னை இங்குள்ளவர்களுக்குப் பிடித்திருக்கிறதே...

இந்தத் துள்ளலுக்கு ஏற்றாற்போல ஏதேனும் கட்டலாம் என்று பட, அலமாரியைத் திறந்தாள். ஆனால் அதற்கும் முன்பே மனம் குறித்து விட்டது - மெஜந்தா வர்ண கிரேப் புடவை என்று. பார்வை படும் சில இடங்களில் இளம் நிறப் பூக்களை நெய்த, குழைவான பட்டு அது. கண்ணை உறுத்தாத ஆனால் கவனத்தை ஈர்க்கும் நிறமது. கசீ தந்த முத்துசரமே இதற்குத் தோது என்ற முடிவுடன் கழுத்தின் சன்ன சங்கிலியை அவிழ்த்து வைத்த பின் குளித்தாள்.



என்ன பாட்டு எந்த ராகமென்றே பிடிபடாமல் இழைபட்டன ஸ்வரங்கள்... ஆனந்த குளியல்!

உள்ளாடையுடனேயே கூந்தலைக் கோதி, ஓரளவு உலர்த்தியவள், க்ரீம், பவுடர் எல்லாம் பூசிய பிறகே ரவிக்கையிட்டு சேலை சுற்றினாள் - ஈரமோ, க்ரீமோ புதுசை பாழாக்கி விடக்கூடாதென்ற கவனம்.

மிருதுவான ஒப்பனைக்குப் பின் கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளின் நெஞ்சு விம்மியது.

கவனம் எடுத்தால் அழகு எப்படி பரிமளிக்கிறது...!

தாயிருந்தால் தன்னை இப்படித்தான் பராமரித்திருப்பாள் - மனம் அம்மா பற்றிய நினைப்பில் சற்று நேரம் குரங்காய் தொங்கியது.

முன்னும் பின்னுமாய் திரும்பி தன்னை அழகு பார்த்தாள் மறுபடி. இப்படி விச்ராந்தியாய் தன்னையே ரசிக்கும் துணிவு அவளுக்கு முன்பேது? அதற்கான நேரமும்தான் எங்கே?

முன்னுச்சி கூந்தலைச் சீவியவள், சற்று வெயில்பட நின்று பிடரிக் கூந்தலை ஆற்றலாம் என்று அறைக் கதவைத் திறந்ததும், விக்கித்து நின்றாள்.

வீட்டின் வேலைக்காரர்கள் அத்தனை பேரும் அங்கு நின்றது ஏன்?

"பிறந்த நாளு வாழ்த்தும்மா..." சேர்ந்து வாழ்த்த சொர்ணா இவளுக்கு ஒரு ரோஜா மாலையைச் சூட்டினாள்.

"நீங்களே பெரிய ரோஸா மாலையப் போலத்தான் இருக்கீங்க..." என்றபடி!

வசீகரனும் அங்கே நின்றதில் இவள் முகமும் அதே நிறங் கொண்டது.

"ஜூனின் 7 - உன் பிறந்த நாள் மதி - நினைவிருக்கா, மறந்துட்டியா?" தெரிந்தால் அல்லவா மறப்பதற்கு?

'அறியாமையே பேரின்பம் என்பது போல அந்நாள் பற்றி தான் அறியாததும் நல்லதே. தெரிந்தால் அன்று விசேஷமாய் ஒரு உணவு, உடை சில அன்பு சொற்களுக்காய் நெஞ்சு ஏங்கி வாடியிருக்கக் கூடும்.'

"உங்களுக்கெல்லாம் எப்படி தெரிந்தது?" - எதிர் கேள்வியிட்டாள்.

"வருஷா வருஷம் கொண்டாடின எங்களுக்கு மறக்குமாம்மா? பெரியய்யா - அன்னைக்கு மட்டும் ஜெபிக்க கோயிலுக்கு போவாங்க..."

"எங்களுக்கு இறைச்சி பிரியாணி, பாயசம் உண்டு."

சோமு குட்டி எச்சில் வழிய சொன்னான்!

ஆளுக்கொரு எலுமிச்சம் பழத்தை இவளிடம் தந்து நிற்க,

"சீக்கிரமாய் டிபன் தயாராகட்டும்" என்று அவர்களை விரட்டினான் வசீகரன்.

சொர்ணா ஒரு விதமாய் கனைத்தது போலிருந்தது - விளையாட்டாகத்தானா? தனித்து விடப்பட்டதும்,

"இது என் பரிசு" என்றவன் நீட்டிய பெட்டியை வாங்கக் கூடாமல் அவளது விரல்களில் நடுக்கம்...

"திறந்துதான் பாரேன்."

இவளது பரிதவிப்பு புரிந்து உதவினான்.



வெல்வெட் பெட்டியிலிருந்த ஆபரணத்தை பேச்சற்று பார்த்திருந்தாள்.

"இது... இது..."

"நேற்று நீ கடையில் ரசிச்ச நகை."

"உங்களுக்கு எப்படி தெரியும்?"

"ஒரேக் கடைத்தெருவுள்ள ஊரில் உளவு வேலை கலபந்தான்..."

"ஆனா.. தாங்க்ஸ்... ஸாரி... எனக்கு இது என் பிறந்த நாள்னே தெரியாது.. இத்தனை விலையுயர்ந்த கிஃப்ட்டையும் ஏற்பது..."

"இது மாமாவின் சார்பில் நான் கேட்கும் மன்னிப்பாய் எண்ணி எத்துக்கோ மதி." - கனிவாய் கேட்டுக் கொண்டான்.

"அப்பா ஒரு வாழ்த்தாவது அனுப்பியிருக்கலாம்" - குரல் குழறியது.

"பிறகு நீ அவரைத் தேடி வருவே - உன் வாழ்வு பாழாகிடும்ங்கறது மாமாவின் தப்பு அபிப்ராயம் - அதெல்லாம் மறந்திடு மதி - இதைப் போட்டுட்டு வா - எல்லாரும் சந்தோஷப்படுவாங்க...

கூந்தலைத் தளர பின்னி, மாலையிலிருந்து ஓரிரு ரோஜாக்களை உருவி சூட்டி நகையோடு அவள் கீழே வந்த போது சமையலறையிலிருந்து ஓலம் ஒன்று கிளம்பியது -

"ஐயோ பிளாஸ்க்கிலிருந்த பாலு முழுக்க விஷமாகி... நீலமாய் மாறி வீச்சம் அடிக்குது..."

சொர்ணா அலறினாள்!



## 20

வெகு அபூர்வமாய் சிலருக்கு இப்படி நேரும்... அதாவது பிறந்த நாளே இறந்த நாளாகவும் அமைந்து போவது! தனக்கும் அப்படி ஆகியிருக்கக் கூடும்... கடவுளின் கிருபையால் தப்பி விட்டாள்...

ஆனால் அப்படி தன்னைக் கொல்ல நினைத்தது யார்? கடந்த ஒரு வாரமாய் ஜீவா எஸ்டேட்டில் தங்கியதில் அவளுள் சிறுக சிறுக திரண்டிருந்த சந்தோஷக் குமிழ் பட்டென உடைந்து போனது.

மிஞ்சியது வெறுமையும் விரக்தியுந்தான்.

இதைத் தன் வீடு-பாசக் கூடு-என்றெண்ணியது மடத்தனம்.

இந்த உலகில் தன்னை தனக்காய் நேசிப்பவர் யாருமில்லை... கசீலாவைத் தவிர? அவளுமே திருமணமாகி தனி குடும்பம் என்றாகி விட்டால் இந்த வான்மதியை மறந்துதான் போவாள்-

ஆக யாருக்கும் தான் முக்கியமில்லை...

இருந்தும் தன்னை அழிக்க யாரோ தீவிரமாய் இருக்கிறார்களே!

இல்லையெனில் ஏன் பாலில் விஷம்?

சொர்ணாவின் அலறலில் வீட்டின் நிறமே மாறிப் போனது. "ஷ்ஷ்... நல்ல நாளில் இப்படி கத்தலாமா?" சிறு



அதட்டலுடன் ப்ளாஸ்க்கை வாங்கி முகர்ந்த வசீகரனின் முகம் சுருங்கியது. ஏனெனில் அதிலிருந்து ஒரு குமட்டும் நெடி வான்மதியையுமே எட்டியது!

எதிர்பாராத பரிசுகளால், அன்பினால் ஒரு ரோஜாவைப் போலவே மலர்ந்திருந்த அவள் முகம் இந்த அதிர்ச்சியில் வெளிறியிருந்தது. ஒரு அதிர்ச்சி அத்தனை மகிழ்வையும் உறிஞ்சித் துப்பியிருந்தது.

"ப்ளாஸ்க்கை ஓரமாய் அப்படியே வை, சொர்ணா - பிறகு விசாரிக்கலாம் - முதல்ல சாப்பிடு மதி..."

"ல்ல... வேணாம்."

"உணவில் விஷமிருக்குமோன்னு சந்தேகப்படறியா? சரி - நான் முதல்ல சாப்பிடறேன்..." ஒரு கரண்டி கேசரியைத் தட்டில் வைத்து சாப்பிடலானான்....

பிரமை பிடித்தாற் போல பக்கத்துக்கு ஒருவராய் சொர்ணாவும் வான்மதியும் நிற்க இயந்திரமாய் உண்டான்.

உல்லாசமும் உற்சாகமுமாய் அமைந்திருக்க வேண்டிய உணவு நேரம் உறுத்தலாய் நகர்ந்தது.

"சுவையில் வித்தியாசமில்லை..." என்றவன் சொல்ல இனியும் தயங்குவதில் அர்த்தமில்லை என்பது போல வான்மதியும் பேருக்குக் கொறித்தாள்-

"போன் பண்ணிடணும்..."

"எதுக்கு?"

"போலீஸுக்குத்தான்-மதி."

"இப்பவேவா?"

"இப்ப தெரிவித்தால்தான் மதியம் விசாரிக்க வருவாங்க - தாமதித்தால் 'என் டிலே'ன்னு அந்த விசாரணை வேற கடுமையாயிருக்கும்..."

"ரிப்போர்ட் பண்ணாமலே இருந்துட்டா...?"

ஏன் அப்படி சொன்னோம் என்று அவளுக்கேப் புரியவில்லை. பிறகு யோசிக்கவுந்தான் நுனிநூல் சிக்கியது. காவல் துறையின் முதல் சந்தேகம் வசீகரன் மேல்தான் விழும் - காரணம் ஒரே வாரிசான வான்மதி இறந்தால் அடுத்த வாரிசு அவன்தானே?

ஆக கடுமையாய் விசாரிக்கப்படுவான்.

ஆனால் அவன் அவளது தயக்கத்தை புரிந்து கொண்டது வேறு மாதிரியாய்-

"ஸாரி மதி-உன் பிறந்த நாளின் சூழல் போலீஸ் வருகை, விசாரணையால் கெடும்தான்... ஆனால் இனியும் தவிர்ப்பது முட்டாள்தனம்..."

"முதலில் சொர்ணா பயந்தது போல அது விஷமான்னு..."

"கடும் நெடி மட்டுமல்லாமல் நிறம் கூட நீலம் பாரித்திருந்தது-நல்ல வேளை நேற்றிரவு நீ ப்ளாஸ்க்கைத் திறக்கவே இல்லை..."

"திறந்தாலும் அந்த வீச்சப்பாலை குடித்திருப்பேனான்றது... ம்ஹூம்..."

"எனக்கு எற்கெனவே சின்ன உறுத்தல்தான்... சோமு குட்டி சொன்னான் 2 நாள் முன்பு உன் ப்ளாஸ்க்கைக் கழுவினதும்... அந்த பாலை கழிவு ஓடையில் குடிச்ச எலி செத்திருச்சுன்னு... அவன் சொன்னதை அதிகம் நம்பவும்



முடியலை. முழுக்க ஒதுக்கவும் முடியாமல்தான் உன்னை முந்தா நாள் தனியே எங்கும் போக வேண்டாம்னு தடுத்தேன்... ஆக நீ இங்கே முழுசாய் பத்து நாட்கள் கூட தங்க முடியாது போல... மதி..."

அவனது தொனி ஏனோ உறுத்தியது-முள்மரங்கள் அமர்ந்த பாதையின் ஊடாய் நடப்பவர்க்கு நேருவது போல கீறல்கள்... இவளுக்கு உள்ளத்தில்...

'நீ இங்கேயே தங்கி சொத்தை ஆண்டு கொள்-நான் சம்பளம் பெறும் ஊழியன்-அத்தனையையும் உன்னிடம் ஒப்படைத்து விட்டு கை குலுக்கி விலகுகிறேன்' என்றது பசப்பான பொய்யா?

உயிர்மேல் ஆசையிருந்தால் ஓடி தப்பிக் கொள் - என்கிறானா? அதுவும் வெகு மறைமுகமாய்...

இதெல்லாம் ஒரு நாடகமோ?

தான் ராஜாவாய் இங்கேத் தொடர, வசீகரன் மேடையேற்றும் சில காட்சிகளோ?

பால் போலிருந்த தன் மனதுக்குள்ளும் இப்போது சந்தேக விஷமேறி கொண்டதை உணர்ந்தவள் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள்.

வசீகரனை ஒரு பக்க நெஞ்சம் நம்ப, மற்றொரு பக்கம் புத்தி நம்பாமல் அஞ்சி ஆராய்கிறது!

புதிதாய் வாங்கின நீல, ரோஜா நிற கோப்பைகளில் ஆவி பறக்க இருவருக்கும் தேநீர் வந்தது...

மௌனமாய் உறிஞ்சினார்கள்...

அதன் மணமோ சுவையோ... எதையும் பதிவு செய்து கொள்ளாமல்....

ஒரு அரசியின் ஆர்ப்பாட்டத்தோடு, ஆனந்தமாகவும் ஆரம்பித்த நாள்... அதுவும் விவரமறிந்து கொண்டாடிய தனது முதல் பிறந்தநாள் இப்படி கருகலாய் தீய்ந்து முடிந்தது - எதிர்பாராததுதான்-

விசாரணைக்கு போலீஸ் வரும்போது தான் இத்தனை எடுப்பும் எழிலுமாய் உடுத்தி நிற்பது முரணாய் இருக்கும் எனப்பட, உடையை மாற்றினாள்.

முத்து நகைகளை முதலில் அகற்றியவள் இளம் பச்சை ஜார்ஜெட் புடவையை சுற்றிக் கொண்டாள்.

யாரேனும் தெம்பாய் நாலு வார்த்தை சொல்ல மாட்டார்களோ என்ற தவிப்பில் அவள் கைகள் தன்னிச்சையாய் அப்பாவின் டைரியைப் புரட்டின-

*✱ அப்பா எழுதியிருந்தார்-*

*மகாகவி இக்பால் பாடியது சரிதான்-*

*'சுறாமீன்கள் இல்லாத கடலில் என் படகைச் செலுத்த மாட்டேன்; நீந்தத் தெரியும் வரை ஆற்றில் இறங்கமாட்டேன் என்பதெல்லாம் பைத்தியகாரத் தனம் - ஆற்றில் இறங்கினாலேயே நீச்சல் வரும் என்பது நிதர்சனம்'-*

மகளுக்குத் தெம்பூறியது.

இந்த சம்பவம் கூட ஒரு மிரட்டும் முரட்டு சுறாதான்! ஆனால் இத்தகு ஆபத்துகளே இல்லாத வாழ்க்கைப் பயணத்தில்தான் என்ன சவால், சாமர்த்தியம், பெருமை?

ஆக போலீஸாரின் கேள்விகளுக்கு அயராமல் பதிலளித்தாள்-

ஆனால் அயர வைக்கும் கேள்விகள்தான்...!



'வழக்கமா உங்க அறைக்கு பாலை எடுத்திட்டு வருவது யாரு?'

'நேற்றுதான் பாலைக் குடிக்கலையா... இல்லை அடிக்கடி குடிப்பதில்லையா?'

'அந்த சொர்ணம் உங்களிடம் எப்படிப் பழகுவாள்?'

'திறந்து பார்த்து சந்தேகப்பட்டு குடிக்கலையா - அல்லது ப்ளாஸ்'க்கைத் திறக்கவேயில்லையா?'

'யாரைச் சந்தேகப்படறீங்க?'

அவளைக் கேள்விகளால் குடைந்த பின்,

"அந்த ப்ளாஸ்க்கைக் கொண்டு வாங்க" என்று அதிகாரி உத்தரவிட்ட இரண்டாம் நிமிஷம் மறுபடி சொர்ணம் எழுப்பிய கூச்சலில் காக்கி உடுப்புக்காரர்கள் சமையலறை பக்கம் பாய்ந்தார்கள்!

"ஐயோ... எல்லாம் மாயமாய் இருக்குதுங்களே... ஐயா பத்திரமாய் வைக்கச் சொன்னாருன்னு... தோ அந்த மேல்தட்டுலதான் பிளாஸ்க்கை வச்சேன்... அலமாரி கதவை மூடியும் வச்சேனே..."

"சரி-இப்ப அதை எடுன்னுதானே சொல்றோம்..."

"பிளாஸ்க்கு இருக்குதுங்க..."

"பின்னை என்ன?"

"உள்ள பாலு இல்லீங்க... சுத்தமாக் கழுவி கிடக்குது..."

"அப்ப உன்னைத்தான் ஜெயில்ல வைக்கணும்..."

"ஐயோ... தெய்வத்து ஆணையா எனக்கு எந்த விவரமும் தெரியாதுங்களே" - புலம்பினாள் சொர்ணா.

அரை லிட்டர் கொள்ளளவுள்ள அந்த வெள்ளி நிற பிளாஸ்க்கை கையில் உருட்டிய இன்ஸ்பெக்டர் அதைத் திறந்து முகர்ந்தார்-

சமையலறையில் புழங்குபவர்களை எல்லாம் அவர் அதட்ட, மறுப்பும் புலம்பலும் அந்த இடம் அமளிப் பட்டது.

காவல் துறையினரின் கனத்த அதட்டலும், குழப்ப மான பதில்களுமாய் சேர்ந்து இவளை அயர வைத்தன-

''நான் கொஞ்சம் தனியே அறையில் இருக்கலாமா - இன்ஸ்பெக்டர்?''

''சரி - உங்களுக்கு இது பெரிய அதிர்ச்சிதான். டாக் டரைக் கூப்பிடலாமா?''

''ல்ல... லேசான தலைவலி - அவ்வளவுதான்.''

''ம்ம்... இந்த சொர்ணத்தை மிரட்டினால் விவரம் கொஞ்சம் வரும்னு நினைக்கறேன்...''

''நல்லவ ஸார் - இங்கே இத்தனை பேர் இருக்க, அவளை நீங்க குறிப்பாய் சந்தேகப்படறது... தவிர அவதான் குற்றவாளின்னால் சத்தமே இல்லாமல் அந்த விஷப் ாலை முதலிலேயேக் கொட்டிக் கழுவி வச்சிருக்க ாமே... அலறி விஷயத்தை அம்பலமாக்கினதே - வதானே?''

''ரைட் பாயிண்ட்... ஆனாலும் எவிடென்ஸை, அதா து அந்த விஷப்பாலை மறைச்சவங்க இந்த வீட்ல னே இருக்கறாங்க... சரி அது எங்க தலைவலி-போய் ங்க மேடம்...''

அவர் சொன்னதை யோசித்தவளின் உள்ளே பயம் ணாய் தெளிந்தது - ஊர்ந்தது.



வலிய அப்பாவின் டைரி வாசகங்களை நினைவு படுத்திக் கொண்டாள்- துணிச்சல் அவசியம்.

இதுவரை தான் கடந்து வந்த வாழ்க்கையும் சுலபமான தில்லையே. தான் ஒரு அநாதை என்று குறுகலோடு,

பெரியம்மாவின் அலட்சியம், பின்னர் தன் மகள் சுசீலாவிற்குப் போட்டியாய் வான்மதி வந்துவிடுவாளோ என்ற அச்சத்தில் விளைந்த ஆங்காரத்தை சமாளித்தவள்... இடையிடையே முட்டித் தள்ளிய அக்கனவு வேறு - பெரியம்மாவின் வீட்டை விட்டுப் போக நேர்ந்த நிர்பந்த நிலையில் வந்த இந்த விசித்திர அழைப்பை ஏற்றுக் கொண்டதும் கூட துணிச்சலாய்தானே...

இங்கு வந்ததும் சற்று தட்டுத் தடுமாறினாலும், சில நாட்களிலேயே எவ்வளவோ புரிந்து கொண்டாயிற்று... இங்கிருப்பவர்களின் அன்பையும் பெற்று விட்டதாய் தலை நிமிர்ந்த வேளையில்தான் இந்த மரண அடி உச்சந்தலையில் விழுந்து விட்டது!

இங்கிருந்து தான் உயிரோடு திரும்பக் கூடாது என்று மனவில் யாருக்கு என்ன வன்மம்?

ஒரு விதத்தில் சிந்தித்தால் இறப்பு என்பது விடு தலையே - இனி என் எதிர்காலம் என்ன, எப்படி என்ற நூறு கவலைக் கேள்விகளுக்கு விழும் வலுவான ஒரு முற்றுப் புள்ளி.

ஆனால் அது கோழைத்தனம்...

துணிச்சலுடன் முயன்று வாழ்ந்தவர்களே வாழ்வில் வென்றவர்கள்!

வாழ்வு என்பது இன்ப, துன்பத்தின் கலவைதானே...

தனக்கென்று இன்பங்களும் தான் காத்திருக்கும்...

ஆசைக் கணவன், அன்பு குழந்தைகள் என அமைந்து அவர்களின் பாசச் சிறகின் கீழே கதகதப்பாய் நின்று வாழ்வை ரசிக்க வேண்டாமா?

புத்தி மாறி மாறி கூத்தாடியது!

இவளது படுக்கை அறைக் கதவை யாரோ கீறினார்கள்.

வான்மதியின் உடல் 'சட்'டென சில்லிட்டது.

காலை நேரங்களில் அவள் அறைக்கதவைத் தாழிடுவ தில்லை. ஆனால் நல்லவேளை இன்று தாழிட்டிருந்தாள். உயிர் மேலுள்ள ஆசை விரல்களை ஏவியிருந்தது!

கதவருகே நின்று கேட்டாள்-

''யாரு?''

கிசுகிசுப்பாய் பதில் வந்தது - ''சோமனன்.''

உடல் தளர, கதவைத் திறந்தாலும், புன்னகைக்க முடியவில்லை.

''வா சோமுக்குட்டி'' என்றாள் வெறுமே.

''எனக்கு எனக்கு பயம்மாருக்கு''-

பயலின் பிதுங்கிய விழிகளில் பயம் முட்டி நின்றது.

''போலீஸைப் பார்த்து பயந்துட்டியா?''

வேகமாய் தலையாட்டினான்.

''ஜெயில்ல அடைச்சு அடிப்பாங்களாம்...''

''நீ என்ன தப்பு செய்தே... சாக்லெட் பிடிச்சிருந் ததா?''



மறுபடி ''விடுவிடு'ப்பாய் தலையாட்டினான் ''சக்கரைப் போட்ட சின்ன செங்கக் கட்டியாட்டமிருந்துச்சு... அது எங்கன கிட்டும்?

''டவுன் கடைகள்ல கிடைக்குமே.''

''எவ்வளவு காசு ஆவும்?''

''பத்து, இருபது... ஐம்பது ரூபாய்க்கும் கூட கிடைக் கும்... மறுபடி உனக்கு வாங்கித் தரேன் சோமு... ஆனா நீ எனக்கொரு உதவி செய்யணும்..''

அவனது முகம் மேலும் கோண இவளைக் கேள்வியாய் பார்த்தான். ''உனக்கு தாரணி அம்மாளைத் தெரியுமா?''

''அதாரு?''

இவளுக்கு சப்பென்று போனது.

''முன்னே... ரொம்ப காலமாய் இங்கே வேலை செய்த வங்க... சொர்ணா எனக்கு உதவறாப் போல எங்கம்மா வுக்கு ஒத்தாசை செய்தவங்க...''

''இங்கயா?''

''இதே எஸ்டேட்ல... அப்பவே அம்பது வயசுக்கு மேலேயிருக்கும் - இப்போ வயசானவங்களா இருக் கணும்...''

''கூனு போட்டுகிட்டா?''

''அது... அது தெரியலியே...''

''கூனக் கிழவிதான் டமாரமாப் பேசும். நாந்தா ரொம்ப காலமா இங்க வேல பாத்தவ - பங்களாவோட இண்டு இடுக்கெல்லாம் எனக்குத் தெரியும்னு. எனக்கும் எல்லா இடமுந் தெரியுங் கிழவின்னு நா சொன்னால கோவப்

பட்டு கைய ஓங்கும்... 'போடா பொடிப்பயலே - எனக்குத்தான் அந்த வீட்டு ரகசியமெல்லாந் தெரியும் - அது தாங்காமத்தான் எம்முதுகு இப்படி கூனிடுச்சுன்னு...''

''சரி - என்னை அவங்ககிட்ட கூட்டிட்டு போ...''

''எப்ப?''

''நாளை காலைல ஏழு மணிக்கு தயாராய் இருப்பேன்... எட்டரைக்குள்ளே வீடு திரும்பிடலாம்...''

''ம்ம்...''

கடந்த காலம் மட்டுமல்ல, நிகழ்கால ரகசியங்கள் கூட இந்த முதியவளைச் சந்தித்தால் அறியலாம் - அதற்கு வசீகரனின் சம்மதம் கிடைக்காது...

இவள் போனது தெரிந்தால் கோபப்படுவான் கூட...

போகட்டும்... இப்படி பயந்து தயங்கி நின்றால் எதையும் அறிந்து கொள்ள முடியாதே...

# 21



கீாலை ஏழு மணி என்பது பொழுது புலர்ந்து விட வேண்டும் நேரம் என்பதெல்லாம் எஸ்டேட்டின் அப்பகுதிக்குத் தெரியாது போலும்... இன்னும் இருள் போர்த்தி முடங்கியிருந்தது.

டார்ச்சின் மங்கிய மஞ்சள் ஒளியின் வழி காட்டலில் நடந்தான் வான்மதி. கம்பளிச் சால்வை அவளது



தலையையும் மூடியிருந்தது - அது குளிருக்கு மட்டுமல்ல பிறர் அவளைக் கவனித்து விடாதிருக்கவும் தான்.

அந்த ஓட்டு வீட்டின் கதவு சற்றே வாய் திறந்திருந்தது.

''கிளவி...''

சோமு குட்டி குரல் தர, இவள் திருத்தினாள்-

''ம்ஹூம்-பாட்டின்னு கூப்பிடு...''

''அப்படி கூப்பிட்டா அதுக்குத் தெரியாதே... கிளவி முழிச்சிருக்கியா?''

காகாத்த குரல் குழறலாய் வந்தது.

''எந்தக் கொம்பன் என்னைய அதட்டறது?''

''சோமுக்குட்டி...''

''வா.''

கதவைத் திறந்ததும் அவர்களை முதலில் எதிர்கொண்டது நாற்றம்தான்-அடுத்ததாய் மசமசவென்ற இருள்.

''ஜானிண்ணா இல்லியா?'' சோமுகுட்டி தோரணையாகவே கேட்டான்.

''வெளியே போயாச்சு...''

''ஏதும் சாப்பிட்டீங்களா பாட்டி - இங்க தனியாவா இருக்கீங்க...?''

இதமாய் வான்மதி கேட்க, முதியவளின் குரல் 'விறுக்'கென உயர்ந்து பதறியது.

''லேய்... யாரது உன்கூட? யாரு வந்திருக்கது? ஏளவு வெளிச்சமும் இல்லாம...''

டார்ச்சை உயிர்ப்பித்து, ஒளியை சுவர்புறமாய் பரவ விட்ட வான்மதி கட்டிலின் அருகே மண்டியிட்டாள்-

"யாரு... பொண்ணோ நீ?"

ஒளியை கட்டில் பகுதி நோக்கி தணித்தவளுக்கு படுத்திருந்த உருவம் அதிர்ச்சியளித்தது-

இப்படியுமா ஒரு மனித உருவம் குறுகிப் போகும்?

இரண்டாய் மடித்த பச்சைத் தண்டு போல... முதியவளின் தோள்கள் முழங்கால்களைத் தடவ துடிப்பவையாய் நெருங்கியிருந்தன - எழுந்து அமர, நடக்க முடியாது போலவே...?

"சோமு... விளக்கப் போடு..." நடுங்கிய குரல் அவசரமாய் உத்தரவிட்டது.

அதுவும் மஞ்சள் ஒளியை மங்கலாய் பரப்பிய குண்டு பல்புதான் - படுத்திருந்த உருவத்தைக் கண்ட இளையவளின் விழிகள் பனித்தன - தன் வாழ்வின் சவால், சோதனை எல்லாம் தூசாய் பட்டன.

உடலும் உள்ளமும் ஆரோக்கியமாய் இருக்கும் வரை எதையும் சமாளித்து விடலாம் போலும் தோன்றியது.

முதிய விழிகளும் வான்மதியை பதட்டமாய் ஆராய்ந்து, பின் சுருங்கின.

"அதே அச்சு... அதே ஜாடை..."

"ஆமா. நான் சந்திராவின் பொண்ணு - பேரு வான்மதி."

"சின்ன எஜமானி... ம்ம்?" சிறு விரக்தியுடன் தலையசைந்தது.

"ஃஆ... கொஞ்ச நாள்தான் இங்கே இருப்பேன்..."



"பிறவு?"

"வேறெங்கேனும் போய் வேலை தேடி வாழ வேண்டியதுதான்."

"உங்கம்மையப் போல உனக்கும் இங்கே அடைஞ்சு கிடந்து, ஆள விருப்பமில்ல... அப்ப இப்ப நீ இங்க வந்தது இந்த கிழ உயிருக்கு தெய்வமாட்டம் விடுதலை தரத்தானா?"

உணர்வு மிகுதியால் வறண்ட விரல்கள் நடுங்கின-

ஆதரவாய் வான்மதி அவற்றைப் பற்றினாள் - இடது கையால் நாராய் உலர்ந்திருந்த கேசத்தையும் வருடித் தந்தாள்-

"புரியும்படி சொல்லுங்க - உங்க பேர் என்ன?"

"அதான் வச்சாச்சே... கூனக் கிழவின்னு..."

"அறியாப் பிள்ளைங்க உளறலது - உங்க பேர் தாரணியா?"

வெளிரிய விழிகள் பயமும் ஆவலுமாய் வான்மதியை உறுத்தன - "அம்மா தன் டைரியில் உங்களப் பத்தி எழுதியிருந்தாங்க..."

"என்ன... என்னன்னு?"

"முழுக்க இன்னும் வாசிக்கலை. அங்கும் இங்குமாய் புரட்டியதில் சிலது தெரிஞ்சுகிட்டேன்..."

"நேத்து உம் பிறந்த நாளில்லை? வருஷந்தோறும் என்னைத் தேடி பெரிய வூட்டிலிருந்து கவிச்சி சோறு வரும். ஏனோ நேத்து ஏதுமில்ல..."

"நேற்று எதிர்பாராத... விருந்தாட்கள்... அதான்... ஏதேனும் இன்னைக்கு அனுப்ப சொல்றேன்..."

''ம்ப்ச்... சாப்பிட்டா... அத வெளியேத்தணும்... படுத்த கிடையா கிடக்கறப்ப அதெல்லாம் அநாவசியம்... ஆசைய அடக்கிட்டேன். நீ வந்தது பெரிசும்மா... சாமி எதுக்கு என் உடம்பை ஒடிச்சு போட்டு, உயிரை உருவாம விட்டு வச்சிருக்குன்னு மருகியிருக்கேன்... எனக்கு ஒரே மவன் ஜானி-அவன் நினைச்சா என்னைய சோளக்கொல்லை பொம்மையாட்டம் தூக்கி வச்சு சுத்தம் பண்ணுவான் - இல்லைன்னா மலத்துல நீருல ஊறிக் கிடக்கணும் நானு... அவந் தந்தா கும்பி நனையும் - அல்லாட்டி காயும்... இந்த உயிரு போவட்டுமேன்னு மனசாரக் கதறுறேன் - அப்படிப் போகாதக் காரணம் இதுதாம் போல...

சந்திராம்மா மவகிட்ட உம்பாவமெல்லாம் சொன்ன பிறவு உத்தரவு வாங்கிக்கோன்றதுதான் தேவகட்டளை போல...''

மூச்சிழைக்க ஆனால் விடாமல் பேசினாள்.

''சோமு குட்டி நீ 'டீ' போடு'' - வான்மதி சொல்ல சின்னவன் மறுபேச்சின்றி தடுப்பிற்குப் பின்னே போனான்.

''உங்களுக்குப் பழம், ரொட்டி ஏதேனும் எடுத்து வந்திருக்கணும்...''

''தோ-இங்க காஞ்ச ரொட்டி உண்டு'' - சோமுகுட்டி அறிவித்தான்.

தேநீரில் அதை நனைத்து தாரிணிக்கு ஊட்டினாள் - கட்டிலின் கீழிருந்த பெட் - பேன் கொண்டு உடம்பின் கழிவுகளை அப்புறப்படுத்தினாள் - நனைத்த துணியால் மேனியை துடைத்து, கூந்தலைக் கோதி முடிந்தாள்.



''ஐயோ...'' கிழவி தலையை முட்டுவது போல ஆட்டி ஆட்டி குமுறினாள்.

''ஷ்... அழக் கூடாது பாட்டி...''

''இத்தனை அன்பு நீ இந்தப் பாவிக்குக் காட்ட கூடாதே... பாழும் புத்தி எனக்கு அப்படி போச்சே... அந்தப் பாவந்தானே என்னைய இப்படி முறுக்காட்டம் பிழிஞ்சிருச்சு...''

''தப்பான எண்ணமாச்சே அது...'' தலையை மென்மையாய் ஆட்டி மறுத்தாள் மதி - ''இது முதுமை - இதை நமக்கான தண்டனையாய் நினைக்கக் கூடாது பாட்டி... மதர் தெரஸா மனமார, மனமுருகி எளியவங்களுக்கு உதவினவங்கதான்-ஆனாலும் அவங்க உடம்பும் தளர்ந்தது, தோல் சுருங்கியது-சாவும் அவங்களை விட்டு வைக்கலியே...?''

''நாக்குன்னால் - அது இப்படி இதமாப் பேசணும்... எனக்கு வக்கிர மனசு... அதன்படி வளைஞ்ச நாக்கு... 'பண்ணை மாட்டை அவிழ்த்து விட்டா வயக்காடு - அங்கே பத்தி விட்டா கொட்டில்'ங்கறது போல எனக்கு இந்த எஸ்டேட்ல வாய்ச்சது சக்கரமா ஒரு வாழ்வு-ரொம்ப அலுத்திரும்... அது பொறுக்காமத்தான் உங்கம்மா உன்னைய தூக்கிட்டு டவுனு, பிக்நிக்னு போயிட்டு வர்ரது...''

''அப்பாக்கு அதிலெல்லாம் நோக்கம் இல்லை போல...''

''அப்பப்ப போவாருன்னாலும் அவரு ஆசையெல்லாம் எஸ்டேட்டுலதான்.... அதனால உங்கம்மா மானேஜரோட கூடப் போவாங்க...''

''ம்ம்... ஷ்யாம்னு அவர் பெயர் கூட டைரியில இருந்தது....''

இயல்பாய் சொன்னாலும் வான்மதிக்குள் ஏகக் குறுகுறுப்பு. தன் அப்பா பொறாமை பட்டதற்கேற்ப அவர்களுக்கிடையே வேண்டாத தொடர்பு இருந்திருக்குமே என்ற ஐயக்குறுகல்.

''ம்ம்... அந்த ஷ்யாமு மனுஷனுக்கு கல்யாணம் நிச்சயமாயிருந்தது - ஒருதாம் இந்த எஸ்டேட்டை வந்து பார்த்துட்டு போன அவம் மாமனாரு எம்பொண்ணு இந்தக் காட்டுல அடைஞ்சு கிடக்க முடியாதுன்னுட, அந்த ஷ்யாமும் வேலைய விட்டுட தயாராகிட்டார்... கொஞ்சம் இளகின மனசு அவருக்கு... அதான் உங்கம்மைக்குத் துணையா, உன்னையும் தூக்கிகிட்டு அலைவாரு...''

இவளுக்குள் பெரிய ஆஸ்வாசம்!

''இந்த எஸ்டேட்டுல குடித்தனம் பண்றது லேசில்லை... ஆனா ஜீவானந்தம் ஐயாவோட ரெண்டு பொண்டாட்டி மாரும் இங்கேருந்து மறையக் காரணம்... நாந்தான்...''

குற்ற உணர்வு நெஞ்சை அடைத்தது போல... மூச் சடைக்க இருமினாள்.

ஜன்னலைத் திறந்து விட்டு நெஞ்சை நீவி விட்டாள் வான்மதி... சூரிய கதிர்கள் நீள உள்ளேப் புகுந்து இருளோடு நெடியையும் விரட்டியடித்தன...

''உங்கப்பாவோட மூத்த தாரம் உங்கம்மாளவு அழகு இல்ல... ஆனால் சாமர்த்தியம் - ஏதேனும் வேலைய இழுத்துப் போட்டு செய்வாங்க - வீட்டை, தோட்டத்த சீர்படுத்த, நாலு மாடு கன்னு வாங்கிக் கட்டன்னு... அந்த மகராசி மனசுல முதல்ல விஷத்த வச்சது நாந்தான்...''



''பெரியம்மா... தற்கொலை செய்துகிட்டதாய்...?''

''அப்படி உங்க அம்மாவ நம்ப வச்சேன்... ஆனா அது கொலை...''

''ம்ம்... அம்மா டைரியில...'' மகள் முணங்கினாள்.

''ஒருத்தரைத் தற்கொலை செய்யத் தூண்டறது கொலைதானே? அந்தக் கொலைய நா செய்தேன்...''

''நீ... நீங்களா?''

''ஒரு வருஷமாகியும் நீங்க இன்னும் பிள்ளைத் தரிக்கலையேன்னு சதா அரிச்செடுப்பேன்... முதல்ல சிரிச்சுட்டு போனவங்க கொஞ்ச காலத்துல கவலைப்பட ஆரம்பிச்சாங்க... முத வருஷத்துலேயே கையிலயோ மடியிலயோ பிள்ளை இருக்கதுதான் புருஷனோட பிரியத்துக்குச் சாட்சின்னு அடிச்சு பேசுவேன் - எனக்கெல்லாம் அப்படித்தான்னு புளுகினேன்-எனக்கு ஜானி பிறந்தது தாலி ஏறிப் பதினைஞ்சு வருஷம் போன பிற்பாடுதான்...''

''அப்படி நீங்க பொய் சொல்ல வேண்டிய காரணம்?''

''ஆத்திரம்மா... ஆத்திரம் வந்தால் புத்தி மட்டுதானே? நானும் கண்டபடி உளறினேன்... ஆத்திரம் உனக்கு உங்கப்பா மேலே... அதாவது எம் முதலாளி மேல...''

''ஓ...''

''எனக்கு புருஷன் சரியில்ல.. காத்திருந்து கிடைச்ச பொன்னுமணியான ஜானி பயலுக்கு அப்போ... அதாவது 25 வருஷத்துக்கு முன்ன இருவது, இருவத்தொரு வயசு - இளந்தாரிப் பருவம் - பொட்டச்சிகளைத் தூரத்த ஆரம்பிச்சான். அவனுக்கொரு கால்கட்டுப் போடலாம்னா பய

னுக்கு படிப்பில்லை, வேலையுமில்லை. யாரு பொண்ணு தருவா? வெறும் இவனுக்கு வடிச்ச போட வரலை..."

"எஸ்டேட்டிலேயே ஏதேனும் வேலை...?"

"கேட்டேன்... அதுலதான் ஆரம்பிச்சது பிரச்சனை. உங்கப்பா முடிவா மறுத்துட்டாரு. உன் ஜீவா முரட்டுப் பய-சிவப்பு கொடிய தூக்கிட்டு அலையறவன்-எங்காதுல அந்த ஒணானை கட்டி விடாதன்னு சொல்ல எனக்கு கோவம்... அவரு மறுப்பு மகாக் கொடூரமா, கர்வமாத் தெரிஞ்சது. வேற வேலைக்கு சிபாரிசு கடிதமாச்சும் தாங்கன்னு கேட்டேன் - 'எம் பேரும் சேர்ந்து நாறவா'ன்னு சிரிச்சாரு... இரு உன் பேரை நாறடிச்சு, சிரிக்க வைக்க றேன்னு ஒரு கறுவல் எனக்குள்ளே. நாம வெளியே வாசல்னு போக முடியாது - நல்ல புத்தி சொல்ல யாரு மில்ல... ஆக மனசு பேயாட்டம் ஆடிச்சு..."

"இப்ப உங்க மகன் ஜானி...?"

"பிறகு வசீகரன் சின்னவரு வேலை போட்டு, புத்தி சொல்லி வேலைக்கு வச்சுகிட்டாரு..."

"ஓ.... கல்யாணமெல்லாம் ஆயாச்சா?"

"வந்தவ மறுவருஷமே வேறொருத்தனோட ஓடிட்டா... கம் செத்து போன எம்மவன் பிறவு கல்யாணப் ச்செடுக்கல... பேரப் பிள்ளைகளைப் பாத்துடணும்னு றியாய் அவனுக்கு வேலையும் பிறவு பொண்ணும் டுனேன்... இப்ப இந்த வெறுங் கூட்டுல சுருண்டு யாச்சு..."

பெரியம்மாக்கு குழந்தைகளே பிறக்கலையா?"

டாக்டருங்க கிட்ட போய் செக்-அப் எல்லாம் செய்து டாங்க. எந்தக் குறையுமில்ல... மனசு கவலை,



பயமில்லாதத் தளர வச்சுக்கங்கனாங்களாம் டாக்டருங்க... அதுக்கு நான் வழி விடலையே...? கட்டின சூட்டோட பிள்ளை பிறந்தாத்தான் இங்கே, இல்லைன்னா பிறகு லேசுல தரிக்காது - இந்த மண்ணு ராசி அப்படி. அதுவுமில்லாம - தள்ளிப் போனா ஆண் வாரிசு கிடைக் காது. பொண் வாரிசால இந்த மண்ணை ஆள முடியாதே... ஆக ஐயா ரெண்டாந்தாரம் கட்ட வேண்டி வரும்... அவரு ஜாதகத்துல அப்படித்தான் இருக்காம்னு... கண்டபடி உளறுனேன்..."

"பெரியம்மா அதையெல்லாம் ஏன் நம்பணும்?"

"உங்கப்பா அதிகம் பேசாதவர்-கடை, கண்ணி கிடை யாது - இப்ப போல டி.வி. பெட்டி கிடையாது... பேச்சுத் துணைக்கு நாம் மட்டுந்தான் - எம் பேச்செல்லாம் உனக்கு குழந்தை பிறக்காதுன்றது போலத்தான்..."

வான்மதிக்குப் புரிந்தது - இப்படி விஷமேற்றிய மனதில் விளைந்தது தான் பெரியம்மாவிற்குத் தற்கொலை எண்ணம். தன்னால் இந்த சொத்திற்கான வாரிசைத் தர முடியாது என்ற வெம்பலில்... ஏதோ ஒரு மன அழுத் தத்தில் உயிரையே போக்கிக் கொண்டார்கள்...

அதிகம் பேசியதில் வறண்ட முதியவளின் வாயினுள் சிறிது சிறிதாய் வெந்நீர் விட்டாள் - அதுவே கண் வழியே வெளியேறியது போல தாரணியின் கன்னங்கள் நனைந்தன.

"செய்த குற்றம் காலங் கடந்த பிறகே என்னையக் குதறுனது... பிறகு இப்படி முறுக்கிப் போட்டுடுச்சு... ஆனா எம் பாவம் அத்தோட நிக்கலையே... உங்கம்மா ரெண்டாந்தாரமா வந்ததும், வளந்தது! கண்ணைப்

பறிக்கற உங்கம்மாவோட அழகு என் வன்மத்தக் கூட்டினது - கூடவே அழகா, வாரிசாய், உடனே நீயும் பிறக்க... எனக்குத் தாளலை...

ஜீவாவுக்கு வேற ஒரு இடத்துல வேலை வாங்கிக் கல்யாணத்தையும் முடிச்சு... அந்த சிறுக்கி சூட்டோட சூடாய் ஓடிப் போன வாதிப்பு வேற... எம்மவன் சமாச்சாரத்த யார் மூலமோக் கேள்வி பட்ட முதலாளி 'அதா நா சொன்னேனே'ங்கறாப்பல என்னைய நோக்கி ஒரு பார்வதாம் பாத்தாரு... அதுவே என்னைய ரேக்கி வுட்டது... 'அடே ஈவு இரக்கமில்லாத மனுஷா.... உனக்கு இருக்கு பாரு கஷ்டகாலம்னு' உங்கம்மா மனசயும் கலைக்க ஆரம்பிச்சேன்...

எம்புத்தி சாத்தானாய் ஆடினது - ஏன்னா பிஞ்சான உம்மனசக் கூட கலைச்சேன் - கண்ட பூச்சாண்டி கதைகளைச் சொல்லி உன்னை அழ வச்சு... பூச்சாண்டி எப்படி இருப்பாந் தெரியுமா - தோ உங்கப்பா மாதிரியேத் தாம்பேன்... நீயும் அவரக் கண்டா ஒதுங்குவ... உங்கப்பா முகம் வாடிறதுல எனக்கு குரூர சுகம்.''

வான்மதிக்குள் மேலும் விவரங்கள் தெளிவாயின.

''ஆக அப்பாக்கு பெரியம்மாவின் சாவில் எந்த...''

''பங்கெல்லாம் இந்த பாதகத்திக்குத்தான்...'' குறுகிய நெஞ்சில் அறைந்து கொண்டாள் தாரணி.

''ஆனா உங்கம்மாவுக்கும் உங்கப்பா மேல பயத்த உருவாக்குனேன்... அவரு கொலையாளி... உன்னைய சந்தேகப்படறாரு-ஆக உன்னையும் கொலை பண்ணிட சமயம் பார்த்திருக்காருன்னு... அப்போ ஒரு வாரமா விடாத மழை... கரெண்ட்டும் கிடையாது... பாட்டரி



ஓய்ஞ்ச டிரான்ஸிஸ்டர் கூட ஊமையாகிடுச்சு. இருட்டடிச்ச வீட்டையே 24 மணி நேரமும் பார்த்து, சலிச்சு... ஓய்ஞ்சு கிடந்தோம் எல்லாரும்... உங்கம்மாக்கு அது கொடுமையாயிருந்தது. எம் புத்தி தாறுமாறாய் ஓடிச்சு...''

மற்ற புலன்களுக்கு வேலை இல்லாது போக புத்தி எல்லாவற்றிற்குமாய் சேர்ந்து அசாத்தியமாய் கற்பனை செய்யும் என்பது வான்மதிக்குப் புரிந்தது.

''எம் புள்ளை ஜீவாக்கு பொம்பளை சுகம் தேவையாயிருந்தது - வேலை போய், பொண்டாட்டியும் ஓடின அவனுக்கு அது ஒரு போக்கிடம்... ஆனா அதுக்குக் காசு தேவை... என்னைய வந்து கொத்திப் புடுங்குவான்... அந்த காலத்துலயே முப்பது, அம்பதுன்னு. ஆக எங்கைல பைசா தங்காது... எதிர்காலத்த நினைச்சா கிலியடிக்கும்... முதலாளி மேல என் வன்மம் கூடுச்சு... ஆக ஓயாம பாவத்தத் தொடர்ந்தேன்... மழை காலம்னேன்ல... சீமெண்ணையும் தீப்பெட்டியும் சதா தேவை... வீட்டுல அறைகளிலேயும்... தந்திரமாய் என்னப் பண்ணினேன்னா...''

தாரணி தன் மனதைத் திறந்து கொட்ட, திகைத்து நின்றாள் வான்மதி.

## 22



அகத்தின் அழகு முகத்தில்...

சரி - அதன் அசிங்கங்களும் முகத்தில்தானே தெரிகின்றன!

தான் முன்பு செய்த பாவத்தின் நிழலெல்லாம் மொத்த மாய் தன்னில் இறங்கிவிட்டது போல விகாரப்பட்டிருந் தாள் தாரணி... முகம் கருத்துக் கிடந்தது.

அது சாவின் நிழலோ?

வான்மதி திகைத்து நிற்க முதியவள் தொடர்ந்து பேசினாள்-"கீழேயுஞ் சரி மாடியிலேயும் கூட பொதுவான ஒரு அறையுண்டு-ஆறேழு நாற்காலிகளைப் போட்டு... எல்லாரும் சேர்ந்து உக்கார கொள்ள...."

'தெரியும்' என்பதாய் வான்மதியின் தலையசைந்தது.

"மழை காலத்துல அங்க சிக்ரி அடுப்பு வச்சி எரியவும் விடுவோம் - அதுக்கான மண்ணெண்ணை, விறகு, தீப் பெட்டி எல்லாம் அடுப்பு பக்கத்திலேயே இருக்கும் - அன்னைக்கு நா துணிஞ்சு செய்யத் தகாத காரிய மொண்ணைச் செய்தேன்..."

வான்மதி மூச்சை இழுத்துப் பிடித்துக் காத்திருந்தாள்.

"விதியும் எனக்குத் துணையிருந்துச்சு - வேலைக்குச் சேந்திருந்தது ஒரு புதுப் பயல் - சீமெண்ணை புட்டியை எங்கன வைக்கன்னு அறியாம அவந் தடுமாற - 'இதோ இங்கனதான்'னு நான் கை காட்டுனது உங்கம்மாவோட அறையை... கூடவே தீப்பெட்டியையும் நான் அங்கக் கொண்டு வச்சேன்..."

அது அத்தனை பெரிய பாதகமா என்ற புரியாத கேள்வி யுடன் கவனித்திருந்தாள் வான்மதி.

"அந்நேரம் உங்கம்மாவுக்கு தம் புருஷனோட - தாவது உங்கப்பாரோட கடுஞ்சண்டை.... 'எல்லாத் தையும் வித்துட்டு டவுன் பக்கமாய் போயிடணும்'னு' - ங்கம்மா கேட்க, 'அப்ப புருஷனையும் மாத்திக்



கோன்னு' கத்தினார் முதலாளி... 'இங்கேத் தனிமையிலப் புழுங்கி எனக்குப் பைத்தியம் பிடிக்குது'ன்னு சந்திராம்மா அழ, 'அந்த ஷ்யாம் பய மேல பைத்தியந்தான் - தெரியுமே'ன்னு அவரு இடக்கு மடக்கா பேச, வாக்கு வாதம் வளந்தது - கோபத்து உச்சியில முதலாளி 'வாய மூடு... இல்ல உன்னைக் கொன்னுடுவேன்னு' அலறு னாரு. மூத்தாளை அவர் கொன்னதாய் நான் உருவேற்று னதுல, சந்திராம்மா பயந்துகிட்டாங்க.... தன்னையும் சீமெண்ணையில நனைச்சு, எரிய விட்டுருவாரோன்னு... அதுக்கு ஏத்தாப்போல அன்னை ராத்திரி அவங்க அறைக்கு எண்ணையும் தீப்பெட்டியும் போக அரண்டுட் டாங்க..."

வெறும் பேச்சிலேயே ஒருத்தரை இப்படி மிரளச் செய்ய முடியுமா? தாரணி செய்ததெல்லாம் இங்கு வாழ்ந்த இரு பெண்களின் மனதில் அச்சத்தையும் வெறுப்பையும் விதைத்ததுதான்... அது இப்படி காட்டுத்தனமாய் ஏன், எப்படி வளர்ந்தது?

அது சாத்தியமா என்ன?

உடலின் மீது உள்ளத்திற்கு உள்ள ஆதிக்கத்தைப் பற்றி வாசித்த நிஜ சம்பவம் நினைவிற்கு வந்தது.

தன் தாயின் கொலையைக் கண்ட அதிர்ச்சியில் ஒரு 14 வயதுப் பெண் தன் பார்வையை இழந்தாளாம்... இனி இப்படியொரு கோரத்தைப் பார்க்கத் தாளாது என்ற முடிவில் மூளை, பார்வைக்கான நரம்புகளை பழுது படுத்திக் கொண்டது என்ற மருத்துவர்களின் அறிக்கை விநோதமும் வியப்புமானது. அப்பாவின் முதல் மனைவி யின் மலட்டுத்தன்மைக்கும் தாரணியின் கட்டுக் கதைகள்தான் காரணமா?

இருக்கலாம் - உடலளவில் குறைகளற்ற இருவருக்கு நான்கு ஆண்டுகள் கர்ப்பம் தரிக்கவில்லையெனில்... மருத்துவர்களே 'நம்பிக்கையாயிருங்க' என்றுதானே சிகிச்சையை ஆரம்பிக்கிறார்கள்?

"பொல்லாத இந்த நாக்கால... கதைகளைத் திரிச்சே... ரெண்டு உயிர அழிச்சேன்..."

"அம்மா... இங்கேருந்து போனது...?"

"அன்னைய ராத்திரிதான் - ஷ்யாம் சாருக்கு மறுமாசம் கல்யாணம் - அவரு வேலைய ராஜினாமா செய்துட்டு ரெண்டொரு நாளுல கிளம்பத் தயார்... உயிரை... முக்கியமாய் உனக்காய் தன்னைக் காப்பாத்திக்கும் முயற்சியில், உங்கம்மா-

'இனி இங்க நா இருக்க முடியாது - கிளம்பறேன்னு' பெட்டியைத் தயார் பண்ண, முதலாளி... அவுங்க வெளிய போக முடியாதபடி கதவத் தாழ் போட்டுட்டாரு... நிலைமை மோசமான பிறவு நா வாயத் திறக்கலை... ஆனா சந்திராமாக்கு பதட்டங் கண்டிருச்சு... 'என்னைய தீர்த்து கட்டிருவாரு இவரு'ன்னு... அலமலந்து அனத்துனாங்க... ஜாதகங் கணிச்ச யாரோ அவங்களுக்கு ஆயுசு கம்மின்னு வேறு சொன்ன பயம்... 'நா இங்கேருந்து தப்பணும் தாரணி-இல்லைன்னா நான் உன்னையக் கொளுத்திடு வேன்னு' அவங்க ஆவேசப்பட, நா எனக்கு தெரிஞ்ச வழியக் காமிச்சேன்...'

நீளப் பேசியதில் மூச்சிரைக்க நிறுத்தினாள்.

"முதலாளிக்கும் அது சிரமக் காலம் - ரெண்டு வருஷமாப் போதிய வருமானமில்ல... தொழிலாளிங் களுக்குச் சம்பளமே தர்ரது சிரமமாயிருக்க, போனஸ் வேணுங்கற கூவல்... அந்த சமயத்தை வாகாய் பயன்படுத் தின பக்கத்து எஸ்டேட் ஓனரு - உங்களுதில பாதி நிலத்த



விலை பேசறான்... நிலைமைய சமாளிக்க முடியாம, நிலத்த விக்க வேண்டி வருமோன்ற சஞ்சலம் உங்கப்பா வுக்கு... அந்நேரம் எப்படி அனுசரிச்சுப் போவணுங்கற பக்குவமறியாம உங்கம்மா அழுது.

'நீ என்னையக் கொன்னுருவ-நா உன்னைய விட் டுட்டுப் போறேன்னது..."

"ம்ம்... தவிர வேலைப் பழகிய ஷ்யாமும் வேலையை விட்டுடப் போறார்ங்கற வருத்தம்..."

"ஆமம்மா... வேலை பாரங் கூடுமே. அந்த கோவத் துல ஐயா குதற, அம்மா அரண்டுட்டாங்க... அதுக்குத் தோதாய் நா... நானும் வில்லித்தனம் பண்ணியிருந் தேன்ல? அது போக அடுத்த தப்பையும் செஞ்சேன்ம்மா... இந்தப் பாவி..."

வேதனையான ஞாபகங்களை வெளியேற்றுவது போல தாரணி அழுந்த மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் கசிந்து வழிந்தது-

"எதற்கும் மன்னிப்பு உண்டு..."

"தண்டனையும் உண்டம்மா... அதத்தான இப்படி அனுபவிச்சிட்டிருக்கேன். என் ஒரே மவன் பெண் டாட்டியோட நிம்மதியா வாழலை, அவனுக்கு வாரிசு மில்ல... நெடுங்காலமா அவந்துணை கள்ளும் கள்ளனுங் களுந்தான் - அந்தக் குடிகாரந் தயவுல இப்போ இந்தக் கூனக் கிழவி..."

சற்று அமைதியாய் தன் துக்கத்தை மென்றவள் தலையை உதறி உயர்த்தினாள்-

"நேரடியாக் கொலை பண்ணலைதான்... ஆனா நா உருவாக்குன ஐயத்தாலதான் மூத்த தாரத்துக்குப் பிள்ளை யில்லாம... அந்த ஏக்கத்துல உயிர மாய்ச்சுட்டாங்க..."

"என் மனசிலேயும் அம்மாவிலும் அப்பா மேல சந்தேகத்தை, பயத்தை வளர்த்தீங்க... சரி... அடுத்த தப்பு ஏதோ செய்ததாய்..."

"உங்கம்மா அங்கேருந்து போக துடிச்சப்ப, எந்நாடகத்த எல்லாம் சொல்லியிருக்கலாம்... ல்ல, தைரியந் தந்திருக்கலாம்... அத விட்டுட்டு அவங்க தப்பிப் போக வழியக் காட்டுனேன்... பூட்டிய வீட்டிலேருந்து எஸ்டேட் எல்லைக்கு அது மூலமாப் போயிரலாம் - அங்கேருந்து ஷ்யாம் ஸார் ஜீப்புல ஏறி தப்பிருங்கம்மா-ன்னு எரிஞ்ச தீயுல எண்ணைய ஊத்தினேன்... ஊரு சந்திராம்மா ஷ்யாமோட ஓடிட்டதா பழி போடும்ன்றது புரிஞ்சும், நல்லது கெட்டது எடுத்துச் சொல்லாம ஓட வழி காமிச்சேன்..."

வான்மதியைப் போலவே அவ்வறையின் மூலையில் அமர்ந்திருந்த சோமனும் அத்தனையையும் உன்னிப்பாய் கேட்டிருந்தான் - அத்தனையையும் வாய் வழியே உள்வாங்கிக் கொள்வது போல திறந்திருந்தது அவனது வாய்!

"அந்தப் பாதை இருக்கது எனக்கு தெரிய வந்தது கூட அகஸ்மாத்துதான் - இந்த எஸ்டேட் வீட்டை முதல்ல கட்டினவரு அமைச்ச சுரங்கப் பாதை அது. அதை ஜீவய்யா சுத்தப்படுத்தி, பழுது பார்க்கச் செய்தாரு..."

"சுரங்கப் பாதையா...? வீட்டிலா?"

"முரட்டு சுபாவ மக்களிருக்கும் பூமியிது. முதலாளிய வீட்டுக்குள்ளார வச்சு, 'கேரோ' செய்து மிரட்டி, பணம் பறிப்பது எல்லாஞ் சகஜம்... அந்நேரம் தப்ப ஏற்பாடு செய்த வழியாம்..."



"அது பற்றி அம்மாக்குத் தெரியாதா?"

"அது பத்தி பேச்சு எழுந்ததில்ல... பாதையப் பற்றி சொன்னதும், அது எந்நிலையில இருக்குன்னு கூட யோசிக்காத சந்திராம்மா கிளம்ப முடிவெடுத்தாச்சு... ஸினிமாப் படங்கள்ல வர ஹீரோயினு போல அவங்களுக்கு ஒரு எண்ணம்..."

"ஆக சுரங்கப் பாதை வழியே நாங்க போனோம்?"

"அது எனக்குந் தெரியும்... மான் கொம்பாட்டமிருந்தத திருக்குனேனா... சுரசுரன்னு அந்த மரப்பலகை விலகிச்சு... பயந்து ஓட்டமா இங்கதா ஓடியாந்தேன்..." என்று வாயோரத்து எச்சிலைத் துடைத்தபடி இடைபுகுந்தான் சோமு குட்டி. "பெரிய வீட்டு ரகசியமெல்லாம் எனக்கு அத்துப்படின்னு நா பீத்துவேனா... அதான் இந்தப் பயலும் ஓடியாந்தான் ஒரு நா... அதுக்கப்புறந்தான் சின்ன முதலாளிக்கே அதுபத்தி தெரிய வந்து அதச் சுத்தப்படுத்தச் சொன்னார்... அதுயிருக்கும் ஒரு வருஷத்துக்கு முன்ன..."

வான்மதியினுள் புதைப்பட்டிருந்த ஞாபகங்கள் அசௌகர்யமாய் பிதுக்கப்பட்டன. ஆக பாம்பின் வழுவழுத்த இருண்ட வயிற்றுக்குள் தானிருந்தது போலந்த கசந்த கனவு... அச்சுரங்க பயணத்தின் மிச்சம் போலும்...

"பூட்டப்பட்ட அறையிலிருந்த கோவம் உங்கம்மாக்கு... நீ பூட்டினாலும் நாம் போயிடுறேம்பாருன்னு புருஷனுக்குக் காட்டுற திண்ணக்கம்... அந்த ஷ்யாம் சாரு சொன்ன புத்திமதி ஏதும் எடுபடலை... நீ எனக்கு செய்ற கடைசி உதவி இதுன்னு அவர ஜீப்போடு வெளியில காத்திருக்க வச்சாங்க... இல்லைன்னா மூத்தாள் போல நானும் கருகிச் செத்திருவேங்கற அழுகை..."

"ம்ம்... அந்த ஷ்யாம் அது கணவன் மனைவியை நிரந்தரமாய் பிரிக்கும்னு உணர்ந்திருக்க மாட்டார்... உங்கம்மாவும் அப்படி நினைக்கலை... அவங்க நினைச்ச திருசில கதை போகலை..."

"சந்தலாயிடுச்சு. அம்மா ஷ்யாமோட ஓடினதாய் எண்ணி அப்பா அவங்களை முற்றிலும் வெறுத்திருக் கணும்... ஆனா ஷ்யாமின் கல்யாணம் அப்பாக்கு தெரிஞ்சிருக்கணுமே?"

"அது பற்றி சேதியில்லேம்மா - கல்யாண பத்திரிகை ஏதும் வரலை... பெரியவர் கோவத்துக்கு அஞ்சி அனுப் பலை போல... தவிர உங்கம்மா வேற ஒரு தப்பும் செய்துட்டாங்க... பிறந்த வீட்டு ஆதரவு கிட்டாதுன்னு ஷ்யாமோட மாமனாரு ஊருல ஒரு மாசங்கிட்ட தங்கி னாங்க போல... அது மானேஜரு வாழ்வுக்கும் இடைஞ்ச லாக, பிற்பாடுதான் பிறந்து வீட்டுல சந்திராம்மா தஞ்ச மானது..."

"ஓ... அதனால அம்மா ஷ்யாமோட இருந்ததா அப்பா..."

"அவரு நினைச்சாரோ இல்லியோ ஊரு மென்னு துப்புச்சு. அந்த அவமானத்துல முதலாளி குன்னிட்டாரு. இனி அதுபோல வேதனையெல்லாம் தாங்க வலு வில்லைன்னு ஒதுங்கிட்டாரு... தவிர எந்த மூஞ்ச வச் சிட்டு மாமனாரு வீடு போறது? அவங்க இதம்பதமாய் ஒருதாம் கூட இங்கன வந்ததில்லையே?"

இதயத்துள் இதுநாள் வரை அடைந்து கிடந்தவற்றை எல்லாம் கொட்டி தீர்க்கும் வேகத்தில் பேசிய தாரணியின் முகம் மேலும் விகாரமாய் நெளிந்தது...

"அவன் வந்துட்டான்... போயிரம்மா தாயே நீ..."



விறைத்த கைகள் கூப்பித் தொழ முயன்றன.

"பலதும் எம்மவன் ஜானிதான் துப்பறிஞ்சு எங்கிட்ட சொன்னான்.... கேட்டு மகிழ்ந்தேன்... அந்தக் குரூரத் துக்குத்தான் இப்ப இந்த வேதனை..."

போய்விடு என்பதாய் அசைந்தன கிழவியின் கைகள். காட்டு முயல் போல ஆபத்தறிந்து அதற்குள் குடிசையை விட்டு வெளியேறியிருந்தான் சோமனன். ஆனால் அவனை தன் வீட்டு வாசலில் கண்டதும் அவனையும் பிடித்து நெட்டித் தள்ளியபடி அங்கே நுழைந்த புதிய வனை அச்சத்தை விட ஆர்வமாய் நோட்டமிட்டாள் வான்மதி.

தலைமுடி பாதிக்கு பாதி நரைத்து, மழிக்காத முகத்தில் குழிந்த கண்களோடு வந்து நிற்பவன் ஜானி என்று யூகிக்க முடிந்தது.

"நீங்க யாரு?"

"உங்க முதலாளியம்மா." - அதிகாரமாகவே அறிவித் தாள்...

"இங்கே என்ன ஜோலி... வந்து... மன்னிக்கணும்..."

"தப்பாய் போன சில பழங்கணக்குகளை நேர் பண்ண லாம்னு வந்தேன்..."

ஜானியின் முகம் கலவரம் காட்டியது.

"கிழவி அத்தனையுஞ் சொல்லியோ?"

"இன்னுமில்லை ஜானி-முக்கியமாய் எனக்கு விஷம் வச்சது யார்னு சொல்லலை..."

பிடிபட்ட பெருச்சாளியின் விழிகள் போல அவனதும் அஞ்சி, அலைபாய்ந்தன!

"அதை நீ சொல்லலாம் - அந்தப் பாலை நான் குடிப்பேன்னு எதிர்பார்த்த முட்டாள் யார்? பிளாஸ்க்கை ராத்திரியே திறந்திருந்தாலும், கடுமையாய் நாறிய, மூன்றாந்தர விஷங் கலந்த பாலை நான் வாயில் - அதாவது என் வாயில் ஊற்றியிருக்க மாட்டேன். ஆக விஷம் வச்சவன் ஒரு பாமர குற்றவாளி-அது யாருன்றது உனக்குத் தெரியுமில்லையா?"

அவள் கண்களும் அவனைத் தீர்க்கமாய் குடைய, குடியாலும் போதைப் பொருட்களாலும் பழுது பட்டிருந்த ஜானியின் உடல் நடுங்கியது.... வாய் கோணி... அது தேடிய வார்த்தைகள் கிடைக்காததால் குழறின.

"தவிர உங்களுக்கான கையாள் யாரோ எங்க வீட்டிலும் இருக்கான். துணிச்சலாய் விஷப் பாலிருந்த பிளாஸ்க்கை கொட்டி, கழுவி வைக்குமளவு... யாரது?"

கட்டிலில் குறுகிக் கிடந்த தாரணி புலம்ப ஆரம்பித்தாள்.

மீனைப் போல வாய் திறந்து திறந்து மூடிய சோமு குட்டி சொன்னான்.

"நானு... நாந்தான்..."

"எது - நீதான்?"

"பாலைக் கொட்டுனது நாந்தான்..."

நம்ப முடியாமல் உறைந்து நின்றாள் வான்மதி.

"விஷப்பாலை நீயா வச்ச சோமு குட்டி...?"

"ஐயோடா... வெறுமன கொட்டிக் கழுவினேன்..."

"ஏன்?"



"சொன்னாங்கல்ல?"

"அதான் யார் சொன்னா?"-அவசரத்துடன் அழுத்தினாள். பிரசவ வலியுடன் ஒரு பெண் ஆற்றும் வாகனத்தை ஓட்டுபவரின் பாதம் எந்தப் பதட்டத்துடன் ஆக்ஸிலரேட்டரை அழுத்துமோ - அந்த உணர்வுடன் பாய்ந்தது அக் கேள்வி.

"செஞ்சா, செங்கக் கட்டியாட்டம் இருக்க இனிப்பு வாங்கித் தர்ரதா சொன்னாங்க..."

நியாயப்படுத்த முயன்றான்.

"யாருன்னேன்?"

"முன்னேயும் ஒரு தரம் பிளாஸ்க்கக் கழுவினேன்ல?... அப்ப சாக்கடையில ஓடுன பாலைக் குடிச்ச எலி செத்திருச்சு... அத சின்ன முதலாளிகிட்ட சொன்னேன்... அவருக்குக் கோவம்... அந்த இனிப்பு ரொம்ப நல்லாருந்துதா..."

சோமனனை நெருங்கியவள் மெலிந்த அவனது தோள்களைப் பற்றிக் குலுக்கினாள்-

"யாருடா? யாருன்னு சொல்லு... உனக்கு பத்து, இருபது சாக்லெட் வாங்கித் தர்ரேன்..."

வான்மதி தன்னையும் மீறிக் கத்தினாள்.

# 23



"பாவத்துக்கு நிவாரணமாய் நா சில உண்மைகளை உங்ககிட்ட சொல்லிடறேம்மா..."

இனியும் தான் வீடு போகாவிட்டால் புது குழப்பம் விளையும் என்று உணர்ந்த வான்மதி வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் - சோமு குட்டியும் ஜானியும் கவிழ்ந்த தலைகளுடன் அவளைப் பின் தொடர்ந்தனர்.

தெரிய வந்த சில தகவல்கள் வான்மதியைப் பெரிதும் குழப்பியிருந்தன.

"அந்த ரவி டிரைவர் முன்னே உங்க பெரியம்மாவிடம் வேலை பார்த்தவனாம்... அவங்க அவனை உங்க நிமித்தம் வேலைய விட்டுத் துரத்துனதுல அவனுக்குக் காட்டம்..."

அழுந்த யோசித்தால் இவளையே விகாரமாய் முறைத்து, இளித்து, வேலையை இழந்த அந்த ட்ரைவர் நினைவிற்கு வந்தான்தான். அதுவும் கூட தான் வாய் திறக்க பயந்து, விவரத்தை சசிலா பெரியம்மாவிடம் சொன்னது தான்... அவன் செய்த தப்பிற்கு தன் மீது காட்டமா?

சற்று முன் தன் தந்தை தாரணி மீது சற்று பரிவு காட்டியிருந்தால் நடந்த கொடுமையை எல்லாம் தவிர்த்திருக்கலாமோ என்று வருந்தியது நிஜம்... அது சரியில்லை என்று ஒரு பெருமூச்சுடன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

"அந்த ரவி சமீபமா வேலைல சேந்தவன்-ஆனா உங்களை இப்ப சின்னவரு அறிமுகப் படுத்தவும் அவனுக்குச் சிலுத்துகிச்சு. ஏற்கெனவே தொழிலாளர் மத்தியில் இருந்த பயத்தக் கூட்டினான்..."

"என்ன பயம்?"

"எஸ்டேட்டு, அதையே உலகமாக் கொண்ட உழைப்பாளிங்களின் நிலமை, கஷ்டமெல்லாம் அறியாத ஒரு



பொண்ணு இந்த சொத்தை ஆள வந்தது-பயம்... உங்கப்பா எண்ணினது போல நீங்க வசீகரனய்யாவக் கல்யாணம் பண்ணிகிட்டா பிரச்சனையில்ல..."

வான்மதிக்கு விக்கியது... தன் தந்தைக்குள் அப்படி ஒரு எண்ணம் இருந்ததா என்ன?

"வீட்டு வேலைக்காரங்க வாயக் கிண்டுனதுல உங்க ரெண்டு பேருக்கும் ஆகலை... நீங்க அத்தனையையும் விட்டுட்டுப் போகப் போறதாய் பேச்சு... ஆனா சின்னவரு நியாயஸ்தன்-நீங்க விட்டு போனத வித்து காசாய் உங்களிடம் சேர்ப்பிச்சிருவாரு... ஆக எஸ்டேட்டுக்கு புது முதலாளிதான்... எங்களப் பத்தி எங்க குடும்ப சூழ்நிலை... வேதனை ஏதுமறியாத ஒருத்தங் கீழ நாங்க நசுங்கணும்."

"ஓஹோ... நான் செத்துட்டால்...?"

"சொத்து சின்னவருக்குதான்... அவரு குதிரையத் தடவி ஓட்டுறவரு... எங்களுக்குப் பிரச்சினையில்லை..."

வீடு கண்களுக்குத் தட்டுப்பட, கால்களின் வேகத்தைக் குறைத்தாள் - அதற்குள் வேண்டிய விவரங்களை ஜானியிடமிருந்து அறியும் ஆர்வம்.

"ஆனா உங்க சின்னவரின் மனசில் என்ன இருக்கோ? அவர் வேறு பெண்ணின் மீது ஆசைப்பட்டிருக்கலாம்..."

"பெரியவர் நோக்கத்துக்கு கட்டுப்பட்டவரும்மா அவர்... மாறி செய்ய மாட்டார்... தவிர..."

"சொல்லு - ஜானி...."

"சின்னய்யா முகம் நீங்க வந்த பிறகு மாறியிருந்துச்சு... சிரிப்புங் களையுமாய்... அப்பதான் ரவி சொன்னான்-

இந்தப் பொண்ணு ராங்கிக்காரி..." மன்னித்து விடு' என்ற ஒரு பார்வையுடன் ஜானி தொடர்ந்தான் - "ஆம்பளைங்க ஏங்கி வந்தா எட்டி மிதிக்கறவ... வழிக்கு வரமாட்டா... தீத்து கட்டிரணும்னு..."

எத்தனை சிறு சம்பவம் எவ்வளவு தீவிர வெறுப்பிற்கு விதை போட்டிருக்கிறது... பாஞ்சாலியின் நகைப்பைப் போல...?

திகைத்து நின்றிருந்தாள்-

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வரவில்லை... இவள் வீடு திரும்பியது தெரிந்து வந்த வசீகரனின் முகமே மீண்டும் மீண்டுமாய் மனதிற்குள்...

அந்த வசீகர முகத்தில்தான் எத்தனை நிம்மதி, ஆசை... ஆனந்தம் எல்லாம்? அப்பா சொல்லி சொல்லி வசீகரனுக்கு தன் மீது ஒரு வித பிரேமை வளர்ந்திருக்குமோ? அல்லது சில நாட்களின் பழக்கத்தில் பூத்த நேசமா... அல்லது வெறுமே 'இவள் சாகவில்லை' என்ற நிம்மதி தானா?

ஜானி சொன்னவற்றை நினைத்ததில் முதுகு சிலிர்த்தது-

'குழி பறித்து, அதுல உங்களை விழச் செய்து கழுத்து முறிஞ்சிருச்சன்னோ... இல்லை காலார நடக்கப் போனவங்களைப் பிறகு காணலைன்னோ உங்கக் கதைய முடிச்சிருக்கலாம்மா... நீங்க சொன்னது போல அந்த பாமர மட்டித்தனம் தெரிஞ்சு, சின்னவரு உங்களை எங்கேயும் தனிக்க விடலை...'

அதற்குத் தான் ஆத்திரப்பட்டது ஞாபகம் வர, மேலும் இரண்டு தரம் புரண்டாள்!



உடன் வந்த சோமனன், ஜானியைப் பார்த்தவன் ஏதும் பேசாமல்,

'நீ உன் அறைக்குப் போ, மதி' என்று முடித்து கொண்டான். தொடர்ந்த போலீஸாரின் கேள்விகளால், டைரியைத் துழாவுவதுமாய் அந்த நாள் கழிந்தது. வசீகரனைப் பார்க்க முடியவில்லை - உணவு அவளது அறைக்கே வந்தது - கொண்டு வந்ததும் சொர்ணா அல்ல - ஒரு பெண் போலீஸ் என்பதால் பேச்சிற்கு வாய்ப்பில்லை.

உடல், உள்ளம் தெளிந்து ஒரு முடிவிற்கு வந்திருந்தது - ஆக தன்னைக் கொல்ல முயன்றவர்கள் எஸ்டேட்டின் 'சில' தொழிலாளிகள் - புரியாமையால் விளைந்த மூர்க்கத் தனம் அது... சின்ன முதலாளியின் மீதுள்ள பாசம் என்று கூட கொள்ளலாம் - அதை டிரைவர் ரவி பயன்படுத்தி ஒரு நாடகம் நடத்தப் பார்த்திருக்கிறான் - விவரம் தெரியாத ஒரு வேலைக்காரியிடம் பால் ஃபிளாஸ்க்கைக் கேட்டு.

'இந்த வசிய மருந்தக் கலக்கினா, சின்னவர மதியம்மா கல்யாணங் கட்டிக்கறது உறுதி' என்ற பொய்யோடு. ஆனால் சொர்ணாவிற்கு இது எதுவும் தெரியாது... உலகில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் நல்லவர்கள் தான் என்று பட்டது... முக்கியமாய் வசீகரனின்... மனதும் கூட வசீகரமானது என்று மகிழ்ந்தது அவள் மனம்! அவனை நம்பித் தன் வாழ்வையும் கூட ஒப்படைக்கலாம் போலொரு பரவசத் துள்ளல்...

அந்நேரம் கதவு சுரண்டப்பட்டது...!

அது சோமுகுட்டி என்று பட்டாலும், அவன் குரலைக் கேட்ட பின்பே படுக்கையறைக் கதவைத் திறந்தாள்-

அவன் கண்கள் வீங்கிக் கிடந்தன.

"அழுதியா என்ன?"

"ம்ம்... திட்டுனாங்கல்ல..."

"விடு... கையில என்ன?"

"கடிதாசி-அவரு தந்து விட்டது..."

ஆவலாய் வாங்கிப் பிரித்தாள் - அதிலிருந்தது கிறுக்கலான கையெழுத்து.

"யாரு எழுத்தினது?"

"ஜானி... உங்கள உடனே தப்புச்சுக்க சொன்னாரு..." முயன்று கடிதத்தை வாசித்து விட்டு கேட்டாள்-

"சின்னவர் எங்கே?"

"அவரு சுரங்கப் பாதைக்கு மறுபக்கம் காத்து நிப்பாராம்... நா உங்கள சுரங்கப் பாதை வழியே வெளியே கூட்டினு போவணும்."

அவளுக்கு ஈரமான அந்த இருட்டுப் பாதையை எண்ணியதுமே உடம்பு கூசியது... மனம் அஞ்சி சுருண்டது... பல இரவுகள் தான் கனவில் அனுபவித்த அந்த பயங்கரத்தை நிஜத்திலும் அனுபவிப்பதா?

*அம்மாவுக்கு,*

*வணக்கம். ஆபத்து உங்கள நெருங்குது. தப்பிருங்க... போலீஸ் விசாரணையுல தொழிலாளிகள அடிச்ச மிதிக்க, எல்லாருக்கும் ஆத்திரம். உங்களக் கொல்ல வராங்க... சின்னவரு எல்லையில காத்து நிப்பாரு... சோமு குட்டிக்கு வழி தெரியும். தப்பிருங்க.*

*ஜானி.*

"வெளியே போலீஸார் நிக்கறாங்களா?"



"வீட்டுக்கு வெளியேதா-உள்ளே யாருமில்ல வாங்க. அந்த பாதையக் காட்டறேன்..." வசீகரன் சொல்லியிருந்தால் சரி - ஜானி பேச்சைக் கேட்டு இங்கிருந்து போறது சரியில்ல சோமு குட்டி..."

"சின்னவருதான் மறுபக்கம் நிக்காருல்ல...?" சுரங்கப் பாதையின் முடிவில் வசீகரன் தனக்காய் காத்துதான் நிற்கிறாரோ? அவனை ஏமாற்ற முடியாதுதான்... நம்பி தன்னை எதிர்பார்த்து நிற்பவரை உதாசீனப் படுத்த முடியாது... அதே சமயம் அந்தச் சுரங்கத்து வழியே... உடலெங்கும் நடுங்கியது. துணைக்கு ஒரு பெண்ணிருந்தால் தேவலை... ஆனால் சொர்ணா இங்கில்லை... கனவின் பயங்கரத்தை நிஜத்தில் அனுபவிக்க முடியாமல் தான் மயங்கி விழுந்து விட்டால்...? சோமுவால் சமாளிக்க முடியாது.

"போலீஸார் காவலிருக்க..."

"இங்கன யாருமில்லைல்ல... நாம மட்டுந்தான் - சீக்கிரமா வாங்க..."

இதுவும் கூட ஒரு கனவோ என்றே பட்டது. ஆனாலும் ஒரு போர்வையைத் தோளைச் சுற்றி இட்டவள், டார்ச்சுடன் கிளம்பினாள்.

சோமனைத் தொடர்ந்து அந்த மான்கொம்பின் முன் போய் நிற்க உடம்பு உதறியது... தன் தாய் பல வருஷங்களுக்கு முன்பு எடுத்த மிக முட்டாள்தனமான முடிவு இது...

தன் வீட்டிலிருந்து, கட்டிய கணவனிடமிருந்து ரகசியமாய் ஓடி விலகும் இந்த முடிவு...

தானும் அதே போல முட்டாள்தனமாய்தான் ஏதும் செய்கிறோமோ...?

யோசிப்பதற்குள் விரிந்த பிளவிற்குள் சோமனன் இவளை இழுத்துக் கொண்டான்.

"இது வேற யாருக்குந் தெரியாது... எனக்கு இப்ப உங்களுக்கு..." பெருமிதமாய் சொன்னபடி அந்து கறுப்புப் பாதையில் நடக்க ஆரம்பித்தான்.

ஒருவர் குனிந்து நடக்க முடிந்தளவு ஒடியது அந்த உருண்ட பாதை. மொறமொறப்பான சுவரை அவளுக்குத் தொட அருவெறுப்பாய் இருந்தது... பாதையில் மட்டுமே கவனம் வைத்து நடந்தாள் - மக்கிய வாடை துணை வந்தது... அழுத்தியது...

"மூச்சு முட்டுது சோமு..."

"சித்த தூரந்தான்... விரசா நடங்க..."

மனதிற்குள் பிரார்த்தித்தபடி அப்படி செய்ய முயன் றாள்... இடையே பாதை மிகக் குறுக, இதயம் பதற்றமாய் துடித்தது... பிராண வாயு இன்றி கண்கள் இருட்டுமளவு ஆனபோது... எங்கிருந்தோ துளி... காற்று... இப்ப வீட்ட விட்டு வெளிய வந்துட்டோமில்ல...? இனி சுளுவா யிரும்..." என்ற சோமனனின் ஆறுதல் அவளுக்குக் கேட்கவில்லை...

அந்த வாடையும், பீதியும், இருளும் அவளுக்குக் தமட்டின...

"என்னால முடியலை..." என்றபடி அந்த உருண்ட ருண்ட கல்பாதைக்குள் மயங்கி சரிந்திருந்தாள்... த்தனை நாட்கள் கனவில் மட்டுமே வந்த அம்மலைப் ாம்பு தன்னை இன்று முழுதாய் விழுங்கிவிட்டது... தோ அவளை இறுக்கி மெல்லுகிறது... நெற்றியில் ளிராய் அதன் நாக்கு...



உதறி அலற முயன்றாள்...

"ஷ்ஷ்... மதி... நான்தான்... பயப்பட வேணாம்..."

அந்தக் குரலில் பாம்பும் பயங்களும் விரட்டியடிக்கப் பட்டன.

துவண்டு தொய்ந்தாள்...

தன் அறையின் வெளிச்சத்தை, காற்றை நிதானமாய் அனுபவித்தவளின் கண்கள் கட்டிலில், தலைமாட்டில் அமர்ந்திருந்த வசீகரனை பார்க்காதிருக்க முயன்றன - அறையில் வேறு யாருமில்லை... இந்தத் தனிமையில் இவர் தன்னை இத்தனை நெருங்கியா உட்காருவது? நெஞ்சத்துள் வெட்கக் கேள்விகள்...

ஆனால் வசீகரனுக்கு விவரங்கள் வேண்டியிருந்தது-

"அந்த சோமு பயலை நம்பி ஏன் சுரங்கத்துள் இறங் குனே மதி?" குரலை, கறாராக்கி கேட்டான்.

"நீங்கதானே சொன்னீங்க?"

"என்ன... எப்போ... யாரிடம் சொன்னேன்?"

மேஜையைத் துழாவி அந்தத் துண்டு காகிதத்தை எடுத்து நீட்டினாள்.

"யாருடைய கிறுக்கல் இது?"

"ஜீவா எழுதியதாய்... சொன்னான்."

"அதை எழுதியது ரவி... உங்க பெரியம்மா வீட்டில் முன்னே வேலை பார்த்து... வேலையிலிருந்து துரத்தப் பட்டவன்..."

"ஓ... ஜீவா சொன்னார்... அவனுக்கு ஏதோ கோபம்னு..." மனதிற்குள் பெரியம்மாவின் வீடு தனக்களித்த பாதுகாப் பிற்காய் நன்றி சொல்லிக் கொண்டாள்..

"போலீஸ் தட்டுன தட்டுல என்ன கோபம்னு விலா வாரியாய் சார் விளக்கிட்டாரு..."

என்ன என்பதாய் வினவின அவளது கண்கள்...

அடுத்து நடந்ததை நம்ப முடியாமல் அவள் கண்கள் இறுக மூடிக் கொண்டன. வசீகரன் தன்னை அத்தனை ஆவேசமாய் அணைப்பான், முகமெங்கும் மாறி மாறி முத்தமிடுவான் என்றெல்லாம்...

போக போக, நெருப்பு கூடின அவனது முத்தங்கள் பிறகு அவளது உதட்டின் ஈரத்தைத் தேடியது.

முதலில் திகைத்தவளின் உள்ளே இப்போது தித்திப் பான உணர்வு கிளர்ந்து கிளை விரித்தது-அவளது கைகளும் அவனை சுற்றி இறுக்கின...

"ஸாரி-மதி... இதெல்லாம் அப்புறம்... அதாவது உன் நோக்கம் சம்மதம் தெரிஞ்சதற்குப் பிறகு..."

"இன்னுமா தெரியலை..." சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்-மெல்லியதாய் புன்னகைத்தவன்-

"தெரியலதான்... நீ இத்தனை முட்டாளாய் இருப் பென்னு. உன் அழகின் வீரியம் உனக்குத் தெரியலை... தை... அதாவது உன்னை, முன்னே ஆசைப்பட்டும் நருங்கக் கூட முடியாத அந்த ரவி உன்னை அடையப் பட்ட திட்டமிது..."

"அப்ப சுரங்கத்தின் மறுபக்கம் எனக்காய் காத்து றது?"

"ரவிதான்... உன்னை அனுபவிக்கலாம்னு..."

"சேச்சே... அதுக்கு சோமு குட்டி உடந்தையா?"



வெளுத்த முகம் வியர்க்க வினவினாள்-

"பெரிய ஆபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றுவதாய் அவன் சொன்ன பொய்யை சோமு குட்டி நம்பிட்டான்... ஆனாலும் அவன் முழு முட்டாளில்லை... எங்கிட்டவும் 'மதியம்மாவுக்கு ஆபத்து, சுரங்கம்னு' ஏதோ ரெண்டு வார்த்தை கிறுக்கி அனுப்பிட்டான்-ஜானி சொன்ன உண்மைகளைக் கொண்டு எஸ்டேட் தொழிலாளர்களின் மனநிலை, பாதுகாப்பின்மை, பயம் எல்லாம் உணர்ந்த நான்-அவங்களிடம் பேசினேன்... அவர்களுக்கு எந்த பாதகமுமில்லைன்னு விளக்கினேன்..."

"என்ன, பெரியவர் ஆசைப்படி நான் எப்படியேனும் வான்மதியைக் கல்யாணம் செய்து, உங்களுக்கு ஒரு நல்ல முதலாளியாய் 'தொடருவேன்னா?"

கட்டிலில் கிடந்தவளைத் தன் மடிக்கு மாற்றியிருந்த வனின் கண்கள் துளி கலங்கின.

"வேடிக்கையாயிருக்கா மதி...? எத்தனை பெரிய ஆபத்திலிருந்து தப்பியிருக்கேன்னு உனக்குப் புரியுதா?"

"இனி ஆபத்தில்லைங்கறது புரியுது..." எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். "அப்பா எனக்கு ஏதும் செய் யலை - பிரியம் காட்டலைன்னு ஏங்கினது தப்பு - வாழ் நாள் முழுமைக்குமான நல்ல துணையை எனக்கு வச்சிட்டுல்ல போயிருக்கார்...?"

"என்ன சொல்ல வர்றே-இனி அந்த பொறுக்கி ரவியப் பத்தி பேச வேண்டாம்னா? அதுவும் சரிதான் - தொழி லாளர்களின் முரட்டுக் கோபத்தைச் சாதகமாக்கி, உன்னை அடைய நினைச்ச அந்த ராஸ்கலை..."

"மறந்துடலாம்... இனி அந்தக் கனவு... இது வரை புரியாமல் என்னை மூச்சடைக்க வச்ச கனவும் மறந்துடும்னு நினைக்கறேன்..."

அவள் மார்பினுள் முயலாய் ஒடுங்கினாள்...

"என்ன கனவு...?"

"ம்ம்...? மறந்திருச்சுப்பா..."

கண்களை மூடி அவள் கிசுகிசுக்க... மூடிய கண்களை இதமாய் முத்தமிட்டான் வசீகரன்... அவளும் இறுக் கிடந்த கண்ணாடி வாசல் விரியத் திறந்து கொண்டு

காதல் காற்று உள்ளே புகுந்து நிரம்பியது...